
6

கலை இலக்கிய இதழ்

சிறப்பிதழ் 1995 - 96



என்றாவது நாடு திரும்புவோம் என்ற எதிர்பார்ப்பு எல்லா அகதிகட்கும் இருப்பது இயல்பு. அந்த நம்பிக்கையை இழந்த சூழ்நிலையிற் கூட புகலிடத்தினர் அவர்களை அந்நியமாகக் கருதும்போது அவர்களது சுயஅடையாளம் மேலும் வலிதாக அவர்களது தாய் நாட்டை சார்ந்திருப்பது இயல்பானது. இந்த வகையில் பலஸ்தீன அகதிகள் நிலையுடன் தமிழ் அகதிகளின் நிலையை ஒப்பிடலாம். இங்கு நாற்பது வருடங்கள் வரையிலான கால இடைவெளியை நாம் கருத்தில் கொள்ளல் அவசியம். புலம்பெயர்ந்த பலஸ்தீன அகதிகளில் கணிசமானோர் புகலிடத்திலேயே நிரந்தரமாகக் குடியேறக்கூடுமாயினும், பலஸ்தீனமே இன்னமும் அவர்களது மண்ணாகத் தெரிகிறது. இது மண்ணுக்கும் மனிதனுக்குமுள்ள உறவு. எனவே தமிழ் அகதிகள் ஈழமண்ணுடனான தம் பற்றைப் புலம்பெயர்வால் அறுப்பது எளிதில் நடக்கக்கூடிய ஒன்றல்ல. ஆயினும் நீண்டகாலமாகப் புலம்பெயர்ந்து வாழ்ந்தோர், முக்கியமாக ஒரு தலைமுறைக்கு அதிகமாக வாழ்ந்தோர் சொந்தநாடு திரும்புவது எளிதில் சாத்தியமாகாது.

புலம்பெயர்ந்த தமிழர் மத்தியிலே தம் சுய அடையாளம் பேணுவது பற்றி வேறுபட்ட கண்ணோட்டங்கள் உள்ளன. மரபில் உள்ளவற்றில் எதை எவ்வாறு பேணுவது, புதிய சமுதாய சூழலுக்கேற்ப நமது வாழ்கை முறையை எவ்வாறு அமைப்பது என்பன பற்றிய தெளிவீனங்கள் மிக அதிகம். மரபு பேணல் மேலோட்டமாகவும் குருட்டுத்தனமான பழமைவாதம் சார்ந்தும் அமையும் அதேவேளை, வாழ்க்கை முறை புதிய சமுதாய சூழலின் நெருக்கடிகளுக்கு வளைந்து கொடுத்து மாறி வருகிறது. இவை பற்றி ஆழமான சிந்தனையோ எதிர்காலம் பற்றிய தீர்க்கமான பார்வையோ இல்லாது மரபு பற்றியும் தமது தனித்துவம் பற்றியும் பேசுவோர் மதச் சடங்குகளையும், சமுதாயச் சடங்குகளையும், முன்பு கற்றவற்றை மீண்டும் ஒப்பிப்பதையுமே தமது சுய அடையாளம் பேணும் வழிகளாகக் காண்கின்றனர்.

- *சி. சிவசேகரம்.*



*எங்கே போகிறோம் ?*

யாழ்ப்பாணம் ஆக்கிரமிக்கப்பட்டுவிட்டது. சிறிலங்கா அரசின் மொத்த பலமும், வளமும் பயன்படுத்தப்பட்டதன் மூலம் சிங்கக் கொடி பறக்கவிடப்பட்டுள்ளது.

சிறிலங்கா அரசினதும், பெருந்தேசிய இனவெறியாளரதும் களிப்பையும், குதூகலத்தையும், இறுமாந்த உரைகளையும் பார்த்தால்..... எல்லாளனை வெற்றிகொண்ட துட்டகைமுனுவின் உளக்கிடக்கையும், இனவெறி வக்கிரத்தையும் பறைசாற்றுகிறது. தமிழர்களின் நம்பிக்கைக்கும், பிடிமானத்திற்கும், சுதேசியத்திற்கும் பலத்த அடிகொடுத்து வீழ்த்தி விட்டதாக ஆக்கிரமிப்பாளர்கள் திருப்தி கொண்டுள்ளனர்.

ஆனால், இலங்கைத் தீவானது இரண்டுபட்ட தேசங்களைக் கொண்டுள்ளதை இந்த இராணுவ ஆக்கிரமிப்பு பகிரங்கப்படுத்தியுள்ளதை இவர்களால் உணரமுடியவில்லை. சிறிலங்கா இராணுவம் முன்னேறிய வேளையில், யாழ்ப்பாண மக்கள் வீடு வாசல்களைத் துறந்து, உடமைகளை விட்டு வெளியேறியது நிர்ப்பந்தத்தின்பாற்பட்டது எனக் கூறிக்கொண்டாலும், மக்கள் இம்முடிவுக்கு உடன்பட்டு செயல்பட்டதானது ஆக்கிரமிப்பாளரது முகத்தில் ஓங்கி அறைந்ததற்கு ஒப்பானதாகும். இவ்வெளியேற்ற நடவடிக்கை மூலம் எந்த நிலையிலும் சிறிலங்கா இராணுவ மேலாதிக்கத்தை தாம் ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை என்பதை திட்டவட்டமாக உலகிற்கு அறிவித்துள்ளனர். தம் இருப்பை உறுதிப்படுத்த தம் இருப்பிடங்களையே துறந்து செல்லும் துயர முடிவிற்கு தாம் ஆட்படுவோம் என்பதனை இந்த யாழ்ப்பாண மக்களும், ஏனையோரும் சந்திரிகா பதவிக்கு வந்த காலத்தில் கனவு கூட கண்டிருக்க மாட்டார்கள். இன்னும் சொல்வதானால் கொஞ்சம் அதீதமான நம்பிக்கையைக்கூட வெளிப்படுத்தி இருந்தனர். அரசியல் தீர்வும், அமைதியும் ஏற்படவேண்டுமென்பதில் ஆர்வம் காட்டிய பலரும் எழுதினர், பேசினர், ஏன் ஆரவாரமும் செய்தனர்.

சமாதான தேவதை என முகங்காட்டி வசீகரித்து, அரசியல் நிகழ்ச்சி நிரலில் பேச்சுவார்த்தையை முதன்மையாக்கியபடியே, பெருந்தேசிய இனவெறியின் நம்பிக்கைத் தாரகை எனவும், இராணுவக் காட்டேரி எனவும் தன்னை வடிவமைத்துக் கொண்டது ஆச்சரியத்துக்குரியதல்ல: முன்னவர்கள் காட்டிய வேடங்களை விடவும் இது கனகச்சிதமாக அமைந்திருந்தது அவ்வளவுதான்.

சிறிலங்காவின் எந்தத் தலைமையும் பெருந்தேசிய உட்சாரத்தை மீறி, அதனை ஆளுமைப்படுத்தி, இலங்கைத் தீவை பல்லின- பலமத தேசமென தேசியங்களின் ஒத்திசைவுக்கு வழிகாட்டி தலையேற்கும் தகமையைக் கொண்டிருக்கவில்லை. முயன்றதுமில்லை. மாறாக பெருந்தேசிய இனவெறியில் தாம் ஊறி, அதற்கு மேலும் வெறியேற்றி தம்தம் தலைமையை காப்பாற்றிக் கொள்வதிலேயே முனைந்திருக்கின்றனர். டி. எஸ். சேனநாயக்கா முதல் சந்திரிகா ஈறாக உண்மைகள் இப்படித்தான் சொல்லிச் செல்கிறது.

ஆக, தமிழ் தேசிய இனமானது இலங்கைத் தீவில் தமக்கான அரசியல் வரையறுப்பை, இறைமையை நிறுவிக்கொள்ளும் போராட்டத்தைத் தேங்கவிடாது நகர்த்திச் செல்வதென்பதே கட்டாயமாகிறது. இதற்கப்பாலான வேறுவழிகள் தேட தமிழ்த் தேசியத்திற்கு இலங்கை வரலாற்றில் வாய்ப்புகள் இன்று வரை வழங்கப்படவில்லை.

☐ தேர்தல் அரங்கில் புதிய தாரகையென முகம் காட்டுகிறார் திருமதி சந்திரிகா குமாரரணதுங்க. முகம் புதியதாதலால் வரவேற்பும், எதிர்பார்ப்பும் கொஞ்சம் அதிகம்தான். பெரு விருட்சமதை பற்றிப்படரும் செடி கொடிகள்தான் சிறுபான்மையினர் என தன் ஆட்சியின் உட்சாரத்தை- பெருந்தேசிய அவாவை, தன் இயல்பை இன்றைய ஆட்சியின் அதிபர் வெட்கமின்றி வெளிப்படுத்துவதற்கு, முன்னர் தம் ஆட்சிகளின்போது அடியெடுத்துக் கொடுத்தவர்கள் பலர். இவர்களில் குறிப்பிடத் தகுந்தவர்களான திரு எஸ்டபிள்யூ.ஆர்டி. பண்டாரநாயக்கா, திருமதி ஸ்ரீமாவோ தம்பதியினரின் இரத்த உரித்தும் வாரிசம்தான் திருமதி சந்திரிகா. இவரது பெற்றோரின் சாதனைகள்தான்: தனிச் சிங்களச் சட்ட அமுல், பண்டா-செல்வா ஒப்பந்தக் கிழிப்பு, இலங்கைத் தீவை பல்லின, பல்மத தேசமாக அங்கீகரிக்க மறுக்கும் பெருந்தேசியவாதத்தை உத்தரவாதப் படுத்தும் அரசியல் அமைப்பை செயல்படுத்தியமை ஆகியவையாகும். அரசியல் யாப்பில் அமைவுபெற்றுவிட்ட பெருந்தேசிய உட்சாரத்தை மாற்ற சந்திரிகா வழி கண்டுள்ளாரா? வெறும் வாய்ச்சொற்களால் மாற்றமடையக் கூடியதா இவ்வுட்சாரம்? உட்சாரத்தை மாற்றமுறச் செய்யாமல் இலங்கைத்தீவின் பிரச்சனையை எப்படிக் களைவார் சந்திரிகா?
சந்திரிகாவுக்கு வேண்டியதெலல்லாம் ஆட்சி மாற்றமும் அதிகார அனுபவிப்பும்தான். ஆனால் .....
தமிழ் மக்களின் தேவை : தம் சுயநிர்ணய உரிமையை உத்தரவாதப்படுத்தும் நியாயமான வாழ்வு! – மௌனம் 4 இதழில்....


# மௌனம்

கலை இலக்கிய இதழ்

**6**

சிறப்பிதழ் 1995- 96
வள்ளுவர் ஆண்டு 2027

**தொகுப்பாளர்:** கி. பி. அரவிந்தன்
**இணைத்தொகுப்பாளர்:** க. முகுந்தன்

**துணைவர்கள்:**
**படங்கள் சேகரிப்பு:** தே. பரணீதரன்
**நிர்வாகம்:** ந. சுந்தரலிங்கம்

**கணணிப்பதிவு & வடிவமைப்பு :** அநாமிகன்

**வெளியீடு:** A.F.T.C. சார்பாக பு. விக்கினேஸ்வரன்

-நண்பர்களுக்கு மட்டும்-



✉ :
**MOUNAM**
Mr. CHARLES VIGNES,
5, ALLEE AUGUSTE RENOIR
92300 LEVALLOIS-PERRET
**FRANCE**

*வரலாற்றில் பெரும் நிகழ்வுகளைக்கொண்டது 1945-ம் ஆண்டு. அந்த நிகழ்வுகளின் பொன் விழா - ஐம்பதாம் ஆண்டு- நினைவு கூரல்களைக் கொண்டது இந்த 1995-ம் ஆண்டு. நாசகாரியான அணு ஆயுதம் யப்பானிய இரு நகரங்களை, மக்களை கொன்று-அழித்த துயர நிகழ்வின் ஐம்பதாம் ஆண்டு.*

*அமைதியைக் காக்கவும், இணக்கத்தைக் கொண்டு வரவும் உருவாக்கம் பெற்ற ஐக்கிய நாடுகள் சபை நிறுவப்பட்டதன் ஐம்பதாம் ஆண்டு.*

*இப்படி இரண்டாம் உலகப் போருடன் தொடர்புபட்டதான பல நிகழ்வுகளின் ஐம்பதாம் ஆண்டு.*

*உலகின் ஒவ்வொருத்தர் மூளைக்குள்ளும் தன் கரங்களை நுழைத்து சலவை செய்யத் துடிக்கும் ஏகாதிபத்திய செய்தி நிறுவனங்களும், அவற்றின் ஊடகங்களும் இந்நிகழ்வுகள்பற்றி தம்பாணியில் ஏற்ற இறக்கத்துடன் செயற்பட்டுக் கொண்டன. நடுநிலைமை- என்பது வல்லவன் காட்டும் கோட்டாகிவிட்டது.*

*யூத வதையை அங்குல அங்குலமாக வெளிப்படுத்திக் கொண்ட இவ்வூடகங்கள் நாகசாகி- ஹிரோசிமா மீது அமெரிக்காவினால் வீசப்பட்ட அணுக்குண்டுகள் பற்றி முடிந்தவரை அடக்கியே வாசித்துக் கொண்டன.*

*யூதப் படுகொலை போன்ற கூட்டமாக மனிதரைப் படுகொலை செய்தல் போன்றதொன்று இனி நிகழக் கூடாது என அக்கறைகொண்டு அந்நிகழ்வுகளைப் பெரிது பண்ணிக் காட்டும் இவர்கள், அணுக்குண்டு வீச்சை அப்படிப் பெரிது பண்ணாதது- கண்டு கொள்ளாதது மீளவும் அப்படியான சம்பவங்கள் நிகழ்ந்தாலும் பரவாயில்லை என எண்ணுவதாலா? வ்ல்லரசு என்பதற்கு அழகு அணு ஆயுதத்தை வைத்திருப்பதும், அதைப் பயன்படுத்துவதும் என இச்செய்தி நிறுவனங்கள் நம்புவதாலா? இந்நிறுவனங்களினதும், ஊடகங்களினதும் தாயகம் இவ்வல்லரசுகள் என்பதாலா? இந்த வகையில்தான் அணு வெடிப்புச் சோதனைகளும் தொடரப்பட்டுக் கொண்டிருக்கின்றன போலும்!*

*ஐ. நா.-வின் ஐம்பதாம் ஆண்டு கொண்டாட்டங்களில் உற்சாகமாகக் கலந்து கொண்டவர்கள் அதனைப் பலப்படுத்துவதில் அக்கறை கொள்ளாது தங்கள் இராணுவக் கூட்டணியான நேட்டோ மீது அதிக கரிசனம் கொள்வதும், அதை சீராட்டிப் பலப்படுத்த அவசரம் கொள்ளுவதும் ஏன்? விழாவில் பங்கெடுக்க வந்திருந்த மூன்றாம் உலக நாடுகள் சில தம்முகத்தைக் கோணிக் கொண்டு ஏனோதானோ என்றிருந்துவிட்டுச் சென்றதேன்?*

*இந்த ஐம்பதாம் ஆண்டு நிறைவின் பின்பும் ஐ. நா. என்பதானது, வீடுபற்றி எரிந்து முடிந்த பின்னர் வந்து சேரும் ஒரு தீயணைப்புப் படைக்கு மேல் அதன் பங்கை ஆற்ற முடியாமல் இருப்பதேன்?*

*அறுபதுகளில் தொடங்கி இன்று பூதாகரமாக இன அழிப்புகளைச் செய்யும் ருவண்டா, புருண்டி அநீதிகள் பற்றி அதிகம் அக்கறை கொள்ளாத வல்லரசுகள், பால்கான் பிதேசத்தில் இன்று அவசர அவசரமாக அமைதி முயற்சியில் அக்கறை காட்டிக் கொண்டு அமைதி இராணுவமாக தத்தமது இராணுவ அணிகளை அங்கு நிலைநிறுத்தத் துடிப்பதேன்? கிழக்கு ஐரோப்பாவிலும், முன்னைய சோவியத் யூனியன் பிரதேச நாடுகள் பலதிலும் ஜனநாயகத் தேர்தல்கள் மூலம் கம்யூனிஸ்டுக் கட்சிகள் உயிர் பெறுகின்றன என்பதாலா? இப்படியாக கேள்விகள் .....*

*இரண்டாயிரமாம் ஆண்டு நெருங்கி, இருபத்தொராம் நூற்றாண்டுக்குள் நுழைய உலகமும்-நிழ்வுகளும் உருண்டு கொண்டே இருக்கிறது.*

*கேள்விகள் நீண்டுகொண்டே இருக்கின்றன.*

* * * * *

**அகத்தில்.**


| | | | |
|---|---|---|---|
| பக். 3 | - | வேரோடு பிடுங்கி | - நாகதிலகன். |
| பக். 4 | - | பிரெஞ்சுப்பெண்கள் | - சச்சிதானந்தம். |
| பக். 8 | - | பொங்கல் | - எஸ். பொ. |
| பக். 14 | - | காணாமல் போவோர் | - கி. பி. அரவிந்தன் |
| பக். 22 | - | நாடுகடத்தப்பட்டவர்களின் குரல். | - கீதா கணபதி |
| பக். 24 | - | ரோசா லக்சம்பேர்க். | - யமுனா ராஜேந்திரன். |
| பக். 32 | - | கிணறுவெட்டப்பூதம் கிளம்பியகதை | - கண்ணன். |
| பக். 37 | - | அணுக்குண்டுப் பரிசோதனை | - வரன். |
| பக். 42 | - | மேலைத்தேய சுதந்திரத்துள் தமிழ் மாணவர் | - கே.எஸ். துரை |
| பக். 46 | - | பாரிஸில்ஒருகாலைப்பொழுது | - புவனன். |
| பக். 51 | - | ஒஸ்மான் செம்பேன் | - யமுனா |

# வேரோடு பிடுங்கி.....



## -உருவகக் கதை-

பலம் கொண்ட முதிரைமரம்தான் முதலில் பேசியது. "இங்கு எமது காலடியில் இருக்கும் துவரை, விண்ணாங்கு, உலுவிந்தை, பன்னை, வெடுக்குநாறி போன்ற இச்சிறு இன மரங்களால் நாம் பல பகுதி நிலங்களை இழந்து கிடக்கிறோம். இனப்பெருக்கவிருத்தி அதிகம் செய்யும் இம்மரங்களால் எமது வித்துக்கள் தலை நீட்டமுடியாமல் மழுங்கிவிடுகின்றன. எனவே இப்பகுதியில் இருக்கும் இது போன்ற மரங்களை நாம் அழித்துவிட வேண்டியதுதான், எமது எதிர்கால வளர்ச்சிக்கு மிகவும் பொருத்தமானது என முதிரை மரம் தனது கருத்தைக் கூறி பேச்சை முடித்ததும் ஏனைய மரங்கள் கைதட்டி கரகோசம் செய்து வாழ்த்திக்கொண்டன.

விளாங்குள உயர்வர்க்க காட்டுமரங்களான முதிரை, யாவரனை, பாலை போன்ற மரங்கள் கூட்டம் ஒன்றை கூட்டியிருந்தன. தமது பாரம்பரியத்தையும், உரிமைகளையும் காப்பதற்கான கூட்டம் என அதை அறிவித்திருந்தன.

இதைவிட நல்லதொரு பேச்சை எவரும் செய்யமுடியாது என அசந்து போயிருந்த ஏனைய மரங்கள் கூட்டத்தில் எவருமே பேசவில்லை. பலம்கொண்ட முதிரையின் பேச்சையே புகழ்ந்து குசுகுசுத்தன.

ஏகோபித்த ஆதரவு பலமான முதிரைக்குக் கிடைத்ததால் அடுத்ததாக எப்படி இச்சிறு மரங்களை அழிப்பது என்ற விவாதம் ஆரம்பமாகியது.
முதிரையின் தலைமையிலேயே இக்கூட்டம் நடந்து கொண்டிருந்ததால் ஏனைய மரங்களிடம் முதலில் கருத்துக் கேட்கப்பட்டது.

பெரிய உண்மைகளை புரிந்து கொண்டவர்களாக கோபம் பொங்க இருந்த மற்றைய மரங்கள் ஒரேயடியாக இந்த மரங்களை வெட்டி சாய்த்து தீயிட்டுக் கொளுத்தவேண்டியதுதான் என தமது அழிப்புக்கருத்தை ஏகோபித்த முடிவாகக் கூறின.

முதிரை மரம் இளக்காரமாகச் சிரித்தது. தலையை ஆட்டி நெஞ்சைநிமிர்த்துவது போல் நின்றது. "இம் முடிவு ஆங்காங்கே எம்மால் செய்யப்பட்டதுதான், வெட்டிச் சாய்த்தென்ன நாம் வேரோடு பிடுங்கி இச்சில இன மரங்களை துரத்திவிடவில்லையா..? ஆனால் இன்றைய நிலையில் இப்படியான முடிவு முட்டாள்தனமென முதிரைமரம் கண்டித்தது. அதாவது இப்போது உலககாட்டு வளங்களின் பாதுகாப்புச்சபையின் கவனம் எம்மீதும் செலுத்தப்படுகிறது இல்லையா..? என தனது மறுப்புக் கருத்தை முதிரைமரம் கூறியது. லக

"அப்படியெனில் உங்களது முடிவு என்ன..? ஏனைய மரங்கள் கேட்டன. ஒருமுறை தனது உடம்புக்குத் தியை அசைத்துக்கொண்டு மீண்டும் இளக்காரச் சிரிப்பை காட்டி முதிரைமரம் பேசத்தொடங்கியது.

"ஒரேயடியாக வெட்டி சாய்த்து, சுட்டு அழிப்பதென் பது நல்லதல்ல. பல்வேறு உபத்திரவம்

சித்திரவதையைச் செய்யவேண்டும்.."

ஒரேயடியாகச் சொல்லாமல் சுற்றி வளைத்துக் கொண்டு முதிரைமரம் நின்றதால் ஏனைய மரங்கள் முடிவைச்சொல்லும்படிக் கேட்டன.

"இச்சில மரங்களின் உணவுக்குழாய்களைத் துண்டித் துவிடுவதென்பது, இம்மரங்களை உயிரோடு கொல்வதைப்போல் இல்லையா ...? இம்முடிவு பற்றி ஏனைய மரங்களிடமும் முதிரைமரம் சம்பிரதாயத்திற்காக கருத்துக் கேட்டது. ஏனைய மரங்கள் அருமையான முடிவு உடனடியாக செய்யவேண்டியதுதான் எனச் சொல்லிக் கொண்டன.

உணவுக்குழாய்கள் சீவப்பட்டன. சில இனமரங்கள் உயிரோடுவாழ்வதுபோல் தெரிந்தன. ஆனாலும் அவை அகதிபோல் உருக்குலைந்தன. கடுமையான கோடைகாலம், நிலங்கள் நிலங்கள் கட்டாம்தரையாகி விட்டன. நாளடைவில் இலைகள் கருகிச் சொரிந்தன, முழுமரமும் "கொள்ளி" போல் காய்ந்துபோனது. மொத்தத்தில் அவை பட்டுசெத்துவிட்டன.

பெரும்வர்க்க மரங்களுக்கு சந்தோசம் , தனித்துவத்தின் மகிழ்ச்சியோடு பூரித்தன. மாரியின் ஆரம்பம் மழை இடையிடையே பெய்தது. ஆங்காங்கே சின்ன மரங்களின் விதைகள் நிலத்தைக் கிழித்து...!

- நாகதிலகன்

மறு உழவு

# பிரெஞ்சுப் பெண்கள்

**சனத்தொகையில் 51.3%; சராசரி ஆயுள் 81.5 ஆண்டுகள்; வீட்டில் இருப்போர் 54%; வேலை பார்ப்போர் 45%**
**Bac (பாடசாலை உயர் தரம்) கல்வித் தராதரம் பெறுவோர் 57%; அரசியலில் ஈடுபடுவோர் 6% கருத்தடைச் சாதனம் பயன்படுத்துவோர் 80% .**

ச. சச்சிதானந்தம்


*பெண்ணும், ஆணும் ஓர் இனத்தின் இரு பாதிகள். ஓர் இனத்தின் இயல்புகளை விளக்குவதாய் பண்பாடு அமைகிறது. அந்த இனம் அழிந்து போகாமல் நிலைப்பதற்கு பண்பாடு, பொருளாதாரம் என்பன தலையாயவை. இவற்றில் ஆண்- பெண் இருவருக்குமே பெரும் பங்கு உண்டு. 20-ம் நூற்றாண்டில் பல நாடுகளின் சுதந்திரப் போராட்டங்களில் இரு பாலாரும் ஒன்று சேர்ந்து ஈடுபட்டிருக்கிறார்கள். போராட்ட நோக்கம் வெற்றி பெற்றதும் அந்தந்த நாட்டுப் பண்பாட்டுப் பாரம்பரியப்படி பெண்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டு விடுகின்றனர். ஒரு வரலாற்றின் வளர்ச்சியில் பெண்களின் பங்கு குறைவு என்று கருதப்பட்டது. இதனால் பெரும்பாலான வரலாற்று நூல்கள் இவர்களின் பங்களிப்பு பற்றி குறிப்பிடுவதில்லை. ஒரு பண்பாட்டை பராமரித்துக் காப்பதிலும், ஒதுக்குவதிலும் பெண்களின் பங்கு மகத்தானது. அடுத்த சந்ததியினருக்கு பண்பாட்டைப் புகட்டுவதிலும், கலை, மொழி, கைவேலை, நடனம், இசை, பாட்டு போன்றவற்றைக் கற்பித்து பாரம்பரியத்தைப் பேணுவதில் பெண்கள் மிக அடிப்படையானவர்கள்.*

*ஒரு மனிதன் இன்னொரு மனிதனை ஏதோவொரு விதத்தில் தாழ்த்திப் பார்ப்பது அவனின் இயல்பூகங்களில் ஒன்று. மனித வரலாற்றில், ஆண் பெண்ணின் மீது செலுத்திய அடக்குமுறைதான் முதலில் தோன்றிய அடக்குமுறை. "எல்லா அடிமைச் சுரண்டல்களிலும் முதலில் வந்தது பெண்மையை அடிமைப்படுத்தியது தான்" என்றார் எங்கல்ஸ். உலகனைத்திலும் பெண்ணடிமை முறையில் வியக்கத்தக்க ஒற்றுமை நிலவுகிறது. இதில் முதலிடம் வகிப்பது உடல் வலிமை. இந்த வலிமையால்தான் ஆண் பெண்ணை விட உயாந்தவனாகக் கருதப்பட்டான். நாகரிகம் வளர்ந்திருக்கும் இந்நாளில் கூட, முன்னேறிய நாடுகளில் கூட உடல் வலிமை பயன்படுத்தப்படுகிறது.*

*கால்களைக் கட்டிப் போடுதல், பிறப்பு உறுப்புப் பகுதிகளை அகற்றுதல், கற்பழிப்பு, மனைவியை அடித்தல், கைம்பெண்களைக் கொடுமைப்படுத்தல் போன்ற பல வகைகளிலும் உடல் வலிமை பெண்ணை அடக்கி சிறுமைப்படுத்தும் முறைகளில் ஒன்றாக இருக்கிறது. பல நூற்றாண்டுகளாக மேலை நாடுகளில் கூட பெண் அடிமைத்தனம் நியாயமானதாகக் கருதப்பட்டு வந்தது. இது போன்ற கருத்துக்கள், 'ஆண்கள் அடக்கப் பிறந்தவர்கள், பெண்கள் அடங்க வேண்டியவர்கள்' எனும் வஞ்சக நிலைப்பாட்டை மனதில் பதியச் செய்து விட்டது.*

பெண்களை அடக்கி அநியாயம் இழைத்த நிகழ்வுகள் பிரெஞ்சுப் பெண்கள் வரலாற்றிலும் உண்டு. ஆனால் பிரெஞ்சுப் பெண்கள் ஒன்றரை நூற்றாண்டு காலமாக உரிமைகளுக்காகப் போராடி வந்தார்கள். இதன் விளைவாக பெண்களின் வாழ்வில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. ஆயினும், பாரபட்சம், அநீதி, தரப்படுத்தல் முதலானவை வரலாற்று, பண்பாட்டு, பொருளாதார, அரசியல், சமூக நிலைகளில் இன்றும் காணப்படுகின்றன. பெண்கள் இன்னமும் முழுமையான உரிமைகளைப் பெறவில்லை. போராட்டம் தொடர்கிறது. தனியொருவர் உயர்ந்த நிலை (வருமானம்), ஆண்-பெண் சமூக நிலை, நாட்டில் பொருளாதார-அரசியலில் பெண்களின் பங்கு என்னும் நோக்குகளில் உலக நாடுகளில் பிரான்ஸ் முறையே 7-வது, 8-வது, 31-வது நிலைகளில் இடம் பெறுகிறது.

உலகப் புகழ் பெற்ற பிரெஞ்சுப் புரட்சி, மனித உரிமைகளைப் பெறுவதற்காகச் நடாத்தப்பட்ட மக்கள் போராட்டம். சுதந்திரம் (Liberté), சமத்துவம் (Egalité), சகோதரத்துவம் (Fraternité) என்பன இப்புரட்சியின் சுலோகங்கள். இச்சுலோகங்கள் நவீன பிரான்சின் சின்னங்களில் முதன்மையானவை. 1789-ல் நடைபெற்ற இப்புரட்சியின் விளைவாக மனித உரிமைகள் பிரகடனம் (La Déclaration des Droits de l'homme et du Citoyen) செய்யப்பட்டது.



இப்பிரகடனத்தை வெளியிட்டபோது (1792) பெண்கள் உரிமைகளையும் பிரகடனம் செய்யும்படி குரல் எழுப்பிய Olympe de Gouges என்ற பெண்மணி சிரச்சேதம் செய்யப்பட்டார். மன்னர் ஆட்சியை ஒழித்து, மக்கள் ஆட்சியை மலரச்செய்ய நடைபெற்ற புரட்சியில் பெண்களும் பங்கெடுத்திருந்தனர். ஆனால் புரட்சி முடிவில் உரிமைப் பிரகடனம் எழுதப்பட்டபோது பெண்கள் புறக்கணிக்கப்பட்டனர். ஆறு கடக்கும் வரைதான் அண்ணன் தம்பி உறவு முறைபோல் பெண்கள் பங்களிப்பும் ஆகிவிட்டது. 1800-ல் அதிகார பீடத்தில் சில பெண்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். 1807-ல் பெண்கள் பல்கலைக்கழகம் செல்லும் உரிமை மறுக்கப்பட்டது. பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டதே இற்றைக்கு 50 ஆண்டுகளுக்கு முன்னர்தான், (1944).

## வாழ்வியல் மாற்றங்கள்:

கணவன்- வீடு- தாய் எனும் பாரம்பரிய கட்டுக்கோப்பு வாழ்க்கை முறையில் இன்றைய பிரெஞ்சுப் பெண்களுக்கு பிடிப்பு வெகுவாகக் குறைந்துவிட்டது. ஓர் ஆண் தன் தனிப்பட்ட உரிமைகளை அனுபவிப்பது போல், பெண்ணும் தன் தனிப்பட்ட உரிமைகளை மதிக்குமாறு கோரும் நிலை வளர்ந்து விட்டது. குறிப்பாக கருத்தடை மாத்திரையின் சட்ட அனுமதி பெண்ணின் சுயநிர்ணய உரிமையை ஆளுமைப்படுத்த ஏதுவாயிற்று. இதனால் திருமணம் செய்தல், தாய்மை அடைதல் ஆகியவற்றைத் திட்டமிட்டு அமைக்கக் கூடியதாகவும், தொழில் வாய்ப்புகளில் ஈடுபடக் கூடியதாகவும் வழிவகை உண்டாகியது. தொழில் வாய்ப்பு வசதிகள் மூலம் நிதி நிலைமையில் தன் சொந்தக்காலில் நிற்கும் சுதந்திர நிலையை அடைய வாய்ப்பாயிற்று. இத்தகைய காரணங்களினால் சமுதாயத்தில் பெண்கள் பற்றிய மனப்படம் புதுப் பரிமாணத்தைப் பெறுகிறது.

தொழில் வாய்ப்பு , தொழில் நுட்ப வளர்ச்சி என்பன பெண் விடுதலை உணர்வினை வளர்ச்சி அடையச் செய்திருக்கிறது. திருமணம் என்பதற்கு புது வரைவிலக்கணம் கொடுப்பதில் பெண்களின் வளர்ச்சி அடைந்த மனநிலை பிரதான பங்கினை வகிக்கின்றது. மனைவியாக, தாயாக வாழ்ந்த குடும்ப வாழ்க்கையில் பெண்கள் சந்தோஷம், மனநிறைவு அதிகம் அடைந்திருந்தனர். ஆனால் இன்றைய பெண்களில் 1/3 பங்கினர் தொழில் பார்க்கும் பெண்ணாக இருப்பதனால் குடும்ப வாழ்க்கையில் ஈடுபடுவதற்கு நேரம் மட்டுமல்ல சுவையும் குறைந்தவளாகவே காணப்படுகிறாள். குடும்ப வாழ்க்கை- தொழில் எனும் நிலையிலிருந்து தொழில்- குடும்ப வாழ்க்கை என்னும் தற்கால முறைக்கு மாறிய நடைமுறை பெண்மையை மாற்றிவிட்டது. வீட்டுக்கேற்ற பெண்ணாக இருப்பதைவிட வாழ்க்கையில் வேறு நாட்டங்கள் கொண்டவளாக இன்றைய இளம் பெண் இருக்கிறாள். திருமணம் மூலம் இணைந்து வாழ்வதிலும் பார்க்க, 'சுதந்திரமான கூட்டுறவு' (Union- Libre) முறையில் வாழ்வதில் இரு பாலாரினதும் சமத்துவம் அதிகம் மதிக்கப்படுவதால், இரண்டாவது வகை வாழ்க்கை முறையையே அநேகப் பெண்கள் விரும்புகின்றனர். வழக்கமான திருமண வாழ்க்கையில் பெண்ணிலும் பார்க்க ஆணுக்கே அதிகாரமும், அதிக உரிமைகளும், அனுகூலங்களும் உண்டு. இன்று திருமணம் செய்து கொள்ளுவோரில் 60 % மானோர் ஒரு குறிப்பிட்ட காலம் ஒன்றாகச் சேர்ந்து சுதந்திரமான கூட்டுறவு முறையில் வாழ்ந்து பார்த்தவர்களே. இக்காலத்தில் பெண்களின் சராசரி திருமண வயது 26.4 இது 20 வருடங்களுக்கு முன்னர் 22.4 ஆகவிருந்தது.

70-ன் நடுப்பகுதியில் தோன்றிய சுதந்திரமான கூட்டுறவு வாழ்க்கைமுறை இன்று பெரும்பாலானோரின் வாழ்க்கை முறையாக சமூகத்தில் பரிணமித்து விட்டது. இவ்வித ஜோடி வாழ்க்கை முறையில் சமத்துவமாகவும், கட்டுப்பாடு குறைவாகவும் வாழ முடிவதனாலேயே இளம் பெண்களின் நாட்டம் திசைமாறி இருக்கிறது. மேலும் இம்முறை வாழ்க்கையில் தங்கள் கன்னிப் பெயரைக் காத்துக் கொள்ளக் கூடியதாகவும் இருக்கிறது. அதுமட்டுமல்ல இவ்வாழ்வு முறையில்-

### உலக அநீதி

- தொழில் பார்ப்போரில் பெண்கள் 38 வீதம்
- (ஆனால் ஆண்களிலும் பார்க்க 20- 40 வீதம் குறைவாகவே சம்பளம் எடுக்கிறார்கள்.)
- பிரசவம் காரணமாக 500 000 பெண்கள் மரணிக்கிறார்கள் (ஒரு வருடத்தில்).
- 300 000 000 பெண்கள் எந்த வித கருத்தடைச் சாதனத்துக்கும் வழி வகையின்றி வாடுகிறார்கள்.
- சட்ட விரோத கருக்கலைப்பினால் 100 000 பெண்கள் மரணிக்கிறார்கள் (ஒரு வருடத்தில்).
- 8.5முதல்- 11.4 கோடி வரையிலான பெண்களும், சிறுமிகளும் தம் பிறப்புறுப்பு அகற்றலினால் மரணிக்கிறார்கள்.
- ஒவ்வொரு 8 செக்கனுக்கு ஒரு பெண் கொடுமைக்கு ஆளாகிறாள்; ஒவ்வொரு 6 நிமிடத்திற்கு ஒரு பெண் கற்பழிக்கப்படுகிறாள். எங்கே? அமெரிக்காவில்.
- 20 பெண்களில் ஒரு பெண் தன் பிரசவத்தின் போது மரணிக்கிறாள். இது ஆபிரிக்காவில்.
- இது வரைக்கும் தனி ஆளுக்காக வழங்கப்பட்ட 634 நோபல் பரிசுகளில், பெண்கள் பெற்றது 28 பரிசுகள் மட்டுமே.

நிர்ப்பந்தமின்மை, உறுதி மொழியில்லை, பிரிந்து வாழ நேரிடுகிற போது மணமுறிவு கேட்க வேண்டிய அவசியமில்லை- இவை போன்ற பல அனுகூலங்கள் காணப்படுகின்றன. இன்றைய சமூகச் சூழ்நிலைகள் உறவுகளை நீடிக்கவிடாமல் செய்கின்றன. தொழிற்கல்வி, உயர் கல்வி பெற்ற பெண்கள் முறிவை முந்திக் கொண்டு கேட்கிறார்கள். திருமணம் செய்யக் கேட்பவர்கள் ஆண்களாகவும்; விவாகரத்து கோருபவர்கள் பெண்களாகவும் நிலமை மாறிவிட்டது. பெண்களின் உரையாடல்களில் இப்போதெல்லாம் **'மொன் எக்ஸ்'** (Mon « ex » - என் முன்னாள் கணவன் அல்லது படுக்கை நண்பன்) என அடிக்கடி சொல்வது சாதாரணமாகக் கேட்கக் கூடிய விடயம். தவிர, செய்யும் திருமணங்களில் 1/3 பங்கு விவாகரத்தில் (அதுவும் திருமணம் செய்து 7 வருடத்திற்குள்) முடிவுறும் அபாயம் ஏற்படும் நிலை தென்படுவதாக சமூகவியல் வல்லுனர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

பெண்களின் சுதந்திர உணர்வு அவர்கள் பாலியல் வாழ்க்கையில் பெரும் திருப்பத்தை ஏற்படுத்தி இருக்கிறது. இப்பாலியல் திருப்பத்தினால் பெண்கள் ஆண்களுக்குக் கொடுத்து வாங்கும் அல்லது வாங்கிக் கொடுக்கும் இன்பம் திருப்திகரமானதாக இருக்கிறது. இக்காலத்திலேயே பெண்கள் பாலுறவில் கூடிய இன்பமும் அதிக மனநிறைவும் அடைகிறார்கள் என அவ்வப்போது வெளியாகும் பாலுறவு பற்றிய அபிப்பிராயக் கணக்கெடுப்புகள் மூலம் தெரியவருகின்றது. 18% பிரஞ்சுப் பெண்கள் தினமும் குறைந்தது ஒரு தடவையாவது உடலுறவு கொள்ள விரும்புகிறார்கள். 45% மான ஆண்களும் 42% மான பெண்களும் தாங்கள் அடுத்து கொள்ளவிருக்கும் உடலுறவு யாருடன் என முன் கூட்டியே அறிந்திருக்கிறார்கள் என Institut Harris அறிக்கை ஒன்று கூறுகின்றது. பிரெஞ்சுப் பெண்களின் கைப்பையில் கருத்தடை மாத்திரை இருப்பது சாதாரணம். 20-க்கும் 44-றகும் இடைப்பட்ட வயதுடைய பெண்களில் 2/3 பெண்கள் மாத்திரையை அல்லது வளையத்தை (Stérilet) கருத்தடை சாதனமாகப் பயன்படுத்துகின்றனர். 1990-ல் 8 பேர் 13-வயதிலும்; 48 பேர் 14-வயதிலும்; 205 பேர் 15-வயதிலும் தாயாகி இருக்கிறார்கள். (Quid)

சுதந்திரமான கூட்டு வாழ்க்கை, கருத்தடைச் சாதனங்கள், திருமண வயது உயர்வு, நிரந்தர ஜோடிகளின் எண்ணிக்கை குறைவு முதலானவை குழந்தைகள் தாமதமாகப் பிறக்கவும், திருமணத்திற்கு வெளியே பிறக்கவும் காரணிகளாக அமைகின்றன.பொதுவாகப் பெண்கள் 28.7 வயதில் தான் தாயாகிறார்கள். கருத்தடை முறைகளின் பரம்பல், கருக்கலைப்பு சட்டமயமாக்கல் (IVA) போன்றன பிள்ளைகளின் எண்ணிக்கையையும், பிள்ளை பிறக்க வேண்டிய கால நேரங்களையும் தீர்மானிக்க ஜோடிகளுக்கு உதவி புரிகின்றன. இது 10 வருடகால பிறப்பு விகிதாசார வீழ்ச்சி மூலம் தெரியப்படுகிறது. தினமும் 6 சிறுமிகள் பாலியல் வன்முறைக்கு உள்ளாகிறார்கள், இச்சிறுமிகளில் 30.5% தகப்பன்மார்களாலும், 15% மாற்றாந்தகப்பன் அல்லது தாயின் கூட்டுறவு வாழ்க்கைக் கூட்டாளிகளாலும், 4.5% அயல் வீட்டுக்காரர்களாலும், 37% பிறராலும் கற்பழிக்கப்படுகின்றனர். (France- Soir 11. 05. 1995)

இக்காலத்தில் பெண்களுக்கு முழு நேர வேலை கொடுப்பதென்பது குறைந்து வருகின்றது. திருமணம் ஆகாதவர்களுக்கு வேலை வாய்ப்பளிப்பதில் சலுகைகள் காட்டப்படுகின்றன. உயர் உத்தியோகம், பொறுப்பான பெரிய பதவிகளுக்கு (Cadres) தகுதி இருந்தாலும் தரப்படுத்தல் செய்யப்படுகிறது. பெண்களிடம் உயர் கல்விச் சான்றிதழ்கள் பல கேட்கப்படுகின்றன. ஒரே தொழில் பார்க்கும் பெண்களுக்கும் ஆண்களுக்கும் சம்பளத்தில் நிறையவே பாரபட்சம். ஒரே தொழில் பார்க்கும் ஆணுக்கு பெண்ணிலும் பார்க்க 24%

## பெண்கள் போராட்டம் (இயக்கம் தோற்றுவிப்பு)

*1876*-ல் முதன்முதலாக பெண்கள் நலன்புரிச் சங்கம் நிறுவப்பட்டது.

*1914*-ல் பெண்களின் முதல் ஆர்ப்பாட்டம் பாரிஸில் நடந்தது.

*1917- 1918*ல் ஆசிரியைகள் வேலைநிறுத்தம்.

*20. 08. 1970* போரில் உயிரிழந்த பெண் சிப்பாய்களுக்கு மரியாதை தெரிவிக்கும் கூட்டம் நடந்தது. பெண்கள் விடுதலை இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது.

*1973*-ல் கருக்கலைப்பு- கருத்தடை விடுதலை இயக்கம் தோற்றுவிக்கப்பட்து.

*1973*- பெண்கள் இராணுவத்தில் சேர்த்தல்.

*1975*-. பெண்கள் ஆண்டாக ஐ. நா. பிரகடனம்.

*1975*- முதற்தடவையாக விலைமாதர்களின் ஆர்ப்பாட்டம் (லியோன்)

*1975*- SOS FEMMES ALTERNATIVE நிறுவப்பட்டது. இச்சங்கம் குடும்பங்களில் ஆண் இழைக்கும் துன்பங்களுக்கு எதிராகப் போராடுவதற்காக அமைக்கப்பட்டது.

*1977*- கற்பழிப்புக்கு எதிரான பெண்கள் சங்கம் ஸ்தாபிதம்.

*1983*- ஒரே குடும்பத்து ஆண்களின் தகாத உறவைக் கண்டித்து பிரச்சாரம்.


*1988*- தாதிகள் வேலைநிறுத்தம்

கூடுதலான சம்பளம். கல்லூரிகளில் 12 புள்ளிகள் எடுக்கும்போது, அது மாணவனுக்காயின் 'நல்லது' எனவும்; மாணவிக்காயின் 'சராசரி' எனவும் தேர்ச்சி நிலை கணிக்கப்படுகின்றது. நீண்ட காலம் வேலை இல்லாது இருப்போரில் 2/3 பகுதினர் பெண்களே. அலுவலகத்தில் வேலை செய்யும் பெண்கள் முழுக்காற்சட்டை அணிவதை அவர்களின் மேல் உத்தியோகத்தர்கள் (ஆண்) விரும்புவது குறைவு என சில பெண்கள் குறைப்படுகிறார்கள். வேலை பார்க்கும் பெண்களில் 36 வீதத்தினர் பாலியல் உறவுக்கு மேல் நிலை ஆண் உத்தியோகத்தர்களால் உள்ளாக்கப்படுகிறார்கள். இதில் 56% உறவுகள் தொழில் பயமுறுத்தல்கள் அல்லது உயர்வு காட்டி செய்யப்படுகின்றன. முன்னேறிய ஐரோப்பாவில் பிரான்சில்தான் மிகக் குறைவான பெண்கள் அரசியல் ஆட்சிப் பதவிகளில் இருக்கின்றனர். பெரிய பதவிகளுக்குப் பெண்கள் நியமிக்கப்படுவதை ஆண்கள் விரும்புவதில்லை. முதல் பெண் பிரதமராக நியமிக்கப்பட்ட EDITH CRESSON ' 11 மாதங்களுக்கு மேல் பதவியில் இருக்கவிடாமல் எல்லா ஆண்களும் சேர்ந்து பதவியிலிருந்து துரத்தி விட்டார்கள்.

பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி முதலான மக்கள் செய்திச் சாதனங்கள் மூலம் இவரின் அரசாங்க நிர்வாகத்தை சார்புநிலை விமர்சனம் செய்து வந்தன. குறிப்பாக TF1 ஒளிபரப்புத் தொடராக வந்த « Bébéte show » அரசியல் கிண்டல் நிகழ்சியில் Cresson ஐ ஜனாதிபதி மித்திரோனின் வைப்பாட்டியாக காட்டி வந்ததும் பதவியை அகாலத்தில் விட்டுப்போவதற்கு ஒரு காரணம் என முன்னாள் பிரதமர் 93 நவம்பரில் Marie France சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் கூறியிருந்தார். 15ம் நூற்றாண்டில் ஆங்கிலேயரின் ஆட்சியில் பிரான்ஸ் இருந்த போது தாய்நாட்டடின் பற்று மேலீட்டினால் தளபதியாக சேர்ந்து போராடி, 1429ல் Orleans ஐ 1429ல் ஆங்கிலேயரிடம் இருந்து மீட்டுக் கொடுத்தது ஒரு பெண்ணே! இவ் வீராங்கனை காட்டிக் கொடுககப்பட்டதால் ஆங்கிலேயர் இவளை உயிருடன் எரித்தார்கள். (30-05- 1437) இவளின் தினம் இன்றும் பிரான்சின் தேசிய விடுமுறை தினமாக கொண்டாடப்படுகிறது. இந்த வீராங்கனை தான் Jeanne d'Arc. இவளின் நினைவு தினத்தை அரசியல் இலாப நோக்கில் லு பென் (Le Pen) மிதவாதகட்சி பெரிதுபடுத்துகிறது. இரு தடவைகள் நோபல் பரிசு பெற்ற மேரி கியூரி 1934-ல் இறந்தார். இவரின் சாம்பலை Panthéon -ல் வைப்பதற்கு 60 வருடங்களாக மறுப்பு தெரிவிக்கப்பட்டது. ஆசிரியராக, அலுவலக ஊழியராக, செயலாளராக, வரவேற்பாளராகத்தான் பெண்ணை இந்த ஆண் சமூகம் ஏற்கிறது. ஆனால் உயர் உத்தியோகத் தலைமையில், மதத் தலைமையில் அல்லது ஆட்சித் தலைமையில் இவர்களைப் பார்க்க ஆண்கள் தயாராக இல்லை என்பதையே இவைபோன்ற நிகழ்வுகள் உறுதிப்படுத்துகின்றன.

இன்றைய நாட்களில் பெண்கள் பெற்ற உரிமைகளுக்கு Simone de Beauvoir, Marie Curie (இரு தடவை நோபல் பரிசு), Camille Claudel, Coco Chanel, Simone Veil, François Giroud முதலான பெண்களின் பங்களிப்பே காரணம் எனலாம். "எந்த நாட்டிலும், எந்தச் சமூகத்திலும் பெண்களுக்கு சமவுரிமைகள் கொடுக்கப்படவில்லை" என கடந்த செப்டம்பரில் சீனத் தலை நகரில் நடந்த சர்வதேச பெண்கள் (உரிமை) மகாநாட்டில் வெளியிட்ட அறிக்கை கூறுகிறது. பெண்களுக்கு சமவுரிமை மறுக்கப்படுவதற்கு ஒரு நாட்டின் அபிவிருத்தியோ, கல்வி நிலையோ அல்லது செல்வந்த நிலையோ காரணமாக இல்லை. அபிவிருத்தி அடைந்த நாடுகளான பிரான்ஸ், கனடா, நெதர்லாந்து போன்ற நாடுகள் அபிவிருத்தியிலும், கல்வி நிலையிலும், செல்வந்த நிலையிலும் முன் நிலையில் உள்ள நாடுகள். இங்கு பெண்களுக்கு சமவுரிமை இல்லை. மூன்றாம் மண்டல நாடுகளான இலங்கை, சீனா, ஷிம்பாவே ஆகிய நாடுகளில் எழுத்தறிவு நிலை உயர்ந்திருக்கிறது. ஹொங் கொங், சிங்கப்பூர், உறுகுவே போன்ற நாடுகள் தொழில் வளத்தில் முன்னேறி இருக்கின்றன. செல்வந்த நாடுகளான சவூதி அரேபியா, குவைத், பொர்ணியோ முதலான நாடுகளில் சமவுரிமையை எதிர் பார்க்கவே முடியாது. இவர்கள் பெண்களுக்கு சமவுரிமை வழங்க முடியாது என எழுத்தில் ஐ. நா. வுக்கு அறிவித்திருக்கின்றனர்.

மனித வரலாற்றில் உலகம் தொடங்கியதில் இருந்து ஆதாம்- ஏவாள் கதையை உண்டாக்கி தவறுக்கு அடிப்படையில் பெண்தான் காரணம் என அரிச்சுவடி எழுதப்பட்டு விட்டது. இதை மாற்றுவது இலகுவான வேலை அல்ல. ஏனெனில் பெண் என்னத்தை செய்கிறாள் என்பதையும், ஆண் என்னத்தை செய்யாமல் விடுகிறான் என்பதையும் நோக்கியே பெண்ணும் ஆணும் தீர்மானிக்கப்படுகின்றனர். பெண்ணை பெண்ணாக அங்கீகரித்து, பெண்ணாகப் புரிந்து கொண்டு, பெண்ணாக நடத்துவதை விட வேறு என்ன மரியாதையை ஒரு ஆணால் பெண்ணுக்குச் செய்து விடமுடியும்?



**பெண்களுக்கு விதிக்கப்பட்ட தடைகள்:**

*1807- பல்கலைக் கழகம் செல்லத் தடை*

*1816- விவாகரத்து செய்யத்தடை*

*1892- இரவு நேர வேலை பார்க்கத் தடை*

*1936- மூன்றாவது தடவையாக வாக்குரிமை மறுப்பு*

*1942- கருக்கலைப்பு குற்றம்*

# பொங்கல்

நான் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால், சேணிய தெருவதின் கிழக்கு விலாவில் வைத்துப் படுத்துக் கிடக்கும் ரயில் பாதையில் நின்று குதிக்கின்றேன். இரவு பஸ் பளையை நோக்கிப் போய் விட்டது. அதற்குப் பச்சை விளக்குக் காட்டி, பேந்து, பென்னம் பெரிய ஒளிரும் குங்குமப் பொட்டை அப்பிக் கொண்டு நிற்கிறது கைகாட்டி. இலேசாக நிலவு எறித்ததாகவும் நினைவு. பழைய நினைவுகள் காவியம் தடவுவதாகவும் இருக்கலாம்.

நத்தார் மழை ஒழுங்கு அது நிச்சயம். நத்தாருக்குக் கடைகளில் முட்டை வலு அருந்தல். அப்பையாவுக்கு எந்த நாளும் வெள்ளிக் கிழமை எண்டாலும் காலையில் இரண்டு முட்டை அடிச்சுக் கோப்பி தேவை. காலையில், வேதக் காரன்களைப் பற்றிப் புறுபுறுத்த படி ஆட்டுப் பால் கோப்பிதான் குடிச்சவர். நத்தார் முடிந்தாலும் பறங்கித்தெருப் பக்கம் இடையிடை சீன வெடிச் சத்தம் கேட்டுக் கொண்டுதான் இருந்தது...... இப்ப, இந்த ராத்திரியில், அந்தா......அந்தா ... வானத்திலிருந்து சிவப்பும், பச்சையும், நீலமும், மஞ்சளுமாக தீப்பூக்கள் சொரியப்படுகின்றன. அது சோக்கான மத்தாப்பு......! ஈக்கில் வானமும் வானத்தைக் கிழிச்சுக் கொண்டு போய் அந்தரத்தில் வெடிக்குது...... சம்பத்திரிசியார் கல்லூரிக்குப் போகும் வரையிலும், வேதக்காரர் வாழ்ந்த பகுதிகள் வேறொரு தனியுலகம் என்கிற கற்பனைகளிலை வாழ்ந்து கொண்டு இருந்தவர். அந்தக் கற்பனைக் காலத்தில், தென்கிழக்குத் திக்கிலே வானைப் பார்த்து இப்படி வாயூறுவது வழக்கம். எங்கடை பகுதியிலை– சைவப் பகுதியிலை பொங்கலை அண்டித்தான் சீன வெடி அமளி நடக்கும்.

குஷினிக்குப் பின்னால், பதினெட்டியான் தென்னைக்குப் பக்கத்தில், அம்மா புது அடுப்புகள் பிடிக்கத் துவங்கினவுடனை எனக்கு விளங்கிப் போகும், பொங்கல் கிட்டடியிலை வரப்போகுது எண்டது. சின்ன மாமாவின்ரை புண்ணியத்திலை தேவையான செம்பாட்டுக் களிமண்ணும் வந்து சேர்ந்திடும். அம்மா எப்பவும் எதிலும் துாசு துப்பரவு. ஒரு ஒழுங்கு. சாயங்கால வேளைகளில் அவவைப் பார்த்தாத் தன்னாலை பக்தி வரும். மூன்று, நான்கு கைவிளக்குகள், சாமி அறையில் ஒரு குத்து விளக்கு அவை அனைத்தும் வெண்கலம். புளியும் சாம்பலும் போட்டு அம்மா மினுக்கினால், பவுணிலை செய்தது போல மினுங்கும். வீட்டிலை ஒரேயொரு அரிக்கன் லாம்புதான். காத்து அடிச்சாலும் அரிக்கன் லாம்பு நூராது, ஆனால், அடிக்கடி சிம்னி உடையும். 'அக்காச்சி தேய்க்கிற தேய்ப்புக்கு நிண்டு பிடிக்காது' என்று சின்ன மாமாவே பகிடி பண்ணுவார். அரிக்கன் லாம்பு போல, கைவிளக்கும் மண்ணெண்ணையிலை எரியும். ஒரு போத்தல் நாலுசதம். ஒரு கலன் பெற்றோல் இரண்டேகால் ரூபாய்க்கு நான் வாங்கியிருக்கிறன். குறள் திரி எண்டால் புதுத் திரி போடுவா. திரிபோடுறதுக்கென்றே பழைய, கிழிஞ்ச வெள்ளை வேட்டியளைப் பத்திரப்படுத்தி வைச்சிருப்பா. விளக்குகளுக்கு எண்ணெய் விடுவதற்குச் சின்ன புனல் வைச்சிருந்தவ. குத்துவிளக்கு தேங்காயெண்ணெயிலை தான் எரியும். குத்துவிளக்கை ஏற்றின பிறகுதான் மற்ற விளக்குகளைப் பத்த வைப்பினம். வெள்ளிக் கிழமைகளிலே சாம்பிராணிப்புகைக் காட்டினால் எல்லா இடமும் கமகம என்று வாசினையாய் இருக்கும். விளக்கு வைப்பதற்கு முன்னர் வளவு கூட்டப்படும். அம்மா முற்றத்தைக் கூட்டினால் நல்ல வடிவாய் இருக்கும். வகிடு எடுத்துத் தலை வாரியது போல விளக்குமாறின் ஈக்கில்களின் நர்த்தனச் சுவடுகள் ஆழமாகப் பதிந்திருக்கும். வெயில் காலத்தில் மண்ணின் மணம் புழுதியுடன் கிளம்பும். நிலத்தைக் குளிர்ச்சியாக்க தண்ணீர் தெளிப்பா. மஞ்சள் ஒரு கிருமிநாசினி எண்ட நம்பிக்கை இருந்தது.

எஸ். பொ. வின்

–நனவிடை தோய்தலில்–

பொங்கல்

புது அடுப்பிலை புதுப்பானை வைத்து சூரிய ஒளி நன்றாக விழக்கூடிய முற்றத்திலே வைத்துத்தான் தைப்பொங்கலுக்கான பொங்கல் நடக்கும். பொங்கலுக்கான முதல் ஆயத்தம் புது அடுப்புப் பிடிப்பது. ஒரு அடுப்புக்கு மூன்று கற்கள். மாட்டுப் பொங்கலுக்கும் புது அடுப்பு. அப்ப இரண்டு அடுப்புகளுக்கான ஆறு 'கற்கள்' பிடிக்கப்படும். ஒரு கல்லின் உயரம் ஒரு அடி இருக்கும். 'கல்' என்றாலும் அது கட்டியான களிமண்ணிலே செய்யப்படும். நன்றாகப் பிசைஞ்சு இறுக்கமான களியிலே செய்யப்படும். வெடிப்புகள் ஏற்படாமல் காயவேண்டும். அடுப்புகள் செய்வது பாரிய வேலை. அம்மா களைச்சுப் போவா. ஆனால் அடுப்புச் செய்யிற வேலையில் யாரும் அவவுக்கு உதவி செய்யப் போகக்கூடாது. உதவியை உபத்திரவமாக விளங்கிக் கொள்ளுவா. தன் பணியைத் தனியே செய்து பழக்கப்பட்டவ. அடுப்புக்கான கற்களைப் 'பிடித்து'க் காய வைத்தவுடன் மற்றைய வேலைகளும் துவங்கி விடும். வீடு அல்லோல கல்லோலப்படும். அறைகள் குசினி ஆகியவற்றுள் அடைஞ்சு கிடக்கும் அத்தனை சாமான்களும் வெளியில் வந்து விடும். சின்ன மாமா எதையும் சுறுக்கெனப் பிடிச்சுக் கொள்வார். ஆரும் நச்சரிக்கத் துவங்கிறதுக்கு முந்தியே அப்புக்குட்டி மேசனைக் கொண்டு வந்து சேர்த்துப் போடுவார். அந்த வீட்டை அப்புக்குட்டி மேசன் தான் கட்டினவர். இரண்டு அறைகள் ஒரு விறாந்தை. பச்சைக் களி மண் 'கற்கள்' வைச்சுக் கட்டப்பட்ட சுவர்கள். உட்சுவர் வெளிச்சுவர் எல்லாம் சிப்பிச் சுண்ணாம்பில் பளிச்சென்று வெள்ளை நிறம் தெரியத்தக்கதாக நீலம் கலந்து வெள்ளை அடிப்பார். அவர் வெள்ளையடிக்கிறதைப் புதினம் பார்த்துக் கொண்டு நிற்பன். பசிக்கவும் மாட்டுது. விறாந்தை நல்ல சீமெந்துக் கட்டு. பெரிய வீட்டுக்கு நடைபாதை. அது விறாந்தையைச் சின்னத் திண்ணையாகவும் பெரிய திண்ணையாகவும் பிரிக்கும். சின்னத் திண்ணையின் கணிசமான இடத்தை ஒரு கட்டில் அடைத்துக் கொள்ளும். அந்த கட்டிலிலை தான் சின்ன மாமா படுப்பார். விறாந்தையின் பெரும் பாகமாக அமைந்துள்ள பெரிய திண்ணை 'சபைகள்' நடத்துவதற்கும் ஏற்றது. அதற்குச் சீமெந்து இழுத்த

பொழுது அப்புக்குட்டி மேசன் தனது வித்தை எல்லாவற்றையும் பிழிந்தார் என்று நினைவு. எத்தனையோ சதுர அமைப்புகள் பதியும் வண்ணம் என்னென்னவோ செய்தார். 'திண்ணையிலை சாய்ஞ்சு இருப்பினம். பேந்து கஷ்டம். மூண்டடி உயரத்துக்கு டிஸ்ரெம்பர் அடிப்பம்' என்று ஆலோசனை நல்கிச் செயற்படுத்தியவரும் அவரே. தளிர்ப்பச்சை நிறம் 'டிஸ்ரெம்பர்' அடித்தால் கொஞ்சக் காலத்துக்கு வஜ்ஜிரமும் சேர்ந்து மணக்கும் விறாந்தை வளையை நாலு மரத்தூண்களும் இரண்டு அரைத் தூண்களும் தாங்கின. அந்தத் தூண்களை நல்ல வேலைப்பாடுகளுடன் திருநெல்வேலித் தச்சு சின்னத்துரை இணக்கினவர். அந்த மரத்தூண்களுக்கு நல்லா 'மாட்ச்' ஆகும் என்று மரகதப்பச்சை வர்ணம். இந்த வெள்ளையடித்தல் வர்ணம் பூசுதல் எல்லாம் வீட்டுக்கு ஒரு புதுப் பொலிவு கொடுக்கும். இந்த மேசன் வேலைகள் எல்லாம் பொங்கலுக்கு இரண்டு மூன்று நாளுக்கு முன்னால் முடிச்சால் தான் அம்மாவுக்கு நிம்மதி. திருப்பி அடுக்கிற வேலை எல்லாம் பம்பலாய்க் கிடக்கும். தூண்களுக்கு அடிச்ச மிச்ச 'பெயின்'ரைக் கொஞ்சம் தண்ணியாக்கி சங்கடப் படலைக்கும் பெயின்ற் அடிச்ச பிறகுதான் மேசனின் கணக்கு வழக்குகள் தீர்க்கப்படும்.

அடுப்படிப்பக்கம் அப்புக்குட்டிமேசன் எட்டியும் பார்க்கேலா. அடுப்படி சின்னன். இரண்டு பக்கம் இரண்டடி உயரக் குந்துகள். குந்துகளின் மீது ஒரே உயரமான பனை மட்டைகள் வரிச்சுப் பிடிக்கப்பட்ட கிறாதிகள். இந்தக் கிறாதிகளின் வழியாக புகைகெதியா வெளியாலை போயிடும். காக்கை கிளியளின்ரை தொந்தரவும் இல்லை. செம்பாட்டு மண், முள்முருக்கம் இலைச்சாறு, இளங்கன்றுச் சாணம் ஆகியவற்றால் அப்புக்குட்டி மேசனிலும் பார்க்க கலாதியான புதுப்புனைவை அம்மா அடுப்படிக்குக் குடுத்துப் போடுவா. எல்லாம் அவவின்ர கைப்படத்தான் நடக்கும். வீட்டுக்கு வாறவை எப்பவும் பெருமையாகச் சொல்லுவினம். 'அம்மாக்குட்டியின்ரை குஷினீக்க இலைபோடாமல், நிலத்தில சோறுபோட்டுச் சாப்பிடலாம்..' அம்மா எப்பவும் அப்பிடித்தான். எதிலும் ஒரு ஒழுங்கு, துப்பரவு, ஒரு நறுவீசு. ஒப்பிட்டுப்பார்க்கையில் அப்பையா காட்டுமனிதன். ஒழுங்குமுறைகள் தன்னுடைய சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதாக அலுத்துக் கொள்வார். 'OPPOSITE POLES ATTRACT' என்று சொல்லி இன்னாசிமுத்து சேர் PHYSICS CLASS ஸில் படிச்சவர். சரியான உதாரணம் அப்பையாவும் அம்மாவும்தான். அம்மா நல்ல சிவப்பு. உறை நிலத்தில் அடைந்த குத்துவிளக்கு சுடர்போல! கருங்காலி மரத்தில கடைஞ்செடுத்தது போலை அப்பையா பேய்க்கறுவல். ஆறடி உயரமுள்ள கட்டுடல். அம்மா துள்ளிப்பாஞ்சாலும் அவருடைய உச்சியைத் தொடமுடியுமா என்பது ஐமிச்சம். ஒண்டாகப்போனால் பாலும் கோப்பியும் போகுதெண்டு ஓட்டைநாகேசர் பகிடி பண்ணுவார். அப்பையாவும் அம்மாவும் சண்டை பிடிச்சதை நான் பார்த்ததேயில்லை. எனக்கு நான்கு தம்பிமாரும் நாலு தங்கைச்சிமாரும். சிவஞானம் என்கிற தம்பிமட்டும் சின்னவயசில செத்துப் போனான். எங்கள் எல்லாரிலும் அவன்தான் விண்ணன் என்பது அப்பையாவின் அபிப்பிராயம்.

கழுவல் வேலைகள் துவங்கினவுடன பலசாமான்கள் அடுப்புக்கு மண் எடுத்த கிடங்குக்குள் போகும். ஆச்சி ஊர்த்துலவாரங்களை தலையில அள்ளிப் போடுறதில விண்ணி. ஆக்கள நையாண்டி பண்ணிறதில அவ வெண்தாடிக் கிழவரின் அச்சாவான கார்பன் கொப்பி. அம்மா வீட்டைக் கோயிலாக்கிறதில திருப்தி கண்டவ. நெருங்கிய உறவுமுறையில் செத்தவீடு, முறை உறவின் சாமத்தியச்சடங்கு என்று போனால் உண்டு. விரத



காலத்தில் இருபத்தைந்து நாளும் நல்லூர்க்கந்தசாமி கோயிலுக்குப் போய்வருவா. மாவிட்டபுரத்திற்கும் செல்லச்சந்நிதிக்கும் போய்வந்ததாகவும் ஞாபகம். கோயிலுக்குப் போனால், கடலைக்கொட்டைகளும் குஞ்சுப் பனங்கட்டிக் குட்டான்களும் வாங்கிவர மறக்கமாட்டா. வடிவான குஞ்சுப்பெட்டி, குஞ்சுக்கடகம், அடுக்குப்பெட்டி, மூடல்பெட்டி எல்லாம் வாங்குவா... கோயிலடியில சின்னமாமாவைச் சந்திச்சால் வெண்கலச் சாமான்கள் வாங்கிப்போடுவா. சருவச்சட்டிகளும் மூக்குப்பேணிகளும் வந்துசேரும். புதுச்சுளகும் வாங்குவா. எல்லாத்தையும் பொதுக்கிப்பொதுக்கி வைச்சிருப்பா. பாவனைக்கு வராது. வீட்டின் சின்ன அறையைத் தொடுத்தாப்போல, கிழக்குப் பக்கமாக கூரை இறக்கி இருக்கு. அதைக் கொட்டில் என்றுதான் சொல்லுவம். சுவரை ஒட்டினாற்போல மண் திண்ணை. இந்தத் திண்ணையையும் அம்மாதான் இணக்கி இருக்கவேணும். அதிலை குந்தி அம்மா பாய் இழைக்கத் துவங்கிட்டால் தெரியும் அவ வீட்டுக்குத்தூரம் எண்டு. பனையோலை வார்ந்து நல்லாப் பாய் இழைப்பா. சின்னமாமா தெல்லிப்பழைப் பக்கம்போனால், அம்மாவுக்கு குருத்துப் பனையோலைகள் கொண்டுவர மறக்கமாட்டார். கரிக்கட்டியால திண்ணையில ஒருகோடு போடுவா. தலைமாட்டில ஒரு இரும்புச்சாமான், திண்ணையை வகுத்ததுபோல பழைய உலக்கை. அவ எல்லையிட்டுள்ள பிராந்தியம் துடக்கு. அதற்குள் நான் கூடப் போகக்கூடாது. இந்தக் காலங்களில் இழைக்கப்படும் பாய்களும் ஒதுக்கப்பட்டுவிடும். பொங்கல் சமயத்தில் பழையபெட்டிகள், சுளகுகள், கிளிந்தபாய்கள் எல்லாம் பதினெட்டடியான் கிடங்கிலே வீசப்படும் பொழுதுதான் புதியன புழக்கத்துக்கு வரும். பொங்கலின் போது எல்லாச் சாமான்களும் புதியன போன்று தோன்றும். இந்தப் புதுக்கலுக்கு அம்மா நீண்டகாலமாகத் திட்டமிட்டு உழைப்பது வழக்கம் என்கிற

*கடந்த மூன்று - நான்கு நூற்றாண்டு வரலாற்றில் யாழ்ப்பாண மண் எத்தனையோ அந்நியர்களின் பாதச்சுவடுகளினால் பரிதவித்து மீண்டிருக்கிறது. ஆனாலும் நம்மவர்கள் தமக்கென்ற தனித்துவத்தை இழக்காமல் நிமிர்ந்து நின்றார்கள். சோதனையின் மேல் சோதனையாக சவாலாக இன்று எம்மவர்களை தாய்க் கருவறையிலிருந்து பிடுங்கி தொப்பிள் கொடியறுத்து எக்காளமிட்டுள்ளது சிங்களப் பெருந்தேசியம். அகதி என்பதே வாழ்வாகி, முகமிழந்து போக்கிடம் தெரியாமல் விழி பிதுங்கத் தவிக்கும் எமக்கு இக்கட்டுரை மிக முக்கியமாது.*

உண்மையை இப்பொழுது நிதானிக்க முடிகிறது.

பொங்கலுக்கான சாமான்னளை எல்லாம் பொங்கலுக்கு முதல்நாள்தான் அப்பையா வாங்குவார். ஐயம்பிள்ளைமாமாவும், சில சமயங்களில் கணபதி மாமாவும் சேர்ந்து கொள்வார்கள். பெரியகடையிலைதான் வாங்குவினம். இதற்கும் முதல்நாளே செல்லத்துரை கடைக்கும்போய் பொங்கல் பானை வாங்கப்படும். பொங்கல்பானை வாங்கிறதுக்கு அம்மாவும் போவா. பானை மட்டுமல்ல, குண்டாளம் பல சைஸ்களிலும் சட்டிகள் கறிமூடிகள் என்றெல்லாம் வாங்கிப்போடுவா. பொங்கலுக்குப்பிறகு சமயற்பாத்திரங்களிலே ஏற்படுத்தப்பட இருக்கும் மாற்றங்களைப் பொறுத்து இந்தக்கொள்வனவு நடக்கும். ஆருதக்கறிகளுக்கு புதுச்சட்டிகள் வந்தவுடன் மரக்கறிச்சட்டிகள் பல 'பிரால்' சட்டிகளாக மாற்றம் பெறும். மூச்சிழுத்துச் சேவை செய்த பிரால் சட்டிகள் சில பதினெட்டடியான் கிடங்கிலே வீசப்படும். மரக்கறிச்சட்டி 'பிரால்' சட்டியாய் மாறலாம். ஒருக்காலும் பிரால் சட்டி மரக்கறிசட்டியாய் மாறாது. அதுதான் நியதி. பொங்கலுக்குப்பிறகு பொங்கல் அடுப்பைப் பிரிக்காமல், புதுச்சட்டிகளில் இரண்டு மூன்று ஆருதக்கறிகள் சமைக்கிறது அம்மாவின் வழக்கம்.

பொங்கலுக்கு இப்படிப்பல ஆயத்தங்கள் நடந்து கொண்டிருந்தாலும், பெரியமாமாவும் சின்னமாமாவும் பட்டாசுக்கட்டுக்களுடன் வந்திறங்கின பிறகுதான் எங்களுக்கு பொங்கல் வந்துவிட்டதான குதூகலம் பிறக்கும். பொங்கலுக்கு இரண்டு மூன்று நாள்களுக்கு முன்பிருந்தே சைவப்பகுதிகளில் அங்கொன்றும் இங்கொன்றுமாக சீனவெடிகள் வெடிக்கத் துவங்கிவிடும். பெருமாள் கோயிலடிப் பக்கம் இருந்துதான் இது துவங்கும். அப்ப, பறங்கித் தெருப்பக்கத்து பட்டாசு ஆரவாரங்கள் எல்லாம் அடங்கிவிடும். பெரியமாமா எதிலும் நிதானம். பொங்கலுக்கு முதல்நாள்தான் பட்டாசுகள் கொண்டு வருவார். 'பொடியங்களின்ரை படிப்பைக் கெடுக்கப்படாது' எண்டு சொல்லுவார். 'நான் நெவர்மயின்ட் ஸ்டையில்' என்கிற போக்கு சின்னவருடையது. நல்ல, பெரிய மத்தாப்பு ஒன்றைக் கொழுத்தி பட்டாசுவிழாவை சின்னமாமாதான் துவங்கி வைப்பார். பச்சை, மஞ்சள், நீலம், சிவப்பு என்று பலநிற ஒளிப்பந்துகள் மத்தாப்புக் கொட்டுக்குள்ளிருந்து கிளம்பிப்போவது வடிவாய் இருக்கும். அதை முன் வீட்டுப் பராசக்தி அக்காவும் வந்து பாப்பா. முற்றத்துப்பாண்டி மரத்துக்கும் பூவரசம் மொக்குக்கும் இடையில், துணி காயப்போடுறதுக்கு ஒரு கொடிக்கம்பி கட்டப்பட்டிருந்தது அதிலே, ரயில் பாதைப்பக்கம் சத்தாராய் வைச்சுத்தான் ஈக்கிள் வாணத்தைச் சுடுவார். அது புஸூக்கென்று சீறிக்கொண்டு தென்னோலைகளைச் சிராச்சுக் கொண்டு ஆகாய உச்சிக்குப் பறந்துபோய் வெடிக்கும். பறக்கேக்கிள்ளை வெள்ளித் தூள்களைத் தூவும். நல்ல வடிவா விடாட்டி, தென்னமர வட்டுக்குள்ள தொங்கிப்போய் அங்கேயே வெடிக்கும். ஈக்கிள் வாணத்தாலை இரண்டுமூன்று வீட்டுக்கூரைகள் தீப்பற்றிக் கொண்டது எனக்குத் தெரியும். ஒருமுறை கணவதிமாமான்ரை வீட்டுக் கூரையிலை விழுந்து பத்தினது. வெறிக்குட்டி 'ஓட்டத்த' மயில்வாகனம் விட்ட ஈக்கில் வாணத்திலைதான் முத்துமனுஷியின் குடில் எரிஞ்சுது. ஈக்கில்வாணத்தை கவனமாய் விடவேணும். அதுகளை பெரியாக்கள் வெடிக்க வைக்கிறதுதான் நல்லது. ஈக்கிள் வாணம் விடுகிறதிலை அப்பையாவும் விண்ணன். அவர் அதைக்கையில் வைச்சுப்பத்தி சீறத்துவங்கியதும், ரயில் பாதை முகட்டிலை நின்று வெடிக்கிறதுக்கு கணக்கா விடுவார். ஈக்கில் வாணம் விடுறதுக்கு எனக்கு நல்லவிருப்பம். ஆனால் சரியான பயம். அந்தக் காலத்துச் சீனவெடிகள் நல்லம். எல்லாம் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. சீனன் செய்யிற வெடிதானே சீனவெடி? சீனவெடிக்கட்டை உடைச்சு, பட்டுகளை உதிர்த்திவிட்டால், பழக்கொச்சிக்காய் குவியல்போல சீனவெடிகள் கிடக்கும். மணிமார்க் போட்டுவரும் சின்னச்சீனவெடி பச்சைநிறம். திப்பிலக் கொச்சிக்காய்க் கணியம். ஒருகட்டுக்குள் இருவது பட்டுகள் இருக்கும். பட்டுபட்டாய் கொழுத்தலாம். தொடர்ந்து சின்னசின்ன வெடிச்சத்தம் கேக்கிறது முஸ்பாத்தியாய் இருக்கும். சின்னமாமாவும் பெரியண்ணருந்தான் கனக்கச் சீனவெடிகள் கொழுத்துவார்கள். அம்மாவுக்கு எப்பவும் அடுப்படிவேலைகள் குவிந்து கிடக்கும். அப்படி என்னதான் வேலை இருக்குமோ?

மற்றவர்களுடன் சண்டைபோட்டு, சின்னண்ணருக்கு சீனவெடிகளிலே பெரிய பங்கு பெற்றுக் கொடுப்பதிலே வெண்தாடிக் கிழவர் குறியாக இருப்பார். 'எல்லாத்தையும் சுட்டுப் போடாதேயுங்கோ... நாளைக்குப் பொங்கல் பானைக்கும் தேவை' என்று ஆச்சி அடிக்கடி நினைவு படுத்துவா. கம்பி மத்தாப்புகள், அதைப் பூந்திரி என்று சொல்லுவம். எனக்கு அதிகமாக வாங்கித்தருவார்கள். அம்மா குஷினியை விட்டு வரும்வரையிலும் காத்திருப்பன். அவ உயரமான கைவிளக்குடன் வந்துசேருவா. அந்த விளக்கின் சுடரிலை கம்பிமத்தாப்பை

*விழிப்புணர்ச்சியும் விடுதலைவேட்கையும் தலை தூக்கிய இன்று தமிழினத்தின் பண்பாடு நம்மவரைக் கட்டிக்காக்கும் ஒற்றுமையின் சின்னமாய் மாறவேண்டும். இதன் பொருள், நமது இனத்தின் எந்தவொரு பிரிவினரும் எக்காரணத்தையிட்டும் தமிழரின் பொதுச்சொத்தாகிய பண்பாட்டிற்குத் தனியுரிமை கோரலாகாது. நமது பண்பாடு இப் பொதுமை அடிப்படையில் பேணிக்காக்கப்பட்டும் புதுமெருகேற்றப்பட்டும் வளர்க்கப்படவேண்டியது.*

*பொதுவிழாக்களை தமிழ்மக்கள் அனைவரும் ஒருங்குசேர்ந்து கொண்டாடவேண்டும். இயற்கையுடன் இணைந்து வாழ்ந்த நம் மூதாதையர் அதனுடன் தொடர்புள்ள விழாக்களை பொது விழாக்களாகக் கொண்டாடிவந்ததில் வியப்பில்லை. உழைப்பின் உயர்வையும், உழவரின் மேன்மையையும் உயர்த்தி இயற்கையினூடாக அதற்கு அப்பாலுள்ள இறைக்கு நன்றி செலுத்த உருவாகியது தைப்பொங்கல் விழா. அறுவடையின் விழாவாகவும் நன்றியின் விழாவாகவும் விளங்கும் தைப்பொங்கல், எந்தவொரு குறிப்பிட்ட சமூக, சமய எல்லைக்குள்ளும் அடைபட்டிருக்கவில்லை. அதனால் தான் தமிழினத்தைத் தட்டியெழுப்பிய தமிழ் அறிஞர் அண்ணாத்துரை தைப்பொங்கல் விழா மற்றைய விழாக்களைப் போல் அன்றி "நமது விழா , நாம் நம்மை உணர உதவும் விழா" என்றார். தமிழரின் புத்தாண்டு விழாவும் இத்தகையதே. நேரடியான சமூக, சமய தொடர் பற்றது. ஆகவே பொதுமையானது.*

*- நீ. மரியசேவியர் அடிகள் -*
*நன்றி: கலைமுகம்*

எப்பிடி பிடிச்சுச்சுடவேணும் என்று காட்டித்தருவா. அதைச் சுழற்றினால் தங்கத்தை உருக்கி எடுத்த நிறத்தில், அல்லது நிலாவைப்பொடி செய்த நிறத்தில் பொறிகள் பறக்கும். நான் கம்பி மத்தாப்பைக் கொழுத்திச் சுழற்றும் பொழுது அம்மாவின் முகம் என்னமாய் பிரகாசமாய் மலர்ந்திருக்கும்? அந்த முக மலர்ச்சியைப் பார்ப்பதற்காகவே கம்பி மத்தாப்புக்கள் கொழுத்திக்கொண்டே இருக்கலாம் போலவும்!

புதுவருஷமும் தீபாவளியும் பெரிய பண்டிகைகளே. ஆனால் யாழ்ப்பாணத்தில் பொங்கலுக்கு நிகரான பண்டிகைகள் இல்லை என்று சொல்லலாம். சென்னையிலிருந்து வெளிவந்த பத்திரிகைகளை விழுந்துவிழுந்து வாசித்து என் இலக்கியத் தவிப்புக்குத் தீனி போட்டகாலத்தில், 'ஆனந்தவிகடன்' 'கல்கி' தீபாவளி மலர்களுக்காகத் தவம் கிடப்பன். அத்திம்பேருக்கோ, அக்காவுக்கோ பட்டாசு கொழுத்தி வேட்டுவைக்கும் வாண்டுப்பயல் பற்றிய ஹாஸ்யத்துணுக்கு ஒன்றாவது வெளிவராத தீபாவளிமலர் இல்லை என்றே சொல்லலாம். தீபாவளிக்கு பட்டாசு சுடும் பழக்கம் யாழ்ப்பாணத்தில் இருக்கவில்லை. பட்டாசு வெடிக்கும் விவகாரத்தில் இருந்து, சென்னையும் இலங்கையும் வெவ்வேறான தமிழ் உலகங்கள் என்கிற எண்ணம் என் பிடிமானத்துக்குள் முதலில் எழுந்ததாக என்னால் இப்பொழுது நிதானிக்க முடிகிறது. எவ்வளவோ காலத்துக்குப் பிறகுதான் தமிழ்நாட்டில் திராவிட எழுச்சிப் பிரசாரத்தினால் பொங்கல்விழா 'தமிழர் விழா'வாக ஓர் அழுத்தம் பெறலாயிற்று.

சடங்கு சம்பிரதாயங்களிலே, அரசியல் சாயங்கள் பூசப்படுவதற்கு முந்தியே யாழ்ப்பாணப் பொங்கல்விழா, கமக்காரர் விழாவாக, பாட்டாளிகளின் விழாவாக, தமிழர் பண்பாட்டு விழாவாக, விளைவுக்கு உதவும் கதிரோனுக்கு நன்றி தெரிவிக்கும் விழாவாக, பழையன நீக்கி புதியன புனைந்து புதியன கொண்டுவந்து சேர்க்கும் என்கிற நம்பிக்கைகளின் நுழைவாயில் விழாவாகப் பொங்கல் பண்டிகையை யாழப்பாண மக்கள் கொண்டாடினார்கள். அந்தப்பண்டிகை பற்றிய நினைவுகளிலே தோய்தல் எத்தகைய சுகமான அனுபவமாகவும் இருக்குது! அத்தகைய பண்டிகையை, அவுஸ்திரேலியாவில், சாய்பகவான்

சடங்கு சம்பிரதாயங்களிலே, அரசியல் சாயங்கள் பூசப்படுவதற்கு முந்தியே யாழ்ப்பாணப் பொங்கல்விழா, கமக்காரர் விழாவாக, பாட்டாளிகளின் விழாவாக, தமிழர் பண்பாட்டு விழாவாக, விளைவுக்கு உதவும் கதிரோனுக்கு நன்றி தெரிவிக்கும் விழாவாக, பழையன நீக்கி புதியன புனைந்து புதியன கொண்டுவந்து சேர்க்கும் என்கிற நம்பிக்கைகளின் நுழைவாயில் விழாவாகப் பொங்கல் பண்டிகையை யாழப்பாண மக்கள் கொண்டாடினார்கள்.

பெயரால் கொச்சைப்படுத்தும் கோணல்யுக்தி எப்படி உருவாகியது?

பொங்கல் முற்றத்திலேதான் நடக்கும். பொங்கல் நடக்கும் இடத்தில், மணலைத்துடைத்து, வெறுந்தரையாக்கி, இளங்கன்றுச் சாணத்தால், அம்மா மெழுகி வைச்சிடுவா. சீனவெடி கொளுத்தி, மத்தாப்புக்கனவுகளிலே தூங்கிய நாங்கள், எழும்பி முழிப்பது முற்றத்தின் புதுக் கோலத்திலேதான். அன்று அதிகாலையிலே பெண்கள் தோய்ந்து முழுகிவிடுவாகள். தலைமுடியுடன் வெள்ளை ரவுக்கை ஒன்றைச் சேர்த்து முடிந்திருந்தால் அம்மா முழுகிவிட்டா என்று அர்த்தம். குத்து விளக்குகள், சருவச்சட்டிகள், தாம்பாளங்கள் எல்லாம் புதுசுபோல இருக்கும். பொங்கலுக்கான சாமான்களெல்லாம், பூசைச்சாமான்கள் உட்பட, பெரியதிண்ணையிலே பக்குவமாக எடுத்து வைக்கப்பட்டிருக்கும். தேங்காய் துருவுவது பெரியவேலை. பொங்கலுக்குத்தேங்காய்ப்பால் முக்கியம். பழவகைகள் வெற்றிலைபாக்கு எல்லாம் கழுவித் தாம்பாளங்களிலே வைக்கப்பட்டிருக்கும். பொங்குவதற்கான அரிசி, பயறு, சர்க்கரை பொங்கலுக்கு உருசி சேர்க்கும் வாசனைப் பொருட்கள் எல்லாம் தனித்தனியே தயாராக இருக்கும். வாழைப் பழத்திற்கு மூழ்வெட்டுவது, இளநீர் சீவி எடுப்பது ஆகியன பொங்கல் துவங்கும்வரை காத்திருக்கும்.

சடைச்சிருக்கும் கறுத்தக்கொழும்பான் மாமரத்துக்கு கீழே இருந்துதான் ஆச்சி, அம்மா, அக்கா ஆகிய 'பெண்டுகள்' வேலை பார்ப்பினம். அம்மாவும் அக்காவும் திருவலைக் குத்தியில் இருப்பினம். ஆச்சி எப்பவும் ஒருமேஸ்திரி போல. அவவுக்கென்று ஒருபலகைக்குத்தி இருந்தது. அது அவவின்ரை முதிசம்போலை!

பொங்கல் நடாத்தும் முகாமை ஓர் ஆணுக்கு. பொங்கல் உலையில் யார் முதலிலை அரிசிஅள்ளிப்போடுவாரோ அவர்தான் பொங்கல்காரர். அரிசிமா, மஞ்சள்மா, சிவப்புச்செங்கல்மா ஆகியனகலந்து பொங்கலுக்கான இடம் கோலமிடப்படும். பொங்கல்காரன் தோஞ்சு வந்தவுடன் கோலம்போடத் துவங்குவார். அவர் துவங்கிவைச்சால் வசதியைப்பொறுத்து மற்றவர்கள் அவருக்கு உதவிசெய்யலாம். நல்லநேரம் பார்த்து அம்மா செய்த அடுப்புக்கற்கள் மூன்று அடுப்பாக வைக்கப்படும். புதுப்பானையைக் கழுவி, அதில் அளவுக்கு நீர்வைத்து, அந்தப் பானையின் கழுத்தைச்சுற்றி மஞ்சள், இஞ்சிமர செடிகளுடன் மாவிலைத் தோறணமும் கட்டப்படும். அந்தப்பானை முதலிலே, மூன்று சிரட்டைகளினால் உருவாகிய அணைப்பிலே வைக்கப்படும். பால், தேங்காய்ப்பால் ஆகியன உரிய அளவிலே விடப்படும். பொங்கற்காரன் பானைக்கு வீபூதிப்பூச்சுக்கள் வைச்சதும் பொங்கல்பானை அடுப்பிலே ஏற்றப்படும். பொங்கல்பானை வைக்கும்பொழுது சீனவெடிகள் பம்பலாய் வெடிக்கும். பானை எத்தனை மணிக்கு அடுப்பிலே ஏறவேண்டும் என்பதைப் பெரியமாமா பஞ்சாங்கத்தைப் பார்த்துச் சொல்லிப் போடுவார்.

பொங்கல் அடுப்புக்கு கண்ட கண்ட விறகுகளும் வைக்க அப்பையா விடமாட்டார். இதுக்கு அவர்தான் பொறுப்பு. நல்லாத்தணல் விழக்கூடிய, நின்று எரியக்கூடிய காட்டுக்கம்புகள், தென்னம்பாளைகள், பாளைகளைத் தடல்வேறு பூக்கம்பாளை வேறாகப் பிரித்து, மல்லாக்காய்ப் போட்ட உரலிலே, ஏக அளவுக்கு கொடுவாக் கத்தியால் வெட்டிவைப்பார். அடுப்பை மூட்டுறதுக்குப் பனம்பன்னாடை ஏற்றது. எல்லாப் பக்கமும் ஒரே அளவான தீ நாக்குகளை எழுப்பி அடுப்பு எரிந்தாற்றான் அவருக்குப் பத்தியம். பொங்கி, பால் நுரைகள் பானையின் விளிம்பிலே நர்த்தனமாடி, சடுதியாகச்சரிந்து அடுப்புக்குள் கொட்டப்படும். வெண்தாடிக்கிழவர் 'அரோகரா' போடுவார். ஆச்சியின் நாக்கு இலேசான குரவை ஒலி எழுப்பும். கொடிக்கம்பியலே கட்டப்பட்டிருந்த சீனவெடிப்பட்டுகள் எல்லாம் ஏககாலத்தில் வெடிக்கவிடப்படும். இந்தச்சமயத்திலே, பென்னம்பெரிய சருவச்சட்டியிலே பச்சையரிசியும் பயறும்

பொங்கல்பானையிலே போடப்படும். பொங்கற்காரன் அடுப்பினை மூன்றுதரம் வலம் வந்து பக்திசிரத்தையுடன் இரண்டு கைகளாலுங்கோலி, மூன்று தடவைகள் பானைக்குள் அள்ளிப் போடுவார். அந்தநேரம் பென்னம்பெரிய சீனவெடிக் கோர்வையைக் கொழுத்தும் அப்பையா மாவடிப்பக்கமாக வீசி, ஆச்சியின் ஏச்சை வாங்கிக்கொள்ளவும் தப்பமாட்டார். பொங்கல் அடிப்பிடிக்காமல் அடிக்கடி கிண்டித் துளாவவேணும். சரியாக நேரம்பார்த்து, அன்று திருவப்பட்ட தேங்காய் சிரட்டைகளை அப்பையா அடுப்புக்குள் சொருகுவார். நெருப்பைப்பிரித்து பொங்கலை அமிழவிடும்பொழுது, சிரட்டைதணல் அளவான சூட்டைக் கொடுக்கும் என்பது வாகடம்.

பொங்கல் சரியாகப்பதத்திற்கு வருவதை ஆச்சி மேற்பார்வை செய்வா. பெரிய வாழை இலையிலே படையல். அந்தக்காலத்திலே கிடைக்கக்கூடிய அத்தனை பழங்களும் படையலுக்கு ஆகும். வாழை முக்கியம். கரும்பு, தைமாதம் என்றபடியால் மாரிமாம்பழம் உண்டு. மாதுளை, தோடை கிடைக்கும். 'சீஸன்' தப்பியதால் பலாப்பழம் கிடைக்காது. படையல் நடக்கும்போதும் ஒருபாட்டம் சீனவெடிகள் வெடித்து ஓயும். படையலைத் தண்ணீர் தெளித்துப் பிரித்த பிறகு, தட்டிலே வாழை இலை போட்டு, எல்லாருக்கும் பொங்கல் பரிமாறப்படும். ஆச்சி ஒரு சின்னப் பானையில் வெண்பொங்கல் பொங்குவதைத் தனது பழக்கமாக்கிக் கொண்டா. பொங்கல் முடிந்ததும் ஆண்கள் 'தையும் பிறந்தது, புது வழியும்பிறந்தது' என்கிற நம்பிக்கையிலே தங்கள் அலுவல்களைக் கவனிக்க வீதியல் இறங்குவார்கள். அயலட்டையிலும், உறவுக்குள்ளும், அந்தத்தைக்குப் பொங்காதவர்களுடைய வீடுகளுக்கு, புத்தம் புதிய மூடற்பெட்டியிலே பொங்கல் அனுப்பி வைத்த பிறகுதான் அப்பையா உசும்புவார். கடமைக்கு இன்னொரு பெயர்தான் அம்மா. முற்றத்தில் வெயில் உக்கிரமாக எறிக்கும். எதையும் சட்டைசெய்யாது. புத்தம்புதுச் சட்டிகளிலே மூன்று சோக்கான ஆருதக்கறிகள் சமைச்சு முடிப்பா. அடுத்தநாள் மாட்டுப் பொங்கல். எங்கள் வீட்டில் வளர்ந்த லட்சுமிமாட்டுக்கு அன்றைக்கு என்றுமில்லாத நடப்பு. மாட்டுப்பொங்கல் வெண்தாடிக்கிழவரின் ஏகபோகம். அவர் பிறவியில் சர்வாதிகாரி. தனது இஷ்டப்படிதான் அவர் மாட்டுப்பொங்கலை நடத்துவார். மாட்டுப்பொங்கலுக்கு சுண்டல் வடை என்று சிற்றுண்டிவகைகளையும் சேர்த்துக் கொள்வார். மாட்டுக்குத் தன் கைப்பட உணவு ஊட்டுவார்.

வெள்ளைக்காரனுடைய ஆட்சிக் காலத்திலும் பொங்கலுக்குப் பொது விடுமுறைநாள். எனவே எங்களுக்கு நல்ல கும்மாளம். சின்ன அண்ணர் எதிலும் ஒரு தனிப்பிறவி. மாட்டுப் பொங்கலுக்கு என்று சில சீனவெடிக் கட்டுக்களை ஒளிச்சு வைச்சுக் கொள்ளுவார். அதற்குக் கிழவர் எப்பவும் support. சீனவெடியில் சின்னண்ணன் எத்தினை tricks அறிஞ்சு வைச்சிருந்தவர். பெரிய சீனவெடி ஒன்றைப்பற்றவைச்சு, அது வெடிப்பதற்கு முன்னர் ஒருதகரப் பேணியால் மூடிப்போடுவார். அது புதினமான சத்தத்தடன் வெடிக்கும். பேணியும் ஆகாயத்திலை கிளம்பி, சப்பிழிஞ்சு கீழே விழும். வீட்டிலும், விசாலாட்சி மாமி, பாக்கியம் அத்தை, தாமோரியர் வீடு எல்லாம் அலைஞ்சு திரி நூர்ந்து வெடிக்காத வெடிகளை எல்லாம் (ஊசி வெடிகளைக்கூட விடாது) பொறுக்கி வருவார். பெரிய சீனவெடியென்றால் 'V' போல மடக்கி மருந்திலை தீ வைப்பார். அது புஸ் என்று எரிஞ்சு சக்கரம்போல சுத்தும். இதுகளைச் சாறணை சண்டிக்கட்டு கட்டிக்கொண்டுதான் செய்யவேணும். வெடிகளின் மருந்தை நூல்போல இழுத்து Remote Control இல் வெடிகளை வெடிக்க வைப்பார். வாலில்லாத ஈக்கில் வாணத்தை தென்னங்கன்று வட்டுக்கை வைச்சு விட்டு, பண்ணாடை பத்தி ஆச்சியிடம் மண்டகப்படி வாங்கினார். ஒரு பலகையில் ஆணியால் துவாரம் போட்டு, அதற்குள் ஆணியை வைச்சு ஓட்டைநாகேசர் புழுகிக் கொண்டிருக்கேக்க, கோடாலி வெடிபோல அடிச்சுத் திடுக்கிட வைச்சார். நெருப்புக்குச்சி மருந்திலும் கோடாலிவெடி இணக்குவார். பெரியமாமாவிடம் பூவரசம்கம்பு தூள்பறக்க அடிவாங்கிய பிறகுதான் சின்னண்ணனின் சீனவெடி விளையாட்டு நிற்கும்.

*சீனவெடிகளின் ஒலியிலே, புதுப்பொங்கல் உண்டு மகிழ்ந்த மண்ணிலே, சீன ராணுவ ஊர்திகள் குண்டுமழை பொழிகின்றன.... சின்னண்ணன் செய்த "றிக்ஸ்" உதவுமா? சிறுபிள்ளைத் தனமான யோசனைகள். சிறுபிள்ளைத் தனம் என்றாலும் வெடிகள் பற்றி அசை போடக் கொஞ்சம் என்றாலும் தைரியம் வேணும். அந்த உசுக்குட்டித் தைரியம் வாழ்க!*

□□□

## தமிழர் திருநாள்

*பொங்கல் கழிந்து
மாதமொன்றுக்கும் மேலாகிவிட்டது.
பொங்கல் என்ன பொங்கல் என்றும்
அலுத்துக் கொண்டாயிற்று.
இருந்தும் பொங்கல் எனக்குள்
இன்னமும் பொங்கிக்கொண்டே
இருக்கின்றது.
பொங்கல்
சைவக்காரர்களுக்குரியது.
இந்துக்களுக்குரியது என்ற
வியாக்கியானங்களும்
விளக்கங்களும் இருக்கின்றன.
ஆயினும் பொங்கல் உழவும்
பயிர்த்தொழிலும் என்னும்
உழைப்பும் உற்பத்தியும்
சம்பந்தமானது.
பொங்கலில் மதப்பூச்சு படிந்துள்ள
போதிலும் அது ஒரு கலாச்சார
அடயாளம். மரபின் தொடர்.
தமிழ்நாட்டில் பொங்கல் "தமிழர்
திருநாள்" என்றே
கொண்டாடப்படுகின்றது.
கத்தோலிக்க மதத்தவரும் தங்கள்
தேவாலயங்களுக்கு வெளியே
பொங்குகிறார்கள். இஸ்லாம்
மதத்தினரிடையேயும் - விவசாயம்
செய்வோரிடை
இக்கலாச்சாரக்கூறுகள்
இருக்கின்றன. மதஅடிப்படைவாதம்
கூர்மையடைந்ததன் பின் இவை
அருகியுள்ளன.
இப்பொங்கலை தமிழ்பேசும்
மக்களின் கலாச்சார
அடையாளமாய் காணுதல், அதை
இயக்கமாய் கொள்ளுதல்
இன்றைய தேவை என்றே
கருதுகின்றேன். உலகெங்கும்
சிதறிவாழ்தல் என்பதும்.
மதங்களால் பிளவுண்டு
அன்னியப்படுதல் என்பதும்.
நிர்ப்பந்தமாயும். இயல்பாயும்
மாறிவிட்ட அழிவு "அபாயத்துள்"
நாம் வாழ வேண்டியவராய்
உள்ளோம். பல்வேறு
காரணிகளால் அருகிச்செல்லும்
மனித விழுமியங்களை
மீட்டெடுக்கவும், நம்
அடயாளத்தைப் பேணவும். நம்
இருப்பை உறுதிசெய்யவும்
"கலாச்சார ஒன்றித்தலும்"
"கலாச்சார புத்தமைவும்"
அவசியமானதாகும். பொங்கலும்
பொங்கல் நாளும் பற்றியதான
சமூக ஒழுங்கமைவு பற்றி
ஆற்றல்மிக்கோரும், சமூக
உணர்வுடையோரும்
சிந்திப்பாராயின்....*

□

***கி. பி. அரவிந்தன்.***

*('ஓசை' 1992 தை-பங்குனி)*

# நாட்குறிப்பிலிருந்து

**1.** தேசம் துறந்தாலே நம் அடையாளங்களைப் பேணுவது எப்படி என்ற கவலையும் அதிகரித்து விடுகின்றது. எல்லாத் தேசியங்களுக்கும் உள்ள பிரச்சினை இது. இலங்கைத தமிழராகிய நாமும் எலகின் பலதேசங்களில் சிதறிக் கிடக்கின்றோம். ஒண்டிக் கொண்ட இத்தேசங்களில் பிறந்து அம்மொழிச் சூழலில் வளரும் இரண்டாம் தலைமுறையினராகிய நம் குழந்தைகளுக்கு மொழி கலாச்சாரம் என்பவற்றை அறிமுகப்படுத்தவும் கற்பிக்கவும் தெவை ஏற்படுகின்றது. இதைக் கவனத்தில் கொண்டு அவுஸ்திரேலியாவில் இயங்கும் பாரதி பள்ளியினர் « பாப்பா பாரதி» (பாகம்-1) எனும் குழந்தைகள் வீடியோ ஒன்றினை வெளியிட்டுள்ளனர். பயன்மிக்க முயற்சி. பாப்பா பாரதி பார்ப்பதென்றால் எனது குழந்தைகளுக்கு அலுக்கவோ சலிக்கவோ மாட்டாது. நான் அறிய இதைப் பார்த் குழந்தைகள் எல்லோருக்குமே பிடித்திருக்கிறது. அதில் கேட்டதை பார்த்ததை திருப்பிச் சொல்வதில் அவர்கள் மகிழ்ச்சி கொள்கின்றனர். பாட்டு கதை கேட்பதென்றால் எந்தக் குழந்தைக்குத்தான் விருப்பமிருக்காது. அதைச் சொல்வதற்கும் ஒரு கலை வேண்டும். குழந்தை மனம் வேண்டும். அது வீடியோ தயாரித்த பாரதி பள்ளியினரிடத்தில் இருக்கின்றது. இருந்தபோதும் அவர்களது இரண்டாவது பாகத்தை எதிர்பார்க்கும் ஆர்வத்துடன் சில கருத்துக்களை முன்வைப்பது தவிக்க முடியாதுள்ளது. மொழி ஆர்வத்தையும் மொழித் திறனையும் வளர்க்கும் எனும் நோக்கத்தை வெளிப்படுத்தியிருக்கும் பாரதி பள்ளியினர் மொழி சார்ந்த சமூகத்தின் அடையாளங்களையும் குழந்தைகளுக்கு அறிமுகம் செய்யும் வகையில் வீடியோ தயாரிப்பில் கவனம் செலுத்தியிருக்கலாம். தற்போது குழந்தைகள் பயிலும் மொழியில் கற்பிக்கப்படும் கதைகளை மீளத் தமிழில் பாடபோதனை செய்வதை விடவும் அவர்கள் அறிந்திராத தமிழில் புழக்கத்திலிருக்கும் கதைகளை, பாடல்களை சேர்த்திருந்தால் பாரதி பள்ளியினரின் நோக்கம் இன்னும் சிறப்புற்றிருக்கும். அத்துடன் வீடியோ தயாரிப்பில் மலிந்துள்ள தொழில் நுட்பக் குறைபாடுகளும் களையப்படுவது அவர்களது பணிக்கு வலுச் சேர்க்கும்.


**2.** உயிர்ப்பு குறுந்திரைப் படம் பார்க்கும் வாய்ப்புக் கிட்டியது. கடற்கரை மணலில் மணல் கும்பியில் கலையாய் பிரவகிக்கிறது வாழ்க்கை. நெஞ்சைச் சுரண்டிப் பிசையும் சம்பவங்களின் ஊடெ ஒரு கடலோரக் கிராமத்தினைப் படம் படித்திருக்கிறார் பொ. தாசன். கடல் மடியேறி ஒளி பெறும் அக்கிராமம் கடலினின்றும் அந்நியமாக்கப்படுகின்றது. அதன் தொப்புள் கொடியை அறுத்து விட்டு வேடிக்கை செய்கிறது காலமும் சூழலும் ஆக்கிரமிப்பும் விடுதலைப் போரும் ஏற்றும் சுமைகளினால் அக்கிராமம் திக்குமுகக்காடுகின்றது. கிராமத்தைக் கைவிட்டுச் செல்லவும் மனமின்றித் தத்தளிக்கின்றனர் மக்கள். இதற்காய் அவர்கள் ஏற்கும் முடிவானது விடுதலைப் போருக்குத் தம்பங்கை ஆற்றுவதாகவும் தடை ஒன்றை உடைப்பதாகவும் அமைகின்றது. தனக்குக் கிடைத்த மிகக் குறைந்த தொழில் நுட்ப சாதனங்களினூடே தன் படைப்பை நேர்த்தியாக முன்வைத்து பார்ப்பவரில் தொற்றச் செய்துவிடுகிறார் இயக்குநர். கலை இலக்கிய வெளிப்பாட்டு சாதனமொன்றில் ஈழத்து உக்கிர வெளிப்பாடு கொள்கிறது உயிர்பென.

**3.** நினைக்கும் போதெல்லாம் அந்த மரணததின் கதை என்னை வதைக்கின்றது. வெளிநாட்டுக் கனவில் தொடங்கிய பயணம் கால நீட்சியில் வாழ்வுக்கும் உயிருக்கும் தஞ்சம் கோரும் பயணமானபோது கடந்த யூலையில் நிகழ்ந்த துயரக்கதைகளில் ஒன்றுதான் என் நணபனும் தோழனுமான மகேஷ் எனும் விநாயகமூர்த்தி மரணமான கதை. மட்டக்களப்பு பிராந்தியத்தில் அக்கரைப்பற்று கிராமத்தைச் சேர்ந்த இவன் விடுதலைப் போரில் தன்னை இணைத்துக் கொண்டவன். மக்களின் பால்கொண்ட நேசத்தால் தீவிர அரசியலில் ஈடுபட்டவன். இராணுவ சுற்றி வளைப்புகளின் போதும் இயக்கங்களிடையான மோதல்களின் போதும் இவன் பல தடவை மயிரிழையில் உயிர் தப்பியிருக்கிறான். ஒருமுறை சிறிலங்கா அரசால் கைதாகி பூசா வதைமுகாமில் அடைபட்டிருந்த வேளை காலொன்று முறிவடையும் வரை வதைபட்டிருக்கிறான். இவ்வேளையில் தான் மரண வாயில்வரை சென்று வந்துள்ளதாக கூறியிருக்கின்றான். இத்தனையும் தாண்டியவன் கனவுத் தேசங்களை நோக்கிய பயணத்தில் எல்லை தாண்டும் முயற்சின்போதா செத்திருக்க வேண்டும்? இவனதும் இவனுடன் கூடவே வந்தவர்களினதும் சாவு ஐ. நா. நிறுவன ஆவணங்களில் அகதி நுழைவு அசம்பாவிதங்களாக பதிவாகிவிட்டன.

**4.** கடந்த ஆகஸ்ட்டில் பாரிசில் தங்கியிருக்க முடிந்தது. தங்க முடிந்த ஆறு நாட்களும் உற்சாகமாகக் கழிந்தது. மௌனத்தின் வளர்ச்சியில் அக்கறைகாட்டி வரும் நண்பர்கள் உதயணன்-- எலிசபெத் தம்பதியினரின் உதவியுடன் திரு ஸ்ரீராம் அவர்களை நேரில் சந்தித்து உரையாட வாய்ப்புக் கிட்டியது. 25 வருடங்களுக்கு மேலாக பிரெஞ்சு மொழியுடன் பழக்கம் கொண்டவரும் அம்மொழியைக் கற்பிப்பதிலும் அனுபவம் கொண்டவரான ஸ்ரீராம் அவர்கள் சென்னை பிரெஞ்சு நட்புறவுக் கழகத்தின் தலைவராவார். Antoine de Saint Exupiry -யின் Le Petit Prince எனும் நூலை குட்டி இளவரசன் எனும் தலைப்பிலும், Albert Comeu -வின் Etranger எனும் நூலை அந்நியன் என்னும் தலைப்பிலும் Sartre -ன் நாடகமொன்றை மீளமுடியுமா எனும் தலைப்பிலும் தமிழுக்கு அறிமுகம் செய்துள்ளார். தமிழின் அண்மைக்கால கவிதைகளை பிரெஞ்சுக்கு அறிமுகம் செய்யும் பணியில் ஈடுபடுவதாகக் கூறும் அவர், ஈழத்துக் கவிதைகளை தான் அறிந்திருக்கவில்லையென்றும் அதனால் தனது தொகுப்பில் இதுவரை அவற்றைச் சேர்க்கவில்லை என்றும் குறிப்பிட்டார். பாரிஸ் வந்தபின் இங்கு நடக்கும் இலக்கிய முயற்சிகள், வெளிப்பாடுகள் கண்டு தான் ஆச்சரியப்படுவதாகவும், உற்சாகமடைவதாகவும் கூறினார்.

# காணாமல் போவோர்...

கி. பி. அரவிந்தன்.



## 1.

*அரங்கம் இருளில். புயலாய்ச்சீறும் பின்னணி இசை. இசையை ஊடறுக்கும் குரல்.*

"காற்றில் அள்ளுண்டு வருகின்றனவே
மரத்தில் செத்ததும் வாடி உதிர்ந்ததுமான சருகுகள்.
கூடவே,
ஒத்திப்பறிபட்ட பச்சை இலைகள், தளிர்கள், கொழுந்துகள்.
எது,
எந்த மரத்தினது....?"

*கவிதை முடியுமுன் அரங்கில் மெல்லிய ஒளிபரவ, வட்ட ஒளியில் சாந்தலிங்கம்(வயது 42) சுருண்டு உருண்டு மேடையை வலம்வந்து, பின்னணி இசைக்கேற்ற அசைவுகளுடன் மையத்தே விழுந்து அசைவற்றுக்கிடக்க, எங்கும் ஒளி பரவுகிறது.*

சாந்தலிங்கம் : அப்பாடா... (பெருமூச்சுடன் குரல் வெளிப்படுகிறது.)

*(வேட்டி சட்டையுடன் தோற்றம்தரும் சாந்தலிங்கம், தன்னை உதறி ஆடைகளைக்கழற்ற மேலைத்தேய உடையுடன் தோற்றம் கொள்கிறான்.*
*குளிருக்கு நடுங்கியபடி, அலங்க மலங்க முழித்தபடி, சுற்றுமுற்றும் அண்ணாந்து பார்த்தபடி கதவொன்றின் முன்னால் நிற்கிறான் சாந்தலிங்கம்.)*

*பின்னணி இசையாக பலமொழிக்குரல்கள்...*
*பலர் படிஏறி இறங்கும் காலடி ஓசைகள்.*

*(கதவைத்திறந்தபடி ஒரு இளைஞன்-வசந்தன்(வயது 28)-சாந்தலிங்கத்தின் உறவினன். சாந்தலிங்கத்திற்கு வணக்கம்கூறி-கைலாகு கொடுத்து மிகுந்த மரியாதையுடன்..)*

வசந்தன் : உள்ள வாங்கண்ணே..
*(வசந்தன் கால்களைத்தூக்கி எட்டிக்கடந்தபடி-படுத்திருப்பவர்களில் இடறாமல் மிகக்கவனமாக முன்னேறிச்செல்ல பின்பற்றிச்செல்கிறான் சாந்தலிங்கம்.)*

வசந்தன் : பார்த்து...பார்த்து வாங்கண்ணே......
*(சாந்தலிங்கம் வசந்தனின் குரலை செவிமடுத்தபடி தட்டுத்தடுமாறி வந்து முழித்தபடி நிற்கிறான். படுத்திருப்பவர்களை எண்ணிப்பார்க்க முயற்சிக்கிறான். வசந்தன் சோபாவில் படுத்திருப்பவனை உசுப்புகிறான்.)*

வசந்தன் : சந்திரண்ணை எழும்புங்கோ... போடர் கார் வந்திட்டுது.
*(சந்திரன் எழுந்து உடம்பை நெட்டிமுறித்தபடி சாந்தலிங்கத்திற்கு வணக்கம் தெரிவிக்கிறார்.)*

சந்திரன் : இருங்கண்ண... களைச்சுப்போயிருப்பியள்... உங்களைப்பாத்துக்கொண்டுதானிருந்தனான்... வேலை அலுப்பு...அயந்திட்டன்...இருங்கண்ணே...
*(சோபாவில் தள்ளி அமர்கிறான் சாந்தலிங்கம். வசந்தன் பாத்திரமொன்றைக்கையிலெடுத்தபடியே..)*

வசந்தன் : சாப்பிடுகிறீங்களா...இல்லை முதல்லை தேத்தண்ணி குடிக்கிறீங்களா...?

சாந்தலிய்கம் : ஏன் தம்பியவை விஸ்கி, பிறண்டி இல்லையே... (மெல்லிய குரலில் சற்று ஏமாற்றத்துடன்)

வசந்தன் : நாங்கள் பாவிக்கிறதில்லை... அதாலை வாங்க யோசிக்கல்ல. நாளைக்கு வேண்டுவம்.
(இருவரும் மன்னிப்புக் கோருந்தொனியில்)

சாந்தலிங்கம் : வெளிநாட்டுக்கு வந்து இதென்ன விரதமடாப்பா..... இப்ப சாப்பாடு வேண்டாம் தேத்தண்ணியை ஊத்துங்கோ குடிப்பம். (குரலில் சலிப்பு)

*(வசந்தன் தேனீர் தயாரிக்க சந்திரன் ஊர்ப்புதினங்களை விசாரிக்கத்தொடங்குகிறார்.)*

சந்திரன் : எப்பிடியண்ணை அங்க நிலமை மோசமே... சரசக்கா பிள்ளையள் எல்லாம் சுகம்தானே...?

சாந்தலிங்கம் : எல்லாரும் நல்லசுகம். நான் வந்தாச்சுதானே இனி அவையள இறக்கவேணும்.

வசந்தன் : (தேனீரை நீட்டியபடி) உங்களுக்கு காட் கிடைச்சிட்டுதெண்டால் இதெல்லாம் பெரிய விசயமே!

# 2.

*அறை.*
*துள்ளல் இசை பின்னணியில்.*

*சந்திரன் பத்திரிகையொன்றுள் மூழ்கி இருக்கிறான். வசந்தன் விஸ்கி போத்தல், கொக்கோகோலா, சிப்ஸ் என்பவற்றைக் கொண்டு வந்து சாந்தலிங்கத்தின் முன் வைக்கிறான். சாந்தலிங்கம் சிரித்து ரசிக்கிறான். சிறிது நேரம் இசை மட்டும் தொடர்கிறது.*

சாந்தலிங்கம் : (தொண்டையைச்செருமிக்கொண்டு) என்னடாப்பா போத்திலோட என்னைத்தனிய விட்டிட்டு ஆளுக்காள் ஒதுங்கினா எப்பிடி....? போத்திலுக்கு கூட்டில்லையெண்டால் சுவைக்காது. சும்மா ஒரு பேருக்கெண்டாலும் ஆரும் ஒரு கைகொடுத்தாத்தான்...

வசந்தன் : இல்லையண்ணை நீங்க எடுங்க, நாங்க கதைக்கிறம். எடுக்கிறதுக்கு சுவைக்க பொரிக்கிறம். அதோட... நா....(குரலை இழுத்தபடி) நான் இதுகளெல்லாம் தொடக்கூடாது.

சாந்தலிங்கம் : ஏன் வசந்தன்.....! அதுவும் நல்லதுதான். ஒரு லட்சியம் கொள்கையோட இருக்கிறது.

வசந்தன் : இலட்சியம், கொள்கையும் தான். எங்கட சமயத்துக்கும் இது ஒத்துவராது.

சாந்தலிங்கம் : அதென்ன நீ வேற சமயமே...? ஆ... சமயங்கள் ஆயிரம்தான். சொல்லிறதெல்லாம் ஒண்டுதானே. அதுக்காக மாஞ்சுபோக ஏலுமே.

வசந்தன் : எங்கடையில கனக்க உண்மையிருக்கு. நான் ஆறுதலா விளக்கிறன். நீங்க இப்ப..

சாந்தலிங்கம் : என்ன சந்திரன் வசந்தன் ஏதோ எல்லாம் சொல்லுறான். நீ அப்பிடியே பேப்பருக்குள்ள மூழ்கியிற்றாய். அப்பிடி என்ன சொல்லுது பேப்பர்!

சந்திரன் : வீட்டில இருந்து வாற கடிதத்தில புதினம் ஒன்றும் எழுதாயினம். காசு, கடன், அக்காவின்ர கலியாணம் இதுதான் எப்பவும்.... இந்த பேப்பரில பாத்துத்தான் யார் செத்தது எண்டுகூட அறியக்கிடக்கு. வேலைக்குப் போக வரேக்க படிக்க ஏலாமக்கிடக்கு. கண்குத்துது. தலைக்க என்னமோ செய்யுது.. (சலித்துக்கொள்கிறான் சந்திரன்)

சாந்தலிங்கம் : உழைக்கிற நீங்கள் ஒரு கண்ணாடி வாங்கிப்போடறது. டொக்டரைப்பார்க்கிறது....ஏனடாப்பா வைச்சுக்கொண்டு திரியிறியள்.. (மிகுந்த அக்கறையோடு)

சந்திரன் : உண்மை தானண்ணை... காசு வேணும், நேரம் வேணும்.... மற்றது அக்கறையும் வேணுமே... எல்லாமே என்னத்துக்கு எண்டமாதிரி கிடக்குது..

சாந்தலிங்கம் : கையை காலை அடிக்கிற நீங்கள் ஒருகிளாஸ் அடிச்சிட்டு சாப்பிட்டுப் படுத்தீங்களெண்டா உடம்பு அசதி தெரியாது. சலிப்பும் வராது.. இதுகும் மருந்துதான் ... சும்மா ஒரு கிளாஸ் எடன்.

*(சாந்தலிங்கம் ஒரு கிளாஸில் ஊற்றியபடி 'கலக்க எடுக்காதை...... 'என்று சொல்லிக்கொண்டு கொக்கோகோலாவை கலக்கிறான். சந்திரன் கூச்சத்துடன் வசந்தனையும் கிளாசையும் மாறிமாறிப்பார்த்தபடி 'வேண்டாம் அண்ணே வேண்டாம் அண்ணே' என்றபடி கிளாஸை தன் பக்கத்தே இழுத்து வைக்கிறான்.)*

*துள்ளல் இசை உரத்து ஒலிக்கிறது.*

# 3.

*தெரு*
*மேடை இருளில்.*
*(வட்ட ஒளிப்புள்ளியுள் சாந்தலிங்கம், சந்திரன், வசந்தன், நடந்துகொண்டிருக்கின்றனர்.)*
*குதிரைக்குளம்படியின் ஒலியில் இசை.*

*(மூவரும் குளிராடை அணிந்துள்ளனர். சாந்தலிங்கம் கொஞ்சம் அதிகமான குளிராடையுடன் காணப்படுகிறார்.)*

சந்திரன் : இதில போறதெல்லாம் அடைகள்.

சாந்தலிங்கம் : அடைகளெண்டால்...

வசந்தன் : சோனிகள், அராபுகள்.

சந்திரன் : அதிலை வாறதெல்லாம் ஊத்தைக் கறுவல்கள். மண்டைக்குள்ள ஒண்டும் இல்லை. உடம்புதான் பெரிசு. சனியன்களில ஒரு மணம். இந்த அடைகளிலயும் தான். இரண்டும் களவெடுக்கிறதும் வழிப்பறியும் தான்.
சாந்தலிங்கம் : நம்ம ஊரிலயும் இந்த கறுவல்கள் நிறத்தில ஆக்கள் இருக்கினம்தானே— நம்ம நிறமும் கறுப்பல்லோ..
சந்திரன் : சீ... நம்மளவில கீழ்சாதி ஆக்கள்தான் அப்பிடி. நம்மட கறுப்பு வேற.
சாந்தலிங்கம் : இது வெள்ளைக்காரற்றை நாடல்லோ!
வசந்தன் : கறுவல் அடைகளும் கனக்கப்பேர் நசனாலிற்றி கார்தான். இதுகள்ர தொல்லை தாங்கேலாமல் வெள்ளைக்காரனெல்லாம் நகருக்கு வெளியே தூரத்திலதானே வசிக்கிறாங்கள்.
சந்திரன் : இந்த அடை கறுவலாலை தான் எங்களுக்கும் கஸ்டம். வெள்ளைக்காரனுக்கு எங்களிலை தான் விருப்பம். இவனுகளுக்கு இதுகளை பிடிக்கிறதில்லை.
*(கதைபோக்கில் தங்களை மறந்த நிலையில் நடந்துகொண்டிருக்கும் மூவரும் எதிரே ஒருதமிழ்க்குரல் இவர்களுக்கு வணக்கம் கூறுவதைக்கேட்டு நடையை நிறுத்துகின்றனர்.)*
குரல் : என்னடாப்பா சந்திரன், ஆக்களையே காணமுடியேல்லை. ஆளொன்று புதுசா இறங்கியிருக்கு போல.
*சந்திரனும், வசந்தனும் ஏக குரலில் 'வணக்கம் அண்ணே' என்கின்றனர். வசந்தன் கிசுகிசுத்த குரலில், சாந்தலிங்கத்தின் காதில் ஏதோ கூற, சாந்தலிங்கம் பரபரப்புடன் 'வணக்கம் சேர்' என்கிறான்.*
குரல் : பொலிஸில வந்தரூட்டைத்தான் துளைச்சு துளைச்சுக்கேக்கிறாங்கள். கவனமாய்ச் சொல்லுங்கோ. சந்திரன் உனக்கு விளங்கும் தானே.
சந்திரன் : சரியண்ணே, பொலிஸ் விசா, வேலையள் முடிஞ்சாப்பிறகு உங்களுக்கு போன் அடிக்கலாம் என்று இருந்தனான்.....பிறகு போன் எடுக்கட்டா அண்ணே, இல்லாட்டி..... *(தலையைச்சொறிகிறான் சந்திரன். வசந்தனும் கைகட்டிக்கொண்டு நிற்கிறான்.)*
குரல் : இப்ப நிறையக் கேஸடாப்பா..... நீ வெள்ளிக்கிழமை பின்னேரம் நேரயே வாவன்.
அவரையும் கூட்டியா... எல்லாம் வெல்லலாம்.. வரட்டே...
வசந்தன்,சந்திரன் : சரியண்ணே
*(மூவரினதும் நடை தொடர்கிறது.)*
சாந்தலிங்கம் : கும்பிடப்போன தெய்வம் குறுக்க வந்தமாதிரித்தான். சகுனம் நல்லாவே இருக்கு. எல்லாம் நல்லபடி நடக்கும். என்ன சொல்லுறியள்.

# 4.

*பொலிஸ் நிலைய வரவேற்பறை.*
*(மூவரும் அமர்ந்துள்ளனர். மூவர் முகத்திலும் பரபரப்பு. எதிர்பார்ப்பு)*

சந்திரன் : என்னண்ணே ஒருமாதிரி இருக்கிறீங்க. ஒண்டுக்கும் பயப்படாதேயுங்கோ. முதல் விசா போடுறது பெரிய பிரச்சினையில்லை. நம்மட்ட எல்லாம் இருக்குது. நாங்களும் இருக்கிறம் தானே.
சாந்தலிங்கம் : அங்க.. அந்தக்காப்பிலியை தனியறைக்கு கூட்டிப்போறாங்கள். என்னையும் தனியக்கொண்டுபோய்...
வசந்தன் : அது கையடையாளம் எடுக்க. முதல் விசா எடுக்க வாறஆக்கள் எல்லாருக்கும் கையடையாளம் மச்சம் எல்லாம் எடுப்பினம்–பார்ப்பினம்.
ஒலிபெருக்கியில்(குரல்) : தாம்பிமூத்து..... தாம்பிமூத்து..... (தடங்கிய உச்சரிப்பில்)
சந்திரன் : நம்மளத்தான். எழும்புங்கண்ணே... வாங்க... வாங்க...
சாந்தலிங்கம் : நம்மளயோ! சாந்தலிங்கம் என்று கூப்பிடல்லையே!
வசந்தன் : அது இங்க அப்பிடித்தானண்ண. பதியிறபோது அப்பாவின் பேர்தான் நமக்குவரும். இனியெல்லாம் அந்தப்பெயரில்தான்..... நீங்க வாங்க...
சாந்தலிங்கம் : என்னடாப்பா இது... எல்லாம் தலைகீழாக்கிடக்குது.
சந்திரன் : எழும்புங்கண்ண. முதலில விசயத்தை முடிப்பம். பிறகு விளக்கமாக்கதைப்பம்.

*(மேடை இருளில்–பதிவுசெய்யும் கையடையாளம் எடுக்கும் குரல்கள், ஒலிகள் மட்டும் கேட்கின்றன. ஓரிரு நிமிடங்களின் பின் வட்டஒளிக்குள் சாந்தலிங்கம் தென்படுகின்றான்.)*

சாந்தலிங்கம் : எனக்கெல்லாம் ஒரே குழப்பமா இருக்கு.
நான் தம்பிமுத்து.
நான் சாந்தலிங்கம் இல்லை.
இனிமேல் நான் சாந்தலிங்கம் இல்லை.
மகேஸ்வரி யாரை கலியாணம் செய்தாள்? தம்பிமுத்துவையா? சாந்தலிங்கத்தையா?
உயிர் பயத்தில ஓடிவந்தால் இவன் பெயரை மாத்து என்கிறான்.
இனி என்னென்ன மாறுமோ? இதென்ன தலையிடியடாப்பா?
*(வெளிச்சம் பரவுகிறது. சந்திரனும் வசந்தனும் அருகே வருகின்றனர்.)*
சந்திரன் : என்னண்ண ஒரேயடியாய் குழம்புறீங்கள்..... இதெல்லாம் ஒரு விசயமா? பத்மநாதன், அருளம்பலம் எண்டு உங்கள மாற்றவேண்டி வாற விசயமெல்லாம் கிடக்கு..... வாங்க வீட்ட போவம். ஒருபோத்தில உடைக்க குழப்பமெலலாம் தீரும். வாங்கண்ண...

# 5.

*மேடையில் ஒளி அதிகமில்லை. மெல்லியதான தாலாட்டும் இசை.*
*சாந்தலிங்கம் தங்கியிருக்கும் அறை.*

*சோபா மீது சரிந்து கிடக்கின்றான்--முகட்டை வெறித்தபடி. கைகளிரண்டும் நெற்றிமேல் கிடக்கின்றன. அவனைச்சுற்றிலும் கடிதங்கள் நிறைந்து கிடக்கின்றன. சற்றுத்தள்ளி நிலத்தில் கம்பளிப்போர்வையுள் வசந்தன் படுத்திருக்கிறான். தள்ளாடியபடி நல்லபோதையில் அறைக்குள் நுழையும் சந்திரன், சற்று நின்று அறை நிலமையைக் கவனிக்கிறான்.*

சந்திரன் : அண்ண உறங்கேல்லையா?
*(சாந்தலிங்கம் எதுவும் பேசவில்லை. வெறித்தபடி கிடக்கிறான். சந்திரன் கடிதங்களைப்பார்த்து ஏளனச்சிரிப்பு சிரிக்கின்றான்.)*

சந்திரன் : அண்ண இந்த கடிதங்களுக்காகவா யோசிக்கிறியள்.
கடிதம் வந்தா படிச்சமா–விட்டமா எண்டு போட்டிடணும். இல்லையோ விசர்தான் பிடிக்கும். எனக்கும் இப்பிடித்தான் அண்ண. எனக்கில்ல இங்க இருக்கிற எல்லாருக்குந்தான்....
இங்க என்ன காசுமரமா காச்சிருக்கு....
என்னைப்பாருங்க... வயசு வட்டுக்க போட்டுது. தம்பி கலியாணம் செய்யிறயோசினையில்லயா எண்டு ஒரு வரி கடிதத்தில எழுதுகினமா?
வெளிநாட்டுக்கு வாறவன் மனுசன் இல்லை என்கிறது நம்ம சனத்தின்ர நினைப்பு.
அப்பப்பா நினைச்சாலே தலை வெடிக்கும்.
*(சந்திரன் வசந்தன் அருகே படுக்கச்செல்கிறான். வசந்தன் அருண்டு கண்ணை முழித்தவன் தலையை நீட்டிக்கதைக்கிறான்..)*

வசந்தன் : ஏன் சந்திரண்ணை வேலைக்குப்போகாமல் எங்க யோயிற்று வாறியள். வர வர உங்கட போக்கு எனக்கு என்னமோ சரியாப் படேல்ல...

சந்திரன் : எனக்குந்தான். எல்லாமே வெறுப்பாக்கிடக்கு.
*(சந்திரன் போர்வைக்குள் நுழைந்துகொள்கிறான். சிறிது நேரம் அமைதி.)*
*பின்னணி இசையில் இயற்கையின் கொந்தளிப்பு.*
*மேடை இருளாகி, வட்டஒளி சாந்தலிங்கத்தின்மீது குவிகிறது.*
*சாந்தலிங்கம் மெல்ல எழுந்து மேடைமுன்விளிம்புக்கு வருகிறான்.*
*இசை உரக்கிறது.*

சாந்தலிங்கம் : யாருக்கு நான் பதில் எழுத... எதை எழுத... (உரத்துக்கத்துகிறான்)
அக்கா என்னை மன்னித்துவிடு..
*(தலையை கவிழ்ந்து தொடைகளில் கையூன்றி முட்டுக்காலில் அமர்கின்றான்.)*
அத்தான் அகாலமானதைவிடவா உனக்கினி துன்பம் வரும்?
பழக்கப்பட்டுவிட்டாய். அப்படியே சமாளித்துக்கொள்.
நீ கெட்டிக்காரி. முடிந்தவரை பார்க்கிறேன். (முனகிக்கொண்டு)
*(முனகலின் தணிவில்..)*
அம்மா உனக்கு நான் எதை எழுத...
*(குரல் உரக்கின்றது. மேலே அண்ணார்ந்து பார்க்கின்றான்.)*
இருட்டில் பின்னணியில் குரல்..
'மகனே.....மகளே....
எங்கேதான் சென்றீர்..
என்னை ஏன் மறந்தீர்...
என்ன குற்றம் செய்தேன்..
எனதரும் பிள்ளைகாள்...'

சாந்தலிங்கம் : அம்மா இங்க நான் வந்திருக்கக்கூடாது. நான் வெல்லலாம் எனத்தான் நினைத்தேன். ஆனால் இயந்திரத்துப் பற்களுக்குள் வசமாகச்சிக்கிவிட்டேன். எப்படி என்னை விடுவிப்பேன்.. உன்னிடம் வருவேனா...உன்னை பார்ப்பனா....
என்ன பதில் எழுதுவேன் அம்மா....
*(சாந்தலிங்கம் கதறி அழுகிறான். முகத்தில் அறைகின்றான். பின் தெளிந்து கண்களைச்சுழற்றி வழிக்கின்றான். பின் சற்றுப்பின் நகர்ந்து)*
ஓ... என் நண்பனே! என்னை முறைக்காதே... நான் பதில் எழுதாதது பெரிய விசயமா நண்பனே.. நான் முகம் கொள்ளும் சூழலை நீ அறியாயா..? சுயத்தை இழக்கத்தயாரில்லாதவன் நீ.. நீ இங்கு வரக்கூடாது. மகிமைகள் கைநழுவி அழுக்குகளைக் காவவேண்டும்.
*பின்னணியில் குரல்.*
'மக்காள்
தஞ்சம் கேட்டுப்போனீரே

என்னில்தான் குற்றமென்று
பஞ்சம் பிழைக்கப்போனீரே
சொல்லுங்கள்,
எட்டுத்திக்கும் சென்றாரே
தோற்றுத்தான் போயிற்றோ எந்தன் சுயம்!!

*(சாந்தலிங்கம் மெதுவாக சோபாவை நெருங்குகிறான்—கடிதங்களைப்பொறுக்கி சோபாவின்கீழ் தள்ளிவிட்டு போர்வையால் தன்னை மூடிக்கொள்கிறான்.)*
*இருள் பரவுகிறது.*

# 6.

*அறை வெறிச்சோடிக்கிடக்கிறது.*
*சந்திரன் அறைக்குள் நுழைகிறான். முதுகில் பையொன்று தொங்குகிறது. பரபரப்புடன் காணப்படுகிறான்.*

சந்திரன் : வசந்தன் .... வசந்தன்... (தேடுகிறான்)
எங்கையடாப்பா போய்த்தொலைஞ்சாய்.

*சோபாவில் அமர்கின்றான். ஏதோ நினைவுக்கு வந்தவன் போல் வாயில் முணுமுணுக்கிறான்.*

ஓ.. இண்டைக்கு உனக்கு கூட்டு வழிபாடல்லே...
சரிதான் .... ஆரிட்டை இதைச்சொல்லி ஆறுறது..

*(இருப்புக்கொள்ள முடியாமல் தவித்தபடி தன்பையிலிருந்த போத்தலை எடுத்து ஒருகிளாசில் ஊற்றி ஓரேமடக்கில் குடிக்கிறான். பின் ரெலிபோனை எடுத்து மடியில்வைத்து சில இலக்கங்களை அழுத்துகிறான்.)*

சந்திரன் : ஹலோ.... நான் சந்திரன் கதைக்கிறன். இந்திரன் நிக்கிறாரோ.. அவரிட்டைக்குடுங்கோ....
வணக்கம் நீ வேலைக்கு இறங்கேல்லையோ...

..........................

சே.. வர வர எனக்கு காலநேரமெல்லாம் தெரியிறதில்லை...

..........................

நீ நேற்று சாந்தலிங்கம் அண்ணை வீட்டை போனனியே....

..........................

அப்ப உனக்கும் சொல்லேல்லையா?

..........................

நான். இப்ப இப்பதான் மெத்ரோவுக்க அறிஞ்சனான்.
அறைக்கு வந்தன் வசந்தனைக் கேப்பமென்று... அவனும் இல்லை.

..........................

அவன் வழமையாப் போற இடத்துக்குத்தான்.

..........................

எவ்வளவு சுகமா எங்களையெல்லாம் மறந்திட்டார். நாங்களெல்லாம் மனுசர் இல்லாமல் போயிட்டம்..

..........................

கவலையில்லாம எப்பிடி இருக்கிறது.

..........................

சரி, இதைத்தான் கதைப்பம் எண்டு எடுத்தனான். நேர வாறனே... நிப்பாய்தானே......சரி அப்ப...

*போனை வைத்துவிட்டு இன்னொரு கிளாசை எடுத்து அண்ணார்ந்து ஊற்றிவிட்டு சோபாவில் சாய்ந்து கிடக்கிறான். வசந்தன் உள்ளே நுழைகிறான். கையில் தடித்தபுத்தகம் மறுகையில் தோல்பை இருக்கிறது. சந்திரன் அறையில் இருப்பதை எதிர்பாராத வசந்தன் ஆச்சரியமடைகிறான்.*

வசந்தன் : சந்திரண்ணையே! கடவுளை கண்டமாதிரி கிடக்கு. ஏனண்ணை இப்பிடி விச்சிராந்தியாய் திரியிறியள். சாப்பிட்டீங்களே?

சந்திரன் : நடக்கிற ஒவ்வண்டையும் பார்த்தா மனுசர் மாதிரி இருக்கவே சொல்லாது. உனக்கு பைபிள் இருக்கு. நான் இப்பிடித்தான் புண்பட்ட மனசை ஆத்திறன். சிலதை மறக்கப்பாக்கிறன்.
இப்பபார் சாந்தலிங்கம் அண்ணை செய்ததை எதிலை சேர்க்கிறது.

வசந்தன் : அவர் விலத்திப்போறார். வேண்டாம் என்கிறார். இதெல்லாம் நடக்கும். தந்தைக்கு எதிராக மகனும், சகோதரன் மேல் சகோதரனும் பகைமைகள் வளரும். ஏனெனில் இறுதி...

சந்திரன் : நிறுத்து. நிறுத்து. வசந்தன் என்னால தாங்கேலாது. நாம சாந்தலிங்கம் அண்ணையைப் பற்றிப் பேசுவம். சரி, அவர் எங்க போகப்போறார்.... நாளைக்குத் தன்னையே இல்லை எண்ணப்போறார். பாப்பம். *சந்திரன் போத்திலைத்திறந்து குடிக்க ஆரம்பிக்கிறான்.*

# 7.

*மேடை இருளில். சாந்தலிங்கம் பரபரப்புடன் காணப்படுகிறான்.*
*வீட்டை ஒழுங்குபடுத்துகிறான்.*

*மேலைத்தேய இசையை நிறுத்தி நாதஸ்வர இசைநாடாவை மாற்றுகிறான்.*
*தான் அணிந்திருக்கும் ஆடையை மாற்ற எண்ணுகிறான்.*
*குரல் கொடுக்க ஒரு பையன்(மகன்) ஓடிவருகிறான்.*
*பையனும் தகப்பனும் பேசும் மொழிக்குப்பதிலாக இசைக்கருவிகளின் நையாண்டி ஒலியே மொழியாகின்றது.*
*பையன் உள்ளே சென்று சாரம் ஒன்றைக்கொண்டு வருகிறான்.*
*சாரத்தை வாங்கிக்கொள்ளும் சாந்தலிங்கம்(பலஸ்கால்.) பையனிடம் ஏதோ கூறுகிறான்.*
*பையன் தலையாட்டி விட்டுச்செல்ல சாந்தலிங்கம் சாரத்தை மாற்றிக்கொண்டு, அரைக்காற்சட்டை ஒன்றும் அணிந்துகொண்டு தயாராக நிற்கிறான்.*
*கதவு தட்டப்படுகிறது. நண்பன் வருகிறான். சாந்தலிங்கம் சென்று தன் நண்பனைக்கட்டியணைக்கிறான்.*

சாந்தலிங்கம் : மச்சான் கடைசி பஸ் பிடிச்சிருக்கிறாய் போல இருக்கு.
எப்பிடியோ வெளிநாடு வந்திட்டாய்... அதுவே சந்தோசம்.... பாத்து எத்தினை வருசம்.... என்னடாப்பா தலையெல்லாம் நரைச்சு.... வா..வா... உட்கார்..
*வந்த் நண்பன் வீட்டை கூச்சத்தடன் பார்க்கிறான். மிகுந்த கூச்சத்துடன் இருக்கையில் அமர்கிறான்.*
*சாந்தலிங்கம் வந்த நண்பனின் ஆடையலங்காரங்களை நோட்டம் விட்டு முகத்தைச்சுழித்துக்கொள்கிறான்.*

சாந்தலிங்கம் : என்னடாப்பா வீட்டை வினோதமாகப்பார்க்கிறாய்.... வந்து பதினைந்து வருஷமல்லே......
அதையெல்லாம் விட்டிட்டு நீ கதையைச்சொல்லன்.
*(சாந்தலிங்கம் உற்சாகத்துடன் எழுந்து சோக்கேஸினுள் இருந்து விஷ்கிபோத்தல் ஒன்றையும், கிளாஸ் இரண்டையும் எடுத்து மேசையில் வைத்துப் பரிமாறுகிறான். நண்பன் இன்னமும் வீட்டை வினோதம் பார்ப்பதிலேயே கழிக்கின்றான்.)*

சாந்தலிங்கம் : நீ என்னடாப்பா கதைக்கிறாய் இல்ல... எவ்வளவு காலக்கதைகள் கிடக்கு.... சரி அதுகளை விட்டிட்டு.... நீ இண்டைக்கு என்னோடை நில்... நாளைக்கு கொண்டு விடுகிறன்.
நான் பழைய நினைப்பிலை ஊத்திப்போட்டன், நீ எடுக்கிறனீ தானே...

நண்பன் : ஓ... பெரிசா இல்ல... வசதி கிடைச்சா எடுக்கிறதுதான்.
*(இருவரும் 'சியர்ஸ்' கூறி பருக ஆரம்பிக்கின்றனர்.)*

நண்பன் : நீ என்னடாப்பா நாதஸ்வரத்தைக் கேட்டுக்கொண்டிருக்கிறாய். இளையராஜா இல்லையே? போடன் கேப்பம்.

சாந்தலிங்கம் : ஓம் மச்சான் உனக்கு இளையராஜா விருப்பமே! என்னட்ட தமிழ்ச்சினிமாப் பாட்டெல்லாம் இல்லை.
இங்கத்தை நல்ல பாட்டுகள் இருக்கு கேக்கிறியே...
*(சாந்தலிங்கம் பாட்டு போடுவதற்கு எழும்ப மகன் குறுக்கே ஓடிவருகிறான்.)*

சாந்தலிங்கம் : உன்னையல்லே இங்கால வரவேண்டாம் எண்டனான்.
*(சைகையால் சாந்தலிங்கம் போவெனக்கூற மகன் ஏதோ சொல்கிறான். இருவரினதும் உரையாடல் ஒலி அமுங்கி இருக்க இசைக்கருவிகளின் நையாண்டி ஒலி அந்த இடத்தை நிரப்புகிறது.)*
இருவர் பேசுவதையும் வேடிக்கையாகப்பார்த்துக்கொண்டிருந்த நண்பன், மகன் போனதும்....

நண்பன் : ஏனடாப்பா தமிழ் விளங்காதே மகனுக்கு....?

சாந்தலிங்கம் : கொஞ்சம் கஸ்டம். நானும் பிள்ளையளோடை தமிழ்கதைக்கிறதில்லை. பேந்து அவங்களுக்கு இங்கத்தைய மொழி சரிவராமல் போயிடும். எங்களுக்குப்பிறகு அவங்களுக்கு என்னத்துக்கு நம்ம மொழி.
*(நண்பன் விக்கித்துப்போகிறான்.)*

சாந்தலிங்கம் : என்ன பேயறைஞ்சவன் போல ஆகிட்டாய். இப்பதானே வந்திருக்கிறாய். புரிஞ்சு கொள்ள நாளாகும்.
இப்ப பாட்டைக்கேள்... கதை...
*(ஐரோப்பாவில் முன்னணியில் இருக்கும் ஒலிநாடாவைப் போடுகிறான்.*
*நண்பன் இரசிக்கத்தொடங்குகிறான். இருவருக்கும் நல்ல போதை ஏறுகிறது.)*

சாந்தலிங்கம் : மச்சான் கள்ளுக்கொட்டிலில பிளாவில கள்ளும், மீன் பொரியலும் அடிக்கவேணும் போலகிடக்கு. மச்சான் நீ அந்தப் பாட்டைப்பாடண்டா. உன்னைப்பார்க்க பார்க்க ஊரைப்பார்த்த மாதிரிக்கிடக்கு.

நண்பன் : ஊரை சனத்தை நினைச்சு இவ்வளவு உருகிறியா.... உன்னைப்புரிஞ்சுக்க முடியேல்லையடாப்பா.
தண்ணியிலதானே இதெல்லாம் மிதக்குமா?

சாந்தலிங்கம் : என்னை கிளறாதை. உடைஞ்சு போயிடுவன்.
என்னவோ இண்டைக்கு அப்பிடி இருக்கு. சந்தோசமா இருப்பம். நீ அந்தப்பாட்டைப் பாடு.

நண்பன் : எதைச்சொல்லிறாய். மகாகவியின்ர சங்குகள் முழங்கு அதையே..

சாந்தலிங்கம் : ஓம் ஓம் உன்ரை குரலிலை அதைக்கேக்கணும். பாடு... பாடுமச்சான்...
*(இருவரும் சோபாவிலிருந்து தரைக்குச்சறுகுகின்றனர். நண்பன் பாடத்தொடங்ககிறான்.)*

சங்குகள் முழங்க
முத்தெறிந்திடும் கடற்கரையில்..
நங்கையர் நடந்தவை
உதைந்திடும் சதங்கை ஒலி
பொங்கும் உலங்கள்..
தாளங்களில் நடம்பயில

செங்கை வளையல்களோடு
கிண்கிணி குலுங்கவென
ஈழநாடே எழில்சூழும் நாடே..

*(பாடல் முடிய சாந்தலிங்கம் வீழ்ந்து கிடக்கிறான். அவனது வாய் 'ஈழநாடே ஈழநாடே' என வாய் முணுமுணுக்கிறது. பாடலை முடித்த நண்பன் மெல்ல எழுந்து தள்ளாடியபடி சாந்தலிங்கத்தை வியப்புடன் பார்த்து நிற்கிறான்.)*

# 8.

*இருளிலிருக்கும் மேடையில் ஒளி பரவுகிறது.*
*சாந்தலிங்கத்தின் வீடு.*

*சோபாவின்மீது உறங்கிக்கொண்டிருக்கிறான் சாந்தலிங்கத்தின் நண்பன்.*
*திடீரென்று துள்ளல் இசை தொடங்குகிறது.*
*(நண்பன் திடுக்கிட்டெழுந்து நேரத்தைப்பார்க்கிறான். சுற்றும் முற்றும் மிகநேர்த்தியான ஆடைஅணிந்தவனாய் நண்பனருகே வருகின்றான்.)*
*சாந்தலிங்கத்தை ஏற இறங்கப்பார்க்கிறான் நண்பன்.*

சாந்தலிங்கம் : என்னடாப்பா ஏற இறங்கப் பாக்கிறாய். இன்னும் முறியேல்லையே.
கொஞ்சந்தான் எடுத்தனீ. நல்லா ஏறீட்டுது உனக்கு.

நண்பன் : எனக்கா!

சாந்தலிங்கம் : அறைக்கை படுக்கவைக்கலாமெண்டால் ..... எங்கை உன்னை தூக்கேலுமே என்னாலை..

நண்பன் : பொய்சொல்லாதை நான் அதிகம் எடுக்கிறதில்லை. நீதான் கொஞ்சம் கனக்க எடுத்தனீ. இங்க உள்ள நம்ம ஆக்கள் எடுக்கிறதைப்பாத்தால் எனக்கு பயமாஇருக்கு. உன்னைப்பாக்க அப்பிடித்தான் இருந்தது. நான் பாடிமுடிய ஈழநாடே ஈழநாடே எண்டு புலம்பினாய். இப்ப என்ன சொல்லுறாய்!
சரிதான் விடு.

சாந்தலிங்கம் : இது தலையால அழியுற சனமல்லோ. நான் வந்து நாகரீகமாத்தான் குடிக்கிறனான். இல்லாட்டி இங்க இப்பிடி வாழேலுமே? இவங்களுக்கு கனக்க அவக் அவக் குடிக்கிறது பிடிக்காது. நீ வந்தது சாதுவா என்னை அருட்டிப்போட்டுது. வேறை ஒண்டுமில்லை.

நண்பன் : நீ வாய் புலம்பினதை குறையாச்சொல்லேல்லை. உனக்குள்ள அந்த மண் ஒட்டிக்கிடக் கெண்டதைதான் சொல்ல வந்தனான்.

சாந்தலிங்கம் : அது அங்கினக்கில ஒட்டிக்கிடக்குதுதான். ஆனா பெரிசா அதை எடுத்துக்கொள்ளுறதில்லை. ஏனெண்டால் இங்கயே எல்லாத்தையும் நான் அமைச்சிட்டன். நேற்றே சொன்னன்தானே பிள்ளையளுக்கு நம்ம மொழி தெரியாது. இரண்டு பேர் இங்கயே பிறந்தவங்கள். பொம்பிளைப்பிள்ளை பிறந்திருந்தால் கொஞ்சம் யோசிச்சிருப்பன்தான். மூண்டும் பெடியள். பாப்பம். அவங்களும் வளந்து ஊர்பாக்கவேணும் எண்டு ஆசை வந்தால் ஒருக்கா அந்த மண்ணை போய் பாத்திட்டு வரலாம். என்னப்போலதான் கன ஆக்கள் இருக்கினம். நீயே சொல்லுபாப்பம். இந்த வசதியை விட்டிட்டு அங்கைபோய்... சரி..விடு..
நீ உன்ரை கேஸ் எல்லாம் எழுதி அனுப்பீட்டியே?

நண்பன் : இல்ல நான் வாறமாதம் போறன்.

சாந்தலிங்கம் : என்ன போகப்போறியோ? விசராடாப்பா உனக்கு. இவ்வளவு செலவழிச்சு வந்துபோட்டு...

நண்பன் : நான் இங்க தங்க வரேல்லை. நான் விசா எடுத்து வந்தனான். நாலு நாட்டுக்கு போய் வந்திரக்கிறன். நான் வேலை செய்யிற பத்திரிகைதான் எல்லா ஏற்பாடும் செய்து தந்தது. நான் போய்...

சாந்தலிங்கம் : ஓ... நீ பத்திரிகையாளனா? அதுதான் கனக்க கதையாம கேட்டுக்கொண்டிருந்தனி போல.

நண்பன். : இங்குள்ள நிலமைகள் கவலைதருது. நீ யெல்லாம் இப்பிடி இருப்பாயெண்டு எதிர்பார்க்கவேயில்லை.

சாந்தலிங்கம் : எப்பிடி எதிர்பார்த்தாய்?

நண்பன் : என்னத்தை சொல்லுறது. போகமுதல் இன்னோருக்கா சந்திக்கிறனே...

சாந்தலிங்கம் : எதுக்கும் போன் பண்ணன்.

நண்பன் : சரி அப்ப...

*நண்பன் விடை பெறுகிறான்.*

# 9.

*மேடையில் ஒளி பரவி இருக்கிறது.*
*வெறிச்சோடிக்கிடக்கிறது மேடை.*
*பின்னணி இசை மட்டும் சோகமாக பிரவகித்துக்கொண்டிருக்கிறது.*

*சந்திரன் கையில் வைன்போத்தலுடன் மிகமோசமான தோற்றத்துடன் உள்ளே வருகின்றான். வாயில் பாடல் ஒன்று (பவ்வலோ சோல்யர் போன்று) இரண்டு மூன்று அடிகள் பாடிக்கொண்டபின் பார்வையாளர்களை முறைத்துப்பார்கிறான். நையாண்டிசெய்கிறான். மூளை களன்றதென்று சைகையால் காட்டுகிறான். மேடையைக்கடந்து செல்கையில் தடக்கி குப்புறவிழுகிறான்.*

*இப்பொழுது வசந்தன் வானத்தை அண்ணாந்து பார்த்தபடி மேடையுள் நுழைகிறான்.*

வசந்தன் : துன்பத்திற்கான விடுதலை நெருங்கிவிட்டது.
தேவனின் வருகை அண்மித்துவிட்டது.
எங்கும் நெருப்பைப்பாருங்கள்.
எல்லாமே இதில் எழுதப்பட்டிருக்கிறது.
அவர் வரும் நாள் நெருங்குகிறது.
உலகம் நெருப்பில் வேகும் நாள்.
எல்லாமே அவன் வாக்கியப்படி
அதோ தெரிகிறார்...... அதோ தெரிகிறார்....

*(அதோ அதோ என்றபடி வசந்தன் முழந்தாளில் இருந்து வானத்தை அண்ணாந்து பார்த்தபடி கூறிக்கொண்டே இருக்கின்றான்.*
*இப்போது சாந்தலிங்கம் மிகுந்த பதட்டத்துடன் மேடையுள் நுழைகின்றான்.*
*பின்னணியில் பல மொழியில் குரல்கள் உரத்தும் கோபமாகவும் ஒலிக்கின்றன.*
*கோஷங்களைக் கேட்கமுடியாமல் சாந்தலிங்கம் காதைப்பொத்துகிறான். கலவரமடைகிறான்.)*

சாந்தலிங்கம் : இங்கு இடம் இல்லையா? எப்படி நான் அங்கு போவது?
ஏன் நான் போகவேண்டும்? ஏன்? ஏன்?

*(பதில் சொல்வதுபோல் உரத்துக்கத்துகிறான் சாந்தலிங்கம்.)*
*பின்னணிக்குரல்கள் இப்போது வேகங்கொள்கின்றன.*

சாந்தலிங்கம் : உண்மைதான். ஓட்டவில்லை தான். நானுந்தான்... இந்த நாடுந்தான்.
அதுவுமில்லாமல்.....இதுவுமில்லாமல்......
எதுவாகிப்போனேன் நான் ஐயோ எதுவாகிப்போனேன் நான்..

*(தலையிலடித்துக் கதறுகிறான் சாந்தலிங்கம். 'இல்லை... இல்லை..... நான்.... நான்....'*
*குப்புறவிழுந்து கிடக்கும் சந்திரன் மெதுவாக தலையை உயர்த்திக் கூப்பிடுகிறான்.)*

சந்திரன். : சாந்தலிங்கண்ண.... சாந்தலிங்கண்ண அடயாளம் தெரியுதா... என்ர அடயாளம்.....

*(திடுக்கிட்டு கதறலை நிறுத்தும் சாந்தலிங்கம் கத்துகிறான்.)*

சாந்தலிங்கம் : நோ... நான் சாந்தலிங்கம் இல்லை.... நான்.... நான்......
நான் யாராக இருக்கலாம்?.....நான் நான்..... நீ......அவன்.....

*(ஒடுங்கி தலைகுனிந்து நிற்கிறான்.)*

மேடையில் இருள் மெல்ல பரவுகிறது.

---

-* முற்றும். *-

*நாடகம் எழுதும் ஆர்வம் இருந்தாலும் முயற்சிக்கவில்லை. ஆனால் இலக்கிய ஆர்வலரும், செயற்பாட்டாளருமான நண்பர் மனோ, தனக்கு ஒரு நாடகம் எழுதும்படி அடிக்கடி நினைவூட்டிக்கொண்டே இருந்தார். அவரது நாடகமொன்றை வீடியோவில் பார்த்தபோது அவரது ஆர்வத்தை, முயற்சியைக் காணமுடிந்தது. அவருக்காக இந்த நாடகத்தை எழுதி முடித்திருக்கிறேன். தொடர்ந்தும் எழுதும் எண்ணம் உண்டு. விரைவில் மனோவின் நெறியாள்கையில் பாரிஸில் இந்நாடகம் அரங்கேற உள்ளது.*
*- கி.பி. அரவிந்தன்.*

# *இரண்டு கதைகள்.*

*-புவனன்-*

**1.**
நானும் அவனும் எதிரெதிராக.

நடுங்கி நடுங்கி ஏறிக்கொண்ட ஓர் அறுபது
வயதைத்தாண்டிய வயோதிபம்
அவனிடம் தான் கேட்டது.
'உனது ஆசனத்தை எனக்குத் தருவாயா?'

பிச்சை கேட்க இல்லை என்பது போல அவன் தலையைத் திருப்பினான்.

வயோதிபத்தைப்பார்க்கச் சங்கடமாக இருந்தது.
எழுந்து எனது ஆசனத்தைக்கொடுத்தேன்.

என்ன நினைத்ததனோ என்னவோ!
அவன் பாய்ந்து என் முகத்தில் ஒரு இடி விட்டான்.
மூக்கிலிருந்து இரத்தம் சொட்டியது.

**2.**
அவனுக்கு ஏதோ அவசரம் போல்.
கையில் ரிக்கற் இல்லை என்பதும் தெரிந்தது.
'மெத்ரோ'நுழைகதவைச் சுற்றிச்சுற்றிக்கொண்டிருந்தவன்
என்னைக்கண்டதும் கேட்டான்?
'எனக்கு உதவி செய்வாயா?'

தப்புத்தான். ஆயினும் அவனுடைய நிலையைப்பார்க்கப்
பரிதாபமாக இருந்தது.
உதவினேன்.

நுழைகதவைத்தாண்டும் போது எனது ரிக்கற்றையும்
பிய்த்துக்கொண்டு ஓடிவிட்டான்.
கதவிற்கு வெளியில் நான்-மலங்க மலங்க முழித்தபடி.

# நாடு கடத்தப்பட்டவர்களின் குரல்

" தமிழர் பிரெஞ்சில் எழுதுவதா? என்ன இருந்தாலும் நடை காட்டிக் கொடுத்துவிடும் " என்றார் ஒரு பிரெஞ்சு அறிவாளி ஒருநாள் என்னிடம். மேலாதிக்கத்தின் எதிரொலி மறைய வெகுநாள் ஆகும் போலும்! வீரமாமுனிவர், உமறுப்புலவர் எழுதிய காவியங்களைப் பாடப் புத்தகங்களாய் வைப்பது தமிழர் பண்பாடு. இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் ஐரோப்பிய மொழிகளில் தரமான இலக்கியத்தைப் படைக்கும் பலர் அந்த மொழிகளைத் தாய் மொழியாய்க் கொண்டவர் அல்லர். இதற்கு உதாரணமாக சல்மான் ருஷ்டி, விக்ரம் சேத், ஷியாம் செல்லத்துரை, ரமேஷ் குணசேகரா (ஆங்கிலம்), டஹார் பென்ஜலூன், பத்ரிக் ஷம்வாசோ (பிரெஞ்சு) போன்றவர்களை குறிப்பிடலாம்.

கலாமோகனின் "நாளை" இலங்கைத்தமிழர் ஒருவரால் முதன் முதலில் பிரெஞ்சில் படைக்கும் கவிதைத் தொகுப்பு. புலம்பெயர்தல் என்ற கடினமான அனுபவத்தை அனுபவிப்பவரே புகலிடத்தின் மொழியில் விவரித்தால்தான், அது எப்படிப்பட்டது என்பதை புகலிடம் அளிப்போரால் உணர இயலும். மேலும், இக்கவிதை தொகுப்பிற்கு பின்னுரை எழுதிய பெட்ரோ வியன்னா குறிப்பிடுவது போல் தமிழ் மொழியில் உள்ளுறையும் இசையை பிரெஞ்சு மொழியில் புகுத்தும் கலாமோகனின் முயற்சி நவீனமானது.

புலம் பெயர வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்திய இனப்போராட்டம், ஒரு மனிதனுக்கும் அவன் பிறந்த நாட்டிற்கும் உள்ள பந்தம், அகதிவாழ்க்கையின் அவலம், புலம் பெயர்ந்தவர்க்கும் வேரூன்றியவருக்கும் உள்ள உறவு, மனித குலத்தின் உயர்ந்த எண்ணங்களுக்கும் உண்மையான நடைமுறைக்கும் உள்ள இடைவெளி, மனிதனைப் பிரியாது நிழல் போல் தொடரும் தனிமை இவற்றைப் பற்றியன இவரின் 27 கவிதைகள். ஜாக் பிரேவரின் உரையாடல் கவிதைகள் போல எளிமையான, நிதானமான நடையில் எழுதப்பட்ட இவர் கவிதைகள் படிப்பவரின் உள்ளத்தில் ஒரு நிரந்தரமான பாதிப்பை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமே இல்லை.


வன்முறை வெறியாடும் நமது தற்போதைய உலகத்தில் மனிதன் பிறப்பது வாழ்வதற்கே என்ற சாதாரணமான எண்ணமே விநோதமாகத் தெரிகிறது. சாவின் வாசனை (36-ம் பக்கம்) என்ற கவிதையில் வாழ்க்கையை விழாவாக நினைத்துக் களித்திடும் மனித சமுதாயத்தில் மிருகங்களாக மாறிவிட்ட சிலர் எந்நேரமும் புகுந்து சாவை விளைவிக்கலாம் என்ற திடுக்கிடும் செய்தி மிகச்சாதாரணமாய் சொல்லப்படுகிறது. ஒருவர் கொண்டாடும் விழாவை இன்னொருவரின் கருமாதியாய் மாறவைக்கும் வரலாற்று வினைகளை எடுத்துரைக்கிறது "சிறி லங்காவின் தேசிய விழா" எனும் கவிதை (20-ம் பக்கம்).

தாயும் அவள் வயிற்றில் இருந்த சேயும்
ஒன்றாக இறந்தார்கள். (33-ம் பக்கம்)

என்று கலாமோகனை விட சாவின் குரூரத்தை இன்னும் அப்பட்டமாய் யாரால் சொல்ல இயலும்? அதே சமயத்தில் சாவு என்பது ஒரு மாமூலான விஷயமாய்ப் போய்விட்டதை 14 வயது விடுதலை வீரனின் வரலாறு சித்தரிக்கிறது (45-ம் பக்கம்).

ஒரு பக்கம் இனவெறி, மறுபக்கம் விடுதலைப் போராட்டத்தின் பிரச்சார நெருக்கடி. சாவு எவருடையதாக இருந்தாலும் காரணத்திற்கு என்னவோ பஞ்சமில்லை என்பதை நகைச்சுவை தட்ட தெரிவிக்கின்றது ஒரு தமிழ்ப் பெண்ணின் மௌனக் கண்ணீர் (39-ம் பக்கம்). ஆனால் நாளை சுதந்திரம் என்ற கனவு இளைஞர்களை உந்துகிறது. புலம் பெயர்வது திரும்பி வருவதற்காக என்று அவர்கள் நினைத்தாலும், போவது தற்காலிகமாக அல்ல நிரந்தரமாகத்தான் என்ற சோகமான செய்தியை சொல்ல முயல்கிறது "போய் வருகிறேன்" என்ற கவிதை (23-ம் பக்கம்).

புகலிடத்திற்குத் தப்பிச் சென்றாலும், தாய் நாட்டின் இந்நாள் சிறுமையை நினைக்கும் போது, பெயர்ந்த புலமும் எரிகிறது (10-ம் பக்கம்). நாடு கடந்தவன் ராஜாவாக முடியாது; தனிமையும் வேதனையுமே அவன் பாடு.




நான் வேண்டாத விருந்தாளி (55-ம் பக்கம்)
என் நிலைமை சரியில்லை (52-ம் பக்கம்)

என்று கவிஞர் கூறும் போது, உண்மையை உள்ளங்கை நெல்லிக்கனி போல விளம்ப அவருக்குள்ள தைரியம் வெளிப்படுகிறது.

பிறந்த பூமியிலும், புகுந்த புலத்திலும் வேற்றானாய்த் திண்டாடினாலும்; பசி, வறுமை, வன்முறை, கோரம் இவற்றால் பாதிக்கப்பட்டாலும்; நம்பிக்கையை

இழக்காமல் உலகைத் திருத்துவோம் என்று குரல் கொடுக்கிறார் (35-ம் பக்கம்). மனித குலம் அனைத்துமே ஒருவிதத்தில் பூமியில் நாடு கடத்தப்பட்டவர்களே என்பதை உணரும் போது, ஒரு புதிய விடிவு வருமென்று எதிர்பார்க்கிறார்.

ஆனால், அதற்குமுன் "இன்றிரவு நான் இறக்க வேண்டும்" என்ற அருமையான கவிதையை கலாமோகன் (27-ம் பக்கம்), பிரஞ்சுக் கவிஞர் வியோன் விட்டுச் சென்ற 'உயில்' போல வருங்காலத்திற்கு எழுதி வைக்கிறார்.

எனக்கு சாக விருப்பமில்லை
ஆனால் இன்றிரவு நான் இறக்கவேண்டும்.
அது அவர்கள் கட்டளை
நான் அமைதியாய் இறக்க மாட்டேன். (29-ம் பக்கம்)

இதைப் போலவே 42-ம் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள "என்ன செய்வது", என்ற புலம்பலும் இத்தொகுப்பின் சிறந்த படைப்புகள்.

சர்வதேசச் சட்டங்களை பிரெஞ்சு மொழியில் இயற்றுவது வழக்கம். ஏனெனில் சந்தேகத்திற்கு இடமில்லாமல் ஒரு எண்ணத்தை வெளிப்படுத்தும் கட்டுக்கோப்பு பிரெஞ்சு மொழிக்கு இருக்கிறதாம். தமிழ் மொழியின் தனிச் சிறப்பு குறுகச் சொல்லுவது.

ஒரு ஜெயிலிலிருந்து
நான் தப்பியது
மிகப் பெரிய
இன்னொரு ஜெயிலில்
நுழைவதற்கே (53-ம் பக்கம்)


என்று கலா மோகன் பிரெஞ்சு மொழியில் வெகு சுலபமாய் எழுதும்போது எந்த அளவிற்கு அவர் பிரெஞ்சு நாட்டையும், அதன் மொழியையும் தமதாக்கிக் கொண்டுள்ளார் என்பது விளங்குகிறது.

சில இடங்களில் பிரெஞ்சு மொழியில் தமிழ்க் கோட்பாடுகளை ஒட்டும் முயற்சி இவ்வளவு சிறப்பாக அமையவில்லை.

கண்ணீர்த் துளிகளை மட்டும் விதைக்காதீர் (29-ம் பக்கம்) என்பது தமிழில் பொருந்திவிடுகிறது. பிரெஞ்சு மொழியில் இந்த உருவாக்கம் எடுபடவில்லை.

இக்கவிதைத் தொகுப்பை பிரெஞ்சு மொழியில் ஆக்கியதன் மூலம், புகலிடம் தரித்தோர் ஒரு இலங்கைத் தமிழரின் ஆன்மாவை அறிந்துகொள்ள ஒரு அரிய வாய்ப்பை கலா மோகன் அளித்துள்ளார். இம் முயற்சி பல புதிய கவிஞர்களுக்கும், நாவல் மற்றும் சிறுகதை எழுத்தாளர்களுக்கும் ஒரு உந்துதல். கலா மோகனின் புதிய பிரெஞ்சு வார்ப்புகளும், வாசகர்களும் பெருக வாழ்த்துக்கள். ருஷ்டி சொல்வது போல் ஒரு மக்களின் மொழியை ஆளக்கற்பது, நமது சுதந்திரத்தின் பூரணத்தன்மையை அடைவதற்கு ஈடாகும்.

□□ கீதா- கணபதி- தொரே



வேலிக்குள் இருந்தே
வீரியம் பெற்றோம்!


கிளைகள் விரிய
குடையாய் இறுகினோம்!!

விழுதுகள் இறக்கி
வேலிகள் தகர்ப்போம்!!!

-திரவியம் (துபாய்) 6-10-95

# டோனி கிளிப்பின்

# ரோஸா லக்ஸம் பர்க்




*புத்தகச் சுருக்கம் மற்றும் மொழியாக்கம் சம்பந்தமாக சில குறிப்புகள்:*

*எல்லா வகையான சிந்தனைப் போக்குகளும், சித்தாந்த அணுகுமுறைகளும் மார்க்ஸீயத்தோடு எதிர் வினை கொள்ளும் போதுதான் நடைமுறை அரசியல் தன்மையையும் சமூக மாற்றத்துக்கான கோட்பாட்டுத் தன்மையையும் பெறுகிறதென நான் உறுதியாக நம்புகிறேன்.*

*பூக்கோ, தெரிதா, லக்கான், பின் நவீனத்துவம்- அமைப்பியல்.... என தமிழில் நிறைய மொழிபெயர்ப்புகள் வந்துள்ளன. சமகால அரசியல் நடைமுறை விமர்சனப் பண்பை அவை பெறவில்லை என்றே அவதானிக்க முடிகிறது. இச்சூழலில் சில முக்கியமான புத்தகங்களின் சுருக்கங்களைத் தரவேண்டும் என நினைத்தேன். அதில் முதலாவது ரோஸா புத்தகம். எளிமை கருதியும், தமிழ்ச் சூழல் கருதியும் சில வரிகளை நானே இடையிடையே எழுதியிருக்கிறேன். மற்றபடி சுருக்கம் முழுக்க டோனி கிளிப்பின் புத்தகத்திலிருந்துதான்.*

*மௌனத்தில் தொடர்ந்து வரவிருக்கும் புத்தகச் சுருக்கங்கள் பற்றி இப்போதைக்கு பின் வரும் இரண்டைக் குறிப்பிடுகிறேன்:*

*Remarks on Marx : Micheal Focault*

*Spectres of Marx : Jaques Derrida (புத்தகம் பற்றிய விமர்சனங்களின் தொகுப்புடன்)*

**- யமுனா ராஜேந்திரன் -**

ரோஸா 1871-ஆம் ஆண்டு மார்ச் 5-ம் நாள் போலந்தின் சிறு நகரான ஸோமோஸ்க்கில் பிறந்தார். 1919 ஜனவரி 15-ம் நாள் பாசிஸ்ட்டு வெறி நாய்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். 48 வருடங்கள் ஐரோப்பிய புரட்சிகர அரசியலுடன் மட்டுமல்லாது மூன்றாம் உலக நாடுகளின் விமோசனத்திலும் அக்கறை கொண்டு வாழ்ந்த வாழ்வு முழுமையானது அவருடையது. THE ACCUMULATION OF CAPITAL புத்தகம், மூன்றாம் உலக நாடுகளுக்கு விரிவு பெறும் மூலதனம் ஏற்படுத்தும் விளைவுகள் பற்றிய அவரது ஆய்வு. 21 ஆண்டுகள் ரஷ்சிய சோஸல்-ஜனநாயகக் கட்சி (போல்ஸ்விக்- மென்ஷிவிக்) தோன்றுவதற்கு முன்பு 1882-ல் தொடங்கப் பெற்ற போலந்து PROLETARIAT கட்சியின் உறுப்பினர் ஆவார். போலந்து, ரஷ்யா, ஜெர்மனி நாடுகளின் புரட்சிகர இயக்கங்களில் நேரடியாகப் பங்கு கொண்டவர். யூத இனத்தின் இடதுசாரி மரபில் வந்தவர்.

உலக கம்யூனிஸ்ட்டு இயக்கத்தின் மேதைகள், புரட்சியாளர்கள் அனைவருடனும் சமதையாக நின்று விவாதித்த புரட்சிகரப் பெண்மணி இவர். லெனின் பிற்படுத்தப்பட்ட விவசாயிகளின் நாட்டில் இருந்து அச்சூழலில் தனது புரட்சிகரக் கோட்பாட்டை வளர்த்தெடுத்தவர். ரோஸா ஐரோப்பாவிலேயே பிரமாண்டமானதும் வளர்ச்சியுற்றதுமான தொழிலாள வர்க்கப் போராட்ட அனுபவங்கள் ஊடே தனது புரட்சிகரக் கோட்பாட்டை உருவாக்கியவர்.

விளாடிமிர் லெனின், த்ரோஸ்த்கி, கார்ல் காவுட்ஸ்க்கி, அகஸியோ பெபல், பிரான்ஸ் மெஹ்ரிஸ், கார்ல் லீப்க்னெட், பெர்ன்ஸ்டீன், கிளாரா ஜெட்கின், ரோஸாவின் காதலரும் தோழருமான லியோ ஜோகிட்ஸ்கி போன்ற புரட்சியாளர்கள் ரோஸாவின் சமகாலத்தவர்கள்.

கம்யூனிஸ்ட்டுக் கட்சிகளும் புரட்சிகரக் குழுக்களும் இன்று வரை பேசிவரும் பல்வேறு ஸ்தாபன மற்றும் நடைமுறைப் பிரச்சினைகள் பற்றிய விவாதங்கள் இவர்களுக்கிடையில் எழுந்தது.

1. சட்டபூர்வமான வழியிலான சீர்திருத்தவாதம் புரட்சிகர மாற்றம் இவற்றுக்கு இடையிலான பிரச்சினைகள்.

2. புரட்சியில் தொழிலாளி வர்க்கத்தால் தலைமை தாங்கப்படும் பொது வேலை நிறுத்தத்தின் (mass strike) முக்கியத்துவம் மக்களின் தன்னெழுச்சி (spontaneity) பற்றிய முக்கியத்துவம்.

3. ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்தை- ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான யுத்தத்தை- எதிர்ப்புப் போராட்டமாக மாற்றுவதன் அவசியம். சமாதான இயக்கத்தின் தேவை.

4. புரட்சிகரக் கட்சிக்கும், வர்க்கத்துக்கும், மக்களுக்கும் இருக்க வேண்டிய உயிருக்கமுள்ள தொடர்பு. ஜனநாயக மத்தியத்துவம் பற்றிய் பிரச்சினைகள்.

5. ஏகாதிபத்தியத்தின் கீழும் முதலாளித்துவ சமூக அமைப்பின் கீழும் தேசியப் பிரச்சினை (National question) அணுகப்படக் கூடியதான வரையறை.

6. கட்சியில் அதிகாரத்துவமும், அதிகாரத்திலிருக்கும் கட்சியில் அதிகார வர்க்கமும், உருவாகிவிடக் கூடியதான ஆபத்து பற்றிய எச்சரிக்கை. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றிய அதிமுக்கியத்துவம்.

7. புரட்சிகரக் கட்சியில் தொடர்ந்த வர்க்கப் போராட்டத்துக்கு மாற்றாக தொழிற்சங்க வாதத்தை முன் வைக்கும் போக்குக்கு எதிரான போராட்டம்.

8. சமகால ஏகாதிபத்தியத்தின் அரசியல் மற்றும் அதற்கான அவர்களது பொருளாதார வேர்கள் பற்றியதும், மார்க்ஸின் மூலதனம் 2 இல் தீர்க்கப்படாத கோட்பாட்டுப் பிரச்சினைகள் பற்றிய தொடர்ச்சியானதுமான THE ACCUMULATION OF CAPITAL A CONTRIBUTION TO AN ECONOMIC EXPLANATION OF IMPERIALISM புத்தகம்.

பெர்ன்ஸ்டீனின் கார்ல் காவுட்ஸ்க்கியின் சீர்திருத்தவாதம் பற்றியும் தொழிற்சங்க வாதம் பற்றியும் யுத்தத்திற்கு ஆதரவானதுமான நிலைப்பாடு பற்றிய சளையாத போராட்ட இயக்கம் ரோஸாவினுடையது. ரோஸாவின் சிந்தனை, செயல், சித்தாந்தம் ஆகியவற்றின் செயல்மையம் பாட்டாளி வர்க்க சர்வதேசியம். பாட்டாளி வர்க்கத்தின் ஒற்றுமை. தேசம், இனம், மொழி போன்றவற்றால் பிரிக்கப்பட முடியாத இடைநிறுத்தப்பட முடியாத ஜீவநதியோட்டம் போன்றது அவரது சர்வதேசியம். இந்தப் பாட்டாளி வார்க்க சர்வதேசியம் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் அமைகிற கட்சி, பாட்டாளி வர்க்கத்தின் ஜனநாயகத்தால் உத்தரவாதப்படுத்தப்படும் சோசலிச சமூகம் இதுவே அவரது இறுதி இலட்சியம். இந்த நிகழ்வுப் போக்கில் அவர் பாட்டாளி வர்க்கத்தின் புத்திபூர்வமான பங்கெடுப்பை, தன்னெழுச்சியை, செயலை, பங்கெடுப்பை அரசியல் நிகழ்வின் புரட்சிகரத் தன்மைக்கான முதல் நிபந்தனை ஆக்குகிறார். பாட்டாளி வர்க்கத்தின் பெயர் அவர்களுக்காக முடிவெடுக்கிற கட்டளையிடுகிற அமைப்பாக கட்சி இருப்பதை தொழிற்சங்கம் இருப்பதை அவர் மறுதலித்தார். □

## சீர்திருத்தமும் புரட்சியும்

சட்டச் சீர்திருத்த நடவடிக்கைககான போராட்டங்கள், புரட்சிக்கான போராட்டங்களிலிருந்து பிரிக்க முடியாதவை. சீர்திருத்தமும் புரட்சியும் இரு துருவங்கள். ஒவ்வொரு வர்க்கச் சட்டமும் புரட்சியின் விளைவே. ஆகவே புரட்சியின் இறுதி இலட்சியத்திலிருந்து பிரிக்கப்படும் சீர்திருத்தவாத நடவடிக்கைகள், இருக்கும் அமைப்பை தொடர்ந்து காக்கும் சமரசத்திற்கே இட்டுச் செல்லும்.

'சீர்திருத்தங்கள் நீண்டகால புரட்சிக்கு இட்டுச் செல்லும் என்றோ, புரட்சி சீர்திருத்தங்களின் சுருக்கப்பட்ட வடிவம் என்றோ சொல்வது வரலாற்றுக்கு முரணானது.'

எட்வர்ட் பெப்ஸ்டீனது சீர்திருத்தவாதத்திற்கு எதிரான ரோஸாவின் போராட்டம் பற்றிய பிரசுரம்: SOCIAL REFORM OR SOCIAL REVOLUTION

## பொது வேலை நிறுத்தமும் புரட்சியும்

அரசியல் மற்றும் பொருளாதார ரீதியிலான பொது வேலை நிறுத்தம் என்பது தொழிலாளி வர்க்க அதிகாரத்திற்கு புரட்சிகர நடவடிக்கையில் மையமானது எனக் கண்டார் ரோஸா. பொது வேலை நிறுத்தங்களில் பொருளாதார நோக்கங்களை அரசியல் நோக்கங்களில் இருந்து பிரிப்பதோ, அரசியல் நோக்கங்களை பொருளாதார கோரிக்கைகளிலிருந்து பிரிப்பது ரோஸாவிற்கு உடன்பாடானவை அல்ல.

பொருளாதாரப் போராட்டங்கள் நீண்ட கால நோக்கில் அரசியல் போராட்டத்துக்கான களத்தை தயாரிக்கும் அதே பொழுதில், அரசியல் போராட்டங்கள் பொருளாதார அதிகாரத்துக்கான தொழிலாளி வர்க்கத்தின் பங்கெடுப்பை உத்தரவாதப்படுத்த வேண்டும். பொது வேலை நிறுத்தங்கள் தொழிலாளி வர்க்கத்தின் ஆன்மீக பலத்தை உயர்த்துவதோடு தனிமைத் துயரை விரட்டி கூட்டு மனப்பான்மையைத் தருகிறது என்கிறார் ரோஸா. பிரசுரம்: MASS STRIKE

## ஏகாதிபத்தியத்திற்கெதிரான / யுத்தத்திற்கெதிரான போராட்டம்

1914 இல் தொடங்கிய முதல் உலகப் போராட்டத்தில் சோசலிஸ்ட் இன்டர்னேசனல் அமைப்புக்குள் ஏகாதிபத்தியங்களுக்கிடையிலான இச்சண்டையில் ஜெர்மன் ஏகாதிபத்தியத்துக்கு ஆதரவான ஒரு போக்கு ஜெர்மன் சமூக ஜனநாயகக் கட்சிக்குள் எழுந்தது.

காலனியாதிபத்தியத்தை எதிர்த்தாலும் காலனிய நாடுகளில் ஏகாதிபத்தியம் சீர்திருத்தம் செய்தது என்றும் அங்குள்ள பூர்வீக மக்களுக்கு அவர்களின் வாழ்வை மேம்படுத்தியது என்றது 1907-இல் கூடிய ஸ்ருட்காட் சோசலிஸ்ட் இன்டர்னேசனல் கூட்டம்.

கார்ல்ஸ் காவுட்ஸ்கி போன்றோர் ஏகாதிப்த்தியம் முதலாளித்துவத்தின் தவிர்க்கவியலா' வளர்ச்சி என்று வாதிப்பார்கள். சோசலிஸ்ட் இன்டர்னேசனில் இருந்த சமூக ஜனநாகவாதிகளின் வலதுசாரிப் பிரிவை இவர் பிரதிநிதித்துவப்படுத்தினார்.

ரோஸா லக்ஸம்பர்க் யுத்தத்திற்கு எதிரான நிலைப்பாட்டை மேற்கொண்டார். 'சோசலிசம் அல்லது காட்டுமிராண்டித்தனம்' இதுதான் நமக்கு முன்னுள்ள தேர்வு என்றார். அனைத்துக் கலாச்சார வளர்ச்சியின் வீழ்ச்சி, அழிவு, கொலை, கல்லறை இதுவே ஏகாதிபத்தியம் என்றார்.

இக்கால கட்டத்தில் இவரெழுதிய பிரசுரம்தான்: THE CRISIS OF SOCIAL DEMOCRACY. இது தான் மிகப் பிரபல்யமான JUNIOUS PHAMPLET என்று பேசப்படும் பிரசுரம். JUNIOUS எனும் புனைப்பெயரில் ரோஸா இதை எழுதியிருந்ததால் இப்பிரசுரம் இப்பெயர் பெற்றது.

## கட்சியும் வர்க்கமும்

பரந்துபட்ட தொழிலாளர்களின் பிரக்ஞைபூர்வமான பங்கெடுப்பு என்பது சோசலிசத்தை சாதிப்பதற்கான **மிக அவசியமான முன் நிபந்தனையாகக்** கண்டார் ரோஸா.

லெனினும் ரோஸாவும் கலந்துரையாடலில் ஈடுபட்ட முக்கியமான பிரச்சினைகளில் இதுவொன்று.

கார்ல் மார்க்ஸ் எங்கல்ஸின் THE CLASS STRUGGLE IN BANCE, ரோஸா வடிவமைத்த PROGRAMME OF THE COMMUNIST PARTY OF GERMANY (Spartacus), ரோஸாவின் SPEECH TO THE FOUNDATION CONGRESS OF THE COMMUNIST PARTY, லெனினது புத்தகங்களான WHAT IS TO BE DONE?, ONE STEP FORWARD TWO STEP BACKWARD மற்றும் TWELVE YEARS தொகுப்புக்கான முன்னுரை புத்தகங்கள் ஊடே இந்த அத்தியாயத்தை வடிக்கிறார் டோனி கிளிப்.

ரோஸாவின் பார்வையில் தொழிலாளி வர்க்க இயக்க அனுபவங்களிலிருந்து படிப்பினை பெற்று அதைப் பொதுமைப்படுத்துவதன் மூலமே பரட்சிகரக் கோட்பாடு உருவாக வேண்டும் என்கிறார். தொழிலாளி வர்க்கத்தின் பிரக்ஞைபூர்வமான ஆர்வம், பிரக்ஞைபூர்வமாகப் பங்கெடுப்பது இவை இரண்டும் சோசலிசத்தைக் கட்டமைக்க முக்கியம் என்கிறார்.

தொழிலாளி வர்க்கத்தை சோசலிசத்துக்கு படிப்பிப்பது என்பது அவர்களிடம் உரையாற்றுவது, பிரசுரங்களை விநியோகிப்பது அல்ல என்கிறார். செயல் மட்டுமே மக்களைக் கல்விமயப்படுத்தும் என்கிறார் ரோஸா. மிகச் சிறப்பான மத்திய குழு இழைக்கும் தவறுகளிலிருந்து பாடம் கற்பதவிட புரட்சிகர தொழிலாளர் இயக்கத்திலிருந்து பாடம் பெறுவது அதி சாராம்சமானது என்கிறார் ரோஸா.

ரோஸா லக்ஸம்பர்க்கின் இந்த நிலைப்பாட்டுக்கான வேர்களை- ஸ்தாபனத்தின் பாத்திரத்தினை இரண்டாம் பட்சமாகப் பார்க்கும் இப்பார்வையின் வேர்களை- நாம் அன்று நிலவிய ஜெர்மன் நிலைமையைக் கணக்கிலெடுத்தே பார்க்க வேண்டும்.

1. அகஸ்தோ பெபல், கார்ல் காவுட்ஸ்கி, எட்வர்ட் பெர்ன்ஸ்டீன், ஹில்பர்டிஸ் போன்றோர் பிரதிநிதிப்படுத்திய ஜெர்மன் பாராளுமன்றப் பாதை கட்சியினதும் தலைமையினதும் கட்டளையில்லாமல் தொழிலாளி வார்க்கத்தால் ஏதும் செய்யமுடியாது எனும் அவர்களது நிலைப்பாடு.

2. ரோஸா ஏற்கனவே பணியாற்றிய Polish Socialist Party -யின் நிலைப்பாடு. இனவாத அமைப்பு அது. சமூக அடிப்படையற்று போலிஸ் தேச விடுதலை பேசியது அது. தேசியப் போராட்டத்திலிருந்து முதலாளிகளும் நிலப்பிரபுகளும் விலகியிருந்தனர். தொழிலாளி வர்க்கத்திற்கு அப்படிப்பட்ட ஆர்வம் ஏதுமில்லை.

இந்த இரண்டு இயக்கங்களும் அடிமட்ட வர்க்க சக்திகளைப் பற்றியோ தொழிலாள வர்க்கத்தின் பங்கெடுப்புக்குள்ள முக்கியத்துவம் பற்றியோ உணரவில்லை. முற்றிலும் மறுக்கப்படும் ஒரு விஷயத்தை அழுத்திப் பேச ஆரம்பிக்கும் போது, அதில் சம்பந்தப்படவருக்கு முழு வாழ்வினதும் பிரச்சினையாக அதுவே ஆகிவிடுவதை நாம் வரலாற்றின் பல்வேறு சந்தர்ப்பங்களில் பார்க்கிறோம்.

வர்க்கப் பார்வை புறக்கணிக்கப்படும் போது அதுவே சம்பந்தப்பட்டவருக்கு முழுப்பிரச்சினை. பெண்நிலை நோக்கு; தலித்தியம்; தமிழினப் பிரச்சினை; சூழலியல் போன்ற நோக்கில் சம்பந்தப்பட்டவருக்கு அச்சமயத்தில் அதுவே அவர்களுக்கு முழு

வாழ்வினதும் இயக்கத்தினதும் பிரச்சினையாகி விடுகிறது.

தொழிலாளி வர்க்கத்தின் பிரக்ஞைபூர்வமான பங்கெடுப்பு புறக்கணிக்கப்படும் சூழலில் ரோஸாவுக்கு அதுவே அவரது முழு இயக்கத்துக்குமான பிரச்சினையாக ஆகிவிடுகிறது. ரோஸாவின் தொழலாளி வாக்க பங்கெடுப்பு பற்றிய நிலைப்பாடு இவ்வாறுதான் உருவாகிறது. கட்சி அமைப்பு இரண்டாம் பட்சமாக இதனால்தான் அவரால் பார்க்க முடிகிறது. தொழிலாளி வர்க்கத்தின் தன்னெழுச்சி என்பது ரோஸாவுக்கு திரிபுவாதத்திற்கெதிரான உடனடி போராட்டத்தோடு சம்பந்தப்பட்டது. ஆகவே அதுவே அவருக்கு முதலாவதாகவும் ஆகிவிட்டது.

பாஸ்டில் சிறை உடைப்பும் 1905 ரஷ்யப் புரட்சியும் தன்னெழுச்சியானவைதான். யாரும் ' அதைத் தலைமை தாங்கி நடத்தவில்லை. 1917 பிப்ரவரி எழுச்சி தன்னெழுச்சிதான். ஆனால் இம்முறை அதிகவளவிலான சோசலிஸ்டுகள் உள்ளிட்ட தன்னெழுச்சி. பிப்ரவரியிலிருந்து அக்டோபர் புரட்சி வெற்றியாகும் வரையிலான ஏற்ற இறக்க நிகழ்வுகளில் போல்ஷ்விக் கட்சியின் வழிகாட்டுதல் இருந்தது. இத்தகைய புரட்சிகரக் கட்சி புரட்சியின் ஆரம்ப எழுச்சியிலிருந்து அதன் இறுதிக்கட்டம் வரை தேவைதான்.

ரோஸா உடனடியாக அதிகார வர்க்க மத்தியத்துவத்தின் இடையில் வேலை செய்யவேண்டி இருந்தால்தான் தொழிலாளி வர்க்க தன்னெழுச்சியை மையப்படுத்த வேண்டியவரானார்.

லெனின் தனது WHAT IS DO BE DONE? (1902), ONE STEP FORWARD TWO STEP BACKWARD (1904) இல் இவ்விஷயத்தை ஆய்வு செய்கிறார். லெனின், த்ரோஸ்த்கி, பிகைனோவ் மார்டோல் போன்ற தலைவர்கள் அக்காலததில் ரஷ்யாவுக்கு வெளியிலேயே இருக்கிறார்கள். அமைப்பென்று ஏதுமில்லை. பொருளாதாரவாதத்தையும் விமர்சிப்பதனூடே லெனின் தன் ஆய்வைத் தொடங்குகிறார். வர்க்க எழுச்சியானது பிரக்ஞைபூர்வமான ஸ்தாபனத்தினால் வழிகாட்டப்பட வேண்டியதின் தேவையை அப்போது லெனின் உணர்கிறார். அன்றிலிருந்த நிலைமையில் லெனினது கட்சிக் கட்டமைப்பு மேலிருந்து கீழான கட்டமைப்புதான் (From top to bottom).

லெனினது கட்சி பற்றிய இக்கோட்பாடு மாறாத தன்மை படைத்ததல்ல. கட்சி ஜனநாயகமயப்படுத்தப்பட வேண்டும், தொழிலாளி வர்க்கம் தன்னுணர்ச்சி பூர்வமாக தன்னெழுச்சியான புரட்சிகர வர்க்கம் என்கிற நிலைப்பாட்டுக்கு பிற்பாடு வருகிறார். லெனினது தொகுப்பு vol:1 p21 and vol:8 p37 மற்றும் R. DUNAYARSKAYA வின் MARXISM AND FREEDOM (New York 1958 p182- R. S. TONY CLIFF p48)

லெனினது கட்சி பற்றிய முக்கிமான பிரசுரம் WHAT IS DO BE DONE? இப்புத்தகம் அன்று நிலவிய பொருளாதாரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் கட்சியின் கட்டமைப்புப் பாத்திரம் பற்றிப் பேசுவது. 1905 இல் நூற்றுக் கணக்கில் ஆயிரக்கணக்கில் தொழிலாளர்கள் கட்சிக்குள் இருக்க வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்துகிறார். தனது Twelve years தொகுப்புக்கான முன்னுரையில் WHAT IS DO BE DONE? தவறாக வியாப்யானப் படுத்துவதை வேதனையோடு விமர்சித்த அவர், இப்புத்தகம் ரஷ்சியக் கம்யூனிஸ்ட்டுக் கட்சியின் வரலாறு பற்றிய ஞானமுள்ள ஒருவரது குறிப்புகளுடன் அல்லாது வேறு மொழிகளில் பிரசுரிக்கப்படுவது விரும்பத்தக்கதல்ல என்றும் கூறுகிறார். (LENIN WOKS. RUSSIAN Vol:8 p85)

லெனினது கட்சி பற்றிய கோட்பாடு அக்காலத்தில் நிலவிய உள்நாட்டு யுத்தத்தினிடையில் தொழிலாளி வர்க்கம் வளர்ச்சி பெற்றிராத சூழலில், அதிமையப்படுத்தப்பட்ட பாதி ராணுவக் கட்டமைப்புக் கோட்பாடுதான். அதன் வரலாற்று முக்கியத்துவத்தை மீறி அதை பொதுமைப்படுத்துவது சரியானது அல்ல. மேலும் மட்டுமீறிய மையத்துவ அழுத்தம் லெனினால் கட்சிக்குக் கொடுக்கப்பட்டதை அக்காலகட்ட ரஷ்யப் பின்னணியிலேயே புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த வரலாற்றுச் சூழலைப் புரிந்து கொள்ளாமல் ரோஸாவையும் லெனினையும் இரு எதிரெதிர் துருவங்களில் நிறுத்துபவர்கள் வரலாற்றுக் குருடர்கள் அன்றி வேறில்லை.

அதிமத்தியத்துவம் விளைவித்த சேதங்களை ஸ்டாலினியத்திலிருந்து கிழக்கு ஐரோப்பிய கம்யூனிஸ்ட் கட்சிகளிலிருந்து இன்றளவும் நம்நாடுகளில் நிலவிவரும் கம்யூனிஸ்ட்டுக் கட்சிகள், புரட்சிகர விடுதலை அமைப்புகள் என்று சொல்லிக் கொள்பவை வரை நாம் அதனது மானுட விரோதத் தன்மையை சாட்சியமாயிருந்து பார்த்துக் கொணடுதான் இருக்கிறோம். தியானன் மென் ஸ்கொயர் அனுராதபுரம் என சொல்லிக் கொண்டு போகலாம்.

ரோஸா வலியுறுத்திய பிரக்ஞையுள்ள தொழிலாளர்கள்- ஒடுக்கப்பட்ட மக்களின் பங்கெடுப்பு மட்டுமே சித்தாந்தம் வழிகாட்டக் கூடிய தலைமையை புரட்சிகரத் தலைமையாக ஆக்கும்.

## தேசிய இனப் பிரச்சினை

ரோஸாவின் பெயர் அதிகமாகப் பிரஸ்தாபிக்கப்படும் இன்னொரு பிரசச்சினை தேசிய இன விவாதம் தொடர்பானது.

இப்பிரச்சினையிலும் லெனினுக்கும் ரோஸாவுக்கும் விவாதம் மூண்டது. பிரச்சினை போலந்தின் விடுதலை தொடர்பானது.

போலந்து ரஷ்ய- ஜெர்மன்- ஆஸ்ட்ரியன் பேரரசுகளால் பிரிக்கப்பட்ட ஒரு நாடு. ரோஸா போலந்து தொழிலாளர் கட்சியின் தலைவர். 1896 ஆம் ஆண்டு போலந்து பிரச்சினையை ஆய்வு செய்து அவர் எழுதிய நூல் THE INDUSTRIAL DEVELOPMENT IN POLAND. இந்தப் புத்தகத்தில் அவர் எடுத்த நிலைப்பாட்டை அவர் மரணம் வரை கொண்டிருந்தார்.

THE COMMUNIST MANIFESTO -இல் கார்ல் மார்க்ஸ் எங்கெல்ஸ் நிலைப்பாடு இதுதான்: முதலாளித்துவ ஜனநாயகத்தின் வரையறை தேசிய அரசு என்பது. ஆகவே சோசலிஸ்ட்டுகளின் கடமை முதலாளித்துவவாதிகளோடு கூட்டு வைத்து முடியாட்சிக்கு எதிராகவும், நிலப் பிரபுத்துவ- நிலவுரிமை ஆதிக்கத்துக்கு எதிராகவும், குட்டி முதலாளித்துவத்துக்கு எதிராகவும் போராடுவது. முதலாளித்துவம் வளர்ந்து கொண்டு வந்த காலகட்டத்தில் ஐரோப்பா பற்றிய மார்க்ஸ் எங்கெல்ஸ் நிலைப்பாடு இதுவே. அவர்களின் முதல் எதிரி ஜார் பேரரசும், ஹாப்ஸ்பர்க் பேரரசும் தான். இதற்கு எதிரான அனைத்தையும் அவர்கள் வரவேற்றார்கள். இதன் ஆதரவுடன் வரும் அனைத்தையும் அது தேசிய இயக்கமாயினும் எதிர்த்தார்கள். ஜாரிஸ்ட் ரஷ்யாவிற்கு எதிராக போலந்து தேசிய விடுதலைக்காக புரட்சிகர ஜெர்மனியை ஆயுதம் ஏந்த அறைகூவல் விடுத்தனர் இவர்கள். ஜாரிஸியத்தின் வீழ்ச்சியும் ஹாப்ஸ்பர்க் பேரரசின் வீழ்ச்சியும் இதனால் துரிதப்படும் என்று நம்பினர். ஆனால் இதே காரணத்திற்காக ஸ்லாவியர்கள், குரோசியர்கள், செர்பியர்கள், செக்குகள் போன்றோரின் தேசிய விடுலையை எதிர்த்தார்கள். இவை ஜாரையும் ஹப்ஸ்பர்க் முடியாட்சிகளை வலுப்படுத்தும் என்று நினைத்தார்கள்.

முடியாட்சிகளை வீழ்த்துவது எனும் நிலைப்பாட்டிலிருந்தே மார்க்சும் எங்கல்சும் தம் காலத்திய தேசியப் பிரச்சினையைப் பார்த்தார்கள்.

தேசிய இனப் பிரச்சினை பற்றிய மர்க்ஸ் எங்கல்ஸ் அக்கறை ஐரோப்பா மற்றும் வட அமெரிக்காவோடு வரையிடப்பட்டது. ஆசிய, ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க புரட்சிகர முதலாளித்துவ தேசிய கருத்தாக்கம் பற்றி அவர்கள் கவலை கொள்ளவில்லை. காலனிய நாடுகளில் விடுதலைக்குப் பின்னான சோசலிச அமைப்புக்கான சாத்தியம் எங்கல்ஸின் கவனத்துக்குள் வரவில்லை. மார்க்ஸ் எங்கல்ஸின் கவனம் ஐரோப்பா மற்றும் வட அமெரிக்காவின் பாலுமே இருந்தது. ஐரோப்பாவிலும், வட அமெரிக்காவிலும் பிரச்சினைகள் தீர்க்கப்படுமானால் அதையொட்டி 'பாதி நாகரீகமான நாடுகள்' (Semi- civilised contries) தமது ஒப்புமைக்கேற்ப எழும் என்று நினைத்தார் எங்கல்ஸ் (கடிதங்கள் பக்399).

ஒப்பீட்டளவில் ரோஸாவினது அக்கறை ஐரோப்பா சார்ந்ததாயினும் ஆசிய, ஆபிரிக்க, இலத்தின் அமெரிக்க தேசிய இயக்கங்களையும் அவர் கவனத்தில் கொண்டிருந்தார்.

மார்க்ஸ் எங்கல்ஸ் வரையறுத்த ஐரோப்பா மாறிவிட்டது என்றார் ரோஸா. மேற்கு மற்றும் மத்திய ஐரோப்பாவில் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிகள் முடிந்து விட்டன என்கிறார். மார்க்ஸ் எங்கல்ஸ் காலத்தில் புரட்சியின் மையங்களாக மேற்கு- மத்திய ஐரோப்பாவிருந்தது. ஆனால் தற்போது பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ரஷ்யாவுக்கு கிழக்கு நோக்கி நகர்ந்து விட்டது என்கிறார் ரோஸா.

ஜெர்மன், பிரான்ஸ், பிரிட்டன், பெல்ஜியம் போன்ற நாடுகள் இப்போது ரஷ்யாவை எதிர்பார்க்கவில்லை. மாறாக ரஷ்யா இவர்களை எதிர்பார்த்து நிற்கிறது என்கிறார். போலந்து முதலாளித்துவம் தனது சந்தைக்காக ரஷ்யாவைச் சார்ந்து நிற்கின்றது. ரஷ்ய ஜாரிஸத்துடன் சேர்ந்து போலந்து தொழிலாளி வர்க்கத்தையும் புரட்சிகரப் பகுதிகளையும் ஒடுக்க, போலந்து முதலாளித்துவம் முனைகிறது என்கிறார் ரோஸா. எந்த சமுக வர்க்கச் சக்தியும் போலந்தை மீட்டெடுக்கக் கூடிய நிலையில் தற்போது இல்லை என்பதையே தனது ஆய்வு நிரூபிப்பதாகச் சொல்கிறார் ரோஸா தன் புத்தகத்தில்: THE INDUSTRIAL DEVELOPMENT OF POLAND.

இந்திய ஆய்விலிருந்து முதலாளியத்துவத்தின் கீழ் தேசிய சுதந்திரத்திற்கு முற்போக்குப் பாத்திரம் இல்லை என்ற நிலைப்பாட்டுக்கு அவர் வந்தார். மாறாக சோசலிசத்தின் கீழ் மானுட குலத்தின் சர்வதேசிய ஒற்றுமை நடைமுறையாகிவிடும். இச் சூழலில் தேசியக் கோட்பாட்டுக்கு தேவையிருக்காது எனச் சொல்கிறார். தொழிலாளி வர்க்கம் தேசிய சுயநிர்ணய உரிமைக்காகப் போராடத் தேவையில்லை. அது மட்டுமல்ல அது எதிர்ப் புரட்சித் தன்மை வாய்ந்தது என்றார்.

**தொழிலாளி வர்க்கத்தின் தேசிய கோஷம் என்பது தமது கலாச்சார நடவடிக்கையில் தேசிய சுயாதீனம் என்கிற கோரிக்கையோடு வரையறைப் படுத்திக் கொள்ள வேண்டும் என்கிறார்.**

ரோஸா லக்ஸம் பர்க்கின் இந்நிலைப்பாடும் அவரது அக்காலத்திய அரசியல் சந்தர்ப்பவாத எதிரிகளுக்கான விமர்சன நிலையாகத்தான் மேற்கொள்ளப்படுகிறது. ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான போரில் ஒன்றைச் சார்ந்து மற்றொன்றை எதிர்ப்பதன் மூலம் தனது நலனைக் காத்துக் கொள்ளலாம் எனும் Polish Socialist Party -யின் வலது சாரி நிலைப்பாட்டுக்கு எதிராகவே இந்நிலைப்பாட்டை அவர் எடுக்கிறார். ரஷ்யாவுக்கு எதிராக ஆஸ்திரிய ஜெர்மன் ஏகாதிபத்தியத்தின் ராணுவ ஏஜெண்டாக செயல்பட்டான் டாஸின்ஸ்க்கி எனும் போலந்து சோசலிஸ்ட்டு கட்சித் தலைவன். வேலை நிறுத்தம் செய்த தொழிலாளார்களைக் கண்டித்தான். ரஷ்சியப் பேரரசோடு தொழிலாளிகளை இணைத்து அவர்களை ஜெர்மன் ஆஸ்திரிய ராணுவத்துக்குக் காட்டிக் கொடுத்தான்.

தனது உடனடி நிலைப்பாட்டில் இருந்து எழுந்த இந்த வரையறுப்பை அனைத்து விதமான சுய- நிர்ணய உரிமைக்கும் எதிர்ப்புத் தெரிவிப்பது என ரோஸா பொதுமைப்படுத்தினார். இந்தப் பொதுமைப்படுத்தல் அவருக்குள் தகித்த பாட்டாளி வர்க்க சர்வ தேசியம், உலகளாவிய மனித நேயம் எனும் நிலைப்பாட்டில் இருந்து எழுந்தது. உண்மையில் இந்த Irony ரோஸாவினது மட்டுமல்ல

மானுட குலத்தை நேசிக்கும் ஒவ்வொருவருக்கும் நேரிடுவதுதான்.

மார்க்ஸீய தத்துவ மையம் இந்த மனித நேயத்தை நியாயப்படுத்துகிறது. வரலாறு தற்காலிகமாகவேனும் மனித நேயத்தை பலி கேட்கவே செய்கிறது.

ரஷ்யா ஒரு ஒடுக்கும் நாடு. போலந்து ஒடுக்கு முறைக்கு உள்ளாகும் நாடு. லெனின் ரஷ்யப் பேரரசைச் சார்ந்தவர். ஒடுக்கப்படும் நாட்டு விடுதலைக்காகப் போராட வேண்டியது அவரது புரட்சிக் கடமை. ரோஸா பாட்டாளி வர்க்க சர்வதேசியததுக்காக நிற்பவர். அவருக்கு போலந்து விடுதலையை விட ரஷ்ய, போலந்து, பிரெஞ்சு, ஜெர்மன், ஆஸ்திரிய தொழிலாளி வர்க்கத்தின் ஒற்றுமை முக்கியம். போலந்தின் விடுதலை எந்த விதமான முற்போக்குப் பாத்திரமும் வகிக்க முடியாது என்பது அவரது நிலைப்பாடு. இந்நிலைப்பாடு ஒரு வகையில் அவநம்பிக்கையான நிலைப்பாடுதான். ரோஸாவினதும் லெனினதும் இறுதி இலக்கு சர்வதேசிய தொழிலாளர் ஒற்றுமைதான். ரோஸா தேசிய சுய-நிர்ணய உரிமையை வர்க்கப் போராட்டத்தோடு இணைக்கவே முடியாதெனப் பார்த்தார். லெனின் தேசிய சுய-நிர்ணய உரிமையை வர்க்கப் போராட்டத்தோடு இணைத்துக் கொண்டு போக முடியும் என நினைத்தார்.

டோனி கிளிப் வார்த்தைகளில்: ரோஸாவிடம் தவறுவது இயங்கியல். எதிர்மறைகளின் ஒற்றுமை. தேசிய சுய நிர்ணய- தேசிய விடுதலைக்கான போராட்டப் பகுதியை சர்வதேசிய சோசலிசத்துக்கான போராட்ட முழுமையோடு இணைப்பது. லெனின் இதை உணர்ந்து கொண்டிருந்தார்.

ரோஸா லக்ஸம் பர்க் சுதந்திரமான சிந்தனையாளர். ஆய்வாளர். மார்க்ஸ் லெனினது வரையறுப்புகளோடு முரண்படுவதற்கான வரலாற்றுக் காரணங்கள் கொண்டவர்.

இதே ரோஸா லக்ஸம் பர்க் மார்க்ஸ் எங்கெல்ஸ் நம்பிக்கைக்கு எதிராக துருக்கிக்கு எதிரான தெற்கு ஸ்லாவ் மக்களின் தேசிய இயக்கத்தை ஆதரித்தவர் இது போலந்து தொடர்பான அவரது அணுகுமுறையில் இருந்து முற்றிலும் மாறுபட்டது. ஆயினும் இங்கும் ரோஸாவினது அளவு கோல் பாட்டாளி வர்க்க சர்வதேசியம் தான்.

## போல்ஸ்ஸிவிஷம் பற்றிய விமர்சனம்

1918 அக்டோபர் மாதம் ஜெர்மனியில் பிரஸ்லாவ் சிறையிலிருக்கும் போது ரஷ்யப் புரட்சி பற்றிய THE RUSSIAN REVOLUTION புத்தகத்தை ரோஸா எழுதினார். ஜெர்மன் ரஷ்ய மொழிப் பிரசுரங்களை இதன் ஆதாரமாகக் கொள்கிறார். 1922 இல் தான் ரோஸாவின் நண்பர் பால் லெவி அதை வெளியிட்டார். அது எழுதி முடிக்கப்படாத ஒரு புத்தகம். 1928 இல் மறுபடி புதிதாகக் கண்டெடுக்கப்பட்ட கையேழுத்துப் படிகளிலிருந்து பதிய ஜெர்மன் பதிப்பு வெளியானது. ஆங்கிலப்பதிப்பு 1940 இல் நியூயார்க்கில் வெளியானது.

மேற்கத்திய சமூக ஜனநாயகத்திடம் இல்லாது போன புரட்சிகரப்பெருமிதம் புரட்சிகரத் தகைமை கொண்டவர்கள் போல்ஸ்விக்குகள். அவர்களது அக்டோபர் எழுச்சியானது ரஷ்யப் புரட்சி விமோசம் மட்டுமல்ல சர்வதேசிய சோசலிசத்தின் பெருமிதமும் ஆகும் (THE RUSSIAN REVOLUTION p16) என்கிறார் அக்டோபர் புரட்சி பற்றி ரோஸா.

இவர்கள் சர்வதேசியப் பாட்டாளி வர்க்கத்திற்கு முன்னுதாரணமான **முதலானவர்கள்** மட்டுமல்ல **இவர்கள் மட்டுமேதான்** இன்று உதாரணமானவர்கள்.

எங்கெங்கும் எதிர்காலம் போல்ஸ்வித்திற்கு உரியதே எனக் குரல் தருகிறார் ரோஸா.

மேற்கத்திய ஜனநாயக சோசலிசத்தின் துரோகம் ரஷ்யப் புரட்சியின் தனிமை போன்றன நிச்சயமாக திரிபுகளுக்கும் தவறுகளுக்கும் இட்டுச் செல்லும் என அவர் நினைத்தார். சர்வதேசிய ஆதரவு இல்லாமல் பாட்டாளிகளின் எத்தனை பெரிய தியாகம் இருந்தாலும் ஒரு தனிப்பட்ட நாட்டில் தவிர்க்க இயலாமல் முரண்பாடுகளையும் சிக்கல்களையும் புரட்சி கொண்டிருக்கும் என்கிறார்.

ரஷ்யாவில் நிகழ்ந்த ஒவ்வொன்றும் காரண காரியம் சார்ந்தவை. உடனடியில் லெனின் போன்ற புரட்சியர்களிடம் முழுமையான ஜனநாகம், பாட்டாளி வர்க்க சாவாதிகார முன்னுதாரணம், சோசலிசப் பொருளாதாரம் போன்றவற்றை நாம் இச்சூழலில் கோருவது அதி மானிடச் செயலாகவே இருக்கும். அவர்களால் முடிந்த அளவு மிகக் கடுமையான சூழலினிடையேயும் அவர்கள் சாதித்திருக்கிறார்கள் என்கிறார்.

இவ்வாறு ரஜ்யப் புரட்சியைப் போற்றிப் புகழ்கிற அவர் 'எல்லாவற்றையும் விமர்சனம் செய்' எனும் மார்க்ஸீய மரபுக்கேற்ப சுதந்திர மார்க்ஸியவாதியாக தனது விமர்சனங்களையும் முன்வைக்கிறார்.

புறநிலை அம்சங்கள் பரட்சியைத் தவறுக்கு இட்டுச் செல்லும் அதைப் போலவே தலைமைத்துவத்தில் இருக்கிற அகநிலை அம்சங்கள் இந்தத் தவறுகளை இன்னும் ஆபத்துள்ளதாக ஆக்கிவிடும்.

ஆபத்து எங்கே வருகின்றதெனில், அவர்களது சூழலில் எழுந்த அவர்களது நடவடிக்கைக் கோட்பாடுகளை உறை நிலையில் கோட்பாட்டு அமைப்பாக்கி சர்வதேசிய பாட்டாளிகளுக்கு அதைப் பரிந்துரை செய்யும்போது வரும் (THE RUSSIAN REVOLUTION p55).

இத்தகைய தவறுகள் நேர்ந்து விட்டது என்பதே வரலாறு. What is to be done? கட்சி அமைப்பின் வேதப் புத்தகமானது அத்தகையதுதான். 1980களின் இறுதியும் 1990களின் ஆரம்ப ஆண்டுகளும் அத்தகைய தவறுகளால் ஏற்பட்ட வீழ்ச்சிகளின் சாட்சியமான ஆண்டுகள்.

போல்ஷிவிஸம் பற்றிய விமர்சனம் நான்கு விடையங்களைப் பற்றியது : 1. நிலப் பிரச்சனை.

2. தேசிய இனப் பிரச்சனை. 3. அரசியல் நிர்ணய சபை. 4. தொழிலாளர்களின் ஜனநாயக உரிமைகள்.

போல்ஸ்விக்குகள் முன்வைத்தது உடனடியான நிலப் பறிமுதல் விவசாயிகளுக்கு அதைப் பகிர்ந்து கொடுத்தல்

ரோஸா சொன்னார்: முதலாக முதலாளித்துவ நில உரிமையாளர்கள், அதோடு சிறுபான்மையினராக கிராமப் பணக்கார முதலாளிகள்தான் இருந்தார்கள். அவர்களிடம் இருந்து நிலங்களை எடுப்பது புரட்சிகர வெகுஜன இயக்கத்திற்கு குழந்தை விளையாட்டு. ஆனால் அதன் பின்பு பறிக்கப்பட்டதை விவசாயிக்குப் பிரித்துக் கொடுப்பது, விவசாய உற்பத்தியினை சமூக மயமாக்கப்படக் கூடிய எத்தகைய முயற்சிக்கும் எதிராக, எண்ணிக்கையில் பலமாக புதிதாக வளர்ச்சியடைந்த நிலவுடமை கொண்ட விவசாயிகள், தாங்கள் புதிதாக வென்ற உடமையுடன் பற்களாலும், நகத்தாலும் எதிர்ப்பவர்கள் எந்தவிதமான சோசலிசத் தாக்குதலுக்கும் எதிராக நிற்பார்கள்' (THE RUSSIAN REVOLUTION p120-21)

இந்த ஆபத்து ஸ்டாலின் காலத்திலேயே வெளிச்சத்திற்கு வந்தது. சிறிய தொழிலாளி வர்க்கத்தின் தனிமை, விரோதத் தன்மையுள்ள, பிற்போக்கான, சிறு முதலாளி விவசாயிகள் ஸ்டாலினிய காலத்தில் எழுச்சி பெற்றவர்கள் இவர்களே ஆனால் விவசாயிகளின் நிலப்பசியும், எழுச்சியும் போல்ஸ்விக்குகளுக்கு வேறு வழியை விட்டு வைக்கவில்லை. மேலும் வர்க்க எதிரிகள் தனிமைப்பட்டிருந்த புரட்சியை எவ்வகையிலும் கவிழ்த்துவிட பசிகொண்டு அலைந்தார்கள்.

தேசிய இனப் பிரச்சனை தொடர்பாக சகல விதமான சுயநிர்ணயக் கோரிக்கைகளையும் பிரிந்து போகும் உரிமையையும் ரோஸா லக்ஸம்பர்க் நிராகரித்தார். ரஷ்யாவின் அன்றைய நிலையில் ரோஸாவின் நிலைப்பாடு ரஷ்யப் புரட்சி உடனே புதை குழியில் விழுவதிலேயே முடிந்திருக்கும்.

நிர்ணய சபையும் சோவியத்துக்களும் இரண்டுமே வேண்டுமென்றார் ரோஸா.

நிர்ணய சபை விவசாயிகளின் பிரதிநிதிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. சோவியத்தில் தொழிலாளி வர்க்கப் பிரதிநிதிகள் பெரும்பான்மையாக இருந்தார்கள் போல்ஸ்விக்குகள் தொழிலாளி வர்க்கத்தின் அழுத்தமான வடிவமான சோவியத்தைத் தோர்ந்தார்கள். நிர்ணய சபையைக் கலைத்தார்கள்.

ரோஸாவின் நோக்கம் பரந்துபட்ட மக்கள் பிரதிநிதித்துவத்தைக் கோருவதாக இருந்தது. நவம்பர் 20 -1918இல் ஜெர்மன் தேசிய சபை முதலாளித்துவத் தன்மை கொண்டது என்றும் பிரக்ஞைபூர்வமாகவோ அல்லாமலோ புரட்சியைக் கீழ்மைப்படுத்தும் என்றும் ரோஸா சொல்கிறார்.

'நமக்கு இப்போது முன்னுள்ள பிரச்சனை ஜனநாயகமா, சர்வாதிகாரமா என்பதல்ல. முதலாளித்துவ ஜனநாயகம் உண்டு. சோசலிச ஜனநாயகம் உண்டு. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்தான் சோசலிச ஜனநாயகமாகும்.'

போல்ஸ்விஷம் பற்றிய ரோஸாவின் பிரதான விமர்சனம் அவர்கள் தொழிலாளர்களின் ஜனநாயகத்தை கட்டுப்படுத்துகிறார்கள், கீழாகக் கருதுகிறார்கள் என்பதுதான். தொழிலாளர் ஜனநாயகம் என்பது பாட்டாளிவர்க்கப் புரட்சியிலிருந்தும் சோசலிசத்திலிருந்தும் பிரிக்கப்பட முடியாது என அவர் நம்பினார்.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது ஜனநாயகத்தை செயல்படுத்துவது. மாறாக அதை அழிப்பது அல்ல. இந்த சர்வாதிகாரம் வர்க்கத்தின் செயலாக இருக்க வேண்டும் மாறாக வர்க்கத்தின் பெயரால் செயல்படும்- தலைமை தாங்கும் சிறுபான்மையினுடையதாக அல்ல.

பொதுத் தேர்தல்கள் இல்லாமல், அபிப்பிராயங்களின் சுதந்திரமான போராட்டம் இல்லாமல், கட்டுப்பாடுகள் அற்ற சுதந்திரமான பத்திரிகை, கூடும் உரிமை இல்லாமல் எல்லா வெகுஜன நிறுவனங்களிலும் வாழ்வு இருந்து பட்டுப்போய்..... அதிகார வர்க்கம் மட்டுமே உற்சாகமாகச் செயல்பட்டுக்கொண்டு..... பிரமுகர்கள் (elite) தொழிலாளி வர்க்கத்தின் சிலரை மட்டுமே அழைத்து, கூட்டங்களில் தலைவர்களின் பேச்சைக் கேட்டுக் கைதட்டி..... நிச்சயமாக இது பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் இல்லை. இது விரல் விட்டு எண்ணக் கூடிய அரசியல்வாதிகளின் சர்வாதிகாரம்..... முதலாளித்துவ அர்த்தத்தில் சர்வாதிகாரம் (THE RUSSIAN REVOLUTION p47-48).

லெனினியக் கட்சிக் கோட்பாட்டை அதன் கால வரையறை தாண்டி எக்காலத்துக்குமான சாசனமாக பொதுமைப்படுத்தியதன் வேதனையைத்தான் இன்றளவும் உலகக் கம்யூனிஸ்ட் கட்சிகளும்- புரட்சிகரக் குழுக்கள் என்று சொல்பவைகளும் ஒடுக்கப்பட்ட மக்கள் மீது தொடர்ந்து சுமத்தி வருகின்றன.

## மூலதனக் குவியல்

1906 1913 ஆம் ஆண்டுகளில் ரோஸா அரசியல் பொருளாதாரம் பற்றி ஜெர்மன் சோசல் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்களுக்கு வகுப்பெடுத்துக் கொண்டிருந்தார் அக்காலக்கட்டத்தில் இந்நோக்கத் திற்காக AN INTRODUCTION TO THE POLITICAL ECONOMY என்ற புத்தகத்தை எழுதத் தொடங்கினார்.

'வரலாற்றின் திட்டமிட்ட வரையறைக்குள் முதலாளித்துவ உற்பத்தியின் செயல்முறை உறவுகளை போதிய தெளிவுடன் என்னால் விளக்க முடியாத நிலைக்கு வந்தேன். மிக ஆழ்ந்து நோக்கியபோது இது எவ்வாறு பிரச்சனையை முன்வைப்பது சம்பந்தமான பிரச்சனை மட்டுமல்ல, மார்க்ஸின் மூலதனம் இரண்டாம் பகுதியின் கோட்பாட்டுப் பிரச்சனையோடு தொடர்பு படுத்தி தீர்வு

காணப்படவேண்டிய விடயம் என்பது தெரிந்தது. அதேசமயத்தில் அது சமகால ஏகாதிபத்திய அரசியலுடனும் பொருளாதார வேர்களுடனும் மிக நெருக்கமாக பிணைக்கப்படிருப்பதையும் உணர்ந்தேன்.'

இவ்வழிதான் ரோஸா தனது THE ACCUMULATION OF CAPITAL: A CONTRIBUTION TO AN ECONOMIC EXPLANATION OF IMPERIALISM (BERLIN 1913) புத்தகத்தை எழுதினார். இப்புத்தகத்தில் அவர் வளர்ச்சியடைந்த தொழில் நாடுகளுக்கும் வளர்ச்சியற்ற விவசாய நாடுகளுக்கும் இடையிலான உறவை ஆராய்ந்தார். இந்த ஆய்வின் மூலம் இவர் வந்தடைந்த முக்கியமான கருத்து: ஏகாதிபத்தியம், நீண்ட காலத்திற்கு முதலாளித்துவத்தை நிலைநாட்டிக் கொள்ளும் அதே வேளை அதன் இடிபாடுகளுக்கிடையில் மனித குலத்தை புதைத்து விடுவதற்கு அச்சுறுத்திக் கொண்டே இருக்கிறது என்பததான். இப்புத்தகத்தின் ஆங்கிலப் பதிப்புக்கு முன்னுரை எழுதிய பொருளியல் பேராசிரியர் ஜான் ஜக்கோபின் குறிப்பிடுகிறார்:

*'கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக முதலாளித்துவத்தின் நீட்சியானது புதிய பிரதேசங்களுக்குப் பரவியதால்தான், கல்வித்துறை சார் பொருளியலாளர்கள் சொல்கிறபடி -பரந்துபட்ட சார் பற்றி வளர்ச்சி- ஏற்பட்டது என்பதை சிலரே மறுக்கமுடியும். பல கல்வித்துறை சார் பொருளியலாளர்கள் உலகெங்கும் பிரதேசங்களின் எல்லை மூடப்பட்டு விட்டதால் முதலாளித்துவத்திற்கு நேர்ந்திருக்கும் அசௌகரியமான நிலையைக் கவனத்தில் எடுக்கிறார்கள்.'*

இப்புத்தகம் ரோஸா திட்டமிட்ட வகையில் முழுமையடையாத ஒரு புத்தகம். பத்து அத்தியாயங்கள் எழுதத் திட்டமிட்டிருந்தார் ரோஸா. ஐந்து அத்தியாயங்கள் மட்டுமே கண்டெடுக்கப்பட்டு தொகுக்கப்பட்டுள்ளது. அவர் திட்டமிட்ட பிற ஐந்து அத்தியாயங்கள் இவைதான்:

1. SOCIAL LABOUR
2. ECONOMIC HISTORICAL PERSPECTIVES FEUDAL ECONOMIC SYSTEM
3. ECONOMIC HISTORICAL PERSPECTIVES THE MEDIEVAL TOWN AND THE GRAYS GUILD
4. THE PROFIT OF CAPITAL
5. THE CRISIS

ரோஸாவால் திட்டமிட்ட முழுமையான புத்தகம் மார்க்ஸின் பொருளாதாரம் பற்றின முழு ஆய்வுகளின் சுருக்கப்பட்ட வடிவமாகவும் அதன் நீட்சியாகவும் ஏகாதிபத்திய காலகட்டம் பற்றின மார்க்ஸிய பொருளாதார ஆய்வாகவும் இருக்கிறது (அதன் மீதான பல்வேறு விமாசனங்களையும் உள்ளிட்டு), ரோஸாவின் பங்களிப்பு மார்க்ஸியத்துக்கு ஒரு கொடைதான்.

## சன்னதம்

வானமும் பூமியும் பற்றியிருக்க
திமிறி அலறிக்கொண்டிருந்தது
சன்னதம் கொண்ட ராமேஸ்வரத்துக் கடல்
விளங்காத மொழியில் என்னிடம் கூவியது
மனம் பிளக்க எதையோ கூவ முயன்றது
அஞ்சிப் பின் நகர்ந்தது
பயணிகள் கும்பலில் முகம் மறைத்தேன்

எங்கும் இருள் பரவியது
சொல்ல முடியாத பெருங்கருமை ஒன்று
அதன் உள்ளிருந்து எழுந்து வந்தது
வானத்து கடைசி ஒளியை அது விழுங்கியது
உறைய வைக்கும் கடுங்குளிர் பரவியது
கூந்தல் கற்றைகளை ஓங்கி அறைந்து
கரங்களை விரித்தபடி அலறிப்புரண்டது அது
இப்போது அது ஒரு ஆட்கூட்டத்தின் குரல்
ஓராயிரம் அழுகைகளின் தொகுப்பு
மலைகளை உடைத்தெறியும் உக்கிர சோகம்

நூறாயிரம் வருடங்கள் நாம் இங்கு கரைத்த
மூதாதையரின் எலும்புகள் அமைதி கலைந்து விட்டன
பலிநாட்கள் தோறும் நாம் அளித்த
மலரும் சோறும் மந்திரமும்
பயனற்றுப் போயின இன்று
கன்னங்கரிய பேருருவாக நின்று
கதறுகிறது அவர்களுடைய சோகம்
அவர்கள் உறங்கப்போவதில்லை
தங்கள் பலியை பெறும்வரை
அவர்கள் ஓயப்போவதில்லை

**-ஜெயமோகன்** *(1984)*

- *மனிதன் தவிர்ந்த இயற்கையில் எச்சம் என்பதே இல்லை. எல்லாமே ஒரு சுழற்சிதான். யுக, யுகமாக ஒன்றிலிருந்து வேறொன்றாய், அது பின் வேறொன்றாய் சுழன்று கொண்டிருக்கும் பிரமாண்டமான சுழற்சி.*
- *மனிதன் உலகை கூறுகை போட்டு தேசிய கீதம் பாடிக்கொண்டிருக்கிறான். சில வேதிம விஷ எச்சங்களால் தன் நாட்டிற்கு ஆபத்தென்றால் வேறொரு நாட்டிற்கு ஏற்றுமதி செய்து விடுகின்றான்.*
- *தொழிற்புரட்சியின் பெரிய பாதகம் சுரண்டும் கலையை அது மனிதனுக்குத் தந்தது. இப்புரட்சியால் இயற்கையைச் சுரண்டினான். சுரண்டியதை பணமாக்கி மகிழ்ந்தான், பணம் ஆசையைத் தந்தது, ஆசை அடுத்தவனைச் சுரண்டச் சொன்னது. இப்படியொரு விஷச் சுழற்சியில் மாட்டிக் கொண்டு அலைகிறான் மனிதன்.*
- *நாம் முதல் உலகில் இருந்தாலும், மூன்றாவது உலகில் வாழ்ந்தாலும் சூழல் என்பது நாம் என்று உணர்வோம். இந்தப் பூரணமான புரிதலுடன் மலரட்டும் நமது நாளைய சிந்தனைகள்.*

# கிணறு வெட்ட பூதம் கிளம்பிய கதை!


**நா. கண்ணன்**
(ஜெர்மனி)

சூழலைப் பற்றிய அறிவியல் புரிதல் விஸ்தாரமாகிக் கொண்டே போகிறது. உயிர் என்பது உலகில் எப்படியோ தோன்றியிருக்கிறது. அதைப் பற்றி இருவேறு கோட்பாடுகள் உள்ளன. பல கோடி வருஷங்களுக்கு முன் பூமி என்ற நெருப்புக் கோளம் குளிர்ந்து மாறிவரும் காலங்களில் நிலவிய விசேடமான சூழ்நிலையில் தனிமங்கள் ஒன்று கூடி அமினோ அமிலங்களை உருவாக்க, அவை மீண்டும் கூடி டி. என். ஏ க்களை உருவாக்க உயிர் மெது, மெதுவாக பூமியில் நிலைப்பட ஆரம்பித்து இருக்கிறது. நிலைப்பட்ட பின் தளிர்த்து, பல வகைகளாகப் பரிமளிக்க உயிர் என்பது சூழலை உருவாக்கும் சக்தியாக மாறி இருக்கிறது. அதாவது உயிர் தோன்றிய பல்லாயிரக் கணக்கான வருடங்களில் உயிர்வளி என்பதே உலகில் இருந்ததில்லை. உயிர் தோன்றிய பின்தான் உயிர்வளி பூமிக்குக் கிடைக்கிறது. உயிர்வளி கிடைத்தபின் அதை சுவாசித்து வேறு வகை உயிரினங்கள் தோன்ற ஆரம்பித்தன. ஆக ஒன்றில் ஆரம்பித்து பல்வகையாய்ப் பெருகி ஒன்றிலிருந்து வேறொன்றாகி, ஒன்றை உண்டு வேறொன்று வாழ்ந்து, அதன் கழிவுகளை உண்டு மற்றது பிழைக்க உயிர்களின் சூழல் உயிர்களேதான் என்றாகி இருக்கிறது. இதற்கான ஆதாரங்கள் நிறைய இருக்கின்றன.

வேறொரு கோட்பாடு சொல்லுகிறது, உயிர் என்பது சிரமப்பட்டு பூமியில் தானே தோன்றவில்லை, அண்டத்தின் ஏதோவொரு மூலையில் தோன்றிய உயிர் விண் கற்கள் மூலமாக பூமியில் விழுந்து, உயிர் இங்கு விதைக்கப்பட்டு இருக்கிறது என்று. இதற்கும் அனுகூலமான ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

கதை எப்படியிருந்தாலும், உண்மை என்னவெனில் பூமி என்ற கிரகத்தைப் பொறுத்தமட்டில் உயிரின் சூழல் உயிர் என்றே அமைகிறது. கல்லும், மண்ணும், கடலும், வானும் உயிர் உலாவுவதற்கு பெரிய தளங்களாக அமைந்தாலும் உயிர் தோன்றிய பின் அது தன்னைச் சார்ந்த, தன்னுள்ளே சுழலும், தனித்த இயக்கமாகப் பரிணமித்து இருக்கிறது.

லா. சா. ரா சொல்வது போல் "உலகிற்கெல்லாம் ஒரே தொப்புள் கொடி" தான். இந்தக் கண்ணோட்டத்தில் பார்த்தால் புரியாத்தனமாக உலகை மாசுபடுத்தும் மனிதனது எந்தச் செய்கையும் தன் வயிற்றில் தானே வாளைச் சொருகிக் கொள்ளும் ஹரகரிக்குச் சமமானது என்பது புரியும்.



தவறுகளைப் போன்ற பெரிய ஆசான் எதுவுமே இல்லை. மேற்சொன்ன புரிதல் எந்த ஞானதிருஷ்டியிலும் கிடைத்து விடவில்லை. மனிதனது அறிவில் அறிவு தொழில் நுட்பமாக மலர்ந்தபோது இயற்கை மீதான ஆளுமை அவனுக்கு இன்னமும் கூடியது. வெற்றியைப் போன்றதொரு

போதைப் பொருள் வேறொன்றும் இல்லை. இயற்கை மீதான மனிதனது வெற்றி மேலும், மேலும் ஊக்கம் கொடுக்க தலை கால் புரியால் அழிக்க ஆரம்பித்தான். மனிதன் என்ற சிந்தனா சக்தி உலகில் தோன்றுவதற்கு முன் இத்தகையதொரு அழிவை உலகம் கண்டதில்லை. உதாரணமாக துப்பாக்கி கண்டு பிடித்தபின் சுடும் இன்பத்திற்காகவே பல்லாயிரக் கணக்கான அமெரிக்கக் காட்டு எருமைகள் சுட்டுக் கொல்லப்பட்டன. விளையாட்டுக்காக சுடுவது- இது அதுவரை உயிர்கள் கொண்ட தருமத்தில் இருந்ததில்லை. அதுவரை உணவுக்காவே உயிர்கள் கொல்லப்பட்டன. தனிதன் தனக்காக அமைத்துக் கொண்ட சமூக அமைப்பில் பொருட் சுழற்சி என்பது மிகக் குறைவே. காட்டில் ஒரு யானை இறந்த ஒரு மாதத்திற்குள் அதன் ஒவ்வொரு அணுவும் வோறொன்றாய் மாறி மறைந்து விடுகின்றன. மனிதன் தவிர்ந்த இயற்கையில் எச்சம் என்பதே இல்லை. எல்லாமே ஒரு சுழற்சிதான். யுக, யுகமாக ஒன்றிலிருந்து வேறொன்றாய், அது பின் வேறொன்றாய் சுழன்று கொண்டிருக்கும் பிரமாண்டமான சுழற்சி.

மனிதனின் தொழில் நுட்பம் பூமியில் எச்சமிட்டது. எச்சமான பொருள் சுழற்சிக்கு ஏதுவானதாக இருக்கவில்லை. மனிதனின் உற்பத்தித் திறனோ மிக அதிகம். அவனது ஒவ்வொரு தொழிற்துறையிலும் எச்சமிடாத தொழில் துறையே இல்லை. எனவே பூமி மாசுபடத் தொடங்கியது. சில உதாரணங்களைப் பார்ப்போம்: சாமான் வாங்கி வர தோள் பை அவசியம். தோள் பை துணியாய் இருந்தால் கிழிந்து போனால் தூக்கிப் போட்டுவிடலாம். பஞ்சு அழிந்து பக்டீரியாவுக்கு உணவாகலாம். பிளாஸ்டிக்கில் பை என்றால்தானே கண்ணுக்கு அழகு. அது பிரிந்து உணவாகி, வேறொரு உயிர் தோன்றுவதென்பது இந்த ஜென்மத்தில் இல்லை. எனவே உண்மையான சுழற்சி இல்லை. இது வெறும் எச்சம், மாசு. சிந்தானா சக்தியின் வீரியத்தால், வருடந்தோறும் பல்லாயிரக் கணக்கான வேதிமங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன. இதில் எத்தனை பொருட்கள் தானாக அழியக் கூடியவை? உலகில் மக்கமுடியாமல் தேங்கி மண், கடல், வானை மாசுபடுத்தி பின் உயிர் சங்கிலியில் உட்புகுந்து தேக்கமுற, இறுதியில் மனிதனது எச்சங்கள் உயிர் கொல்லும் உடை வாளாகிப் போகின்றன. தற்போது பூமியில் தேங்கும் டி. டி. டி., பி. சி. பி. போன்ற வேதிமங்கள் இதற்குச் சான்று. ரேச்சல் கார்சன் என்ற அமெரிக்க விஞ்ஞானி தன் 'அமைதி ஊற்று' என்ற புத்தகத்தில் எப்படி இத்தகைய வேதிம எச்சங்கள் பறவைகளை பூண்டோடு அழிக்க வல்லவை என விளக்குகின்றார்.


வருடந்தோறும் 17 மில்லியன் ஹெக்டேர் பரப்புள்ள காடுகள் வெட்டப்படுகின்றன.


கிணறு தொன்ற பூதம் புறப்பட்ட கதைதான் மனிதனின் அணு விளையாட்டு. அணுவிற்குள் அகப்பட்டிருக்கும் அளப்பரிய சக்தியை வெளிக்கொணரத் தெரிந்த மனிதனுக்கு, அத்தொழில் நுட்பத்தில் வரும் எச்சங்களை என்ன செய்வதென்றே தெரியவில்லை. கப்பல், கப்பலாக இத்தகைய வீரிய வேதிம கசடுகளை அனுப்பி, எவண்டா ஏமாந்த ஆசாமி என்று பார்த்து பெரும்பாலும் காசுக்கு அலையும் ஏழை நாடுகளின் தலையில் கொட்டிவிடுகின்றான்.

இது போன்ற தவறுகளை மீண்டும், மீண்டும் செய்யும் போதுதான் மனிதனுக்கே பொறி தட்டுகிறது. பொறி தட்டிய சிலர் கொண்டுவந்த புரிதல்கள்தான் சில நல்ல இயக்கங்களுக்கு வித்தாக அமைந்திருக்கின்றன. உலகம், அதில் உயிர் என்ற இயக்கம் பூரணமான ஒன்றாக இயங்கிவருகிறது. மனிதன் உலகை கூறுகை போட்டு தேசிய கீதம் பாடிக்கொண்டிருக்கிறான். சில வேதிம விஷ எச்சங்களால் தன் நாட்டிற்கு ஆபத்தென்றால் வேறொரு நாட்டிற்கு ஏற்றுமதி செய்து விடுகின்றான். பிரச்சனை அதோடு முடிந்ததென்று எண்ணம். இது ஒரு கிட்டப் பார்வை. அமெரிக்கா என்ன செய்தது? தன் நாட்டில் டி. டி. டி., லின்டேன் போன்ற பூச்சி மருந்திற்கு எதிர்ப்பு வந்தவுடன், அதன் விற்பனையை தன் நாட்டில் தடை செய்தது. உற்பத்தி செய்து ஸ்டாக்கில் இருந்த மூடைகளை என்ன செய்வது? ஏழை நாடுகளுக்கு குறைந்த விலையில் விற்பனை செய்து விட்டது. வாங்கிவை பெரும்பாலும் ஏழை லத்தீன் அமெரிக்க நாடுகள்தான். அவை வாங்கி தாராளமாக வாழை, ஆரஞ்சு, தேயிலை, காப்பி என எல்லாவற்றிலும் தெளித்து, பூச்சிகளே இல்லாத பண்டங்களை அமெரிக்காவிற்கு விற்பனை செய்து விட்டன. "ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்" என்பான் சிலப்பதிகாரத்தில். இது இப்போது மேலை நாடுகளுக்கு மிகவும் பொருந்துகிறது.

சில வருடங்களுக்கு முன் கீல் என்ற ஜெர்மன் துறை முகத்திலிருந்து சைனாவை நோக்கி ஒரு கப்பல் சென்றது. கப்பல் முழுவதிலும் வேண்டாத பிளாஸ்டிக் பைகள். இவர்களுக்கு அதை என்ன செய்வதென்றே தெரியவில்லை. சைனாக்காரர்களுக்குத் தானம் செய்துவிட்டனர். சைனாக்காரர்கள் என்ன செய்தனர்? பையை வாங்கி பனிக் காலத்தில் குளிர்காய எரித்தனர். பிளாஸ்டிக் பை எரியும்போது என்ன வரும்? வேண்டாத வேதிமங்கள் உருவாகி காற்றில் கலந்துவிடுகின்றன. காற்று என்ன சைனாக்காரர்களுக்கு மட்டுமா பொது. அது நாரதர் போல் உலகம் சுற்றுகிறது. விஷமும் கூடிப் பரவுகின்றது. இலக்குத் தெரியாத பிரம்மாஸ்திரம் அனுப்பிய இடத்திற்கே மீண்டும் வந்து தாக்குகிறது.

அமெரிக்காவின் தொழிற்சாலை புகை கனடாவில் அமில மழையாக பெய்கிறது. இங்கிலாந்தின் கழிவு நார்வே, ஸ்வீடனில் கடலில் கொட்டும் குப்பை- கூளங்கள் உலகமெல்லாம் சுற்றிக் கொண்டிருக்கின்றன.

மனிதனுக்கு இத்தவறு புரியாமலில்லை. யாகப் புகையில் பிரம்மராட்சசன் தோன்றிய மாதிரி இப்பிரச்னைகள் தோன்றியுள்ளன. இந்த ராட்சசனை அடக்க புத்திசாலித்தனமும், கூட்டு முயற்சியும் தேவை. மனிதனோ



மூட்டை அவிழ்ந்த நெல்லிக் கனியாய் பிரிந்து கிடக்கிறான். மனிதன் விரும்புகிறானோ இல்லையோ உலகு தழுவிய காருண்யம் நிறைந்த பூரணமான பார்வை மிக அவசரமாகத் தேவைப்படுகிறது. உலகு பூரணமாய்ச் செயல்படுகிறது. மனிதன் அதிலொரு அங்கம் என்பதுதான் இவனுக்கு இன்னும் பூரணமாய்ப் புலப்படவில்லை. உலகு தழுவிய அரசாங்கம் அமைக்கும் தொழிற்திறன் இவனிடம் இருக்கின்றது. ஆனால் கூடி வாழ்ந்தால் கோடி நன்மை எனும் மனப்போக்கை இவன் வளர்த்துக் கொள்ளவில்லை. தொழிற்புரட்சியின் பெரிய பாதகம் சுரண்டும் கலையை அது மனிதனுக்குத் தந்தது. இப்புரட்சியால் இயற்கையைச் சுரண்டினான். சுரண்டியதை பணமாக்கி மகிழ்ந்தான், பணம் ஆசையைத் தந்தது, ஆசை அடுத்தவனைச் சுரண்டச் சொன்னது. இப்படியொரு விஷச் சுழற்சியில் மாட்டிக் கொண்டு அலைகிறான் மனிதன்.

இதன் வெளிப்பாடுகள் புதிதாய் தொழில் புரட்சியுறும், வளரும் நாடுகளில் அசிங்கமாகவே வெளிப்படுகின்றன. நல்ல உதாரணம் இந்தியா. என்றும் இல்லாதவாறு பணப் புழக்கம் இப்போது அதிகமாகி இருக்கிறது அங்கு. எல்லோரும் முடிந்த மட்டும் சுரண்டுகிறார்கள். காசு புழங்குகிறது. முன்பெல்லாம் காய்கறி வாங்க துணிப்பை பயன்பட்டது. இப்போது எங்கு போனாலும் 'கேரியான் பேக்' தருகிறார்கள். அதுவும் மிகவும் மட்டமான பிளாஸ்டிக் பையிலானவை. முன்பெல்லாம் கிராமம், கிராமமாக நடந்து போனார்கள். எல்லோர் கையிலும் இப்போது ஒரு டூ வீலர். இவை கக்கும் தூசுப் புகை பெரும் நகரங்களான டெல்லி, பம்பாய், சென்னை போன்ற நகரங்களை வாழத்தகுதியில்லாத நகரங்களாக்கி விட்டன. எரியும் கொள்ளியில் எண்ணை ஊற்றிய கதையாக பல்கிப் பெருகியிருக்கும் பன்னாட்டு தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், நுகரும் சுகத்தை மேலும் இவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க மதம் கொண்ட யானை போல் இந்தியா நகர்ந்து கொண்டிருக்கிறது. விளையும் நிலங்கள் வீடுகட்ட பிளாட்டாகவோ இல்லை இறால் பண்ணை அமைக்கவோ விலை பேசப்படுகின்றன. பெரும் தொழில் தனக்காரர்கள் எவர் பேச்சுக்கும் மசியாமல் தொழிற்சாலைக் கசடுகளை நதிகளில் கொட்டுகின்றனர். புனிதமான இந்திய நதிகளெல்லாம் கற்பழிக்கப்பட்டு கதறுகின்றன. இந்தியா சுதந்திரம் வாங்கிய போது 47 சதவிகிதமாக இருந்த காட்டுப் பரப்பு 13 சதவிகிதத்திற்கும் குறைவாக ஆகிவிட்டது. காடுகளை வெட்டி எறியும் வீரப்பன்கள் புதிய இந்தியாவின் காவல் தெய்வமாக மாறி வரும் பிரதாபங்கள் நடக்கின்றன. ஏரிகளை தூர்த்து நகரங்களை அமைக்கின்றனர். மழை வந்தால் வெள்ளத்தில் மூழ்கி அடுத்த மாதத்தில் தண்ணிக்கு லாட்டரி அடிக்கின்றனர்.எந்த திட்டமுமில்லாமல் நகரங்கள் வளருகின்றன. சட்டத்தை மீறுபவர்களை தடுக்க சட்டங்கள் உள்ளன. எந்த மூன்றாம் நாடுகளிலும் இல்லாத அளவுக்கு மாசுக்கட்டுப்பாடு சட்டங்கள் இந்தியாவில் உள்ளன. ஆனால் அதை செயல் படுத்தும் திறம் தான் அவர்களுக்கு இல்லை. லஞ்சமும், ஊழலும் உயிர் கொல்லும் நோய்கள் என்றறிந்தும் அதை முறையாக வளர்க்கின்றனர். தன் காலுக்கு தானே குழி பறித்துக் கொண்டு முன்னேறுகிறோம் என்றொரு மாயையில் இருக்கின்றனர்.

மேலை நாடுகள் சுதாகரித்து விட்டன. சூழல் என்பது மக்கள் இயக்கமாக மாறி கொள்ளை நாள் ஆச்சு. சூழல் இயல் முறையாக வளர்க்கப்பட்டுள்ளன. அறிவியல் தரும் அறிவு உடனுக்குடன் எல்லோரிடமும் பரவுகிறது. மேலை நாட்டு கலையும், இலக்கியமும் அறிவியலுடன் கைகோர்த்து நடக்கின்றன. சூழலை மாசு படுத்தும் தொழில் அதிபதி இப்போது யோசிக்கின்றான். இவன் உற்பத்தி பண்ணும் சாமானை மக்கள் வாங்கினால் தானே இவன் முதலாளியாக இருக்க முடியும்? ஜனநாயக முறையின் ஆணிவேரே செய்தி பரிமாற்றம் தான் என்பதை மேலை உலகம் நன்கு உணர்ந்துள்ளது. செய்தி என்ற பொதுச்சொத்தை இழக்க அவன் தயாராய் இல்லை. செய்திகள் இயக்கங்களாகின்றன, இயக்கங்கள் விடைகளை தருகின்றன.

இந்தியா போன்ற நாடுகளின் நிலையென்ன? சமீபத்தில் ஹேம்பர்க் நகரத்தில் நாட்டிய நிகழ்ச்சி கொடுத்த செல்வி சந்திரலேகாவின் கூற்று கவனிக்கத் தக்கது. "இந்தியாவிற்கு தன் பழமையில் பெரும் பெருமை உண்டு. இந்திய நாட்டியம் இரண்டாயிரம் வருஷமானது என்கிறார்கள். இந்திய நாட்டியத்தைப் பார்த்ததாலே அதன் முதுமை தெரியும்". இந்தியாவிற்கு அறிவியல் சார்ந்த மரபென்று ஒன்று இல்லை. அதன் இலக்கியத்திலும், நாட்டியத்திலும், இசையிலும் பெரிய தொய்வு தெரிகிறது. சமூகத்தின் ஆணிவேர் அறிவு சார்ந்து இல்லை. மூட நம்பிக்கைகளும், சாதி, மத, இன வேறுபாடுகளிலுமே தன் நேரத்தை கழித்து விட்டு ஒரு மூன்றாம் தர வாழ்வை வாழ்ந்து விட்டு மடிகிறான் இந்தியன்.

சூழல் பற்றிய பிரக்ஞை என்பது வளரும் நாடுகளுக்கு ஒரு அடிப்படைத் தேவையாய் அமைகிறது. சுரண்டி வாழப் பழகியுள்ள அவர்களால் ஆரோக்கியமான சூழலை உருவாக்க முடியாது. அங்கு இருக்கும் மக்கள் தொகைக்கு, அது பெருகும் வேகத்திற்கு சுரண்டி வாழ முற்பட்டால் ஒரு தலைமுறை கூடத் தாங்காது. இது யாருக்கும்

புலப்பட்டதாகத் தெரியவில்லை! சூழலின் வளத்தை, மக்களின் நலத்தை சுரண்டி வாழும் பெரிய முதலாளி கூட கொஞ்சம் அறிவிருந்தால் யோசிக்கலாம். இவன் சேர்த்து வைக்கும் காசு யாருக்கு? சூழல் முழுமையும் மாசுபட்டுப் போனால் இவன் மகனும், பேரனும் எங்கு வாழ்வார்கள்? சுரண்டும், நுகரும் கலாச்சாரங்கள் அதிக நாள் நீடிக்க முடியாது. 'பீலிபெய் சாகாடும்' என்ற வள்ளுவன் வாக்கு போல் அச்சு முறிந்து, குடை சாய்ந்து விடும்.

சூழல் என்ற வார்த்தையை நாம் புதிதாய் அர்த்தம் காணுவோம். சூழல் என்பது நாம் செய்யும் ஒவ்வொரு செயல்பாடும் நம்மையும், நம்மை அண்டியவைகளையும் எவ்வாறு பாதிக்கும் என்பதை உணர்ந்து கொள்ளும் நுண்ணறிவு ஆகும். சூழல் என்பது நம்மை அன்றி வேறொன்றுமில்லை. நாம் என்பது இந்த என்பு தோல் போர்த்திய உடம்பு மட்டுமன்று -நாம் காணும் கடல், அதன் ஆழத்தில் தளிர் விடும் உயிர்கள், சுகம் தரும் காற்று அதன் தூய்மை, நாம் உலாவும் நிலம்; அதில் பல்கிப் பெருகியிருக்கும் ஜீவனங்கள்- இவை எல்லாம்தான் நாம். இது வெறும் தத்துவப் பார்வை அன்று. சத்தியமான உண்மை. கோடான கோடி வகைகளில் உலகம் இதைக் காண்பித்துக் கொண்டுதான் இருக்கிறது. நாம்தான் பார்க்கத் தெரியாமல் இருக்கிறோம்.

பண்டைக் காலம் தொட்டு இயற்கைதான் மனிதனது பள்ளிக்கூடமாக இருந்திருக்கிறது. இந்தியத் தத்துவங்களின் ஊற்றாக அமையும் வேதங்கள் தோன்றியது ஆரண்யங்களில். சார்லஸ் டார்வினின் பரிணாமக் கொள்கை உருப்பெற்றது தென் அமெரிக்க கலபெக்கஸ் தீவுகளில். பறவையைப் பார்த்துதான் பறக்கும் ஆசையைப் பெற்றான் மனிதன். ஆப்பிள் தலையில் வீழ்ந்த பிறகு தோன்றிய சிந்தனைகள்தான் அளப் பெரிய நியூட்டனின் இயற்பியலைத் தந்தது. விண்ணும் வானும் சிந்தனைக்கு உரமிடாவிடில் விஞ்ஞானியும் இல்லை, கவிஞனும் இல்லை. இயற்கை இல்லையெனில் புதியது உண்டாகச் சாத்தியமில்லை. நெல்லும், சோளமும், வாழையும், பருத்தியும் சூரிய ஒளியை நாம் வாழத் தோதாக மாற்றித் தராவிட்டால் நாம் இல்லை. நாம் என்பதே எல்லாம்தான். மனிதனின் சிந்தனா சக்தியும் அவனது வளமான வாழ்வும் இயற்கை தந்த கொடைதான் இதில் எதை அழித்துவிட்டு எது வாழ்வது?

சூழலை நாம் புதிய கண்ணோடு பார்ப்போம். நாம் முதல் உலகில் இருந்தாலும், மூன்றாவது உலகில் வாழ்ந்தாலும் சூழல் என்பது நாம் என்று உணர்வோம். இந்தப் பூரணமான புரிதலுடன் மலரட்டும் நமது நாளைய சிந்தனைகள். நமது ஒவ்வொரு நினைவும், ஒவ்வொரு செயலும் இந்த அடிப்படையில் அமையட்டும். நமது மனித இனத்திற்கு அறிவியல் பெயர் 'ஹோமோ செவியன்ஸ்' என்பதே. இதன் பொருள் அறிவுள்ள மனிதன் என்பதுதான். பெயரில் மட்டுமல்லாது நமது செயல்பாடுகளும் அறிவுபூர்வமாய் அமையட்டும். நம் சிந்தனையில் கூட தீங்கை மறப்போம். நாம் வாழப் பிறந்தவர்கள். நாம் அறிவுள்ளவர்கள். □□

பின் குறிப்பு:

1. தனிமங்கள் - Elements
2. அமினோ அமிலங்கள் - Amino acids
3. உயிர் வளி - Oxygen
4. எச்சம் - Residue
5. டி. டி. டி. - DDT
6. பி. சி. பி. - PCB
7. ஹோமோ செபியன்ஸ் - Homo sapiens


*அட்டைப் படங்கள் பற்றிய குறிப்புகள்:*

□ *முன் அட்டை:*

*விண்வெளியிலிருந்து பூமியின் தோற்றம். அன்டார்டிக் கண்டத்தின் மீதான ஓசோன் ஓட்டை வெள்ளை நிறத்தால் குறிக்கப்படுகிறது. விண்வெளித் தகவல்களை கம்பியூட்டர் உதவியுடன் வரையும் போது வரும் தோற்றம்.*
*அமெரிக்க விண் ஆய்வுக் கழகத்தின்(NASA) போட்டோ.*

□ *பின் அட்டை:*

*ஆஸ்ட்ரியாவைச் சேர்ந்த திரு வார்னர் ஹோர்வாத்(46) (Werner Horvath) அவர்களின் ஓவியம். ஓவியரால் மௌனத்தில் பிரசுரிக்கவென்று தரப்பட்டது.*
*வைத்தியராக (கதிரியக்கப் பிரிவு - Radiology) பணிபுரியும் இவருக்கு மகனும், மகளும் இருக்கிறார்கள்.*
*1993-94 பனிகாலத்தில் பாரிஸ் நகரில் காட்சியளித்த இவரது மார்க்ஸின் உருகும் ஓவியம், நடையை நிறுத்தி சற்று நேரம் உற்றுப்பார்க்க வைத்தது. அது இவரது ஓவியக் கண்காட்சி பற்றிய பட்டயம்.*
*வண்ணங்களைக் குழைத்து கடதாசியில் ஒழுகவிட அது உருவங்களாகி, வடிவங்களாகி, தகவல்களாகி, ஓவியமாகி... .... .... செல்கின்றன. இவரது ஆர்வம் அரசியல் சித்திரமாகவே (political painting) இருக்கிறது.*



கண்காட்சியில் வைக்கப் பட்டிருந்த சில படங்கள். புகைப் படம்: பரணி

ஆங்கிலக் காலாண்டு இதழான இனம் மற்றும் வர்க்கம் (RACE AND CLASS)

ஆசிரியரும், மார்க்ஸிய ஆய்வாளருமான

A. சிவானந்தனுடன் நேர்முகம்



யமுனா



சிவானந்தன்

# 'எங்கே போராட்டமோ அங்கே என் இதயம்'

## அறிமுகக் குறிப்புகளும் நேர்முகமும் – யமுனா ராஜேந்திரன்

'இனம் மற்றும் வர்க்கம்' (Race and class) காலாண்டு இதழ் கடந்த 36 ஆண்டுகளாக ஆங்கிலத்தில் வெளியாகிறது. லண்டனிலிருந்து வெளியாகும் இவ்விதழின் ஆசிரியர் திரு ஏ. சிவானந்தன் ஈழத்தமிழர். யாழ்ப்பாணக் குடாநாட்டைச் சேர்ந்தவர். 1958-ல் கொழும்பில் நடைபெற்ற இனக் கலவரத்தைத் தொடர்ந்து லண்டனுக்கு வந்தவர். சிங்களப் பெண்ணை மணந்தவர். ஐரோப்பிய மையச் சிந்தனைக்கெதிராக மூன்றாம் உலகச் சிந்தனையின் மேதமையையும் ஆன்மாவையையும் போராட்ட உணர்வையும் நிலைநாட்ட தொடர்ந்து செயல்பட்டு வருபவர். ஐரோப்பிய நாடுகளில் வெள்ளை நிறவெறிக்கெதிரான போராட்டத்தில் ஆசிய, ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க மக்கள் ஸ்தாபனமாகத் திரள வேண்டி ஒற்றுமையை வலியுறுத்துகிறவர். வர்க்கப் பிரச்சினையை நிறம் மற்றும் இன அணுகுமுறையின்படியே கையாள வேண்டும் எனத் தொடர்ந்து வலியுத்தி வருபவர். சுமார் 15 ஆண்டுகளுக்கு முன் நான் எழுதிய ஒரேயொரு கடிதத்திற்குப் பதிலாக, தொடர்ந்து Race and class பத்திரிகையை இலவசப் பிரதியாக (complimentary copy) எனக்கு அனுப்பி வருகிறவர். 1994-ம் ஆண்டிறுதியில் பல்வேறு தொடர்ச்சியான உரையாடல்களுக்குப் பின் இந்த நேர்முகம் உறுதியானது. லண்டன் கிங்க்ஸ் கிராஸில் இயங்கும் Institute of Race Relations நிறுவனத்திற்கு நான் போனபோது அவர் ஒரு கூட்டத்தில் இருந்தார். 15 நிமிடங்களில் அதை முடித்துவிட்டு வந்தவர், மூன்று மணி நேரத்தை எனக்காக ஒதுக்கித் தந்தார். ' வாங்க தம்பி, சுகமாக இருக்கிறீர்களா? ' என்பதுதான் அவர் என்னுடன் பேசிய தமிழ். தமிழில் உரையாட அவரால் இயல்வதில்லை. தமிழில் நாம் பேசுவதைப் புரிந்து கொள்கிறார். அவர் தமிழனாக மட்டுமல்ல சர்வதேசிய மனிதனாகவும் இருக்கிறார் எனபதுதான் இதன் காரணமென்று நான் கருதுகிறேன்.

இவர் தன் அறிவார்ந்த கருத்தமைவுகளால் எட்வேட் ஸைத், சமீர அமீன், இக்பால் மகுத், ஸ்டுவர்ட் ஹால் போன்ற மார்க்சீய அறிஞர்களோடு சேர்த்துச் சொல்லப்படுபவர்.

கடந்த 36 ஆந்டுகளாக நிறவெறிச் சூழலி தகித்த அவரது அனபவங்கள் கட்டுரைகளாக போராட்ட யுக்திகளோடு வெளியாகி இருக்கிறது. Race and class இதழ் NEW LEFT REVIEW இதழுக்கு இணையாக உலகெங்கும் படிக்கப்படும் அறிவாளிகளின் பத்திரிகை. இவரது முக்கியமான இரு புத்தகங்கள் லண்டன் Pluto Press பதிப்பித்த A DIFFERENT HUNGER , BLACK RESISTANCE (முன்னுரை: ஸ்டுவாட் ஹால்) மற்றும் லண்டன் Verso பதிப்பகம் கொணர்ந்த COMMUNITIES OF RESISTANCE , WRITINGS ON BLACK STRUGGLES FOR SOCIALISM (முன்னுரை: ஜான் பெக்கர்)

இதுவன்றி நூற்றுக் கணக்கான கட்டுரைகளை உலகெங்குமிருந்து வெளியாகும் ஆங்கில மார்க்சீய ஆய்விதழ்களில் எழுதியிருக்கிறார். இவை சிறு நூல்களாகவும் வெளியாகியிருக்கிறது. இவரது முக்கிய கட்டுரைகளாக இவர் கருதுவது: THE LIBERATION OF BLACK INTELLECTUAL மற்றும் NEW CIRCUITS OF IMPERIALISM.

உரையாடலில் அவரது தனிப்பட்ட வாழ்வு, புலம் பெயர்வு, பின் நவீனத்துவம், ஐரோப்பிய சமூக அமைப்பு, ஏகாதிபத்தியத்தின் இன்றைய நிலை, மூன்றாம் உலகம், நிறவெறி எதிர்ப்பு, வர்க்கப் போராட்டம், பெண்நிலை வாதம், ஸலமன் ருஸ்டி பிரச்சனை, ஈழத் தமிழர் பிரச்சனை, நமது சமூகங்களில் ஜாதியத்திற்கும், ஐரொப்பிய சமூகங்களில் நிறவெறிக்கும் இடையேயுள்ள தொடர்பு பற்றிய கேள்விகள் இடம்பெற்றது.

அவரது சிறிய படுக்கையில் அமர்ந்தபடி, அடிக்கடி two suger coffee -யுடன் நண்பர் டேனியின் அடிக்கடியிலான சிறு இடையூறுகளினிடையும் நடந்த உரையாடலின் தொகுப்பு இனி வருகிறது. தமிழில் முதன்முதலாக வரும் அவரது நேர்முகம் இதுதான்.

□□ நேர்முகம் அடுத்த இதழில்....□□



# அணுக்குண்டுப் பரிசோதனையும் சிறுபான்மை இன அழிப்பும்

## தற்போதைய உலக செய்தி வழங்கிகளின் சார்புநிலைப் பிரச்சாரம்

## நமது சிந்தனைக்கு அவசியமா?

வரன்

*இருபதாம் நூற்றாண்டின் முடிவெல்லையில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம், உலக நடப்புகளை சீர்தூக்கிப் பார்க்க அக்கறை கொண்டவர்கள்தாம். ஆனால் தகவல்கள் பிரச்சாரச் சாதனங்களுக்கு ஊடாக நடுநிலைக் கண்ணோட்டத்துடன் முன்வைக்கப்படுகிறதா? கேள்வியை உரத்துக் கேட்க வேண்டியுள்ளது.*

கடந்த ஆண்டு உலகச் செய்தி வழங்கிகள் இன ஒழிப்பு பற்றியும், அணுக்குண்டு பரிசோதனை பற்றியும் தாரளமாகவே வியாபாரம் செய்து கொண்டன. 50 ஆண்டு உலகில் நடந்து முடிந்த சம்பவங்களை நினைவுகூர்ந்து தம் வெற்றியை கொஞ்சம் மிகைப்படுத்தியே கொண்டாடிச் சென்றனர். நாஸிசம் ஒழிக்கப்பட்டதை -ஹிட்டலரின் வீழ்ச்சியை அறிந்திடாத மக்களே இல்லை எனலாம். யூத மக்களை கொன்றொழிப்பு செய்தவர்கள் இன்றும் கூட நீதிமன்றங்களில் ஏற்றப்படுகிறார்கள். இச் செய்தி வழங்கிகள் போட்டி போட்டுக்கொண்டு ஐரோப்பாவில் மீண்டுமொரு முறை நாஸிசம் தலையெடுக்குமா? என்ற விவாதத்தை நடாத்திக் கொண்டன. இது ஒரு புறமிருக்க, ஹிட்டலரின் படைகளினால் யூதர்கள் மட்டும்தானா அழிக்கப்பட்டார்கள்? ஜித்தன் (Giten) என அழைக்கப்படும் ஐரோப்பிய குறவர்வர்கள், சமவுடமைக் கருத்தைச் சாாந்தவர்கள், ஹிட்லரின் ஆக்கிரமிப்புப் படையை எதிர்த்துச் சண்டையிட்டவர்களான போலந்து, முன்னைய சோவியத்து ஒன்றிய நாடுகளில் மட்டும் 6 மில்லியன் மக்கள் கொல்லப்பட்டார்களே. இவை இச்செய்தி வழங்கிகளுக்கு பெரிதாகத் தெரியவில்லை. குறிப்பாக முன்னைய யுக்கோஸ•லோவிய கத்தோலிக்க குரோத்தியர்களும் (croatie), பொஸ்னிய முஸ்லீம்களும் ஹிட்லரின் படைக்கு அனுசரணையாக சேர்பியர்களை படுகொலை செய்தனர். இதன் பின் விளைவுகளே இன்றுவரை தொடர்ந்து கொண்டிருக்கும் இனங்களுக்கு இடையிலான ஐயப்பாடும், மிருகத்தனமான இனப படுகொலைகளும் ஆகும்.

இதே காலகட்டத்தில் ஆசியாவில் யப்பானியப் படை எடுப்புகளினால் பெருமளவில் சீன கொரிய மக்கள் கொல்லப்பட்டனர். இதை யப்பானிய அரசு தவறென ஏற்று மன்னிப்புக் கோர மறுக்கின்றது. சீமையில் யப்பானியர்களினால் ஏற்பட்ட அழிவை சித்தரித்து ஒரு கண்காட்சி நடாத்தப்பட்டது.

இவ்விதமான மனிதப் படுகொலைகளைக் கண்டித்து 2-ம் உலக யுத்தத்தின் பின் நூறன்பேர்க்கில் கூடிய உயர் நீதி மன்றம் எடுத்த முக்கிய முடிவாக " மனித இனத்திற்கு எதிரான கொலைகளை" தண்டிப்பதற்கான ஒரு வரையறையை விதித்தனர். அதாவது ஒரு அரசால் திட்டமிட்டு ஏற்படுத்தப்படும் மனிதப் படுகொலைகளை மானிடப் பண்பிற்கு புறம்பானது எனக் கூறி இத்தகைய படுகொலைக்கு ஆளானவர்களை Genocide *(சிறுபான்மை இனப் பிரிவுகள், மத, வாக்க வேறுபாடுகளையுடைய மக்கள் கூட்டத்தை ஒரு பெரும்பான்மை அரசு திட்டம் வகுத்து அழித்தால் அதை இச்சொல் கொண்டு அழைக்கலாம்)* என்ற பதத்தைப் பாவித்து வரவிலக்கணப்படுத்தினர்.

வல்லரசுகளினால் தோற்றுவிக்கப்பட்ட ஐ. நா. சபையில் சட்டங்களை இயற்றவும், அதிகாரத்தை அமுலாக்கும் தகமையை தம்வசப்படுத்திக் கொண்டன இவ்வல்லரசுகள். உலகின் எப்பகுதியிலேனும் இத்தகைய அசம்பாவிதங்கள் வரக்கூடாது எனக் கூறி 11. 02. 1946-ல் 95(1) என்ற பகுதியில் ஒரு பிரேரணையைக் கொண்டுவந்தனர். இதை ஏற்று 1948-ல் கைச்சாத்து இடப்பட்டது. 26. 11. 1968 -ல் இன்னோர் பிரேரணையில் காரணமானவர்கள் காலம் கடந்தும் தண்டிக்கப்படலாம் என்ற சட்டம அமுலாக்கப்பட்டது.

இங்குதான் பாசாங்குத்தனம் வெளிப்பட வழி கிட்டியது.

☐ வியட்நாம்

1945 பின் பகுதியில் வியட்நாமியர்களின் அடிப்படை அபிலாசைகளுக்கு எதிராக பிரெஞ்சு, யு. எஸ். ஏ அரசுகளின் கண்மூடித்தனமான யுத்தத்தினால் கொல்லப்பட்டவர்கள், அமெரிக்காவினால் கொட்டப்பட்ட குண்டுகளின் இரசாயன நெடியினால் (Dioxine de carbon) இன்றும் அங்கவீனக் குழந்தைகள் பிறக்கின்றன. இக்கொலைகளை கண்டிக்கும் முகமாக இத்தாலிய செனட்டர் திரு லுலியோ பாஸோ என்பவரால் நீதிமன்றம் (வுசடிைரநெட சுரளளநட) பாதிப்புறும் மூன்றாம் எலக மக்களின் விடுதலைக்கும் நியாயத்திற்குமாக என உருவாக்க முயன்றார். இவர் விரைவிலேயே இறந்துவிட்டார்.

☐ இரான்


இங்கு ஷா மன்னரால் கொல்லப்பட்ட மக்களின் நீதிகோரி உருவான கிளர்ச்சி இன்று மதவாதிகளின் கைகளில் தட்டிப்பறிக்கப்பட்டு விட்டது. மதவாதிகளினால் கைது செய்யப்பட்ட அமெரிக்கப் பயணக் கைதிகள் மூலம் ஷாவின் கொலைச் செண்திகளை உயர் நீதி மன்றத்தில் ஆராயச் சந்தர்ப்பம் வழங்குவதாக வாக்குறுதி வழங்கி மீட்டுச் சென்ற பின் என்னதான் நடந்தது?

☐ அல்ஜீரியா

60-களின் பின் பகுதியில் மட்டும் 1மில்லியன் அல்ஜீரியர்களை பிரான்சு இராணுவம் கொன்றதாக அல்ஜீரிய அரசு கூறுகிறது. ஐ. நா. என்ன செய்தது?

☐ ஆபிரிக்கா

கறுப்பு மக்களை அடிமைகளாக மிருகங்கள்போல் கொண்டு சென்றவர்கள் தம் தவறை உணர்ந்ததாகப் பதிவில்லை. ஆனால் யூதர்களிடம் பாவமன்னிப்புக் கோருகின்றனர். இன்றும் தாம் குடியேற்றப்பட்ட நாடுகளில் -அமெரிக்காவில்- சம உரிமை கோரி போராடி வருகின்றனர் இந்தக் கறுப்பர்கள்.



☐ அவுஸ்ரேலியா

இங்கு முதல் விஜயம் செய்த காப்டன் கூக்கின் (1770) கணக்குப் படி பூர்வீகக் குடிகளான அபோரிஜென் (aborigenes) மக்களின் எண்ணிக்கை 3 இலட்சமாகும். 1788-1920 சீமையரின் ஆட்சிக் காலத்தில் மட்டும் இரண்டரை இலட்சம் பூர்வ குடிகள் காணாமல் போயுள்ளனர். இது எந்த வகையான அழிப்பு? 1930-ல் எடுத்த கணக்கெடுப்பின் படி 70000 பேரும், 1990-ல் 160000 ஆகவும் எஞ்சியுள்ள பூர்வ குடிகள் நடந்துபோன அநியாயத்திற்காக நீதி கோருகின்றனர்.

☐ ஆர்மேனியா

துருக்கிய ஓட்டமான் சாமராச்சிய அரசால் 1915-ல் 2மில்லியன் மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். 2மில்லியன் மக்களுக்கு மேல் அயல் நாடுகளில் தஞ்சம் புகுந்தார்கள். ஆர்மேனியர்கள் தமது உரிமைக்கும் நியாயத்திற்குமான நீண்ட போராட்டத்தின் விளைவாக ஐ. நா. 1974-ல் 20-ம் நூற்றாண்டின் முதன்முதலான மனிதப் படுகொலை என ஏற்றுக்கொண்டு விட்டது. இன்றும் துருக்கிய அரசு இதை ஏற்க மறுக்கின்றது.

☐ மெக்ஸிக்கோ

500 ஆண்டுகளுக்கு முன் ஸ்பானிய குடியேற்றவாசிகளால் இங்கு வாழ்ந்து வந்த இன்கா, மாயா செவ்விந்தியர்கள் கொன்றொழிக்கப்பட்டும், நாகரிச் சின்னங்கள் சிதைக்கப்பட்டும், சொத்துக்கள் சூறையாடப்பட்டதும் தெரிந்த செய்தி.

இந்த ஒழிப்பிலிருந்து உயிர் தப்பி வாழ்ந்த செவ்விந்தியர்கள் கொமாண்டோ மார்க்கோவின் தலைமையில் தம் அடிப்படை உரிமைகாப் போராடி வருகின்றனர். அமெரிக்காவும் மெக்ஸிக்கோ அரசும் செய்து கொண்ட அலினா (l'Association de Libre -Echange Nord -Américane) ஒப்பந்தத்தை எதிர்த்து செய்து கொண்ட தாக்குதல் மூலம் உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ளனர்.

போகட்டும் அமெரிக்க பூர்வ குடிகளான செவ்விந்தியர்களுக்கு என்ன நடந்தது? யார் கவலை கொள்கிறார்கள்?

☐ ஈராக்

1990-ல் ஈராக்கை எதிர்த்து 20 நாடுகள் சேர்ந்து போரிட்ட நிகழ்வினால் 3இலட்சம் மக்கள் கொல்லப்பட்டனர் எனக் கணிப்பிடப்படுகிறது. போடப்பட்ட குண்டுகளின் இரசாயனப் பாதிப்புகளினால் பல பின்விளைவுகளை எதிர் நோக்கி இங்கு உயிர் வாழும் மக்களும் குழந்தைகளும் உலகப் பொருளாதாரத் தடையால் கடும் பாதிப்புக்குள்ளாகி இறந்து வருகின்றனர். இந்த அப்பாவி மக்களின் அழிப்புக்கு யார் காரணம்?

☐

□

இப்படியாக பாலஸ்தீனர்களின் அழிவுகள், தென் ஆபிரிக்க வெள்ளை இனவெறி ஆட்சி, றுவண்டா இனவெறியாட்டம், சிறி லங்கா பெருந்தேசிய ஆட்சியாளர்களின் ஒழிப்பு நடவடிக்கைகள் என சொல்லிக் கொண்டே போகலாம்! இவையெல்லாம் எந்த வரையறுப்புகளுக்கு உள்ளாகியுள்ளன?

□முன்னைய யுக்கோஸ்லோவாக்கியா

இன்று சர்வ தேச செய்தி வழங்கிகளின் பிரதான இடத்தைப் பெற்றிருக்கும் பாகப்பிரிவினையும், மனிதப் படுகொலைக்கு (genocide) பொறுப்பாளிகளை உலக நீதி மன்ற (Triminal de la Haye) விசாரணைக்கு உட்படுத்தும் நாடகங்களும் வெகுவேகமாக நடந்து வருகின்றது. ஜனநாயகப் பாதுகாவலர்களாக தம்மைப் பிரகடனப்படுத்திக் கொள்ளும் நாடுகளின் கொடிகள் பறக்க அவர்களின் இராணுவங்கள் ஐ. நா. முத்திரையுடன் இறங்கிவிட்டன. இதில் எவ்வாறு இதயசுத்தியான நியாயம் கிடைக்கப்போகின்றது? உலகமே வல்லரசு அரசியல் சுழியில் சிக்குண்டு தவிக்கையில், அரசியல் சதுரங்க காய் நகர்த்தலின் அசைவுகளுக்கு இடையே நியாயம் உணரப்படப்போகின்றதா? ஜனநாயகம் நிலைநாட்டப்படுமா?

ஸ்லோவேனியர்கள், குரோத்தியர்கள், பொஸ்னி முஸ்லீம்கள், பொஸ்னி சேர்பியர்கள், யுக்கோஸ்லாவிய சேர்பியர்கள், கொஸோவோ, மெசடோனி ஆக மக்கள் ஐக்கியமாக வாழ்ந்த பூமி முன்னைய யுக்கோஸ்லோவாக்கியா. கொஸோவோ சேர்பியர்களின் சதித் திட்டத்தினால் பதவி ஆசை கொண்ட சேர்பியத் தலைவரான மிலோஸேவிக் சேர்பிய தேசியவாதத்தை மேலோக்கி ஒட்டுமொத்தமான சேர்பியர்களின் ஆதரவைப் பெற்று குறுக்குவழியில் கம்யூனிஸ்ட்டுக் கட்சியின் செயலாளராகினார். இவரின் தலைமையை ஏற்க மறுத்து கூட்டு ஆட்சியிலிருந்து தேசியத் தலைவர்கள் வெளியேறினார்கள். இன அழிப்புப் பிரச்சனை ஆரம்பமாகியது. 1993-94 பகுதிகளில் மிலோஸேவிக் எல்லா ஐரோப்பிய நாடுகளிலும் ஹிட்லருக்கு நிகரானவர் என வர்ணிக்கப்பட்டார். ஆனால் எவரும் எதிர்பாராத வகையில் அமெரிக்க அரசு இவருடன் நடாத்திய இரகசியப் பேச்சு வார்த்தைகளினால் இவரது குற்றவியலிருந்து நழுவிக் கொண்டது. ஆனால் இவரை நம்பிய பொஸ்னிய சேர்பியத் தலைவரான கராட்ஸிக், இராணுவத்தளபதியான மெலாடிக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டுவிட்டனர். உலக நீதி மன்றம் குற்றவாளிகளென தீர்மானித்தும் விட்டது.

□□

வரலாற்றுச் சம்பவங்களை ஒரே அளவுகோல் கொண்டு ஐ. நா சீர்தூக்கி பார்த்து நியாயம் வழங்காத வரையில் முற்றுப்புள்ளிக்குத்தான் இடமேது? மனிதனே மனிதனை அழிக்க அவாவுறும் உலகச்சூழலில் அணுப் பரிசோதனைகளும், சுற்றுச் சூழல் சிதைப்பும் விளையாட்டாகத்தானே இருக்கும்? ஆனாலும் அழிவுறும் மனிதச் சிந்தனைகளின் பரிசீலனைக்கு உட்படாமல் போக முடியுமா?

# கைக் குட்டை வாங்கவா?

-நிர்மலா பிரபுதேவன் ( கொழும்பு)

**-சந்திரிகா அரசின் தேசியப் பாதுகாப்பு நிதி சேகரிப்பு குறித்து-**

*காப்புக்கோர் நீதியாம்*
*தேசக்காப்புக்கோர் நீதியாம்.*

*காப்பது – யார் யாரை*
*காவலன்தான் யாரோ?*

*வெளிநாட்டின் தாக்கமா*
*தேசத்தைக் காக்கத்துடித்தது?*
*தேடிய செல்வத்தை அழிக்கத் தேவையா யுத்தம்?*

*அந்நியப் படையெடுப்பா?*
*அல்லது அந்நிய நாடா?*
*அருமை நாட்டின் மக்களை அழித்து தரிசு நிலமாக்கவா?*

*இரு இன இளசுகளும் அழியுது*
*இழந்தவர் இன்னலில் தவிக்கிறார்*
*இருப்பிடம் இல்லாது அலைகிறார்*
*இனிமை நினைவுகள் கண்ணீரில் கரையுது.*

*சமாதானம் விட்டுக் கவனம் ஏனோ நிதி சேர்ப்பில்... ?*
*கண்ணீர் விடுமோரின் கண்ணம் துடைக்க கைக்குட்டை வாங்கவா?*


# நினைவில் நிற்பவர்கள்

அயராத தமிழ் இலக்கிய முயற்சியாளர்கள், எழுத்தாளர்கள் மூவரினது இழப்புகளினால் மௌனம் ஆழ்ந்த கவலை கொள்கிறது.

□ திரு எஸ். அகஸ்தியர்

ஐம்பதாம் ஆண்டுகளில் எழுதத் தொடங்கிய ஈழத்து எழுத்தாளர்களில் ஒருவரான திரு எஸ். அகஸ்தியர் (69) பாரிஸில் காலமாகிவிட்டார். நோயான காலத்திலும் கூட தளராது தனது அயராத எழுத்துப் பணியை மேற்கொண்டிருந்த அகஸ்தியர் சிறுகதை, குறுநாவல், கட்டுரை விமர்சனம் என பல்துறைகளிலும் கவனம் செலுத்தியவர். அண்மைக்காலத்தில் அவரது பல்வேறு எழுத்துக்கள் நூல் வடிவம் பெற்றிருந்தன. புலம் பெயர்ந்த மண்ணில் -பாரிஸில்- பல்வேறு இலக்கிய முயற்சிகளுக்கு உற்சாகமளித்து, ஊக்குவித்து, பங்கெடுத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

□ திரு கோமல் சுவாமிநாதன்



ஈழத் தேசிய இலக்கியத்தில் அக்கறை காட்டியவரும், சுபமங்களா இதழ் ஆசிரியரும், நாடக- சினிமாத் துறையாளருமான திரு கோமல் சுவாமிநாதன்(60) அவர்களின் மரணம் இலக்கிய உலகை அதிர்ச்சியேற்படுத்தியது. சுபமங்களா என்வொரு இலக்கிய இதழை நடாத்திய அவரது கடைசி நான்காண்டு பங்களிப்பானது தமிழ் இலக்கிய வரலாற்றுப் பதிவேட்டில் பொறிக்கப்பட்டிருக்கிறது. இலங்கை இலக்கியப் பயணம் மேற்கொண்டபோது இராணுவச் சூழல் கெடுபிடி நிறைந்த தமிழர் நிலங்களுக்குச் சென்று வந்ததும்- அந்த அனுபவங்களை தயக்கங்களேதுமின்றி நேர்மையுடன் பதிவு செய்ததும் என்றென்றும் எம்மால் நன்றியுடன் நினைவு கொள்ளத்தக்கவை. தன் இதழ் மூலம் உலகெங்குமான தமிழரிடையே இலக்கிய தொடர்பை விரிவுபடுத்தி, முடிந்தவரை பக்கம் சாராது கருத்து- விவாதங்களை இடம்பெறச் செய்து தமிழ் இலக்கிய ஆர்வலர்களை பரந்த பரப்பிற்குள் கொண்டுவர வழிகாட்டிச் சென்றுள்ளார். யாழ்ப்பாணம் இராணுவ முற்றுகைக்குள்ளாகி 5இலட்சம் மக்கள் அகதிகளாகி பரிதவித்துக் கொண்டிருக்கும் வேளையில் அவரது பேனா எதனை எழுதியிருக்கும் என்பதை நினைத்து ஏங்கச்செய்தது அவரது இழப்பு.

□ திரு சில்லையூர் செல்வராசன்

தான் தொட்ட கலைத் துறைகளிலெல்லாம் மிளிர்ந்த திரு சில்லையூர் செல்வராசன் அவர்கள் மறைந்துவிட்டார். ஈழத்து கலை இலக்கிய பரப்பில் தன் கலை ஆளுமையை ஆழப்பதித்து, இலங்கை வானொலியில் தன் குரல் வளத்தாலும், கவிமொழியாலும் மக்கள் நெஞ்சங்களை வென்றவர். பல்கலை வேந்தர். இவரது சேவையால் வளம் பெற்ற இலங்கை வானொலியில் அவரது குரல் கேட்டுக்கொண்டே இருக்கும்.

# பிரான்சுவா மித்திரோன்

பிரான்சின் முன்னைய தலைவரும் உலக முக்கிய தலைவர்களில் ஒருவருமான திரு பிரான்சுவா மித்திரோன் -François MITTERRAND- (79) மண்ணுக்குள் உறங்கிவிட்டார். கத்தோலிக்க கனவானர் குடும்பத்தில் பிறந்து, கத்தோலிக்க பாதிரிமார் பாடசாலையில் ஆரம்பக் கல்வி பயின்று, பாரிஸில் அரசியல் விஞ்ஞானம்- சட்டம்- இலக்கியம் மேற்கல்வி பெற்றவர். இளம் வயதில் தீவிர வலதுசாரிக் கட்சியின் முக்கிய உறுப்பினராகவும், இரண்டாம் உலகப்போரில் பலவகை பங்களிப்புகளிலும் தன்னை ஈடுபடுத்தியவர்.



மித்திரோனின் மனோபாவத்தை லூயி 6 -LOUIS 6- மன்னனுக்கு இணையானதாக சரித்திர ஆசிரியர்கள் கூறுகின்றனர். இவர் தீவிர வலதுசாரியாகவும், கத்தோலிக்க தேசிய வாதியாகவும், சோசலிஸவாதியாகவும், மார்க்ஸிசவாதியாகவும் விளங்கிய இவர் ஐரோப்பிய கூட்டு ஆட்சியை நேசிப்பவராகவும், மதசார்பற்றவராகவும் வெளிப்பாட்டை கொண்டிருந்தார். இத்தன்மை ஒட்மொத்த பிரெஞ்சு மக்களின் மனோபாவத்தின் பிரதிபலிப்பு எனக் குறிப்பிடுகின்றனர்.

இவரது எழுத்துத்தாக 13 நூல்கள் வெளிவந்துள்ளன. கடைசிகாலத்தில் கூட தன் வாழ்வனுபவங்களைப் பதிவு செய்து கொண்டிருந்தார். பெரும்பாலும் பிராந்திய எழுத்துகளை விரும்பிய இவர், பிராந்திய கிராமிய வாழ்க்கையை நேசிப்பவராகவும், இயற்கையுடன் தன் உறவை பிணைத்திருந்தார் எனவும் பல தடவைகளில் பேட்டியளித்திருக்கிறார்.

உலக அரசியல் அரங்கில் குறிப்பாக மூன்றாம் உலக நாடுகளுக்காக இவர் அப்புக்காத்தாக (advocate) செயல்பட்டவர் எனலாம்.

பாலஸ்தீன விடுதலையில் இவர் காட்டிய அக்கறை குறிப்பிடத்தக்கது. 1995 மார்ச் 11இல் கோப்பன்ஹாகனில் நடைபெற்ற ஐ. நா. -வால் ஒழுங்கமைக்கப்பட்ட 'உலக வறிய நாடுகளின் எதிர்காலம்?' கலந்துரையாடலில் இவர் வழங்கிய கருத்துகளை உலகம் மறந்திடாது.

*« தொடர்ந்தும் மிலேச்சத்தனமான முதலாளித்துவ பொருளாதார முறைமையும், முதலாளித்துவ நாடுகளும் மூன்றாம் உலக நாடுகளை அடிமையில் வைத்திருக்கத்தான் செய்கின்றன. »*

50 ஆண்டுகள் அடங்கிய தன் அரசியல் அனுபவத்தில் மனதை பறிகொண்ட கொள்கையாக விடுதலை, சமவுடமை, சமூகத்தின் மீதான ஏற்றத்தாழ்வற்ற பார்வை என்றும் மனித உரிமைகளுக்கான போராட்டம் ஜனநாயகத்தை வெல்லும் இதைப் பிரித்துப் பார்க்க முடியாது எனக் குறிப்பிட்டார். உலக நாடுகள் பலமாக இருத்தல் வேண்டுமாயின் தனது 'மக்கள் நிறைவான பொருளாதார, சுகாதார, மருத்துவ அடிப்படையில் நிறைவு பெறல்வேண்டும். மக்களின்பால் அக்கறையில்லாத முதலாளித்துவ பொருளாதார உற்பத்தியும், வளர்ச்சியும் மக்களிடையே இருபெரும் பிளவுகளை உருவாக்கி விடுகின்றன.

"தியானமாவது, ஒண்ணாவது! மாசுபட்ட உலகிலிருந்து இங்கேதான் அரைவாசி பாதுகாப்பாவது......"

நன்றி:- Marine Pollution Bulletin



"Meditation, my foot! It's the only place I feel half safe from filthy seas, acid rain, and environmental pollution in general."

# மேலைத்தேயச் சுதந்திரத்துள் தமிழ் மாணவர்கள் !

கே . எஸ் . துரை.

டென்மார்க்கு நாட்டில் தமிழர்கள் குடியேறிய வரலாறு பத்தாண்டு காலத்தை வேகமாகப் பூர்த்தி செய்துவிட்டது . அறியாத பருவத்தினராக இங்கு வந்த குழந்தைகளில் பலர் இப்போது ஆளாகி நிற்கிறார்கள் . இந்தப் பிள்ளைகள் சமூகத்திற்கும் பெற்றோர்கள் சமூகத்திற்குமிடையே இடைவெளியானது ஆண்டுதோறும் ஓர் ஊமை வேகத்தில் அதிகரித்துச் செல்வதை புள்ளி விபரங்கள் இல்லாவிடிலும் அனைவராலும் நன்கு ஊகிக்க முடிகிறது.இந்த முரண்பாடுகளின் உற்பத்தி தமிழ், டெனிஸ் என்ற இரண்டு வேறுபட்ட வாழ்க்கை முறைகளின் தளங்களிலிருந்தே தோற்றம் பெறுகிறது. உண்மையில் தமிழர் கலாச்சாரம் பேணப்பட்டதாகவோ ? டெனிஸ் கலாச்சாரம் தமிழர்களால் பூரணமாகத் தழுவப்பட்டதாகவோ இதுவரை முடிவுகள் இல்லை. " திருமணம் செய்து கொள்வது நல்லதா ? அல்லது செய்யாமல் விடுவது நல்லதா ? என்று என்னிடம் கேட்பீர்களானால் இந்த இரண்டு முடிவுகளில் எதை நீங்கள் எடுத்தாலும் அதற்காகப் பின்னர் வருத்தப்படுவீர்கள் என்றே கூறுவேன் . " என சோக்கிரட்டீஸ் சொன்னதை நினைவுபடுத்துவது போல , டெனிஸ் கலாச்சாரம் பற்றி டெனிஸ் காரரும் தமிழ்க் கலாச்சாரம் பற்றித் தமிழரும் கடந்த காலங்களில் இரு வேறு கோணங்களில் சிந்தித்தனர். இறுதியில் இவ் இருசாரருமே வருத்தப்படக் கூடியவகையில் ஓர் மூன்றாவது கோணமாக நமது புதிய தலைமுறையினரைப் படைத்து வைத்திருக்கிறது டெனிஸ் கலாச்சார மயமாக்கல் வேலைத் திட்டம் . இதை நாம் கடந்த பத்தாண்டு கால படிப்பினையின் பின் நிதர்சனமாகக் காண்கிறோம் .

இன்றைய இளைய தலைமுறையினர் இந்த நாட்டில் சந்திக்க வேண்டியுள்ள புதுப்புது வகையான பிரச்சனைகளை எண்ணற்ற தலையங்கங்களில் வரிசைப் படுத்தலாம். ஆனால் இவையெல்லாம் கிளைநதிகளாக ஓடிவந்து விழுவது சுதந்திரம் என்னும் தாய் நதியில்தான். டென்டமார்க்கில் வாழும் இப்பிள்ளைகள் பூரண சுதந்திரம் உடையவர்கள். அவர்களை தமிழ்க் குடும்ப அடிமைச் சாசனங்களாலோ , அல்லது துருக்கிய குடும்ப அடிமைச் சாசனங்களாலோ கட்டுப்பாடு செய்ய முடியாதென டெனிஸ் சமூகவியல் பிரிவும் , சட்டத்துறைப் பிரிவும் அழுத்தம் திருத்தமாக வலியுறுத்துகின்றன . இதை அறிந்துகொண்ட டெனிஸ் மொழியை ஆற்றொழுக்காகப் பேசவும் , எழுதவும் , வாசிக்கவும் தெரிந்துள்ள இளம் தலைமுறையினர் தமது சுதந்திரத்தை தயக்கமின்றிக் கையில் எடுக்கின்றனர் . இந்த வேகம் தமிழரின் குடும்ப உறவு முறைக்குள் மறைந்திருக்கும் எழுதப் படாத அடிமைத் தனங்களுக்கெதிராக தனது முதற்கட்டப் போரை இப்பொழுது அகிம்சை வழியில் ஆரம்பித்திருப்பது தெரிகிறது. இவர்களின் கைகளில் இவர்கள் கோரும் சுதந்திரத்தை வழங்கலாமா? அல்லது மறுக்கலாமா? என்ற கேள்விகளில் எதற்கு இணங்கினாலும் சோக்கிரட்டீஸ் பாணியில் வருத்தமடைய நேரலாமென சமூகம் அஞ்சி நிற்கிறது . அதே வேளை சாதி , சமயம் என்ற முதல் நிலைப் படிகளுக்குள்ளேயே குழுநிலைப் பட்டு நிற்கும் சமூகமானது இது குறித்து தன்னிடையே ஒரு பொதுக் கருத்தை உருவாக்கும் வல்லமையையும் இழந்து நிற்பதும் தெரிகிறது .

இதுவரை கிடைத்துள்ள தரவுகளிலிருந்து பார்க்கும் போது இந்தப் பிரச்சனைகளைக் கையாழுவதற்கு கூடுதலான பெற்றோர்களின் சமூகத்தினர் பாசப்பிணைப்பு என்கின்ற கோட்பாட்டையோ அல்லது அவசரத் திருமணம் என்கின்ற ஏற்பாட்டையோ தான் தமது இறுதித் துரும்புச் சீட்டாக நம்பியிருக்கின்றனர் . எல்லை மீறினால் சாவுக்கும் இல்லை என்ற எச்சரிக்கை விளக்கும், முடியாத

பட்சத்தில் இவர்கள் திருந்த மாட்டார்கள் ! கடவுளே இவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்பது போன்ற துறவு மனப்பான்மையையும் இப் பாசத்தின் மேடையில் நின்று சூசகமாக வெளிக்காட்டிக் கொள்கின்றனர் . எப்பொழுதும் ஒரு சமூகப் பிரச்சனையை இவ்விதம் எடுத்தேனா , போட்டேனா என்றவகையில் அணுகமுடியாது. பிரச்சனைகளின் வடிவத்தை உண்மையான காரண காரியங்களோடு அதேவேளை உண்மைக் கண்ணின் மையத்தைத் தொடும்படியாகவும் அலசப்படவேண்டியதே அவசியமான பணியாகும் .

உலகின் மிகக் கூடுதலான சுதந்திரத்தை அனுபவிக்கும் இனக்குழு , மனிதனின் ஒவ்வொரு சுதந்திரித்த நடவடிக்கைகளையும் எழுதப்பட்ட சட்டங்களால் அங்கீகரிக்கும் நாடு, உலகின் அதிகூடிய சுதந்திரமுள்ள பெண்கள் போன்ற காத்திரமான விடயங்களைத் தன்னகத்தே கொண்டநாடு டென்மார்க். இத்தகைய ஒரு வளர்ச்சி பெற்ற வாழ்க்கைச் சூழலுக்குள் வளரும் பிள்ளைகள் இங்கு திறந்த வெளியாயிருக்கும் சுதந்திரச் சூழலை தாமும் ஏன் பயன்படுத்தக் கூடாதென வேட்கை கொள்வது இயல்பான காரியம். ஒரு டெனிஸ்காரரின் பார்வையிலும் இது மிக நியாயமான கோரிக்கையாகவே தென்படும். ஆயினும் சுதந்திரத்தைக் கையளித்தல் என்ற விவகாரத்தில் தமிழர் சமூகத்திடையே பல நுண்பாகப் பிரச்சனைகள் இழையோடியிருப்பதை டெனிஸ் சமூகவியலாளர்கள்ஆய்வு செய்தல் அவசியம். இந்த ஆய்வை தமிழர்கள் நாய் இறைச்சி தின்பவர்களா? அல்லது பொருளாதார அகதிகளா? என்ற கோணத்தில் கடந்த காலங்களில் சிலர் ஆய்வு செய்ய முற்பட்டனர். இது உண்மையின் தேடலை திசைதிருப்பி விடும்.

சுதந்திரத்தைப் பெறுவது எவ்வளவு முக்கியமானதோ அதைவிட முக்கியமானது அதை அனுபவிக்கத் தெரிந்திருப்பதாகும். இந்த முக்கியமான விடயத்தில் தமிழ் மக்களுக்கும் ஐரோப்பியருக்குமிடையே பெரும் ஏற்றத்தாழ்வு காணப்படுகிறது. எவ்வாறெனில் ஐரோப்பாவில் சுதந்திரத்தின் வரலாறு மிகமிக நீண்ட அனுபவங்களைக் கொண்டதாகும். கி பி . 1215 லேயே மக்னாகாட்டா என்ற ஒப்பந்தத்தின் மூலம் " சட்டத்தின் முன் யாவரும் சமம் " என்ற உரிமையை ஆங்கிலேயர் பெற்றுவிட்டனர் . 1688 இல் உரிமைகள் சட்டமூலத்தின் மூலம் பாராளுமன்றத்தின் அனுமதியின்றி மன்னன் எதுவும் செய்ய முடியாதென்பதும் அங்கு உறுதி செய்யப்பட்டது. மக்களின் குறிக்கோள் நிறைவேறுவதை எந்த ஒரு அரசாங்கமாவது தடைசெய்யுமாயின் அந்த அரசாங்கத்தை மாற்றுவதன்றி ஒழிப்பதற்கும் அம்மக்களுக்கு உரிமையுண்டு என்று 1776 அமெரிக்க சுதந்திரப் பிரகடனம் வலியுறுத்தியது. சுதந்திரத்தின் அருமையை மக்கள் உணர்ந்து இங்கிலாந்து மக்கள் விழித்துக் கொண்டபோது அங்கு 1688 இல் புரட்சி வெடித்தது. இத்தகைய புரட்சி அமெரிக்காவில் 1775 இல் நடைபெற்றது. பிரான்சில் 1789 இல் நடைபெற்றது. இந்தச் சுதந்திரப் போர்களின் அனுபவத் தோடு பல நூற்றாண்டுகளைத் தாண்டி ஐரோப்பா நடைபயின்றுவிட்டது. மேற்கண்ட நீண்ட காலப் பரப்பில் சுகந்திரத்தை எப்படித் துய்ப்பதென்ற நெடிய அனுபவத்தையும் ஐரோப்பியர்கள் தமது சுதந்திர வரலாற்றோடு சேர்த்தே பயின்று விட்டனர் என்பதையும் நாம் மறக்கலாகாது.

ஒருவிடயத்தைக் குற்றமாகப் பார்ப்பதும் , குணமாகப் பார்ப்பதும் அவ்வவ் மக்கள்குழுவின் வாழ்க்கை முறையைப் பொறுத்ததே. இது உலகில்உள்ள அனைத்து மக்களுக்குமே பொதுவான விதி. ஏனெனில் சுதந்திரத்தின் பொருளை இந்த அடையாளத் திற்குள்ளால் தான் ஒவ்வொரு மனிதனும் விளங்கிக் கொள்ள முற்படுகிறான். பெண்களின் மார்பை ஆணும் , ஆணின் மார்பைப் பெண்ணும்பற்றியபடி ஓடும்" லாப்ப லாப்ப .." என்ற பாடலுடன் கூடிய மக்கள் நடனத்தை டெனிஸ் மக்கள் மிகச் சாதாரணமாக தம் விழாக்களில் ஆடிவருகிறார்கள். இருப்பினும் அந்த நடனத்தின் போது அம்மக்களின் உணர்ச்சியானது எல்லைமீறிச் செல்வதில்லை. ஆனால் பெண்ணின் மார்பகத்திற்குள் கனவுகளை வளர்க்கும் தமிழ்ச் சினிமா அரக்கனின் அடிமைகளாக இருக்கும் பெரும் பான்மை யோரைக் கொண்ட தமிழர் தலை முறை ஒரு புறத்தில் " லாப்ப லாப்ப " நடனத்தையும், மறுபுறம் தமிழ்ச் சினிமா உணர்வுகளையும் ஒரே நேரத்தில் தூக்கி நகர முடியுமா ? என்பதை நாம் வெளியில் பேசிக் கொள்ளா விட்டாலும் எமக்குள்ளாவது கேட்காமலிருக்க முடியாதல்லவா ? இது போலவே தமிழர்களின்

கைகளில் சுதந்திரமாக ஒப்படைக்கப் பட்ட தொலைபேசிகளை நம்மில் பலர் எப்படிப் பயன் படுத்தியுள்ளோம் என்பதையும் சீர்தூக்கிப் பார்த்தால் சுதந்திரத்தைப் பெறுவதை விட அதை நெறியோடு பயன்படுத்துவது எவ்வளவு சிரமமான காரியம் என்பதைச் சொல்லாமலே புரிந்து கொள்ளலாம்.

அப்படியானால் தமிழ் மாணவர்களுக்கு பூரணமாக டெனிஸ் சுதந்திரத்தை எவ்விதம் வழங்குவது என்பதே ? இறுதிக் கேள்வியாக எஞ்சுகிறது. உண்மையில் எல்லா மனிதர்களுக்குமே பூரணமான சுதந்திரம் வழங்கப்படவே வேண்டும்.இது மறுப்பிற்கிடமில்லாத உண்மை. ஆனால் சுதந்திரத்தைக்கையில் எடுக்கும் ஒருவர் தான் யார்? தனது இன மொழி பண்பாட்டு அடையாளங்கள் யாது? தான்தனது சமூகத்திற்கு ஆற்ற வேண்டியுள்ள சமூகவியல் கடமைகள் என்ன? என்ற விவகாரங்களில் பூரண தெளிவு பெறக்கூடிய வேலைத் திட்டங்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் சுதந்திரம் எப்படி மனிதனின் பிறப்புரிமையோ அதேபோல மேற்சொன்ன விடயங்களையும் ஒருவர் அறிந்திருக்க வேண்டியதும் ஓர் அடிப்படை மனித உரிமையாகும். சுதந்திரமும் இப் பண்பாட்டு விடயங்களும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போன்றவை.இதில் ஒரு பக்கத்தை மறைத்துவிட்டு , பூரண சுதந்திரம் பற்றிப் பேசுவதே தற்போதைய சுதந்திரத்தை வழங்கலாமா? என்ற கேள்வியில் மறைந்திருக்கும் மூலப் பிரச்சனையாகும்.

இந்த இரண்டு பக்கங்களையும் மாணவர்கள் தெளிவாகப் புரியும்போது , பூரணசுதந்திரம் என்பதும் இயல்பாகவே அவர்களுடைய கைகளிற்குப் போய்விடுகிறது. அத்தகைய நிலையில் தான் சுகந்திரம் என்பது ஒரு சுயகட்டுப்பாடு என்ற தத்துவார்த்தக் கருத்தும் அவர்களிடையே இயல்பாக முகிழ்த்து நிற்கும். சமுதாயத்தில் அது அழகோடு பொதுளும். இதைத் தான் மகாத்மாகாந்தியும், "**மனிதனுக்கு கடமைகளே முக்கியம் . கடமை இருந்தால் உரிமை தானாக வரும் .**"என்று குறிப்பிட்டார். இவைகளை விடுத்து பூரண சுதந்திரம் என்ற கோசத்தை அரை வேக்காட்டுத் தனமாக முன் வைத்தால் அது நம்மை இன்னொரு அடிமைத் தனத்திற்கே அழைத்துச் செல்லும். இதையே தமிழர் புலம் பெயர்ந்து அடையாள மிழந்து போன ரியூனியன் , மொறீசியஸ் போன்ற தீவு நாடுகளில் நாம் நிதர்சனமாகக் காண்கிறோம்.

**" தனது தேசிய அடையாளத்தை ஒரு இனம் இழந்துவிடும்போது**
**இயல்பாகவே அது தன் சுதந்திரத்தையும் இழந்துவிடுகிறது. "**

என்ற உண்மையை எப்போது ஒரு சமூகம் உணர்ந்து கொள்கிறதோ அப்போதே அது சுதந்திரத்தின் படிக்கட்டில் தன் பாதத்தை உறுதியாகப் பதித்து விடுகிறது. ■

## பொங்கல் ஒன்று கூடல்



பிரான்சின் மேற்கெல்லையில் கடைசித்தரை என அழைக்கப்பெறும் பினிஸ்தெயர் மாவட்டத்தில் வாழும் தமிழர்கள் இவ்வருட பொங்கலன்று ஒன்றிணைந்து கொண்டாடினார்கள். கம்பர் நகருக்கண்மையிலமைந்த ஒரு கிராமத்தில் வாழும் திரு ஜெகன் குடும்பத்தினரின் வீட்டு முற்றத்தில் எங்கள் ஊர் நினைவுகளை மீட்டிடும் பொங்கல் அனைவருக்கும் இதமாக இருந்தது. இவர்கள் தங்களை தமிழர் கலாச்சார சங்கமாக இணைத்திடும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

# தூவானம்

☐ தகவலுக்காக:
தமிழுக்கு வந்த எமிலி ஜோலா -வின் நாவல்கள். 1.) நானாவின் தாய் (1952) - ஆர். ஆறுமுகம் 2.) தெரெஸா (1955) -குமிலன் 3.) நானா (1956) -எம். முத்தையா 4.) தப்பிப் பிறந்தவர் (1957) -எஸ். கே. சாமி 5.) சுரங்கம் (1957) -எஸ். பி. ராமச்சந்திரன் 6.) கசங்கிய மலர் 1965) -கார்த்திகேயன்
மூலம்: திராவிட மொழி இலக்கியங்கள் - ச.வே.சுப்பிரமணியன் தகவல்: சச்சிதானந்தம்

☐ மௌனம் பத்திரிகை நிற்பாட்டுப்பட்டு விட்டது என நண்பர்கள் மூலம் அறிந்தபோது ஏமாற்றமாக இருந்தது. ஐரோப்பாவில் இன்று, பல ஆயிரக்கணக்கான தமிழர்கள் இருந்தும் பல இடையூறுகளுக்கு நடுவே ஆரம்பிக்கப்படும் பத்திரிகைகள் நிறுத்தப்படுவது கவலைக்குரியது. உங்கள் பத்திரிகை மீண்டும் தொடர்ந்து வர இருக்கிறது என்று அறிந்தபோது உண்மையிலேயே மகிழ்ச்சியாக இருந்தது. வாழ்த்துகள். இதழின் வடிவமைப்பு உண்மையிலேயே தரமானதாக இருந்தது. சீனச் சிறுகதை அதன் பின்னணியுடன் வெளிடப்பட்டது அந்நாட்டு நடப்புகளைச் சுட்டிக்காட்ட நல்ல வாய்ப்பு. சில அருமையான வேற்றுமொழிச் சினிமா படங்களைப்பற்றி எழுதியதன் மூலம் வாசகர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கும்போது தவறவிடாதிருக்கச் செய்திருக்கிறீர்கள். இன்று பிரான்ஸ் நாட்டிற்குத் தலையிடியாக இருக்கும் அல்ஜீரியப் பிரச்சனைக்கு நீங்கள் முக்கியத்துவம் கொடுத்து அந்நாட்டைப் பற்றி வெளியிடப்பட்டிருக்கும் கட்டுரை அவசியமானதுதான். எம்மவர் பலருக்கும் காலனிய ஆட்சிக்காரர் மூலமாக மட்டுமே அறிமுகமாக்கப்பட்டிருக்கும் மற்றச் சிறுபான்மையினரைப் பற்றி ஒரு நடுநிலையான முறையில் ஆராய முற்பட்டிருப்பதை பாராட்டமல் இருக்க முடியவில்லை. வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் வாழ்வை அடிப்படையாக வைத்து ஒரு கதை கூட இல்லாதது குறையாக இருக்கிறது.
சாள்ஸ். ஜே. போர்மன் -மெலான்செல், சுவீடன்

☐ Periyar Era- விற்கு விளம்பரம் கொடுத்ததற்கு நன்றி. ஆனால் சந்தா 200$ என்று அறிவித்து விட்டீர்கள் ஒரு வருட சந்தா 20$ மட்டுமே. பெரியார் ஒரு அபூர்வப்பிறவி. வெளிநாட்டில் அவரைப் பற்றி பலர் அறியவில்லை. அவரை அறிமுகம் செய்து வைப்பதே எம் குறிக்கோள். தமிழ் படிப்பவர்களுக்கு சிந்தனையாளன் மாதா மாதம் வெளியிடுகிறோம். வருட சந்தா 10$ மட்டுமே.
ச. அ. டேவிட் -சென்னை, இந்தியா.

☐ அருமையான கவிதைகளையும், நல்ல கதைகளையும், சிறந்த கட்டுரைகளையும் தொகுத்துத் தந்திருப்பது படிப்பவர்களுக்கு அருமையான விருந்தாக விளங்குகிறது. நிதி சால சுகமா சிறு கதையில் வருகிற ஐயா மனசில் நிலைத்து நிற்கக் கூடிய குணச்சித்திரப்படைப்பு. மொழி பெயர்ப்புச் சிறுகதையான வெறி நகரம் உண்மையிலேயே சிறப்புச் சிறுகதை தான். வித்தியாசமான படைப்பு தான். அதீத நிலமைகளில் மனித இயல்பு எந்த அளவுக்குத் தரங்கெட்டுப் போகக் கூடும் என்பதை நன்கு சித்தரிக்கிறது. தூவானம் பகுதியில் காணப்படுகிற ஈழத்திலிருந்து ஒரு மடல் உள்ளத்தில் துயரம் கனக்கச் செய்யும் செய்திகளைக் கொண்டிருக்கிறது. முக்கியமாக அ. சா. முரகானந்தன் பற்றிய தகவல்கள். பிரான்சிலிருந்து எழுதப்பட்ட திறந்த மடல், புலம் பெயர்ந்த நாடுகளில் மொழி தெரியாதவர்கள் அந்தந்த நாடுகளின் மொழியைக் கற்றுக் கொள்வதில் ஈடுபடும்போது எதிர்கொள்ளும் சிக்கல்களை உள்ளபடி வெளிப்படுத்துகிறது. வேதனை தரும் விஷயம். மடலின் முடிவு உள்ளத்தை உலுக்கும்- உறுத்தும்- ஒரு கேள்வியை முன் வைத்திருக்கிறது. நிலமைகளை எண்ணும்போது, நிகழ்காலம்மட்டுமல்ல.... எதிர்காலமும் கொடிய கேள்விக்குறியாகத்தான் தென்படுகிறது. இருந்தும் களைக்காதாம் அது. கிணறு இறைக்க இறைக்க திக்கின்றது ஊற்றுக்கண் என்ற பறவையும் பாடலுமாய் கவிதையின் சொற்கள்தான் உங்கள் அனைவரது இதய ஒலியாய்- நம்பிக்கைக் குரலாய்- ஒலிக்கின்றன. உங்கள் முயற்சிகள் போற்றப்பட வேண்டியவை. உங்கள் உழைப்பு விலை மதிப்பற்றது.
வல்லிக்கண்ணன் -சென்னை. இந்தியா.

☐ நாங்கள் மொழியாக்கம் செய்து அனுப்பிய சீனச் சிறுகதை வெறி நகரம் சகித்துக் கொள்ளமுடியாத அச்சுப் பிழைகளுடன் வெளியாகியுள்ளது எங்களுக்கு வருத்தம் தருகிறது. ழ-கர, ள-கரங்கள் கூட மாற்றப்பட்டுள்ளன. சில வார்த்தைகள் மட்டுமல்லாது வாக்கியங்களும் தவறாக அச்சிடப்பட்டுள்ளன. கால் புள்ளி, அரைப் புள்ளி கூட தாறுமாறாக உள்ளன. கதையில் சித்தரிக்கப்படும் நாய்க் கொலையே பரவாயில்லை என்பதுபோல இருக்கிறது நீங்கள் அச்சிட்ட விதத்தைக் காண்கையில். அச்சிட்ட வடிவத்தில் அக்கதையை நாங்கள் பார்க்கையில், எங்களைத் தற்குறிகள் என்று வாசகர்கள் பலர் கருதுவார்களோ என்ற எண்ணமே தலைதூக்கிற்று. மௌனம் முதல் இதழுக்கு நாங்கள் மொழியாக்கம் செய்து அனுப்பிய மஹ்மூத் தார்வீஷ் பேட்டியிலும் இப்படியான கொலைகள் நேர்ந்திருக்கின்றன. பல்வேறுபட்ட நெருக்கடிகளுக்கு இடையில் இப்படித் தொடர்ந்து செயல்பட்டிருக்க வேண்டுமா என்ன?
வ. கீதா. எஸ். வி. ராஜதுரை -சென்னை. இந்தியா.

# பாரிஸில் ஓர் காலைப்பொழுது...

-புவனன்-

அந்த 'வான்' ஐப் பார்த்தபோதே
எனக்குச் சந்தேகமாகத்தான்
இருந்தது. ஆனாலும் குளிரில்
விறைத்த கட்டைவிரல்
பொறுமையிழக்க வான் கதவு
திறந்து மூட எல்லாம்
வழமைபோல் கணப்பொழுதில்
நிகழ்ந்தது.
உள்ளேயிருந்த நால்வரினதும்
திருட்டுமுழிகள் வேறு என்னை
வெருட்டின. எல்லோரும்
அல்ஜீரியர்கள் அல்லது
அவர்களைப்போன்றவர்கள். உள்ளே
இருந்த சாந்துஅகப்பை, ஏணி,
நான்கைந்து பெயின் ரின்கள்,
இன்னும் சில அழுக்குத்துணிகள்
என்பன அவர்களை கடுமையான
தொழிலாளிகள்போல்
இனம்காட்டியதால் திருட்டுப்பயம்
சிறிது குறைந்தது.

எனது பையினுள் இருந்த புத்தகம்
ஒன்றை எடுத்துப்
படிக்கத்தொடங்கினேன். 'அடையார்'
என்று எம்மவர்களால்
இடுகுறிப்பெயரால் அழைக்கப்படும்
அல்ஜீரியர்கள் மற்றும்
வடஆபிரிக்கர்ளின் திருட்டுக்கள்,
வழிப்பறிகள் பக்கங்களில்
படம்படமாக ஓடின. வானுக்குள்
இருந்தவர்கள் தங்கள் மொழியில்
உரத்துக்கெக்கட்டம்
விட்டுச்சிரித்தார்கள்.
ஐயோ! இது என்ன வதை!

இப்போ மூன்றுகிழமையாக கஷ்டம்
தராத பயணம் இன்று மட்டும் ஏன்
இப்படியானது?
பேசாமல் நடந்தே போயிருக்கலாம்.
கண்ணைமூடிக்கொண்டு எவ்வளவு
முட்டாள்தனமான காரியம்
பார்த்திருக்கிறேன்.
என்ன பதினைந்து கிலோமீற்றர்
தூரம் பெரிய தூரமா?
அவன் சிவா ஒவ்வொருநாளும்
நாலுமணித்தியாலங்கள் நடந்துதானே
கழிக்கிறான்.
எங்களுக்கு யாருடையசாபமோ...
இப்பிடியெல்லாம் அலைகிறோம்?

அம்மாவும் அப்பாவும் எந்தெந்த
அகதிமுகாமிலோ? அல்லது எந்த
மரத்தின்கீழ்டிவாரமோ?
முட்டிவரும் மூச்சோடு அப்பா
இவ்வளுநாளும்
தாக்குப்பிடித்திருப்பாரோ என்பதும்
கூடச் சந்தேகமே!
இங்கே நாங்கள்....

பிரான்ஸில் இப்படி ஒரு வேலை
நிறுத்தம்? மூன்றுகிழமைக்கு
மேலாகத்தொடருமென்று
யார்நினைத்தார்கள்? சமூகபாதுகாப்பு
உதவிகளில் அரசாங்கம்
கைவைக்கிறதென்பது சாதாரண
பிரச்சினையில்லைத்தான்.
இருந்தாலும், பிரான்ஸில் சில சில
விசயங்கள் வித்தியாசமாகத்தான்
இருக்கிறது.
ஓ! முதன்முதலில் தொழிற்புரட்சி
நடந்தநாடல்லவா?
இங்கு என்னவும் எப்பவும்
நடக்கலாம்?

வான் கண்ணாடிக்குள்ளாக
எட்டிப்பார்த்தேன். வான் பாரிஸ்
போகும் வழமையான பாதையில்
போவதாகத்தெரியவில்லை.

ஐயோ! இவங்கள் எங்கயோ
கொண்டுபோறாங்கள். உவங்களோட
என்னண்டு.....
சிலவேளைகளில் பாதைகள்
நெரிசலாக இருந்தால்
வேறுபாதைகளால் சுத்திவளைத்து
போய்ச்சேர்வது வழக்கம்தான். அது
சாரதியின்
சாதுரியத்தைப்பொறுத்தது. ஆனால்
இவங்கள் அடயார்....

ஒருவாறு தைரியத்தை
வரவழைத்துக்கொண்டு கேட்டேன்.
நீங்கள் பாரிஸுக்குத்தானே
போகிறீர்கள்?
சாரதி ஆசனத்திலிருந்தவன் ஓம்
என்று தலையை அசைத்தான்.
பதில் திருப்தியாக இல்லை.
அதற்குள் இன்னொருவன்
முந்திக்கொண்டு ஒபேவில்லியர்ஸ்
என்றான்.
ஐயோ ஒபேவில்லியர்ஸ்!
முழுக்கள்ளர்ர இடம்.
சிவனே! யார் முகத்தில்
முழித்தேனோ? இன்றைக்கு ஏதோ
முடிவு காலம்தான்.

ஏதோநடப்பது நடக்கட்டும்.
'அலன் யுப்பே' முன்னுக்கு
நிண்டால் பிடிச்சு நசிப்பன் போல
இருந்தது.
நான் வானுக்குள் கள்ளர் கணக்கில்
முழுசினபடி இருந்துகொண்டு,
தெருவோரங்களில்
கைவிரல்களைக்காட்டிக்கொண்டும்,
பெரிய மட்டைகளில் தாம்போகும்
இடங்களை பென்னம்பெரிய
எழுத்துக்களில் எழுதி கையில்
பிடித்துக்கொண்டும்
நடப்பவர்களைப்பார்க்க
வேடிக்கையாகவும் இருந்தது.
பலர் சைக்கிள்களில்
கஷ்ரப்பட்டுச்சவாரி செய்தார்கள்.
பாரிஸ் கடைகளில் சைக்கிள்கள்
தீர்ந்துபோயிருந்தன..
வேலைக்குப்போகாவிட்டால்
வேலைபறிபோய்விடும் என்றபயத்தில்
நடந்தோ உருண்டோ
திருக்கைலைக்காட்சிகாணப்போன

அப்பர்சுவாமிகள் போல் நண்பர்கள்
பலர்
போய்வந்துகொண்டிருந்தார்கள்.
இன்றுநாளை
என்றுபார்த்திருந்துவிட்டு
சைக்கிள்கள் வாங்கி திருடர்களிடம்
பறிகொடுத்தவர்களின்
சோகக்கதைகளும் ஏராளம்.
முதல்நாட்களில் நடப்பதற்கு
வழியும் தெரியாது கேட்பதற்கு
மொழியும் தெரியாது
திசையறிகருவிகளுடன் நடந்து
திரிந்த எம்மவர்களின்
கண்ணீர்க்கதைகளும் நானறிவேன்.
பாரிஸின் ஒருதொங்கலுக்குப்
போவதற்காக திசையறிகருவியின்
உதவியை நாட, அது நேரெதிர்
தொங்கலில் 'கொண்டுசேர்த்த என்
நண்பனொருவனின் சோகத்தை
யாரிடம் சொல்லி முறையிடலாம்?

எனது நிலை இன்னும்
கவலைக்கிடமாகியது.
ஒருமணித்தியாலத்திற்கு மேல் வான்
ஓடிக்கொண்டிருந்தது.
ஒபேவில்லியர்ஸ் ம் கடந்து
ந்ததுவிட்டது. ஐயோ என்று
கத்தவேணும் போலிருந்தது.
ஆனால் கத்தியும் எதுவித
பிரயோசனமுமில்லை என்பதும்
தெரிந்தது.
சிலவேளை நானே வம்பை
விலைக்கு வாங்குவதாகவும்
அமைந்துவிடலாம் என்று
பேசாமல் இருந்துவிட்டேன்.

'நீங்கள் பாரிஸுக்குத்தானே
போகிறீர்கள்?' பொறுமைதாங்கமல்
திரும்பவும் கேட்டேன்.
அவர்கள் சிரித்தார்கள்.
சிரிபொலி அடங்க வான் நின்றது.
இறங்கச்சொன்னார்கள்.
வெருட்சியுடன் இறங்கினேன்.
என்ன ஆச்சரியம்!. நான் வந்து
சேரவேண்டிய இடம்.!!

அவர்கள் எனக்காகவே
மிகுதித்தூரமும் வந்து
என்னைச்சேர்ப்பித்திருக்கிறார்கள்
என்று அறிந்தபோது எனது
கண்கள் பனித்தன.

அவர்கள் திரும்பிப்
போய்க்கொண்டிருந்தார்கள்.

□-பிரான்ஸின் தற்போதய பிரதமர்.

# நானும் நீங்களும் நானும்

குப்பையாய் கிடக்கிறது
ஈசல்களின் சிறகுகள்
பட்டாம்பூச்சி பறக்கிறது
அவ்வப்போது.

புற்று மழையில் கரைந்து போக
பாம்பு அலைகிறது
வாசம் தேடி .

மூலையில் கிடக்கிறது
எல்லோருக்கும் பொருந்தும்
என் முகமூடிகள்.

நான் முகமூடிகளை பிரசவிக்கிறேன்
சில சமயம் மட்டுமே
முகங்களை.

எத்தனையா குழந்தைகள்
ஒரே தொப்புள் கொடியுடன் நெளிகின்றன
முகம் மட்டுமில்லாமல்.

எனக்குள் 'நான்'
பிணமாய் செல்லரித்துப்போய்
நிர்வாண உடம்புடன்
முகம் தொலைத்து
பல நேரங்களில்
என்னை நான் பிரசவித்திருக்கிறேன்
என் பணமும் கூட
என்னை பிரசவித்திருக்கிறது
எனக்கு பசித்த போதெல்லாம்
உங்களை தின்றிருக்கிறேன்
உங்களின் பசிக்கு
என்னை சமைத்திருக்கிறேன்
என்னில் 'நான்'
கும்மாளமிட்டிருக்கிறது
சேற்றில் எருமையாய்
எனக்குள் நான்
பச்சையமாய்
நிலாத்துண்டுகளாய் சிதறி
என்னுள் நான்
யோனிகளாய் இருக்கிறேன்.
என்னை நான் புணர்ந்து
உங்களுக்கு தருகிறேன்
என் வித்தில்
பிரசவிக்கிறேன் உங்களையும்

**ஆபுத்திரன்**

# எங்கள் பக்கம்

## 'கலை முகம்'

கலைவழி இறைபணி எனும் விருது வாக்கியத்துடன் காலாண்டு கலை இலக்கிய இதழாக திருமறைக் கலாமன்றம் வெளியிடுகின்றது. "மானுடம் அழியும் சிறுமையில் கண்ணீரின் வறுமையும், செந்நீரின் வெறுமையும் உணர்தப்பட வேண்டும் இப்பணியை கலை உலகத்தால் சாதிக்க முடியும்" என்கிறது இவ்விதழ் தலையங்கம்.

தொடர்புகளுக்கு:

* Centre for performing arts. Hotel Imperiel -room No 302. 14/14A -1 Duplication Road. COLOMBO 4. SRI LANKA.

* திருமறைக் கலாமன்றம், 238, பிரதான வீதி, யாழ்ப்பாணம். இலங்கை.

## 'காகம்'

முற்றமெல்லாம் புழுங்கல் - அதனால் எம் நெஞ்சமெல்லாம் அம்முற்றம். -ஒரு தாய்-

இதுவரை பத்து இதழ்கள். டென்மார்க்கிலிருந்து வெளிவருகிறது.

தொடர்புகளுக்கு:

* TULI PUBLICATION. Baunehojen -35. 3320 Skaevinge. DEMARK.

## 'கனவு'

சுப்ரபாரதிமணியன், 8/ 707c பாண்டியன் நகர், திருப்பூர் 641 602 இந்தியா.

## 'சமர்'

கருத்து மக்களைப் பற்றிக் கொண்டால் மாபெரும் சக்தியாக உருவெடுக்கும் -எனும் பிரகடனத்துடன் வெளிவந்து கொண்டிருக்கிறது. இது கூறுகின்றது "சமாதானம் என்பது அவங்களின் கூட்டு அல்ல, அது சுயங்களுடன் கூடிய கூட்டுறவு"

* SAMAR. 87 Rue de Colombes. 92600 ASNIERES SUR SEINE. FRANCE.

## 'இலக்கு'

"இது ஒரு நிறுவனத்தின் இதழல்ல. தனிமனிதனின் இலக்கிய இயக்கம்" என்ற அறிவிப்புடன் இவெளிவருகின்றது. இதுவரை 4 இதழ்கள் வெளிவந்துள்ளன. கடைசி இதழ் டானியல் நினைவு மலர்.

* ELAKKU. 2/158 Moovarasampathu Main Road. Madras -600 091. INDIA.

## 'நிகழ்' (காலாண்டிதழ்)

தமிழில் பதிய சிந்தனைகளை விதைக்கின்றது. ஆசிரியரும் வெளியிடுபவரும் - ஞானி

* ஞானி, 123 காளீஸ்வரர் நகர், கோவை -641 009. இந்தியா.

## 'நதி'

தேன் தமிழ் ஓசை எனும் வானொலிச் சேவையின் மூன்றாம் ஆண்டு நினைவு மலர்.

* RADIO TAM IL. Post Boks -29. 5001 BERGEN. NORWAY.

'எனவே இனி'

இதுவரை 5 இதழ்கள் வெளிவந்துள்ளன. புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வதியும் இலக்கியப் பிரக்ஞை உள்ளவர்களை 'எனவே இனி' இசன்றடைய வேண்டுமென்பதில் ஆர்வமாயுள்ளோம் என்கிறார் இதழாசிரியர்.

* ENAVAE INE, 195 Dharuzeena, Old Police Road, Akkaraipattu- 01. SRI LANKA.

வெளிவரத் தயார் நிலையில்:

கே. எஸ். துரை எழுதிய

**ஒரு பூ**

சமூக, வரலாற்று நாவல். தாயக மண் உங்கள் காதோடு பேசும் கதைச்சுவை.

* K. SELVADURAI. Fruehojvej 10. 2. th. 7400 Herming. Denmark.

*மௌனம் இதழ்-6 வெளிக்கொணரப்பட்டாயிற்று. இதழ் வெளிவரும் கால இடைவெளியைக் கணக்கிலெடுத்து இவ்விதழையும் சிறப்பிதழாக 64 பக்கங்களுடன் கொண்டுவந்துள்ளோம். தீவிர முயற்சிகளின் பின் ஐரோப்பாவிலேயே அச்சகத்தில் பதிப்பிற்பதற்கான ஏற்பாட்டை மீளவும் பெற்றுவிட்டோம்.*

*சென்ற இதழ் வசதியின்மையால் போட்டோப் பிரதி முறையில் வெளிவந்தபோது வாசகர்கள், எழுத்தாளர்கள், ஆதரவு நல்குவோர் பலரின் விமர்சனங்களை வாங்கிக் கட்டிக்கொண்டோம். அகதி இருப்பில் தாங்கிக்கொள்ள முடியாத நெருக்கடிகளுக்கு மத்தியில், விளம்பர- வியாபார பூமியில் ஒரு இலக்கிய இதழை நடாத்துவது என்பது சாதாரண விடயமன்று. தகுந்த ஆதரவு நெஞ்சங்களின் ஒத்துழைப்பாலேயே இதழ் உருவம் பெறுகின்றது. இதற்காக எம் நன்றிகள்.*

*மௌனம் வியாபாரப் பத்திரிகை அல்ல. தன் விரிவாக்கத்தில் தீவிர அக்கறை கொண்டது. இதற்கான ஆலோசனைகள் மற்றும் ஆக்கபூர்வமான ஒத்துழைப்புகளையும் நாடிநிற்கிறது.*

*தவிர, மௌனத்தின் புதிய முகவரியை ஞாபகமூட்டிக் கொள்கிறோம். எமக்கு பல்வேறு இதழ்களை அனுப்பி வரும் சக இதழாளர்கள், இவ்விதழ் தொகுப்பிற்கு ஒத்துழைப்பு வழங்கிய எழுத்தாளர்கள், கணனி தட்டெழுத்தாளர்கள், இடம் பெற்ற படங்களுக்குரியவர்கள், வாசகர்கள் அனைவருக்கும் நன்றிகள்.*

*மௌனம் முகவரி: (சாள்ஸ் விக்னேஸ் என்ற பெயரைக் கட்டாயம் குறிப்பிடவேண்டும்)*

*Mr. VIGNES CHARLES*

*5. ALLEE AUGUSTE RENOIR*

*92300 LEVALLOIS - PERRET.*

*FRANCE*

மௌனத்தின் விரிவாக்கத்திலும், வெளியீட்டிலும் அக்கறை கொள்ளும் நண்பர் ஆர்வலர்

Pathmanaba Iyar.
33. West land House.
Rymill street.
North Woolwich.
LONDON E16 - 2LE.
U. K.

# ஒஸ்மான் செம்பேன் உலகுக்குள் நுழையுமுன் ...



இந்திய, தமிழகச் சூழலில் இயக்குனர் செம்பேன் ஒஸ்மானின் அறிமுகம் பல்வேறு கடுமையான விமர்சனங்களையும், கூச்சல்களையும் எழுப்பக் கூடும். காரணம் மதங்களின் பாலான அவரது கடுமையான விமர்சனம். குறிப்பாக அதிகாரத்துடன் இணைந்து கொண்ட முஸ்லீம் மதம் எதேச்சாதிகாரமாக சீரழிவது பற்றிய ஆபிரிக்க விரோதச் சூழலியலான விமர்சனம்.

செம்பேனை அறிமுகப்படுத்த எனது காரணம் இதுதான். ஏகாதிபத்திய, நவகாலனிய தேச விடுதலைப் போராட்ட சமூகங்களில் இன்று அரசுகளுக்கும் அரசியலுக்கும் மதத்திற்கும் அதிகாரத்திற்கும் இருக்கும் உறவு பற்றியவை இவரது படங்கள். எதியோப்பியா ஐவரி கோஸ்டில் ஆங்கில காலனியாதிக்கம்; கிறிஸ்தவம், செனகலில் பிரெஞ்சு காலனியாதிக்கம்; கிறிஸ்தவம்; இஸ்லாமிய அரசியல் ஆதிக்கம். இந்தியாவில் ஆங்கில, பிரெஞ்சு, டச்சு ஆதிக்கம்; கிறிஸ்தவ நுழைவு; இஸ்லாமிய படையெடுப்பு. இந்தியாவில் இன்னொரு மிக முக்கியமான விசேஷ அம்சம் என்னவென்றால் 38 கோடி தாழ்த்தப்பட்ட தலித் மக்கள். ஆபிரிக்காவுக்கு இணையான அடக்குமுறையின் கீழான வாழ்வு இவர்களுடையது. புரோகித இந்து மதத்தின் ஆதிக்கம்; பௌத்த, முஸ்லீம் மதமாற்றம் போன்றன தலித் மக்களின் சிறு தெய்வ வழிபாட்டை, பூர்வீகக் கலாச்சாரத்தை அழித்தன.

இந்தக் கலாச்சாரப் பேரழிவுக்கான எதிர்ப்புக் குரல் இந்திய- தமிழ்க் கலாச்சார வெளியில் பதியப்படவில்லை. இத்தகைய ஒரு பொறியையேனும் இவ்வறிமுகம் தூண்டிவிட்டால் அதுவே இக்கட்டுரையின் முதல் நோக்கத்தின் செயல்தளமாகும்.

மூன்றாம் உலகச் சூழலில் நவகாலனியத்திற்கு புதிய எதிரியாக இருப்பது இஸ்லாமிய மதம். இஸ்லாமிய மதத்தின் அரசியல் பரிமாணம் நவகாலனிய எதிர்ப்பைக் கொண்டிருப்பது கூட அதன் சித்தாந்த தளத்திலானதல்ல. மாறாக அரசியல் சந்தர்ப்பவாதத் தளத்திலானது. இஸ்லாமிய அரசியல் அல்லது அரசியல் இஸ்லாம் (Political Islam) பல்வேறு மானுட எதிர்ப்புச் சிந்தனைகளை தன்னகத்தே கொண்டிருக்கிறது. சவூதி அரேபியா, ஜோர்டான், சிரியா போன்ற நாடுகள் நேரடியாக மேற்குலகோடு குலவுபவை. அந்தந்த நாடுகளின் இடதுசாரிகளை- மனித உரிமையாளர்களை ஒடுக்குபவை. இதற்கு எதிர்த் திசையில் நவகாலனியத்தை எதிர்த்து வருபவையாகத் தோற்றம் காட்டும் நாடுகளான ஈரான், ஈராக், செனகல் போன்றவை தத்தமது நாடுகளில் இடதுசாரிகளை- மனித உரிமையாளர்களை ஒடுக்கிவருபவை. தமது தாயகத்திற்காகப் போராடும் குர்து மக்களை (Kurdistan people) ஈரான், ஈராக், துருக்கி, சிரியா போன்ற எல்லா நாடுகளும் தமக்குள் இருக்கும் எல்லா மாறுபாடுகளையும் மறந்து கொன்றொழித்து வருகின்றன.

இஸ்லாமிய மதத்தினுடையதும் எந்த மதத்தினுடையதுமான ஆதிக்க அதிகார வேர்களை அதன் உள்ளார்ந்து நாம் பார்க்கவேண்டும். பெண்களின் அடிப்படை உரிமைகளை நிராகரிப்பவையாக அனைத்து முஸ்லீம் நாடுகளின் அதிகாரமும் தமது மாறுபாடுகளை மறந்து செயல்படுகின்றன. இந்திய துணைக்கண்ட சூழலில் பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை, இந்தியா என்று விசேஷமாக எடுத்துக் கொண்டு நாம் பிரச்சனைளை அணுகவேண்டும். எல்லா நாடுகளிலும் ஆட்சியில் இருக்கிற அதிகார வர்க்கத்தோடு மதங்களை அதிகார பூர்வமாக இணைத்துக் கொண்டதோடு சிறுபான்மை இனத்தை ஒடுக்குபவையாக உள்ளன. இச்சூழலில் ராஜதுரையின் இந்து- இந்தி- இந்தியா முன்வைத்திருக்கும் கருதுகோள் முக்கியத்துவம் பெறுகிறது. இந்திய ஆளும் வர்க்கத்தின் இத்தகைய முக்கூட்டு பற்றிய விவாதங்கள் கூட இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை அதை மீறி உலகு என எடுத்துச் சொல்லப்பட வேண்டும்.

இந்தியச் சூழலில் இந்து மதத்தின் மானுட விரோதத்தன்மையை, ஆதிக்கத்தை விமர்சிக்கும்போது அதன் எதிர்த் திசையிலும் நம்மை கிறிஸ்தவ, இஸ்லாமிய, பௌத்த மதங்களில் இருக்கும் மானுட விரோதத் தன்மைகளைக் கருத்தில் எடுக்காத நிலைக்கு இட்டுச் சென்றுவிடக் கூடாது. துரதிருஷ்டவசமாக இந்திய- தமிழகச் இடதுசாரிகளும்- எஸ்கர் அலி என்ஜினியர் உட்பட மதசார்பற்ற அம்சங்களுக்கு அழுத்தம் தருவதினின்றும் விலகி விடுகிறார்கள். இன்று உலகத்தின் தனித்தனி நாடுகளை எடுத்துப் பார்க்கும் போது மதத்திற்கும், அதிகாரத்திற்கும், ஆணாதிக்கத்திற்குமான உறவு தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. வெள்ளை அமெரிக்கா கிறிஸ்தவ அடிப்படைவாதமாகச் சீரழிவதைச் சொல்கிற படங்கள் நிறைய வருகின்றன. ஹெரால்ட் பின்டர் கதை வசனம் எழுதிய THE HANDMAIDS TALE படம் அத்தகையது. அனந்த் பட்டவர்த்தனின் FATHER, SON, AND HOLY GOD படம் பிரதானமாக மதத்திற்கும் அதிகாரத்திற்கும் ஆணாதிக்கத்திற்கும் இருக்கும் உறவை அயோத்தி- பாப்ரி மஜீத் சூழலிலும் பம்பாய் சூழலிலும் விவரிக்கிறது. தஸ்லிமாவின் லஜ்ஜா நாவல் பங்களாதேஷ் சூழலில் இதையே பேசுகிறது. இதன் ஆபிரிக்கப் பரிமாணம் தான் ஒஸ்மான் செம்பேனின் திரைப் படங்கள்.

காலனித்துவம், மதம், அதிகாரம் இவைகளுக்கு இடையிலான பிரச்சனைகளை, பின் காலனித்துவ அதிகார வர்க்கத்தின் ஈனத்தனத்தைப் பற்றிப் பேசும் படங்கள் தான் ஒஸ்மான் செம்பேன் படங்கள். அது அதே விதத்தில் நமது சமூக அமைப்புக்கும் பொருந்தி வரக்கூடியது தான்.

- யமுனா ராஜேந்திரன் -

# கலைஞன் நிரந்தரக் கலகக்காரன்

## ஒஸ்மான் செம்பேன் OUSMANE SEMBENE

## மூன்று ஆபிரிக்கத் திரைக் காவியங்கள்

ஒஸ்மான் செம்பேன் ஆபிரிக்கச் சினிமாவின் முதல் கலைஞன். மூத்த கலைஞன். அவருக்குப் பின் வந்த அனைத்து ஆபிரிக்க சினிமா இயக்குனர்களுக்கும் ஆதர்ஷமாகத் திகழ்கின்ற நிரந்தரக் கலகக்காரன். உலக சினிமாவில் நுழைந்து ஆதிக்க வேர்களை அசைத்துக் கொண்டிருப்பவன்.

1963 -இல் இவரது முதல் குறும்படம் 'ஸொங்காய் சாம்ராஜ்யம்' (The Songhai Empire / L'Empire Songhai) வெளியானது. 1992 ஆம் ஆண்டு அவரது 11-வது படைப்பாக 'குலேவார்' (Gulewaar) எனும் திரைப் படம் வெளிவந்தது. இந்த 11 சிருஷ்டிகளில் 5 குறும்படங்கள்; 6 முழு நீளக் கதைப்படங்கள்.

நான் பார்தவை 1963 -இல் வெளியான 20 நிமிடப் படமான 'போரம் வீதி' (Borom Street) எனும் குறும்படம் மற்றும் 6 முழு நீளப்படங்கள்.

1. மணி ஆர்டர் (The Money Order / Mandat) - 105 நிமிடங்கள் - 1968.

2. இடிக் கடவுள் (The God of Thundur/ Emitai) - 95 நிமிடங்கள் - 1971.

3. சாபம் (Xala) - 116 நிமிடங்கள் - 1974.

4. செட்டோ (Ceddo) -120 நிமிடங்கள் - 1976.

5. தியாராயோ முகாம் (Camp de Thiaroye) - 120 நிமிடங்கள் - 1988.

6. குலேவார் (Gulewaar) - 122 நிமிடங்கள் - 1992.

ஆறு படங்களே 1995 வரையிலுமான அவரது முழு நீளக் கதைப்படங்கள். இவை அனைத்துமே ஆபிரிக்கத் திரைக் காவியங்கள். 1991 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் தொலைக்காட்சி நிறுவனம் AFRICA ON FILMS என்கிற நிகழ்ச்சியையும், 1992 ஆம் ஆண்டு சேனல் நான்கு தொலைக்காட்சி நிறுவனம் AFRICA ON AFRICA எனும் நிகழ்ச்சியையும் வழங்கியது. அச்சமயத்தில் அவருடைய Xala மற்றும் Ceddo தவிர்த்த நான்கு திரைப்படங்களும் திரையிடப்பட்டன. Ceddo படம் 1995 ஆம் ஆண்டு லண்டன் ஆபிரிக்கத் திரைப்பட விழாவில் திரையிடப்பட்டது. Xala படத்தின் வீடியோப் பிரதி அவ்விழாவை ஒட்டியும் செம்பேன் ஒஸ்மான் கலந்து கொள்ளும் கருத்தரங்கையொட்டியும் அவரைச் சிறப்பிக்கும் முகமாக வெளியிடப்பட்டது.

ஆபிரிக்காவை பூர்வீக கறுப்பு ஆபிரிக்கா என்றும், மரபான இஸ்லாமிய பழுப்பு ஆபிரிக்கா என்றும் பிரிக்கலாம். எகிப்து, அல்ஜீரியா, டுனீசியா, மொறாக்கோ போன்றவை இஸ்லாமிய ஆபிரிக்கா. செனகல், எதியோப்பியா, மாலி, பர்க்கினா பாகோ, நைஜீரியா போன்றவை கறுப்பு ஆபிரிக்கா. நெக்ரூமா போன்றவர்கள் முன்வைத்த PAN AFRICANISM, செடார் செங்கார் போன்றவர்கள் முன்வைத்துப் பேசிய கலாச்சாரக் கருத்துருவான NEGRITUDE போன்றவை கறுப்பு ஆபிரிக்க கலாச்சார அரசியல் சார்ந்த சித்தாந்தப் போக்குகள்.

செம்பேன் கறுப்பு ஆபிரிக்க மரபில் வந்தவர். செனகல் நாட்டைச் சேர்ந்தவர். 1923 -ம் ஆண்டு ஜனவரி 1-ம் நாள் தெற்கு செனகலில் பிறந்தவர். தெற்கு செனகல் பஞ்சமும், பட்டினியும், வரட்சியும் நிறைந்த விவசாயிகளின் பிரதேசம். தாக்கர் (Dakar)

செனகலின் தலைநகர். செம்பேன் சிறுவனாக இருந்தபோது அவரது தாய், தந்தையர் மணவிலக்குப் பெற்றிருந்தனர். அவரது தந்தை, பாட்டி, உறவினர்களோடு கழிந்தது அவரது இளமைப் பருவம். 12 வயதில் பள்ளிக்குச் சென்றார் செம்பேன். அது பிரெஞ்சு பள்ளிக்கூடம். தன் 14 - வது வயதில் பள்ளிக்கூடம் பிடிக்காமல் அதைவிட்டு வெளியேறி கார் மெக்கானிக்காக வேலை செய்தார். பிற்பாடு தச்சராகவும், மீனவனாகவும் தொழில் செய்தார். அவர் தன் பெரும்பாலான நேரத்தை தொழில் முறையல்லாத நாடகக் குழுக்களோடும், உள் ஊர் வுலப் (Wolof) மொழி கதை சொல்லிகளோடும் (Griots) கழித்தார். மாலை வகுப்புகளிலும் கலந்து கொண்டார்.

தனது 19-வது வயதில் இரண்டாம் உலகப் போரில் பிரெஞ்சு இராணுவத்துக்காக 4 ஆண்டுகள் ஐரோப்பாவிலும், ஆபிரிக்காவிலும் போரிட்டார். 1947-48 இல் ஆறு மாதங்கள் நடைபெற்ற தாக்கர்-நைஜர் கூட்டு ரெயில்வே வேலை நிறுத்தத்தில் பங்கெடுத்தார். அக்காலகட்டத்தைய அனுபவங்களே பின் அவரது முதல் நூலாக -GODS BITS OF WOOD- வெளிவந்தது.

1948 ஆம் ஆண்டு கட்டணமின்றி பிரெஞ்சுக் கப்பலில் ஒளிந்திருந்து பிரான்சுக்குப் போன



செம்பேன். ஸித்ரோயன் (Citroën) கார் கம்பனியில் தொழிலாளியானார். மூன்று மாதம் பின் மார்ஸல் பெயர்ந்த அவர், அங்கு தீவிரமான அரசியல் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டார். செனகல் தொழிலாளர் கூட்டமைப்பின் செயலாளராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். பிரெஞ்சுக் கம்யூனிஸ்ட்டுக் கட்சியின் இணை அமைப்பான தொழிலாளர்களின் பொதுக் கூட்டமைப்பின் உறுப்பினராகவும் செயல்பட்டார்.

செம்பேன் அடிப்படையில் அரசியலில் செயல்பாட்டாளர், தொழிற்சங்கவாதி, இலக்கியவாதி 1956 இல் அவரது THE BLACK DECKER நூல் வெளிவந்தது. தொடர்ந்து MANDAPI, CEDDO, XALA போன்ற நாவல்கள் வெளிவந்தது. இச்சமயத்தில் பரந்துபட்டளவில் கல்வி அறிவற்ற மனிதர்களோடு உரையாடுவதற்கு இன்னும் கூடுதல் பொருத்தமான சாதனம் சினிமா என்பதை உணர ஆரம்பித்தார். 1962 ஆம் ஆண்டு சினிமா பயிலுவதற்காக மாஸ்கோ கோர்க்கி இன்ஸ்டிட்யூட்டுக்குச் சென்றார். 1963 ஆம் ஆண்டு செனகல் திரும்பிய அவர் 'ஸொங்காய் சாம்ராஜ்யம்' குறும்படத்தைத் தயாரித்தார். தொடர்ந்து 'போரம் வீதி' வெளியானது. 'போரம் வீதி' தான் முதன்முதலாக தொழில்நுட்பத் தேர்ச்சியுடன் உருவாக்கப்பட்ட முதல் திரைப்படமாக, குறும்படமாக இன்றளவும் இருக்கிறது. இதன் நீளம் 20 நிமிடங்கள் மட்டுமே. அதாவது குறுங்காவியம்.

செம்பேனுக்கு இப்போது 73 வயதாகின்றது. இந்தக் கிழட்டுச் சிங்கம்தான் இன்றளவும் ஆபிரிக்கச் சினிமாவின் கோபக்கார இளைஞனாக (Angry young man) கொதித்துக் கொண்டிருப்பவர். தமது மக்களின் அடிமைத்தனத்தை சகிக்காதவர். அதிகாரத்தை எதிர்த்து நிற்பவர். கலகக்காரன்.

செனகல் நாடு 75 லட்சம் மக்களைக் கொண்ட சிறிய நாடு. மூன்று இன மக்கள் இங்கு இருக்கிறார்கள். Wolof, Serar, Pulaar இனங்கள். இதில் Wolof இனத்திற்கு மட்டுமே மொழி இருக்கிறது. ஜனத்தொகையில் முக்கால் பங்கினர் இந்த வுலப் மக்களே. ஜனத்தொகையில் பெரும்பாலானோர் பின்பற்றுவது முஸ்லீம் மதம். 10 சதவீத்தினர் மட்டுமே கிறீஸ்தவ நம்பிக்கைகளையும், பிற மரபார்ந்த ஆபிரிக்க நம்பிக்கைகளையும் பின்பற்றும் மக்கள்.

பிரெஞ்சு மொழியே அரசு மொழி- அதிகாரபூர்வமான ஆட்சி மொழி. ஜனாதிபதி ஆட்சி முறை. மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான பல்கட்சி பங்கெடுப்பு (Limited multy party participation). மூன்று கட்சிகள் 1. தாராளவாத ஜனநாயகக் கட்சியான செனகல் ஜனநாயகக் கட்சி, 2. மார்க்ஸிஸ்ட் லெனினிஸ்ட் கட்சியான ஆபிரிக்க சுதந்திரக் கட்சி, 3. சமூக ஜனநாயகக் கட்சியான செடார் செங்கார் தோற்றுவித்த செனகல் சோசலிஸ்ட் கட்சி. செடார் செங்காரின் இக்கட்சி ஜெர்மன் சோசலிஸ்ட் கட்சியின் தலைமையிலான சோசலிஸ்ட் இன்டர்நேஷனல் அமைப்புடன் தொடர்புகளைப் பேணியது. பிரிட்டிஷ் லேபர் கட்சியும் இந்திய பிரஜா சோசலிஸ்ட் கட்சியும் (லோகியா - ஜார்ஜ் பெர்னாண்டஸ்) இத்தகைய உறவுகளைக் கொண்டவைதான். 1976 ஆம் ஆண்டு செனகல் அரசியல் சட்டத்தின் படி செங்காரின் கட்சியான சோசலிஸ்ட் கட்சி மட்டுமே அங்கீகரிக்கப்பட்ட கட்சி. 1976 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து ஆட்சியிலிருப்பது செங்காரின் கட்சியே.

செடார் செங்கார் உலக அளவில் அறிப்பட்ட கவிஞர். சிந்தனையாளர். சமூக ஜனநாயகவாதியான இவரது பொருளாதாரக் கொள்கைகள் ஆபிரிக்க மக்களுக்கு பேரழிவையே கொண்டு வந்தன. செடார் செங்காருக்கும் ஒஸ்மான் செம்பேனுக்கும் அரசியல் அடிப்படையில் கலை, சினிமா, மொழி பற்றி தீவிரமான வாதப் -பிரதிவாதங்கள் நிகழ்ந்தன.

ஆபிரிக்காவைப் புரிந்து கொள்ளவும், செம்பேன் படங்களைப் புரிந்து கொள்ளவும், அதன் காட்சி அமைப்புகளை சினிமாப் பிரதியில் (Cinema text) உள்ள அர்த்தங்களை சரியாக விளங்கிக் கொள்ளவும் கட்டாயமாக ஆபிரிக்க- செனகல் பற்றிய வரலாற்றுப் புரிதல்கள் நமக்கு நிச்சயம் தேவை. ஐரோப்பியச் சிந்தனையால் அரிக்கப்பட்டிருக்கும் நம் சிந்தனைக்கு மிக அவசியமானது இது.

ஸத்தியஜித் ரேயின் பதேர் பாஞ்சாலி மற்றும் அவரது கிராமம் பற்றிய படங்களோடு (அஸானி ஸங்கத்) ஒப்பிட்டு சர்வ தேசியப் பத்திரிகைகளில் நிறைய எழுதப்பட்டுள்ளது. காரணம் இருவரும் எடுத்துக் கொள்ளும் கிராமங்கள் காலனியாக்கத்திற்குப் பின்னான கிராங்கள்தான். ஆனால் ரேயினுடைய அணுகுமுறையும் ஒஸ்மான் செம்பேனுடைய அணுகுமுறையும் முற்றிலும் வித்தியாசமானவை. ரேயினுடையது கட்டுப்படுத்தப்பட்ட மத்தியதர வர்க்க உணர்ச்சி வெளிப்பாடு. செம்பேனுடையதோ வெடித்தெழும் கலகக் குரல். போராடும் மனிதனின் குரல்.

செம்பேன் படங்களை இந்தியச் சூழலில் வைத்துச் சிந்திப்பதற்கான காரணங்கள் நிறைய இருக்கிறது. இந்திய அரசியலில் மகாத்மா காந்தி, இந்திய சினிமாவில் ரே, இந்திய அழகியலில் இரவீந்திரநாத் தாகூர், சச்சிதானந்தன் போன்றவர்கள் வலியுத்தும் - Multidimensionnel, Poly phonic- பன்முகம், பல்குரல் போன்ற எல்லாவற்றையும் இவர் படங்களை முன்வைத்து சிந்திக்க வேண்டுமென நினைக்கிறேன். காரணம் மூன்றாம் உலகச் சிந்தனாவாதிகளாக நமது கலை- அழகியல் மதிப்பீடுகள், கெட்டிதட்டிய மதிப்பீடுகள், வலியுறுத்தப்படும் மதிப்பீகள் ஐரோப்பிய மதிப்பீடுகள்தான். செம்பேன் படங்கள் சொல்லும் மதிப்பீடுகள், அதனது சினிமா மொழி ஐரோப்பிய மதிப்பீடுகள், மொழி சார்ந்தது அல்ல. அவரது படங்களில் உள்ள மொழி ஆபிரிக்க கதை சொல்லியின் (Griots) மொழி.

இவை கருதியே அவர் படங்களின், மனிதர்களின் உலகிற்குள் நுழைவதற்கு முன்னால் முன்னோட்டமாகச் சில விஷயங்களைச் சொல்லவேண்டி இருக்கிறது. ஆபிரிக்க விவசாய உற்பத்தி அமைப்பானது கூட்டுறவுத் தன்மை கொண்டது. ஆகவே சோசலிசம் ஏற்கனவே ஆபிரிக்க உற்பத்தி உறவில் இருக்கிறது, புதிதாகக் கட்டமைக்க வேண்டியதில்லை என்கிறார் செங்கார். ஆனால் இந்தக் கூட்டுறவு- ஏற்றுமையை மையமாகக் கொண்ட உற்பத்திக்கு, சொற்ப கூலி உழைப்பை வழங்குவதாக அமைந்தது (This collectivism has served mainly to provide cheep labour for export oriented agriculture). வேர்க் கடலைக் கொட்டையையும் பருத்தியையும்

ஏற்றுமதி செய்வதை மையமாகக் கொண்ட இந்த விவசாய உற்பத்தியை பிரெஞ்சுக்காரர்களே கட்டுப்படுத்தினர். 82 சதவீத தொழில்களை பிரெஞ்சுக்காரர்களே கட்டுப்படுத்தினர். இதுவன்றி செனகல் தலைநகர் தாக்கரில் வரியற்ற (duty free) பிரதேசத்தையும் வெளிநாட்டவருக்குத் திறந்தார் செங்கார்.

1995 வருடத்தில் செனகலில் செடார் செங்காரின் கட்சிதான் ஆட்சியிலிருக்கிறது. செடார் செங்காருடன் சோவியத் கம்யூனிஸ்ட்டு கட்சிக்கு நல்ல உறவிருந்தது. செடார் செங்காரின் ஆட்சி முறை சோவியத்- கிழக்கு ஐரோப்பிய ஒற்றைக் கட்சி ஆட்சிமுறையின் பல்வேறு அம்சங்களைக் கொண்டிருந்தன. IMF, உலக வங்கி போன்றன பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்துகின்றன. இஸ்லாமிய மதமே அதிகாரத்துவம் வாய்ந்த மதமாக இருக்கிறது. பிரெஞ்சு மொழியே தொடர்பு மொழியாக இருக்கிறது. காலனியாதிக்க காலத்திய பிரெஞ்சு அதிகார வர்க்கமே இன்று பின்காலனித்துவ செனகலின் ஆளும் வர்க்கத்திற்கு அறிவுரை தரும் வர்க்கமாக இருக்கிறது. இதுதான் இன்றைய செனகல். செனகல் நாடு பூர்வீகக் கலாச்சாரத்தை, ஆபிரிக்க நாகரீகத்தை, தமது பூர்வீகக் கடவுள்களைக் கொண்டிருந்த நாடு.

18-ஆம் 19-ஆம் நூற்றாண்டுகளில் அபிரிக்க மக்களின் கலாச்சாரத்தை, பொருளாதாரக் கட்டமைப்புகளை நிர்மூலமாக்கியபடி நுழைந்தது பிரெஞ்சுக் காலனியாதிக்கமும், தொடர்ந்து கிறீஸ்தவமும், அதைத் தொடர்ந்து இஸ்லாமிய மதமும். இஸ்லாமிய மதம் ஆபிரிக்க பூர்வகுடி அரசுகளை மதத்தின் பிரச்சாரம் கொண்டு அழித்தது. இஸ்லாம், கிறித்தவ மதங்களுக்கு இடையிலான ஆதிக்கத்தில் தமது சொந்தக் கலாச்சாரத்தை, தெய்வங்களை, மரபுகளை, உறவுகளை இழந்தார்கள் ஆபிரிக்க மக்கள். ஆபிரிக்க மக்கள் மீது காலனியாதிக்க கிறித்தவ, இஸ்லாமிய மத ஆதிக்கம் கவிழ்ந்தது எனில், இந்தியாவில் தொல் கலாச்சாரம் கொண்ட 38 கோடி தீண்டத்தகாத ஒடுக்கப்பட்ட மக்களின் மீது இந்து மதம் தனது ஆதிக்கத்தை வைத்திருக்கிறது. கிறித்தவமும், இஸ்லாமும் இந்து மதத்திற்கு கொஞ்சமும் குறைந்த ஆதிக்க நம்பிக்கைகள் அல்ல. செம்பேன் ஒஸ்மான் படங்கள் இந்த நிலைப்பாட்டைத் தான் மேற்கொள்கின்றன.

இவ்வாறான ஆபிரிக்க, உலகச் சூழலில்தான் ஒஸ்மான் செம்பேனின் சினிமா நுழைகிறது. ஒஸ்மான் செம்பேனின் படைப்புலகம் இதுதான். காலனியாதிக்கம், நவகாலனியம், மதங்களின் அதிகாரம், இழந்துவிட்ட தொல் மரபு, ஆதிக்க அரசுகள், அரசுகளை எதிர்த்த தனி மனிதர்கள், மக்களின் தொடர்ந்த கலகம். இதுவே ஒஸ்மான் செம்பேனின் படைப்புலகம்.....

□

*காலனியாதிக்கம், நவகாலனியம், மதங்களின் அதிகாரம், இழந்துவிட்ட தொல் மரபு, ஆதிக்க அரசுகள், அரசுகளை எதிர்த்த தனி மனிதர்கள், மக்களின் தொடர்ந்த கலகம், இதுவே ஒஸ்மான் செம்பேனின் படைப்புலகம்.....*

## 2.

அவரது முதல் குறும்படமான 'ஸங்காய் சாம்ராஜ்யம்' -1963- மாலி நாட்டு அரசாங்கத்திற்காக தயாரிக்கப்பட்டது. அப்படம் இதுவரை வெளியிடப்படவில்லை. அடுத்து அவர் கொடுத்த 'போரம் வீதி' குறும்படம் ஒரு கட்டை வண்டி ஓட்டுநரின் ஒருநாள் அனுபவத்தைச் சொல்கிறது. செனகல் தலைநகரில் ஒரு பயணியால் வண்டியோட்டி ஏமாற்றப்படுவதையும், இறுதியில் நகரப் போலீஸினால் வண்டி கைப்பற்றப்பட்டு வண்டியோட்டி வெறுங்கையோடு வீடு திரும்புது பற்றிய கதை அது. 1970 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட TAW குறும்படம் தாக்கர் நகரத்தில் வேலையற்ற இளைஞன் பற்றியது. NIYAE படம் செய்தியும்



*The Money Order (1968)*

இசையும் கலந்த செயல்களை சிலவேளை வலியுறுத்திய, சிலவேளை பாத்திரங்களை நேரடியாக விபரித்த குறும்படம். 1966 ஆம் ஆண்டு வெளிவந்த 'கறுப்புப் பெண்' (BLACK GIRL) படம் ஆபிரிக்கர்களுக்கும் ஐரோப்பியர்களுக்குமான உறவைச் சொல்வது. செனகல் நாட்டு இளம் பெண்ணொருத்தி ஒரு பிரெஞ்சுக் குடும்பத்திற்கு வேலையாளராகப் போகிறாள். முதலில் கனவுகளைக் கொண்டிருக்கும் அவள் நடைமுறையில் தான் ஒரு மனுசியாக நடத்தப்படாததைச் சகிக்க முடியாமல் தற்கொலை செய்வது பற்றியது இப்படம். THE MONEY ORDER படம் பிரெஞ்சு மொழியிலும் வுலப் மொழியிலும் தனித்தனியே உருவாக்கப்பட்டது. பாரிஸ் நகரில் வாழும் உறவினர் ஒருவர் செனகலில் வாழும் தனது சொந்தக்காரருக்கு அனுப்பிய மணி ஆர்டரை- செக் வடிவில் வந்ததை காசாக்கும் போது ஏற்படும் அவமானகரமான நிகழ்ச்சியைச் சொலலும் படம் இது. 1972 இல் வெளியான EMITAI படம் இரண்டாம் உலகப் போர்க் காலக்கட்டத்தில் செனகலில் இருக்கும் அரிசி மற்றும் உணவுப் பொருட்களை கையகப்படுத்த அனுப்பப்படும் பிரெஞ்சு இராணுவத்திற்கும், கிராம மக்களுக்கும் ஏற்படும் போராட்டம் பற்றிச் சொல்லும் படம். இப்படம் கிராம மக்களின் கடவுள் நம்பிக்கைகளையும் பிரெஞ்சு இராணுவத்தின் வன்முறையின் குரூரத்தையும் சித்தரிக்கும் படமாகும். தியாராயோ முகாம் 1944 இல் நிகழ்ந்த சம்பவம் ஒன்றை அடிப்படையாகக் கொண்டது. ஜெர்மன், இத்தாலிய பாசிஸ்ட்டுகளுக்கு எதிராகப் போராடிய ஆபிரிக்கர்கள் பிரெஞ்சு மேலதிகாரிகளின் உத்தரவுப்படி முழுக்கச் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தை அடியொற்றியது இப்படம். முகாமொன்றிலே இருக்கிற அபிரிக்கர்கள் பிரெஞ்சு அரசுக்கு எதிராக கலகத்தில் ஈடுபடும் வேளையிலேயே முகாம் கொலைக்களம் ஆகிறது.

நான் பார்த்திருக்கிற 1 குறும்படம், 6 முழு நீளப்படங்களில் அதிகமாகப் பேசப்படும் படங்கள், சர்வதேசிய விமர்சகர்களால் காலனியாதிக்க சாபத்திற்கு (XALA) எதிரான படங்கள் என்று குறிப்பிடப்படுபவை 4 படங்கள். அவை CAMP DE THIAROYE, XALA, CEDDO, GULEWAAR போன்றன. இப்படங்களிலும், இன்றளவிலும் ஓஸ்மான் படங்களில் சிறந்ததெனவும்- என்றைக்குமான ஆபிரிக்கத் திரைக் காவியங்களில் ஒன்றெனவும் குறிப்பிடப்படும் படம் CEDDO. Ceddo என்றால் வெளியாள் -Outsider- என்று அர்த்தம் கொள்ளலாம்.

XALA, CEDDO, GULEWAAR மூன்று படங்களுக்கும் நிறைய ஒற்றுமைகள் இருக்கின்றன. 'சாபம்' -XALA- படம் காலனியாதிக்கத்திற்குப் பிந்திய ஆபிரிக்க அறிவுஜீவிகளின் ஆண்மையற்ற தன்மையைப் (Importancy) பேசுகிறது. 'வெளியாள்' -Ceddo- படம் இஸ்லாம், கிறித்தவ காலனிய ஆதிக்கம் ஆபிரிக்காவில் நிலைபெற்றதைப் பற்றிப் பேசுகிறது. Gulewaar படம் கிறிஸ்தவ நம்பிக்கை, இஸ்லாமிய நம்பிக்கை, வெளிநாட்டு உதவி, அதிகார வர்க்கம் ஆபிரிக்காவில் நிலை கொண்டதைப் பேசுகிறது. Gulewaar என்பது கதாநாயகிகளின் பெயர்.

மூன்றாம் உலக நாடுகளில் பெரும்பாலானவற்றிக்கும் பொதுவானதும், இந்திய- தமிழக நிலமைக்கு மிக அருகிலானதுமான சித்திரம் பற்றியே இம்மூன்று படங்கள் பேசுகின்றன. இங்கு எனது அக்கறையும் இப்போதைக்கு இந்த மூன்று பங்கள் பற்றியதுதான்.

திரைப்படங்கள் வெளியான கால வரிசைப்படியிலேயே மூன்று படங்களையும் பார்ப்போம். சாபம் -1974 இலும்; வெளியாள் -1976 இலும்; குலேவார் -1992 இலும் வெளியாயின. இம்மூன்று படங்களில் எதுவுமே பிரெஞ்சு மொழியில்

எடுக்கப்பட்டவையல்ல, செனகலின் பிரதான மொழியான வுலப் மொழியில் எடுக்கப்பட்டவை. படங்களில் பிரெஞ்சுக்காரர்கள் பிரெஞ்சு மொழி பேசுகின்றார்கள், செனகல் மக்கள் வுலப் மொழியிலும், பிற இரு சிறுபான்மை மொழிகளிலும் பேசுகின்றார்கள். கறுப்பு அதிகார வர்க்கத்தினர் பிரெஞ்சு மொழியில் பேசுகின்றனர். நான் பார்த்த படங்களில் ஆங்கில ஸப் டைடில்கள் இருந்தன. மேன்மேலும் படங்களைப் புரிந்து கொள்ள ஆபிரிக்கக் கலாச்சாரம், சினிமா தொடர்பான புத்தகங்களும்; பல்வேறு விமர்சனங்களும்; செம்பேன் ஒஸ்மானின் பல்வேறு நேர்முகங்களும் எனக்கு உதவியாயிருந்தன.

ஆரம்பத்தில் பிரெஞ்சு அரசாங்கத்தின் உதவியுடன் படம் எடுத்த செம்பேன், அவரது கதைத் தேர்வு, கதை சொல்லல் போன்றவற்றில் அதிகார வர்க்கத்தினர் தலையிடத் தொடங்கியதால், பிரெஞ்சு அரசாங்க உதவிகளை செம்பேன் முழுக்க நிராகரித்து விட்டார். முழுக்க முழுக்க தனது மக்களையும் தனது நாட்டையுமே இப்போது அவர் சார்ந்து நிற்கிறார். பல்வேறு இடதுசாரி நிறுவனங்கள், கலைப்பட தொலைக் காட்சி நிறுவனங்கள், உலகத் திரைப்பட விழாக்குழுக்கள் போன்றவையே தற்போது அவருக்கு படங்கள் வெளிக் கொணர உதவுகின்றன. அவ்வாறு வெளியான காத்திரமான படங்களே இம்மூன்றும்.

செனகல் மக்களுக்குள் இப்போது நுழைவோம்.

---

# 3.

# சாபம் -XALA-

*1960 ஆம் ஆண்டு ஏப்பிரல் 04, செனகல் அரசியல் ரீதியாக பிரெஞ்சுக் காலனியாதிக்கத்தில் இருந்து விடுதலை பெற்றது.*

செனகல் வர்த்தகக் கூட்டமைப்பு (Senegal Chamber of Commerce) உடனடியாக செனகல் ஆபிரிக்கப் பிரஜைகளால் எடுத்துக் கொள்ளப்பட்டதாக அறிவிக்கிறது அரசு. படம் தொடங்குகிறது. வர்த்தகக் கூட்டமைப்பின் அலுவலகத்திற்குள் ஆபிரிக்க வியாபாரிகள் நுழைகிறார்கள். பிரெஞ்சு அரசுச் சின்னங்கள், அரசுத் தலைவர் படங்கள் வெளியே கொண்டு போகப்படுகிறது. ஆபிரிக்கர்கள் அலுவலகத்தைப் பொறுப்பு எடுக்கிறார்கள். பிரெஞ்சுக்காரர்கள் மௌனமாக விழிக்கிறார்கள். போலீஸ் பாதுகாப்புடன் எங்கோ போய்விட்டு மறுபடி அலுவலகத்திற்குள் நுழையும் அவர்கள் ஆபிரிக்க வியாபாரிகள் மேசையில் ஒவ்வொருவரின் முன்னும் ஒரு சூட்கேஸ் வைக்கிறார்கள். பெட்டி நிறையப் பணம். ஆபிரிக்க பிஸ்னெஸ்மேன்களின் முகமெல்லாம் சந்தோசம். நிறைவுடன் தலையாட்டிக் கொள்கிறார்கள். இப்போது பிரெஞ்சுக்காரர்கள் ஆபிரிக்க பிஸ்னெஸ்மேன்களின் ஆலோசகர்களாக (advisors) ஆகிவிட்டார்கள். அமைச்சர் அறிவிக்கிறார்: "நாம் சோசலிசத்தைத் தேர்ந்து கொண்டு விட்டோம். சேர்ந்து நின்று உழைப்போம்". அதே கூட்டத்தில் ஒரு வியாபாரப் பிரமுகரான எல். ஹஜீத்தின் மூன்றாவது திருமணத்துக்கான அழைப்பு அனைவருக்கும் விடப்படுகிறது.

ஹஜீத்தான் கதையின் நாயகன். ஊரில் பெரிய புள்ளி. ஆளும் கட்சியின் செல்வாக்கு மிக்கவர். அரசு உணவுக் கழகத்தின் உத்தியோகபூர்வமான விநியோகஸ்தர். பிரெஞ்சு ஊற்று நீரான EVIAN தண்ணீரைத்தான் குடிப்பார். தினமும் இரண்டு லீட்டர் குடிப்பதாகச் சொல்கிறார். அவருக்கு மத்தியதர வயதைக் கடந்த முதிய பருவம். ஏற்கனவே அவருக்கு இரண்டு மனைவிகள். முதல் மனைவிக்கு ஒரு மகனும், ஒரு மகளும். இரண்டாம் மனைவிக்கு ஒரு மகள், இரண்டு மகன்கள். எல்லோருமே வளர்ந்த பிள்ளைகள். அவருக்குத்தான் மூன்றாவது திருமணம். காரணம்? அவர்களது மரபு அங்கீகரிக்கிறது. மேலும் அவர் ஆண்மையானவர். அவர் மூன்றாவது திருமணம் செய்வது அவருக்கு பெருமையின்-மரியாதையின் பாற்பட்டது. புதிய பிஸினெஸ்மேன் அவர்.

மூத்த மனைவிக்கு அவர் மணம் முடிப்பதில் உடன்பாடில்லை என்றாலும் அவளால் எதிர்க்க முடியவில்லை. இரண்டாவது மனைவிக்குப் பிடிக்கவில்லை என்பதை நேரடியாகவே முகத்திலடித்தால் போல் சொல்லி விடுகிறாள். இரண்டு மனைவிகளையும் கூட்டிக்கொண்டு திருமணத்திற்கு வருகிறார் ஹஜீத். புதிய எஜமானர் அவர்.

சாபம்

மூன்றாம் மனைவி சின்னஞ்சிறு பெண். மீறினால் 14 வயதும் கூட இருக்காது. திருமணத்தின்மீது ஏதும் சாபம் விழுந்து விடாமல் இருக்க மாவிடிக்கும் உருளை மீது மாப்பிள்ளையை அமரச் சொல்கிறாள் புதிய மாமியார். மாப்பிள்ளை அந்த மூடப் பழக்கத்தை மேற்கத்திய அறிவின்படி மறுத்துவிடுகிறார்.

விருந்து முடிகிறது. முதலிரவு. பிரச்சினை அங்குதான் வருகிறது. மணப்பெண்ணுக்கு அடங்கிப் போகும்படி, கூப்பிட்டபோது போய்ப் படுக்கும்படி அறிவுரை சொல்லுகிறாள் தாய். அறை மூடப்படுகிறது. அடுத்த நாள் திருஷ்டி கழிப்பதற்காக கோழியைத் தலை திருகிக் கொல்ல படுக்கையறைக்குப் போகிறார்கள் இரு பெண்கள்.

தான் கன்னி கழியவில்லை எனகிறாள் புது மணப்பெண். அருகில் உள்ளங்கையில் முகம் புதைத்தபடி ஹஜீத். தனக்கு குறி விறைக்கவில்லை (erection) என்கிறான் ஹஜீத்.

பிரச்சனை வந்து விட்டது. யாரோ சாபம் (Xala) கொடுத்துவிட்டார்கள். உருளைச் சடங்கு இல்லாததால் சாபம் என்கிறாள் மாமி. இரண்டாம் மனைவி சாபம் கொடுத்து விட்டாள் என்கிறார்கள் மற்றவர்கள். விறைக்க மாட்டாதவனை ஏசுகிறார்கள் பெண்கள். கேவலமாகப் பேசுகிறார்கள்.

குறி விறைக்க வேண்டுமே? குறி விறைக்க என்ன வழி? (சிரிப்பு வருகிறது? பொறுங்கள். சிரிக்க இன்னும் நிறைய இருக்கிறது.) அமைச்சருக்கு அவசரமாகப் போன் போடும்படி தன் அலுவலகப் பெண்ணிடம் சொல்கிறார், தன் உணவுக் கிடங்கிற்கு வந்த ஹஜீத். அமைச்சர் அவசர அவசரமாக வருகிறார். என்ன பிரச்சனை என்கிறார். உணவு விநியோகத்தில் ஏதேனும் பிரச்சனையா?

குறி விறைக்கவில்லை. உடனே அதற்கு ஏதேனும் வழி கண்டுபிடிக்க வேண்டும். யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். வெளியே சத்தம். அழுக்குப் பிச்சைக்காரர்கள் தெருவிலமர்ந்து பாட்டுப்பாடி தொந்தரவு கொடுக்கிறார்கள். அமைச்சர் போலீசைக் கூப்பிட்டு ஒரு வேன் வரச்சொல்கிறார். பிரெஞ்சு அதிகாரி கம்பீரமாக வழிகாட்ட வந்த போலீஸ் வேன் பிச்சைக்காரர்களை ஏற்றுகிறது. அவர்களோடு கூடவே வுலப் மொழி பத்திரிகை விற்கும் பையனும், அவனோடு கூடவே ஒரு விவசாயியும் கைது செய்யப்படுகிறார்கள்.

விவசாயி ஏன்? விவசாயி வரண்ட தனது கிராமத்தில் விளைந்த சொற்ப பயிர்களை விற்று, நகரத்தில் வந்து உணவுப் பொருட்களை வாங்க வந்தவன். அவனிடம் ஏமாற்றி காசு திருடிப் போய்விட்டான் ஒரு கனவான். அதைச் சொல்லிக் கொண்டிருக்கையில் வந்த போலீஸ் கூட்டத்தோடு அவனையும் ஏற்றுகிறது.

குறி சொல்லுபவனிடம் போவோம். குறி விறைக்க மந்திரம் சொல்வான். அமைச்சரும் பிரமுகரும் போக, குறி சொல்லுபவன் இடுப்பில் ஒரு வளையம், கழுத்தில் ஒரு வளையம், கையில் ஒரு வளையம் போட்டுக் கொண்டு புணர்ச்சியில் போ என்கிறான். போதாதற்கு வாயில் எதையோ மந்திரத்துணியை கௌவிக் கொண்டு நாய் மாதிரி ஊர்ந்து ஊர்ந்து ஊளையிட்டு மனைவியிடம் போ என்கிறான். இரவு படுக்கை அறையில் ஒரே அலறல். புணர்ச்சி சந்தோசம் அல்ல. பயந்த சிறுமியின் கூச்சல். கிழட்டுப் பயலை ஏழனமாகப் பார்த்து கைநொடிக்கிறார்கள் பெண்கள்.

*திருமணத்தின்மீது ஏதும் சாபம் விழுந்து விடாமல் இருக்க மாவிடிக்கும் உருளை மீது மாப்பிள்ளையை அமரச் சொல்கிறாள் புதிய மாமியார். மாப்பிள்ளை அந்த மூடப் பழக்கத்தை மேற்கத்திய அறிவின்படி மறுத்துவிடுகிறார்.*



இதற்குள் ஹஜீத்துக்கு குறி விறைக்காத சாபம் என்கிற விடயம் ஊரெல்லாம் தெரிந்து விடுகிறது. ஊரெல்லாம் ஒரே பேச்சு. அமைச்சர் மந்திரம் பலிக்கவில்லை. ஹஜீத்தின் கார் டிரைவர் சொல்லும் குறிக்காரனிடம் போகிறார்கள். நீட்டி தனது கால்களுக்கிடையில் படுக்க வைத்து மந்திரம் சொல்லி சாபம் தீர்ந்தது என்கிறான் குறி சொல்லி. ஹஜீத் எம்பிக் குதிக்கிறார். குறி விறைத்துக் கொண்டது. ஆஹா.. என்ன சந்தோசம், துள்ளல். பாடலுடன் மெர்ஸிடஸ் கார் நகருக்குத் திரும்புகிறது. வேகமாக மனைவியை நோக்கிப் போகிறார் ஹஜீத். சனி பிடித்தது. கெட்ட நாள். அன்று அவர்

மனைவிக்கு மாத விலக்கு நாள். வெறுத்து இரண்டாம் மனைவியின் பாத்ரூமுக்குள் திடீரென்று நுழைந்து விடுகிறார். குறிகாரனிடம் கொடுத்த செக் பணமாகாமல் திரும்புகிறது. பல்வேறு வியாபாரிகளுக்குக் கொடுத்த செக் பணமாகவில்லை. பாங்க் செக்குகளைத் திருப்பி அனுப்பிவிட்டது. சேம்பர் ஆப் காமர்ஸில் ஒரே கூச்சல். அமைச்சர் உடனடியாக அவசரக் கூட்டம் ஒன்றைக் கூட்டுகிறார்.

ஹஜீத் அமைச்சரைப் பார்க்கப்போக, அமைச்சர் ஹஜீத்தைப் போய் மானேஜரைப் பார்க்கச் சொல்கிறார். மானேஜர் ஹஜீத்தின் கணக்கு வழக்குகளில் உணவுக் கார்ப்பரேசனுக்குச் சொந்தமான 100 டன் அரிசிக்குக் கணக்கு இல்லை என்பதைக் காண்பிக்கிறார். ஹஜீத் தெருவுக்குத் தெரு விநியோகிக்க கடை வைப்பது பற்றிய புதிய திட்டத்தோடு வந்திருக்கிறார். குறி விறைப்பது எப்படி இருக்கிறது என்கிறார் மானேஜர். முழங்கையை மடக்கியவாறு சந்தோசப்பட்டு எழுகிறார் ஹஜீத். சேம்பர் ஆப் காமர்ஸ் கூட்டத்திற்குப் போகவேண்டும்.

கூட்டம். அமைச்சர். பிஸினஸ்மேன்கள் 100 டன் அரிசியை விற்று மூன்றாம் திருமணம் என்று குற்றம் சாட்டி அவரை விலக்குவதற்குத் தீர்மானம் கொண்டு வருகிறார்கள். ஹஜீத் பேச வாய்ப்பளிக்கப்படுகறது. "நாம் எல்லோரும் அயோக்கியர்கள், பொய்யர்கள், சுரண்டல்காரர்கள், ஏமாற்றுக்காரர்கள், மக்களை ஏமாற்றுபவர்கள்" என்கிறார் ஹஜீத். அதுவரை வுலப் மொழியே பேசாதவர், அம்மொழியில் கெட்ட வார்த்தைகள் பேசுகிறார்.

கனவான்களுக்குக் கோபம் வருகிறது. கெட்ட வார்த்தைகள் பிரெஞ்சு அதிகாரபூர்வ மொழியில் ஜனநாயகபூர்வமாகப் பேசப்பட வேண்டும் எனச் சொல்லப்படுகிறது. அதன்படி பிரெஞ்சுக் கெட்ட வார்த்தைகள் வீசப்படுகிறது.

ஹஜீத் வெளியேற்றப்படுகிறார். கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறை. கைப்பெட்டியைக் கூட பிடுங்கிக் கொள்கிறார்கள். ஹஜீத்துக்கு மாற்றாக புதுக் கனவான் உள்ளே நுழைகிறார். இக்கனவான் அப்பாவி விவசாயியின் பணத்தைத் திருடிய கோட்டுச் சூட்டணிந்த புதுக் கனவான். புதிய பிஸினெஸ்மேன்.

ஹஜீத் உணவுக் கிடங்கிற்கு வருகிறார். அரசாங்கத்திலிருந்து போலீசுடன் ஆட்கள் வந்து கடை சீல் வைக்கப்பட்டு மெர்ஸிடஸ் கார் உருட்டிக் கொண்டு போகப்படுகிறது. அதேவேளை இரண்டாம் மனைவி குழந்தை குட்டிகளோடு வீட்டைக் காலி செய்து தன் தாய்தந்தையிடம் திரும்புகிறாள். மூன்றாம் மனைவிக்குக் கொடுத்த திருமண உடைகள் திரும்ப அவரிடமே திருப்பித் தரப்படுகிறது. செக் வாங்கிய குறிக்காரனுக்கு பணம் வராததால் குறி விறைக்காத சாபத்தை திரும்பவும் ஹஜீத்திடமே தந்துவிட்டுப் போய் விடுகிறான்.

*நிர்வாணமாக நிற்கும் ஹஜீத்தின் உடம்பின் மீது சுற்றிலும் நிற்கும் பிச்சைக்காரர்கள் காறித்துப்பிக் கொண்டே இருக்கிறார்கள்.....*

ஹஜீத்துக்கு வியாபாரம் போய் அதிகாரம் போய் இரண்டு மனைவிகளும் போய் குறி விறைக்காத சாபம் திரும்ப வந்துவிடுகிறது. விடயம் என்னவென்று ஹஜீத்தின் டிரைவரிடம் கேட்கும் பிச்சைக்காரர்களில் ஒருவன் தன்னால் சுலபமாகச் சாபத்தைப் போக்க முடியும் என்கிறான்.

பிச்சைக்காரர்களின் ஊர்வலம். நொண்டிகள், தடியூண்டிகள், விவசாயி. வுலப் மொழி பத்திரிகை விற்பவன் என நீண்ட தூரம் நடந்து நடந்து ஒரு கண்ணாடி வீட்டுக்குள் வந்தமர்ந்து அவரவர் இஷ்டத்திற்கு பிரிட்ஜிலிருந்து குளிர்பானங்களை எடுத்துக் குடிக்கிறார்கள். ஐஸ் கட்டிகள் சாப்பிடுகிறார்கள். ஒரே குதூகலம்.

பிச்சைக்காரர்களுக்கு இப்படியொரு இடம் எப்படி வந்தது? கதவு திறக்கிறது. ஹஜீத். அவர் முதல் மனைவி, குழந்தைகள். ஹஜீத் அத்து மீறி வந்துவிட்டதாகச் சத்தம் போடுகிறார். வெளியேறுங்கள் என மிரட்டுகிறார்.

ஒரு பிச்சைக்காரன் பேசுகிறான். அந்தச் சாபம், குறி விறைக்காத சாபம் (Xala) தான் கொடுத்த சாபம்தானாம். அவன் முன்பு விவசாயியாக இருந்தவன். ஹஜீத்தின் ஒன்றுவிட்ட தம்பி. ஹஜீத் அவனை ஏமாற்றி நிலங்களை அபகரித்துக் கொண்டு அவனைச் சீரழித்து பிச்சைக்காரனாக்கி விட்டான். ஆகவேதான் சாபம் கொடுத்து விட்டான் பிச்சைக்காரனான சகோதரன்.

விமோசனம் உண்டா? உண்டு. கூடியிருக்கும் எல்லாப் பிச்சைக்காரர்களின் முன்னும் ஹஜீத் நிர்வாணமாக நிற்க வேண்டும். எல்லாப் பிச்சைக்காரர்களும் ஹஜீத்தின் உடலில் காறித்துப்ப வேண்டும். அப்படிக் காறித்துப்புகிற எச்சிலில் ஹஜீத்தின் சாபம் நீங்கும்.

ஹஜீத்தின் மனைவி வேண்டாம் என்கிறாள். போலீஸ் வந்து என்ன கலவரம் என்கிறது. ஒன்றுமில்லை இவர்கள் என் உறவினர்கள் என்கிறார் ஹஜீத். ஹஜீத் முடிவு செய்து விட்டார். அவருக்குக் குறி விறைக்க வேண்டும். சாபம் நீங்க வேண்டும்.

நிர்வாணமாக நிற்கும் ஹஜீத்தின் உடம்பின் மீது சுற்றிலும் நிற்கும் பிச்சைக்காரர்கள் காறித்துப்பிக் கொண்டே இருக்கிறார்கள்.....

# 4.

# வெளியாள் -CEDDO-

செட்டோ என்பது படத்தில் ஒரு மக்கள் கூட்டத்திற்கு அடையாளமாகச் சொல்லப்படுகிறது. ஒரு ஆபிரிக்க இனக் குழுவாக அடையாளப்படுத்தப்படுகிறது. செட்டோ என்கிற இம்மக்கள் வெளியாட்கள்.

யாருக்கு வெளியாட்கள்? எதற்கு வெளியே இருப்பவர்கள்?

கர்லனியாதிக்கத்திற்கு வெளியே இருப்பவர்கள். கிறிஸ்தவ மத ஆதிக்கத்திற்கு வெளியே இருப்பவர்கள். இஸ்லாமிய மத ஆதிக்கத்திற்கு வெளியே இருப்பவர்கள். இக்கதை 1871 க்குப் பின் நிகழ்கிறது. அடிமை வியாபாரத்தின் முடிவைத் தொடர்ந்து, அதன் விளைவாக நிகழ்கிறது. செம்பேன் சொல்கிறபடி இக்கதை 18ஆம், 19ஆம் நூற்றாண்டுக்கு மட்டும் உரியதல்ல. இன்றைக்கும் யதார்த்தம் இதுதான். முழு ஆபிரிக்காவுக்கும் குறிப்பாக மேற்கு ஆபிரிக்காவுக்கு இது பொருந்தம் என்கிறார் அவர்.

இக்கதையில் ஐந்து கதாபாத்திரங்கள் முக்கியமானவர்கள். அடிமை வியாபாரியான வெள்ளையர். கிறிஸ்தவ மத போதகரான வெள்ளையர். சிவப்புக் குல்லா அணிந்த முஸ்லீம் மத போதகர். செட்டோ வீரன். ஆபிரிக்க இளவரசி. இந்த ஐந்து கதாபாத்திரங்களின் பின்னணியில் மக்கள் கூட்டம்.

கதை மேற்கு ஆபிரிக்க நாடொன்றில் நிகழ்கிறது. கதை தொடங்கும் போது விலங்கு பூட்டப்பட்ட நிலையில் நான்கைந்து ஆபிரிக்கர்கள் துப்பாக்கி பிடித்த நிலையிலான ஒரு ஆபிரிக்கனால் புழுதி வீசியடிக்க ஓட்டி வரப்படுகிறார்கள். வெள்ளையொருவனிடம் அவர்களை விற்று விட்டு மாற்றாக துப்பாக்கிகள், பொருட்களை வாங்கிச் செல்லுகிறான் ஆபிரிக்கன். காத்திருக்கும் பெண்கள் தம் விசாப் பொருட்களை, உற்பத்திப் பொருட்களைக் கொடுத்துவிட்டு வெள்ளையனிடம் இருந்து சோப்பு, திரவியம் போன்றவற்றை மாற்றாக வாங்கிச் செல்லுகிறார்கள்.

அந்தக் கிராமத்திற்கு அப்போதுதான் வந்திருக்கும் முஸ்லீம் போதகர் எல்லாம் வல்ல அல்லாவின் பெயரில் முழு கிராமத்தின் அதிகாரத்திற்காகத் திட்டமிடுகிறார். பெரும்பாலான மக்கள் ஒன்று ஏற்கனவே கிறிஸ்தவர்களாகியிருக்கிறார்கள் அல்லது முஸ்லீம் நம்பிக்கைக்கு ஆட்பட நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். அந்த நாட்டு மன்னனானவர் முஸ்லீம் மதத்தினால் ஆர்கஷிக்கப்பட்டிருக்கிறார்.

முஸ்லீம் போதகரின் கருத்துப்படி, தான் கடவுளின் ஊழியன், தான் சொல்லுவது கடவுளின் புனிதக் கருத்துக்கள், தான் சொல்லுவதை நம்புபவன் புனிதன், நம்பாதவன்- கீழ்ப்படியாதவன் நாத்திகன்- கடவுளின் எதிரி. கடவுளின் எதிரியை கடவுளின் கருத்துக்காகவே கொலையும் செய்யலாம். அல்லாவே எல்லாம்.

இளவரசியைக் கடத்திக் கொண்டு போய்விடுகிறான் செட்டோ வீரன் ஒருவன். இளவரசியின் பெயர் தயர். அவளை ஏற்கனவே அவனறிவான். அவனுக்கு ஒருமுறை தாகம் தீர்க்க குடிநீர் கொடுத்தவள் அவள். அவளை எவரும் எதன் ஆதிக்கதின் கீழும் கொண்டு போய் விடுவதில் அவனுக்குச் சம்மதம் இல்லை. ஆபிரிக்காவின் அழகையெல்லாம் சூடிக்கொண்டிருக்கும் புராதன தேவதை அவள். கடத்திக் கொண்டு போன அவளுக்காக நிழல் பந்தல் கட்டி, ஊஞ்சல் கட்டி இருத்தி வைக்கிறான். நிலத்தில் ஒரு கோடு கீறி அதனைக் கடக்கக் கூடாது எனக் கட்டளையிடுகிறான்.

செட்டோ ஒரு இனமில்லை. ஒரு மக்கள் கூட்டமில்லை. அது பல கலாச்சாரங்கள் நம்பிக்கைகள் மோதும் ஒருநிலை. மரபார்ந்த ஆபிரிக்கக் கலாச்சார சின்னங்களைப் போற்றும் கூட்டமும் கூட அதுதான். இதற்குள்தான் அடிமை வியாபாரி, கிறிஸ்தவ போதகன், முஸ்லீம் இமாம் நுழைந்திருக்கிறார்கள். கடத்திக் கொண்டு போகப்பட்ட தன் மகளை- இளவரசியை மீட்க மன்னனிடம் எந்தத் திட்டமும் இல்லை. மன்னனது நம்பிக்கைகள் செட்டோ வீரனுக்கும் முஸ்லீம் இமாமுக்கும் இடையில் ஊசலாடிக் கொண்டிருக்கிறது.

இமாமின் நோக்கம் தெளிவானது. மதத்தின் வழி அரசியல் ஆதிக்கம். கிறிஸ்தவ போதகனதும் வழி அதுவே. அடிமை வியாபாரி இருவருக்கும் இடையில் கலகம் தூண்டி ஆயுதம் விற்றுப் பிழைப்பவன். மன்னனின் சிந்தனையில் தெளிவில்லை.

இளவரசியின் சமூகஸ்தானம் உறுதியானதில்லை. அவள் முடிவெடுக்கிற நிலையில் ஆண்களின் சமூகம் அவளை விட்டு வைக்கவில்லை.

இளவரசியை மீட்கச் செல்லும் இருவர் கொல்லப்படுகிறார்கள். இமாம் சதி செய்து மன்னனை பாம்பு கடிக்கச் செய்து திட்டமிட்டு மன்னனின் ஆசனத்தைக் கைப்பற்றுகிறான். அடுத்த விநாடியே கறுப்பு மக்கள் தலை மழிக்கப்பட்டு பலவந்தமாக முஸ்லீம் பெயர்மாற்றம் செய்யப்படுகிறார்கள்.

செட்டோ மக்கள் சிலர் ஒன்று கூடி ஆலோசனை செய்கிறார்கள்.

ஒன்று போராடி மடிவது, அல்லது சமரசம் செய்து கொள்வது. ஒருசிலர் தமது மனைவி மக்களை வெள்ளை வியாபாரியிடம் அடகு வைத்து ஆயுதம் வாங்கலாம் என்கிறார்கள். இறுதியில் தம்மை இழக்க விரும்பாமல் அந்த இடத்திலிருந்து வேறு இடத்திற்குப் புலம்பெயர்ந்து சென்றுவிட பயணம் மேற்கொள்ளுகிறார்கள். நள்ளிரவில் இவர்கள் குடியிருப்புக்குள் புகுந்து தீ வைத்து பெரும்பாலானோரை சுட்டுக் கொல்கிறார்கள் இமாமால் தூண்டப்பட்டவர்கள்.

இப்போது முழு மக்கள் கூட்டமும் அரசு அதிகாரமும் இமாம் கையில் வந்து விட்டது. தனது நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள், தமக்கு உழைத்தவர்களின் மீதே ஆதிக்கம் செய்யும் நிலைக்கு வந்துவிட்டார் இமாம். இமாம் தனது ஆதிக்கத்தை வெகு விரைவில் ஸ்தாபித்துக் கொள்ள கிறிஸ்தவ போதகர் ஏதும் செய்வதறியாது கனவு கண்டு கொண்டே இருக்கிறார்.

ஆதிக்கம் முழுவதும் தன் கையில் வந்தவுடன் இமாம் இளவரசியை மீட்டு வந்து தான் மணந்துகொள்வதற்காக ஆட்களை அனுப்புகிறார். வந்த கையாட்கள் செட்டோ வீரனை சரமாரியாகச் சுட்டுக் கொன்று விட்டு இளவரசியை இழுத்துக் கொண்டு வருகிறார்கள்.

முழுக்க கறுப்பு மக்களும் தலை மழிக்கப்பட்டு முஸ்லீம் பெயர் மாற்றப்பட்டு ஆயுதபாணிகள் சூழ அமர்ந்திருக்கிறார்கள். இமாம் எல்லோருக்கும் கட்டளையிட்டபடி கூச்சலிட்டுக் கொண்டிருக்கிறார். சில ஆபிரிக்கர்கள் எதிர்ப்புணர்ச்சி இருந்தால் கூட நடைமுறையில் ஏதம் செய்ய முடியாதவர்களாக இருக்கிறார்கள்.

இளவரசி குதிரையிலிருந்து இறங்கி மெல்ல மக்கள் கூட்டத்தைப் பார்த்தபடி நடந்து வருகிறாள். செட்டோ வீரனுக்கு தண்ணீர் கொடுத்த ஞாபகச் சிதறல்கள் வந்து போகிறது. வரட்சியும், தண்ணீர்ப் பஞ்சமும் நிறைந்த ஆபிரிக்காவில் தண்ணீர் தங்கம் போன்றது. தண்ணீரில் அன்பும் காதலும் இருக்கிறது.



முழு மக்கள் கூட்டமும் வெறித்தபடி மரியாதையுடன் செய்வதறியாது அவள் நிர்க்கதியான நிலையைப் பார்த்து நிற்கிறது.

*பெண்கள்தான் இனி உறுதியான நிலைப்பாடோடு ஆபிரிக்காவில் மாற்றத்தைக் கொண்டு வரக்கூடிய சக்தியாக இருப்பார்கள்*

ஆயுதபாணியான ஆபிரிக்கன் ஒருவனிடம் இருந்து துப்பாக்கியை பிடுங்குகிறாள் இளவரசி. அதை இமாமின் நெஞ்சுக்குக் குறிவைத்து விசையை இழுக்கிறாள்.....

நாற்காலியோடு தொப்பி கழண்டு விழ தலை குப்புற மண்ணில் சரிகிறான் இமாம்.

முஸ்லீம் மத நம்பிக்கை வெறி உலுப்பப்படும்போது தமது பூர்வீகச் சின்னங்களான தெய்வங்கள் உச்சியில் கொண்ட கொம்புகளை தீயிலிட்டுப் பொசுக்குகிறார்கள் ஆபிரிக்கர்கள். அந்த உச்சித் தெய்வம் தயரின் உருவம்தான். ஆபிரிக்க இளவரசிதான் ஆபிரிக்கத் தெய்வம். இளவரசி உண்மையில் ஆபிரிக்கக் கலாச்சாரத்தின் மறு உயிர்ப்பு.

பெண்கள்தான் இனி உறுதியான நிலைப்பாடோடு ஆபிரிக்காவில் மாற்றத்தைக் கொண்டு வரக்கூடிய சக்தியாக இருப்பார்கள் என்பதற்கான பிம்பம்தான் ஆபிரிக்க இளவரசி தயர்.

அவள் துப்பாக்கி ஏந்தியபடி தீச்சஸ்யமான விழிகளுடன் நின்று கொண்டிருக்கிறாள்..... செட்டோ படம் செனகல் உட்பட அனைத்து ஆபிரிக்க நாடுகளிலும், இஸ்லாமிய நாடுகளிலும் தடை செய்யப்பட்டுள்ளது.

□□

5.

# குலேவார் -GULEWAAR-

குலேவார் ஒரு பள்ளிக்கூட ஆசிரியர். வெளிநாட்டு உதவிக்கு (foreign aid) எதிரான நடவடிக்கையாளர். முப்பது ஆண்டுகளாக வெளிநாடுகளிடம் கையேந்திக் கொண்டிருப்பது அவருக்கு நாட்டுக்குத் தலைக்குனிவானதாக இருக்கிறது. பிச்சையெடுப்பவன் எப்போதும் தனது குடும்பத்தை கௌரவமாகக் கட்டி எழுப்ப நினைக்க மாட்டான் என்கிறார்.

முதல் காட்சியே அவர் சாவு பற்றிய செய்தியோடுதான் தொடங்குகிறது. அவருக்கு மனைவி, இரண்டு மகன்கள், ஒரு மகள் உண்டு. மூத்த மகன் பிரான்சில் இருப்பவன். பிரெஞ்சுப் பாஸ்போர்ட்டு வைத்திருப்பவன். மகள் செனகல் தலைநகர் தாக்கரில் பதிவு செய்யப்பட்ட விபச்சாரியாக இருப்பவள். இளைய மகன் ஒரு கால் விளங்காதவன்.

இவர் செத்துப்போனதாகவும், அடிபட்ட உள் காயங்களுடன் இறந்ததாகவும் டாக்டர், இவரது மூத்த மகனிடம் சொல்லியிருக்கிறார். இளைய மகன் செய்தியை அம்மா அக்காவிடம் சொல்ல வீட்டுக்கு வருகிறான். மூத்த மகன் அப்பாவின் பிணத்தை வாங்க மார்ச்சுவரிக்குப் போகின்றான். மார்ச்சுவரிக்குப் போகத்தான் தெரிகிறது தனது தந்தையின் பிணம் அங்கு இல்லையென. போலீஸ் நிலையம் சென்று புகார் செய்ய, அதிகாரி புறப்பட்டு மருத்துவமனை போய், செத்துப்போன இரண்டு பிணங்களில் மற்றொரு பிணத்திற்கு மாற்றாக இப்பிணம் எடுத்துச் சென்றிருப்பது கண்டு பிடிக்கப்படுகிறது.

பிணத்தைத் தேடி அதிகாரியும், மூத்த மகனும் ஒரு கிராமத்திற்குப் போகிறார்கள்.

சிக்கல் இங்குதான் எழுகிறது. அது முஸ்லீம் விவசாயக் கிராமம். அவர்கள் பிணம் என்று புதைத்த பிணம்தான் குலேவாருடையது. குலேவார் மத ரீதியில் கத்தோலிக்கர். குலேவாரின் இறுதிச் சடங்கு இலத்தீன் மொழியில் செய்யப்பட வேண்டும் என்பது அவரது இறுதி ஆசை. அக்கிராமத்தின் முஸ்லீம் பெரியவர் ஆளும் கட்சியில் பெரிய ஆள். அவ்வூரில் இருப்பவர்கள் பிணம் தங்களுடையது என்கிறார்கள். எக்காரணம் கொண்டும் பிணக்குழியைத் திறந்து பார்க்க அனுமதிக்க மாட்டோம் என்கிறார்கள். புதைத்தவன் வரவழைக்கப்பட்டு பிணத்தின் முகம் அடையாளம் பார்க்கப்பட்டதா எனக் கேட்க, இருளில் அது முடியவில்லை எனப் பதில் வருகிறது. மார்ச்சுவரி ரிப்போர்ட் தருவித்துப் பார்க்க அது குலேவாரின் ரிப்போர்ட் எனத் தெரிகிறது.

அப்போதும் அங்கிருக்கும் முஸ்லீம்கள் புதைகுழியை தோண்டிப் பார்க்க அனுமதிக்கவில்லை. கொலை விழும் என்கிறார்கள். பிணம் முஸ்லீம் இடுகாட்டில் இருப்பது குலேவாரின் மனைவிக்குத் தெரிவிக்கப்படுகிறது. தனது இறுதிச் சடங்கு தனது கணவனுக்கு அருகில் ஒரு கத்தோலிக்கக் கல்லறையில் செய்யப்பட வேண்டும் என்கிறாள் குலேவாரின் மனைவி.

முஸ்லீம் மதபோதகரையும் மக்களையும் கிறிஸ்தவப் பாதிரியார் சந்தித்துப் பேசுவது என ஏற்பாடாகிறது. அக்கிராமத்திற்கு குலேவாரின் மனைவி உடன் கிறித்தவ கத்தோலிக்க மக்களும் வருகிறார்கள். இடுகாட்டில் அவர்கள் அமர்ந்திருக்க பாதிரி சிலருடன் கிராமத்திற்குள் செல்கிறார்.

கிறிஸ்தவர் ஆனால் என்ன, முஸ்லீம் சடங்குகளும் புதைகுழியும் புனிதம்தான் பிணம் அங்கேயே இருக்கட்டும், தோண்டிப் பார்க்க அனுமதிக்க முடியாது என்கின்றனர் முஸ்லீம்கள். முஸ்லீம் தலைவர் இமாம், அது சரியில்லை பிணத்தைத் தரவேண்டும் என்கிறார். நாத்திகன் என அவரை ஏசுகிறார்கள் மதவாதிகள். குலேவாரின் மகன் உங்கள் மதத்தைவிட எங்கள் மதம் உயர்ந்ததுதான், ஒரு முஸ்லீமை கத்தோலிக்கக் கல்லறையில் புதைப்பீர்களா? எனக் கேட்கிறான். கலவரம் தொடங்கி விட்டது. ஆயுதம் ஏந்திய கூட்டம் அவனைச் சூழ்ந்து கொள்கிறது. போலீஸ் அதிகாரி துப்பாக்கியை நீட்டி சுட்டு விடுவதாக மிரட்டி, பாதிரியையும் அவருடன் வந்தவர்களையும் விலகச் சொல்கிறார்.

கூட்டம் இடுகாட்டிற்கு வருகிறது. கிராமத்திலும், இடுகாட்டிலும் பதட்டம்.

குலேவார்

முஸ்லீம் புதை குழிகளை கத்தோலிக்கர்கள் தோண்டப் போகிறார்கள் எனப் பீதி கொண்டு முஸ்லீம் மக்கள் ஆயுதங்களை ஏந்திக் கொண்டு இடுகாடு நோக்கி வருகிறார்கள். போலீஸ் அதிகாரி ரிசேவ் போலீசுக்குத் தகவல் அனுப்புகிறார்.

இமாம் ஓடோடி வருகிறார். கத்தோலிக்கப் பெரியவர் வருகிறார். எமது மக்களுக்கு என்னவாயிற்று? ஏன் இப்படி என்கிறார் இமாம். இதே கேள்வியை கத்தோலிக்கப் பெரியவரும் கேட்கிறார். பிணம் மாறிப்போனது விளக்கப்படுகிறது.

கிராம மக்களிடம் திரும்பி வரும் இமாம், பிணக்குழியைத் தோண்ட வேண்டும் என்றும் குஸ்வாரை அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் சொல்லுகிறார். கிராமம் மறுக்கிறது. இமாம் தடை மீறிச் செல்கிறார். கூட்டம் தடுக்க மண்வெட்டியால் அடிக்கிறார். இனி எவராவது ஒரு அடி வைத்தால் I will screw his mother என்கிறார். மத நிந்தனை செய்துவிட்டதாக கூட்டம் அலை மோதுகிறது. அப்போது அந்த நகரத்து மேயரும் போலீஸ் கமிசனரும் வருகிறார்கள்.

பிரச்சனை போலீஸ் அதிகாரியால் விளக்கப்படுகிறது. வந்த மேயர் முஸ்லீம் அரசியல்வாதி. இக்கிராமத்தில் முஸ்லீம் வேர்கள் இருக்கிறது. பிணத்தைத் தோண்ட முடியாது என்கிறார். இது வரை பேசாமல் இருந்த குலேவாரின் மூத்த மகன் பேசுகிறான். எங்கே இருக்கிறது முஸ்லீம் வேர்கள்? முஸ்லீம் கலாச்சாரம் நைல் நதி தீரத்தில் அல்லது ஏதேனும் ஆபிரிக்க நதியின் தீரத்தில் வேர் கொண்டதா? எங்கே இருக்கிறது மெக்கா? சவூதி அரேபியாவில். கிறிஸ்தவம் எந்த ஆபிரிக்க நதி தீரத்தில் வேர் கொண்டது? எங்கே இருக்கிறது ஜெருசலேம்? வேர்களைப் பற்றிப் பேச வேண்டாம். கத்தோலிக்கர்கள் முதலில் செனகல் குடிமக்கள். முஸ்லீம்கள் செனகல் குடிமக்கள். செனகல் குடிமக்களுக்கிடையில் பேசித் தீர்வுகாண்போம் என்கிறார்.

போலீஸ் கமிசனர் மேயரைத் தனியே கூப்பிட்டுப் பேசுகிறார். குலேவார் ஆளும் கட்சியால் படுகொலை செய்யப்பட்டது மெல்ல மெல்ல வெளிவரத் தொடங்கி விட்டது. இந்த விடயம் சர்வதேசப் பத்திரிகைத் தொடர்பு ஊடகங்களுக்குத் தெரிந்தால் அரசுக்குச் சிக்கல். தேர்தல் நெருங்கிக் கொண்டு இருக்கிறது. ஆகவே கிராமத்தவர்களை சமாதானப்படுத்தி அனுப்புங்கள் என்கிறார்.

மேயர் கிராமத்து மக்களிடம் போகிறார்: “பேசாமல் போங்கள். ரிசேர்வ் போலீஸ் நிற்கிறது. உங்களுக்கு பாலும், சர்க்கரையும், அரிசியும், தேனும் வெளிநாட்டு உதவி வந்திருக்கிறது. உடனடியாக அனுப்புவேன் என்கிறார்.” கூட்டம் ‘மேயர் வாழ்க!’ என ஆர்ப்பரித்துக் கொண்டே கலைகிறது. ரிசேர்வ் போலீஸ் வர இரண்டு பக்கமும் மத நம்பிக்கையாளர்கள் திகைத்து மௌனமாக நிற்க பிணம் இமாமினால் தோண்டப்படுகிறது. நாற்றம். எல்லாப் பிணமும் வெகுமதியானதுதான் என மறுபடி தோண்டுகிறார் இமாம். பிணத்தின் முகம் இன்னும் சிதைந்து போகவில்லை. அது குலேவார்தான் முஸ்லீம்கள் நம்பிக்கொள்கிறார்கள்.

பிணத்தை வைப்பதற்காக சவப்பெட்டி இமாமிடம் தரப்படுகிறது. இமாம் துணிகளை மட்டும் கேட்கிறார். ஆபிரிக்க மக்கள் பூர்வீகமாகப் பயன்படுத்தும் பாடையில் வைத்து துணி மூடிக்கட்டி பிணம் கிறிஸ்தவப் பெரியவரிடம் ஒப்படைக்கப்படுகிறது. இமாம் நோக்கி கிறிஸ்தவப் பெரியவர் சொல்கிறார்: “நீங்கள் செய்த காரியம் மனித குலமே பெருமிதப்படத்தக்க காரியம்.”

சவப்பெட்டி பயணம் தொடங்குகிறது. எதிரில் மேயரால் அனுப்பப்பட்ட வெளிநாட்டு உதவி உணவு, பால்பவுடர், மாவு போன்றன ஏற்றப்பட்ட வண்டி வருகிறது. சவ ஊர்வலத்தின் முன்வரும் குலேவாரின் மாணவர்கள் அவரின் கருத்துக்களால் ஆர்கஷிக்கப்பட்டவர்கள். உணவு வண்டியின் மீது ஏறி மூட்டைகளை தரையில் சரித்து பொருட்களைப் புழுதியில் கொட்டுகிறார்கள். கிறிஸ்தவப் பாதிரியும், கிறிஸ்தவ இனப் பெரியவரும் அதைப் பாவம் எனத் தடுக்க குலேவாரின் மனைவி அதை நியாயம் என்கிறாள்.

மாணவர்கள் அனைத்தையும் புழுதியில் கொட்டுகிறார்கள். அவற்றை மிதித்தபடி கூட்டம் நகர்கிறது. குலேவாரின் பிரசங்கம் ஒலிக்கிறது. ‘உதவிக்கு வெளிநாடுகளிடம் கையேந்திக் கொண்டிருப்பவனுக்கு தெரிந்தது எல்லாம் மூன்று வார்த்தைகள்தான் நன்றி, நன்றி, நன்றி! பிச்சை எடுப்பது கேவலமானது. தலைக் குனிவானது. பிச்சை எடுப்பவன் எப்போதும் தனது குடும்பத்தைக் கட்டி எழுப்ப மாட்டான்.’

*பிச்சையெடுப்பவன் எப்போதும் தனது குடும்பத்தைக் கட்டி எழுப்ப மாட்டான்.*

6.

வெளியே நிறைய மனிதர்களின் கூச்சல் கோஷங்கள், முத்தமிடும் சப்தம், பிணங்கள், இராணுவ வாகனங்கள், பிரசவ வேதனை, குழந்தைகள், ஆர்ப்பாட்டங்கள் விலக்கியபடி போய்க் கொண்டிருக்கிறார்.....

# ஒஸ்மான் செம்பேன்

இந்த மூன்று படங்களிலும் சாரம்சமாகவும், வெளிப்படையாகவும், இறுதியாகவும் தேர்ந்து கொள்ளக் கூடிய விடயங்களையே நான் கொடுத்திருக்கிறேன். சொல்லப்பட்ட இந்த வாழ்வினூடே, இந்தப் பிரச்சனையூடே ஆயிரம் கிளை விவரங்கள், ஆயிரம் கிளைப் பிரச்சனைகள் விரிந்து கொண்டே போகின்றன.

இந்தப் படங்களில் வருகிற எந்த மனிதர்களும் தட்டையான மனிதர்களோ, ஒற்றைப் பட்டை மனிதர்களோ அல்ல. முரண்பட்ட குழப்பமான சமூக மனிதர்களுக்குரிய முரண்பட்ட பிளவுண்ட ஆளுமைகளையே இவர்கள் பெற்றிருக்கிறார்கள். ஆனால் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் மனிதர்கள் என்கிற அளவில் இம்மனிதர்களின் செயல்கள் சமூக இயக்கத்தை சலனப்படுத்தி முன் உந்திச் செல்கிறது.



படம்: Borom Sarret (1963)

சமூக இயக்கம் பற்றிய கலைஞனது தேர்வே மனிதர்களை அவர் உலகங்களைத் தேர்வதிலும் பாத்திரம் வகிக்கிறது. எவ்வளவு அசலாகவும், ஆழ்தளத்திலும் கலைஞன் சஞ்சரித்திருக்கிறானோ, அதே அசல் முகத்துடனும் ஆழ்தளத்திலும்தான் அவனது மனிதர்கள் சுயாதீனமாகச் செயல்படுகிறார்கள். கலையின் சூட்சுமமும் இதுதான்.

* சாபம் படத்தில் வரும் ஹஜீத் குற்றவுணர்வு உள்ளவன். சபிக்கப்படுவதற்கு நிறையக் காரணங்கள் கொண்டவன். அவனுக்கு சாப மீட்சி வேண்டும். தினமும் மூன்று லீட்டர் பிரெஞ்சு எவியன் தண்ணீர் குடிப்பவன். தனது பிரமைகள் அழிபட்டு சொந்த முகம் வருகிறபோது வுலப் மொழியில் கெட்ட வார்த்தை பேசுகிறான். இவனேதான் ஒருமுறை தான் பிரெஞ்சில் பேச, அவனது மகள் வுலப் மொழியில் பேச எரிந்து விழுந்தவன். தன் மீடசிக்காக அவன் காறித்துப்பப்பட நிற்கிறான். தன் குற்றத் தண்டனைக்காகவும் அவன் காறித்துப்பப்பட நிற்கிறான்.

உண்மையில் அவனது முக்கியத்துவம் (Importency) அவனது வர்க்க அலித்தன்மையால் விளைந்த சாபம். அவன் அசல் ஆபிரிகனும் அல்ல. முழு பிரெஞ்சுக்காரனுமல்ல. புதிய காலனிய மூளை அடிமையான கறுப்புப் பிரெஞ்சுக்காரன். நிலம் பறிகொடுத்த விவசாயினாலும் பணம் பறிகொடுத்த விவசாயினாலும் அங்கங்களைப் பறிகொடுத்த முடவர்களாலும் தனது மொழி ஆளுமையைப் பறிகொடுத்த வுலப் மொழி பத்திரிகையாளனாலும் காறித்துப்பப்பட வேண்டியவன்தான் அவன்.

இப்படத்தின் முதல் மனைவி மிகச் சாதாரணமான, ஆனால் தெளிவான மரபார்ந்த மனுஷி. இரண்டாம் மனைவி தன்னளவில் கலகக்காரி. முதல் மனைவியின் மகள் அரசியல் ரீதியில் முதிர்ந்தவள். தனது தாயை மணவிலக்கு பெறச் சொல்கிறாள். தந்தையின் ஆண்மையின்மை காரணங்கள் பற்றி அவருடனேயே பேச விழைகிறாள்.

காறித்துப்பட வேண்டியவன் குற்றத் தண்டனை பெற நிற்பவன் ஹஜீத் மட்டுமல்ல, முழு காலனிய மூளை அடிமை வர்க்க அறிவுஜீவிகள், வியாபார வர்க்கத்தினர்தான்.

* வெளியாள் படத்தில் வரும் இளவரசி தப்பிப் போக நினைக்கிறாள். அவன் இருவரைக் கொன்ற பின்னால் குளத்தில் மூழ்கி நீராடி அவனுக்கு குடிக்க நீர் கொடுக்கிறாள். திறந்த உடலுடன் தனது நிமிர்ந்த மார்புகள் அலைய கண்கள் செருக அவனைப் பார்த்து நடக்கிறாள். தவறுதலாக வைத்துவிட்ட விஷ அம்பையும் வில்லையும் அவனுக்கு எதிரே பாவிக்க நினைக்கிறாள். அவனும் அவளது தந்தையும் கொல்லப்படும்போது இமாமைச் சுட்டுக் கொல்லுகிறாள்.

தானும், தனது ஆளுமையும், தனது இருத்தலும், தனது விடுதலையும் மட்டுமே அவளை ஜீவிக்க வைக்கும் ஊற்று. அவள் நேசம், அவள் எதிர்ப்பு, அவள் கட்டற்ற தன்மை எல்லாமே அவள் வாழ்வின் பகுதிகள்தான். அவள் ஒரே சமயத்தில் விடுதலை பெறவிளையும் மானுடப் பெண், அதேவேளை முழு ஆபிரிக்காவினதும் மறு விழிப்பு.

* குலேவார் படத்தை எடுத்துக் கொள்ளுங்கள். பிரெஞ்சில் இருந்து வந்த மூத்த மகனுக்கு ஆரம்பத்தில் செனகல் மீது மரியாதையேயில்லை. ஆனால் செனகலின் அதிகார வர்க்க அணுகுமுறை அவனை செனகல் குடிமகன் என்பதற்கான அவசியத்தை உணர்த்துகிறது. அவனுக்கு வுலப் மொழி தெரியாது. பிரெஞ்சு மட்டுமே தெரியும். தனது சகோதரி விபச்சாரி என்பதால் ஏற்க மறுக்கும், அதேவேளை தன் தாயை தான் ஏற்பது பற்றி மௌனம் சாதித்து, தாயை தன் சகோதரியுடன் செல்லப் பணிக்கிறான். குலேவாரின் குடும்பத்தின் பணச் சுமையை பெரும்பாலும் அவள் ஏற்றால் கூட, தனது மகளோடு வாழ மறுக்கிறாள் தாய். குலேவாரின் மனைவி கூட அவரது அரசியல் நம்பிக்கைகளை ஏற்றிருந்தும், அவரால் பொருளாதார ரீதியில் வீட்டுக்குப் பயனில்லை என்பதையும் சொல்லிக் காட்டுகிறாள்.


குலேவாரின் அரசியல் நம்பிக்கைகள் தீவிரமாயினும், குலேவார் இன்னொருத்தன் மனைவியோடு குலவ பெண் வேஷம் போட்டுச் சென்று குலவும் வேளையில் பிடிபட்டு நிர்வாணமாக ஓடிவந்ததை பின் நினைவுகளாகப் பேசுகிறார்கள் சக ஆசிரியர்கள்.

** சின்னச் சின்னச் சடங்குகள், பழக்கவழக்கங்கள், விபரங்கள் படத்தின் தீவிரத் தன்மைக்குக் காரணங்களாகின்றன. சாவு வீட்டுச் சடங்குக்கு தம்பங்காய்த் தரும் ஆட்டுக் குட்டிகள். கல்யாணச் சாபம் வராதிரக்க மாவிடிக்கும் உருளை. தனது கணவனின் துணிகளோடு தனிமையில் பேசும் மனைவி. சாபம் படத்தின் நிகழ்காலத்துக்கொப்ப உரத்துப் பேசும் கதைசொல்லி மாதிரியான சேவகன். சாபம் படம் தவிர 20ஆம் நூற்றாண்டுக் கதைப் படங்களான இரு படங்களில் கதை சொல்லியின் பிரசன்னம் இல்லை.

பன்முகத் தன்மை, பல்குரல் போன்றன பின் நவீனத்துவ, பின் அமைப்பியல், பின் மார்க்ஸிய அழகியல் அணுகுமுறையில் கலைஞனின் வாழ்வு பற்றிய ஆழ்ந்த விசாரணை மற்றும் தேர்வுக்கேற்பவே வெளிப்படும். இந்தப் பன்முகத் தன்மை, பல்குரல் அவர்கள் தேர்ந்து கொள்ளும், அவர்களை உறுத்தும் வாழ்வனுபவம், தேர்வு போன்றவற்றிலிருந்தே விரிவு பெறும்.

மூன்று படங்களிலும் கிறிஸ்தவ மதத்தின் மீதான விமர்சனம் என்பது முஸ்லீம் மதத்தின் மீதான விமர்சனத்தைப் போல் கடுமையானதாக இல்லை. காரணம் 75 சதவீதமான செனகல் மக்கள் முஸ்லீம்கள். 15 சதவீதமானவர்கள் கிறிஸ்தவர்கள். மிஞ்சிய 10 சதவீதமானவரே பூர்வீக ஆபிரிக்க மதங்களைக் கடைப்பிடிக்கிறார்கள். செம்பேன் ஓஸ்மானைப் பொறுத்து பிரச்சனை வரலாற்றில் பின்திரும்பிப் போவது என்பதல்ல. சமூக வாழ்விலும், அரசியலிலும் மதத்தின் ஆதிக்கத்தையும், அதிகாரத்தின் மானுட விரோதத் தன்மையையும் கேள்விக்கு உள்ளாக்குவதுதான். ஆபிரிக்க நாடுகளில் பெரும்பாலும் அரசியல் தலைவர்களை விடவும் அதிகார மையங்களைக் கொண்டவர்களாக இமாம்கள் இருக்கிறார்கள்.

செம்பேனின் பெரும்பாலான படங்கள் ஆபிரிக்க நாடுகளில் தடை செய்யப்படுகின்றன. ஆட்சியில் உள்ளவர்களை, முதலாளித்துவவாதிகளை, ஆதிக்க மதவாதிகளை விமர்சிப்பதுதான் அதன் காரணம். கம்யூனிஸ எதிர்ப்புப் படங்களையோ, கத்தோலிக்க எதிர்ப்புப் படங்களையோ செம்பேன் எடுப்பாரானால் ஒரு காட்சியும் வெட்டப்படாமல் திரையிடுவார்கள் என்கிறார் செம்பேன். Xala படம் 11 இடங்களில் வெட்டப்பட்டதாகக் குறிப்பிடுகிறார். Ceddo படம் கடைசியில் இமாமைக் கொல்லும் பெண் சித்தரிப்புக்காகவே தடை செய்யப்பட்டது. ஏனெனில் ஆபிரிக்கச் சமூகங்களில் பெண் சக்தி வாய்ந்த



Camp de Thiariye

தன்னிலை மிக்க உயிர் ஜீவியாக அங்கீகரிக்கப்படவில்லை.

பெரும்பான்மை இந்து ஆதிக்கவாதிகள் சிறுபான்மை முஸ்லீம், கிறிஸ்தவர்கள் உள்ள நிலையோடு இதை ஒப்பிட முடியாவிட்டாலும், அரசியல் ஆதிக்கம் பெறும் எந்த மதமும் மனித விரோதத் தன்மையையே கொண்டிருக்கும். எந்த மதத்திற்கும் காலம், இடம் கடந்து முற்போக்குத் தன்மையென்பதோ, இடதுசாரித் தன்மையென்பதோ இல்லை. உண்மையில் இடதுசாரிகள் மதத்திலிருந்து வடிவமைத்துக் கொள்ளக் கூடிய விடுதலைக் கோட்பாடுகள் மானுட விடுதலைத் தத்துவத்தோடோ, மதச் சார்பற்ற சிந்தனையினோடோ இணைந்து போகும் என்று தோன்றவில்லை. மதங்களை எவ்வகையிலும் பாதுகாத்திருக்கிற கடமை இடதுசாரிக்கு இல்லை. **மதத்தைப் புரிந்து கொண்டு மதங்களிலிருந்து தூரப்படுத்திக் கொள்வதே இன்றைய தேவை.**

பன்முகத் தன்மை, பல்குரல் போன்ற நவீன இலக்கியக் கருத்தாக்கங்கள் வர்க்க, சாதிய, இன அதிகார நிலைகளை முற்றிலும் கடந்து போய்விட முடிவதில்லை. அதிகாரத்துக்குள்ளேயே தங்கிவிடும் பல்குரல்களும், ஆண்டு அதை உடைத்துக் கொண்டு நகரும் பல்குரல்களும் உண்டு.

ரேயின் பல்முகத் தன்மையும், பல்குரல்களும் திரைப்படத்தின் சட்டங்களுக்குள் நின்றுவிட, செம்பேனின் மனிதர்கள் பல்முகங்களையும், பல்குரல்களையும் விலக்கிக் கொண்டு திரையினின்றும் இருளினின்றும் இறங்கி நடந்து தெருவில் நடந்து கொண்டிருக்கிறார்கள்.

வெளியே நிறைய மனிதர்களின் கூச்சல் கோஷங்கள், முத்தமிடும் சப்தம், பிணங்கள், இராணுவ வாகனங்கள், பிரசவ வேதனை, குழந்தைகள், ஆர்ப்பாட்டங்கள் விலக்கியபடி போய்க் கொண்டிருக்கிறார் செம்பேன்.....

செம்பேன் ஒஸ்மான் ஒரு மார்க்ஸியவாதி. பிரெஞ்சுக் கம்யூனிஸ்ட்டு கட்சி உறுப்பினராக இருந்தவர். தீவிர நாத்திகர். நூறாண்டு சினிமாவின் கறுப்புச் சிங்கம்.

---

கட்டுரைக்கான ஆதார புத்தகங்களும், விமர்சனங்களும், நேர்முகங்களும்:

---


1. CEDDO: Screen Griots. The Art and Imagination of African Cinema. Programme Notes. NFT/ Aug 1995.

2. AFRICAN ON FILM: BBC Brochure March/ April 1991.

3. OUSMANE SEMBENE IN CINEMA ASTRIDE TWO CULTURES RAY ARMES: California University Press 1987.

4. FILM FRAME: 15, 16,17 - 1981. Sembene Interview

FILM FRAME: 7, 8 - 1978. Sembene Interview.

5. THIRD WORLD GUIDE 1991/92 : Senegal History.

6. XALA:.Africa 95. Cannosier Video Films August 1995.

7. AFRICA ON AFRICA SEASON 1992.

GULEWAAR. Channel 4. London.


8. CEDDO: A Revolution Reborn Through The Efforts of Womanhood.

Teshome Gabriel.

FILM FRAME: 15, 16, 17- 1981.


செனகல் இரு நிழல் படங்கள்






சென்ற இதழில் கூரியர் அறமுகப் பகுதியில் தகவல் தந்தவர் பெயராக குணா கலைதாசன் எனத் தவறுதலாக அச்சிடப்பட்டுவிட்டது. இத்தகவலை அளித்தவர் திரு உதயணன்.

கடந்த இதழில் இடம்பெற்ற அச்சுப்பிழைகளுக்கு வருத்தம் கொள்கிறோம்.

நமது சுய அடையாளம் நமக்குப் பழக்கமாக இருந்த வாழ்க்கை முறையின் அடிப்படையிலும் நாம், நமது பண்பாடு என்று நினைக்கும் ஒன்றின் அடிப்படையிலும் பேணப்படுகிறது. நம்மை அழுத்தும் சுமைகளைக் களைய நாம் ஆயத்தமாக இல்லை. அவை நம்மை அழகு செய்யும் அணிகலங்கள் என்று பாசாங்கு செய்கிறோம். ஆயினும் இது வெகு காலத்திற்கு நீடிக்க முடியாது. புதிய பரம்பரையினர், நாம் அவர்கள் மீது திணிக்கும் இந்தச் சுய அடையாளச் சுமையைத் தாங்க ஆயத்தமாக இருக்கமாட்டார்கள். அவர்களது சுய அடையாளம் நம்முடையதைப் போலன்றி அவர்களது நிசமான சூழலின் அடிப்படையிலேயே அமையப்போகிறது. நமது பம்மாத்துக்கள் அவர்களது சுய அடையாளத்தின் விருத்திக் கேடாகவே அமைய முடியும். வித்தியாசமான ஒரு சமுதாயச் சூழலுள் ஒரு இளைய பரம்பரையைக் கொண்டு வருவோர், அந்தப் பரம்பரை தாம் வாழ முனையும் ஒரு வாழ்வை வாழவேண்டுமென எதிர்பார்க்க முடியாது. புலம்பெயர்ந்த நாம் நமது பண்பாட்டையோ, மரபையோ, மொழியையோ, மதத்தையோ, கலை வடிவங்களையோ நிராகரிக்க வேண்டும் என்பது என் வாதமில்லை. நமது பண்பாடும், மரபும், மொழியும், மதமும், கலைகளும் காலத்துடன் மாறுவனவென்பதும்; நமது காலத்தினதும் சூழலினதும் தேவைகளை நிறைவு செய்ய வேண்டும் என்பதுமே என் வாதம். புதிய தேவைகட்கேற்ற மாற்றங்களைப் பற்றி நாம் துணிவுடன் சிந்திக்க வேண்டும் என்பதே என் வேண்டுகோள். பிழைப்புக்காக ஒரு வாழ்க்கையும், சுய அடையாளம் பேணுகிற பேரில் இன்னொரு வாழ்க்கையும் என்ற விதமான இரட்டை வாழ்க்கை நிலைக்க முடியாது என்பதும் என் அபிப்பிராயம்.

நமது பண்பாட்டின் வலிய அம்சங்களை நாம் அடையாளம் கண்டு அதன் உருவத்திற்கும் உள்ளடக்கத்திற்குமுள்ள உறவின் தன்மையை உணர்ந்து நமக்கென்று ஒரு புதிய அடையாளத்தை உருவாக்கி நிலைநிறுத்த முடியும். நமது மொழியையும், மதங்களையும், கலை வடிவங்களையும் அவை பல நூறு வருடங்கள் முன் இருந்தவாறு நாம் பேண முடியாது. அவற்றை நமது புதிய சூழலின் நல்ல பண்புகளுடன் நவீன உலகினதும் நாம் முன்பு காண வாய்ப்பில்லாத வளமிக்க பன்னாட்டுக் கலை இலக்கியப் பண்பாட்டு வளங்களுடன் இணைந்து மேம்படுத்த இயலும்.

*-சி. சிவசேகரம்.*



*எங்கே போகிறாய் ?*

